1349

ரூ. 3. Rgd. No. M. 2419.



மாத்வ மித்திரன்.

THE MADHWA MITRAN.

EDITOR:
Adyam Bhagavatha Rangaa[illegible]chariar,
KUMBAKONAM.

OFFICE OF THE REGISTRAR ... 17 SEP 1938 ... MADRAS

பௌர்ணமிதோறும் வெளி[illegible]

Vol. 11 புஸ்தகம் 11	பஹுதான்ய ஸம்வத்ஸரம் பாத்ரபத மாஸம். (பௌர்ணமி) (9-9-1938) சுக்கிரவாரம்.	No. 2 நெ. 2

நெ	பொருளடக்கம்.	பக்கம்.
1	ஸதுபதேசம்.	33
2.	ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமம்.	34
3.	அஹம் ப்ரம்மாஸ்மி.	38
4.	ஸங்க்ரஹ ராமாயணம்	44
5.	ஸ்மார்த்த பிராம்மணர்களின் மாம்ஸ பக்ஷணம்.	50
6.	லோக வர்த்தமானம்.	53
7.	புராணக்குறிப்புகள்.	59
8.	செய்தித்திரட்டு.	60
9.	விசேஷ தினங்கள்.	64

ஆசிரியர்:—ஆத்யம் பாகவத ரங்கநாதாசாரியார், கும்பகோ[illegible]

மாத்வமித்திரன்.

மாத்வர்களின் சாஸ்திரீயமான தமிழ் பத்திரிகை இது ஒன்றே
ஸ்ரீமத்வமதத்தின் அரிய இரகசியங்கள் ஸம்பிரதாயங்கள் மாகாத்
மியங்கள் புராணகதைகள் மாத்வவகுப்பு புண்ய புருஷர்களின் சரித்தி
ரங்கள் வேதாந்த ர்ச்சைகள் தர்மசாஸ்திர விசாரங்கள் தினசரி விர
தாதி குறிப்பு:— மகாபாரத தாத்பர்ய நிர்ணயம் முதலான அநேக
கிரந்தங்களின் மொழிபெயர்ப்புகள் முதலிய எண்ணிறைந்த விஷயங்
கள் நிறைந்திருக்கின்ன ஸ்ரீமத்வமதத்தை சுலபமாய் அறிந்துகொள்ள
இப்பத்திரிகைக்கே உடனே சந்தாதாரராய்ச் சேருங்கள் இது பிரதி
பௌர்ணமியிலும் கும்பகோணத்திலிருந்து வெளியாகிறது இதற்கு
வருடசந்தா முன்பணமாய் ரூபாய் மூன்று. பிரதி சிராவணமாதமும் இப்
பத்திரிகைக்கு வருடாரம்பமாகும் எந்த மாதத்தில் சந்தாதாரராய்
சேர்ந்தாலும் அந்த வருஷத்திய பிந்திய சஞ்சிகைகள் அனுப்பப்படும்
பழைய வாலியங்கள் விலைக்குக் கிடைக்கும் பத்திரிகை சரியானபடி
கிடைக்காவிட்டால் பௌர்ணமி கழிந்தஒருவாரத்துக்குள் நமக்கு அ
றிக்கவேண்டியதின்றி அந்தந்த தபாலாபீஸுக்கும் அறிவித்துவிடவேண்
டும் பதிலறிய விரும்புகிறவர்கள் ஸ்டாம்பை அனுப்பவேண்டும். ஒவ்
வொரு கடிதத்திலும் தெளிவாய் பூரா மேல் விலாசமும் எழுதி அனுப்ப
வேண்டும்.

இனாம்! இனாம்!

மாத்வமித்திரன் பத்திரிகைக்கு வருஷம் 1-க்கு
ரூ. 3 அனுப்பி சந்தாதாரராய் சேரக்கூடிய ஆஸ்திக
மாத்வ தனவந்தர்களின் சரியான விலாஸம் 10(
ஸ்பஷ்டமாய் தமிழிலோ இங்கிலீஷிலோ 22-11-'3
தேதிக்குள் எமக்கு எழுதி அனுப்புகிறவர்களுக்கு
ஸ்ரீ ராகவேந்திரஸ்வாமிகளின் அதி அற்புத ஜீவி
சரித்திரம் (8 அணா கிரயமுள்ளது) பிரதி ஒன்
இனாமாக அனுப்பப்படும்.

மானேஜர், மாத்வமித்திரன்,
ஸ்ரீ வியாஸ விலாஸம், கும்பகோணம்.

OFFICE OF THE REGISTRAR
17 SEP 1939

ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்ஹாய நம:

மாத்வமித்திரன்.

VOL. 11 | பஹுதான்ய ஸம்வத்ஸரம் பாத்ரபத மாஸம். | NO. 2

ஸதுபதேசம்.

येन व्याप्तमखंडलमंडलमिदं ब्रह्मांडभांडादिकं
रे रे मंदमते त्वया कथमहो सोऽहं वचः कथ्यते ।
पश्यत्वं निजवैभवं स्वहृदये कृत्वा मतिं निश्चलां
व्यूहः किं मशकोदरे प्रविशति प्रोद्दाम दिग्दंतिनां॥

யேன வ்யாப்த மகண்ட மண்டலமிதம் ப்ரம்மாண்ட பாண்டாதிகம்,
ரேரே மந்தமதே த்வயா கதமஹோ ஸோஹம் வச: கத்யதே |
பச்ய த்வம் நிஜவைபவம் ஸ்வஹ்ருதயே க்ருத்வா மதிம் நிச்சலாம்
வ்யூஹ: கிம் மசகோதரே ப்ரவிசதி ப்ரோத்தாம திக் தந்திநாம் ||

அகண்டமான பதினான்கு லோகங்களைக் கொண்ட பிரம்மாண்ட கடாஹத்தையுமே உள்ளும் புறமும் புகுந்து வியாபித்திருக்கும் பரப்ரம்மமான விஷ்ணுதான் 'ஸோஹம்' நான் என்று அடே! மூடா! எப்படிச் சொல்வாய். உன் புத்தியை ஸ்திரப்படுத்திக்கொண்டு உன் மனதிலேயே உன் யோக்யதையை எண்ணிப்பார். ஸர்வவ்யாபியான அந்த பகவான் எங்கே! கேவலம் கொசுவைப்போலுள்ள நீ எங்கே. கொசுவின் வயிற்றில் பெரிது பெரிதான திக்கஜங்களின் கூட்டம் உட்புகுமா என்ன? நீயே ப்ரம்மமாயின், உன் வயிற்றிலும் அகண்ட ப்ரம்மாண்டமும் புகுமாயின், கொசுவின் வயிற்றிலும் மலைபோன்ற யானைகளின் கூட்டம் பிரவேசிப்பது சம்பாவிதம். போடா! போடா! மூட்டாள்! இவ்வாறு 'ஸோஹம்' நானே ப்ரம்மமென்று பிதற்றாதே.

விஷ்ணு ஸஹஸ்ர நாமம்.

(முன் 18-ம் பக்கம் தொடர்ச்சி)

471 ஜிதக்ரோத: (ஓம் ஜிதக்ரோதாய நம:) கோபத்தை ஜயித்தவர். க்ரோத ரூபர்களான அஸுரர்களை ஜயித்தவர். பக்தர்களுக்கு காமக்ரோதாதிகளைப் போக்குபவர்.

472 வீரபாஹு: (ஓம் வீரபாஹவே நம:) வீரர்களான ராஜவம்சத்தார்களை பாஹுவால் உண்டாக்கியவர்.

473 விதாரண: (ஓம் விதாரணாய நம:) நரஸிம்ம ரூபத்தால் ஹிரண்யனைப் பிளந்தவர். விசேஷமாய் தாரங்களான கோபிகைகளுக்கு சுகத்தை அளிப்பவர். வித்வான்களான க்ஞானிகளால் நன்றாய் அறியப்படுபவர். க்ஞானியாயும், ஜராஸந்தாதிகளுடைய புத்தமுள்ளவராயும் இருப்பவர். அறிவாளியாயும், அரணிக் கட்டையில் அக்னியின் அந்தர்யாமி ரூபியாயும் இருப்பவர். தன்னை சேதிப்பவர் இல்லாதவர். வேதவித்துக்களை நன்கு ரமிப்பவராயும், சுகரூபியாயுமிருப்பவர். தாரமில்லாதவர்களான ஸந்யாஸிகளுக்கு ஆனந்தத்தை அளிப்பவர்.

474. ஸ்வாபன: (ஓம் ஸ்வாபனாய நம:) தூக்கத்தை நடத்துகிறவர். பிராணிகளை தூங்கவைப்பவர். ஜலஸமூகத்தை சிறப்பாய் நடத்துகிறவர்.

475 ஸ்வவச: (ஓம் ஸ்வவசாய நம:) பணத்தை வசப்படுத்தினவர். தனக்குத்தான் வசமாய் இருப்பவர். நன்றாய் ஆத்மதத்வத்தை அறிபவர்களுக்கு சுகத்தையளிப்பவர். நன்கு ப்ராக்ஞமூர்த்தியை ஆலிங்கனம் செய்துகொண்டு தூங்குபவர்களுக்கு சுகத்தை அளிப்பவர். ப்ரளயத்தில் நன்கு தன்னுடைய உதரத்தில் பிரவேசம் செய்பவர்களுக்கு சுகத்தை அளிப்பவர். ஸ்வதந்திரர்.

476 வ்யாபீ (ஓம் வ்யாபினே நம:) வ்யாபித்திருப்பவர்.

477 நைகாத்மா (ஓம் நைகாத்மனே நம:) அநேக சரீரங்களுள்ளவர். அநேகருக்கு ஸ்வாமியானவர்.

478 நைககர்மக்ருத் (ஓம் நைககர்மக்ருதே நம:) ஸ்ருஷ்டி ஸம்ஹாரம் முதலான அநேக காரியங்களைச் செய்பவர்.

208173

479 வத்ஸர: (ஓம் வத்ஸராய நம:) கன்றுகளுடன் கிருஷ்ணாவதாரத்தில் ரமிப்பவர். வத்ஸாசுரனை நாசம் செய்பவர். எல்லோரிடமும் வசிப்பவர்.

480 வத்ஸல: (ஓம் வத்ஸலாய நம:) பக்தர்களிடம் தயையுள்ளவர்.

481 வத்ஸீ (ஓம் வத்ஸினே நம:) ஸ்ரீவத்ஸமுள்ளவர். கிருஷ்ணாவதாரத்தில் கன்றுகளை மேய்ப்பவர்.

482 ரத்னகர்ப்ப: (ஓம் ரத்னகர்ப்பாய நம:) ரத்னங்களை உள்ளே கொண்டவர்.

483 தனேச்வர: (ஓம் தனேச்வராய நம:) பணத்திற்கு யஜமானன், பக்தர்களுக்கு தனத்தைத் தருபவர்.

484 தர்மக்ருத் (ஓம் தர்மக்ருதே நம.) ஸ்வயம் தர்மத்தை அனுஷ்டிப்பவர். பக்தர்களல்லாதவர் செய்யும் தர்மத்தை அழிப்பவர். பக்தர்களை தர்மத்தை செய்யச் செய்பவர்.

485 தர்மகுப் (ஓம் தர்மகுபே நம:) புண்யத்தை ஒளிப்பவர். தர்மபுத்திரரை ஒளித்துவைத்தவர். தர்மத்திற்கு சாதனங்களாயுள்ள வேதாதிகளை சம்ரக்ஷிப்பவர். தர்மத்தை ஸ்தாபிப்பவர்.

486 தர்மீ (ஓம் தர்மிணே நம:) தர்மத்தை தாங்குபவர். தர்மத்தை ஸாதனமாகக் கொண்டவர். பிராணிகளுக்கு யமதர்மனை நியாமகனாய்க்கொண்டவர்.

487 ஸத் (ஓம் ஸதே நம:) எல்லோரிடமும் வசிப்பவர். எல்லோராலும் சரணமடையப்பெற்றவர். எல்லோருக்கும் கதியானவர்.

488 அஸத் (ஓம் அஸதே நம:) முடிவில்லாதிருப்பவர். சிதறிப்போகாதிருப்பவர்.

489 க்ஷரம் (ஓம் க்ஷராய நம:) எப்பொழுதும் அழிப்பவர்.

490 அக்ஷரம் (ஓம் அக்ஷராய நம:) இந்திரியங்களில் ரமிப்பவர். நாசம் இல்லாதவர். வியாபித்திருப்பவர்.

491 அவிக்ஞாதா (ஓம் அவிக்ஞாத்ரே நம:) தன்னை சம்பூர்ணமாய் அறிபவர் இல்லாதவர்.

492 ஸஹஸ்ராம்சு: (ஓம் ஸஹஸ்ராம்சவே நம:) ஆயிரம் கிரணங்களைக்கொண்டு சூரியனின் அந்தர்யாமியாய் இருப்பவர். அளவற்ற ஞானத்தைக்கொண்டவர்.

493 விதாதா (ஓம் விதாத்ரே நம:) விசேஷமாய் தாங்குபவர். கருடனை தன்னை தாங்குபவராய் உடையவர்.

494 க்ருதலக்ஷண: (ஓம் க்ருதலக்ஷணாய நம:) பூர்ணமான லக்ஷணங்களைக்கொண்டவர். பக்தர்களால் செய்யப்படும் கர்மாக்களை ஸ்வீகரிப்பதை உத்ஸவமாகக்கொண்டவர். பூர்ணமான லக்ஷக்கணக்கர்யுள்ள ஸூக்தங்களைக்கொண்டவர். சாஸ்திரங்களைச் செய்தவர். லக்ஷண சாஸ்திரத்தை இயற்றியவர்.

அக்ருதலக்ஷண: (ஓம் அக்ருதலக்ஷணாய நம:) இயற்கையான பூர்ண லக்ஷணங்களைக்கொண்டவர்.

495 கபஸ்திநேமி: (ஓம் கபாஸ்திநேமயே நம:) சக்ரத்தின் அரங்கள் போன்ற கிரணங்களைக்கொண்டவர். வட்டமான கிரணங்களின் நடுவில் பிரகாசிப்பவர். கிரணங்களால் பிரகாசிக்கும் சக்ராயுதத்தை உடையவர்.

496 ஸத்வஸ்த: (ஓம் ஸத்வஸ்தாய நம:) ஜீவனிடத்தில் அந்தர்யாமியாய் இருப்பவர். தன்னிடம் ஜீவனை இருக்கச்செய்பவர். பலத்துடன் இருப்பவர். ஹ்ருதயத்தில் இருப்பவர்.

497 ஸிம்ஹ: (ஓம் ஸிம்ஹாய நம:) சிரேஷ்டரானவர். துஷ்டர்களை ஹிம்சிப்பவர். பராக்கிரமத்தால் ஸிம்ஹம்போன்றவர். நரஸிம்ஹாவதாரம் செய்தவர்.

498 பூதமகேஸ்வர: (ஓம் பூதமகேஸ்வராய நம:) உற்சாகமடைந்தவர்களான மகாலட்சுமி என்ன, வாயுபகவான் என்ன, இவர்களுடன் ரமிப்பவர். பிராணிகளுக்கு ஈசுவரர்களாயிருப்பவர்களுக்கும் ஈசுவரன்.

499 ஆதிதேவ: (ஓம் ஆதிதேவாய நம:) பக்தர்களால் கொள்ளப்படுகிறவரும் க்ரீடாதிகுணங்களைக் கொண்டவருமானவர். ப்ரம்மாதிதேவர்களுக்கும் முந்தியவரும் பிரகாசிப்பவருமானவர்.

500 மகாதேவ: (ஓம் மகாதேவாய நம:) மகத்தாய் உண்பவரும் மகாலட்சுமியை ப்ரவிருத்திப்பவருமானவர். பிரம்மாதிகளையும்கொண்டு ஆடுகிறவர்.

501 தேவேச: (ஓம் தேவேசாய நம:) தேவர்களுக்கு ஈசுவரரானவர். தேவர்களுக்கு மகாலட்சுமியின் அனுக்ரஹத்தால் ஸுகம் ஏற்படச்செய்பவர்.

502 தேவப்ருத்குரு: (ஓம் தேவப்ருத்குரவே நம:) தேவர்களை வகிக்கும் ப்ரம்மாவுக்கு க்ஞானம் உபதேசம் செய்பவர்.

503 உத்தர: (ஓம் உத்தராய நம:) மிகவும் மேலானவர்களான யோக்ய ஜீவராசிகளை ஸம்ஸாரத்தை தாண்டவைப்பவர். எல்லாவற்றிலும் சிறந்தவர். நித்திரையைவிட்டெழுந்து தேவகாரியத்திற்காக எத்தனிப்பவர்.

504 கோபதி: (ஓம் கோபதயே நம:) பசுக்களுக்கு பதியானவர். பசுக்களை மேய்த்தவர். வேதங்களுக்கு அதிபதியானவர். பூமிக்கு அதிபதியானவர். பூமிக்கு பாத்தாவானவர். வேதங்களையும ப்ராக்ருத பாஷைகளான எல்லா வாக்குகளையும் ப்ரவிருத்திக்கச் செய்பவர்.

505 கோப்தா (ஓம் கோப்த்ரே நம:) ரக்ஷிப்பவர்.

506 க்ஞானகம்ய: (ஓம் க்ஞானகம்யாய நம:) க்ஞானத்தால்தான் அடையப்படுபவர். க்ஞானிகளால் அறியப்படுபவர். க்ஞானிகளால் அடையப்படுபவர். க்ஞானத்தால் அறியப்படுபவர்.

507 புராதன: (ஓம் புராதனாய நம:) வெகுப்ராசீனரானவர். வைகுண்டாதிபுரங்களில் நடமாட்டமுள்ளவர். புரமாகிய சரீரத்தில் பிரவேசமுள்ளவர்.

508 சரீரபூதப்ருத் (ஓம் சரீர பூதப்ருதே நம:) சரீரங்களையும் பூதங்களையும் தாங்குபவர். சரீரத்துக்கு காரணமான பூதங்களை தாங்குபவர். சரீரங்களையும் அவைகளைக்கொண்ட பிராணிகளையும் போஷிப்பவர். ப்ரளயகாலத்தில் தன் சரீரத்தில் வைத்து ப்ராணிகளை சம்ரக்ஷிப்பவர்.

சரீரீ (ஓம் சரீரிணே நம:) கைகால் முதலிய அவயவங்களைக்கொண்ட சரீரமுள்ளவர்.

பூதப்ருத் (ஓம் பூதப்ருதே நம:) ப்ராணிகளைத் தாங்குபவர்.

சரீரீபூதப்ருத் (ஓம் சரீரீபூதப்ருதே நம:) தன் சரீரமாகவுள்ள ப்ருதிவீ முதலான சப்தங்களால் சொல்லப்படுபவர்களான கருடாதிகளைத் தாங்குபவர்;

(தொடரும்.)

அஹம் ப்ரம்மாஸ்மி.

சாஸ்திரியாரும், ஆசாரியாரும்.

(முன் 21-ம் பக்கம் தொடர்ச்சி)

• சாஸ்திரி: ஜீவன் என்பதை குறிக்கும்பதம் என்ன வென்று கேட்கிறீர்? ப்ரம்மவா இதமக்ர ஆஸீத், என்னும் வாக்யத்தில் உள்ள இதம் என்னும் பதம்தான்.

ஆசார்: இதம் என்பதற்கு ஜீவன் என்று அர்த்தமா?

சாஸ்திரி: ஜீவன் என்று அர்தமில்லை. ஆயினும் ... ...

ஆசார்: முன்னாடி தெரிந்திருப்பதை அது குறிக்கிறது. அதாவது புத்திஸ்தமாய் இருப்பதை அது குறிக்கிறது. அவ்வளவுதானே?

சாஸ்திரி: ஆம்.

ஆசார்: அப்படியாயின், இந்த வாக்யத்திற்கு அடுத்த முன்னாடி, 'ததேதத்ப்ரேய: புத்ராத்ப்ரேய: வித்தாத்ப்ரேய: ஸர்வஸ்மாத் அந்தரதரம்' என்று ப்ரம்மத்தின் மாகாத்மியம் சொல்லப்பட்டு, ப்ரம்மமே புத்திஸ்தமாய் இருப்பதால், இதம் என்னும் வார்த்தையால் ப்ரம்மத்தைஎன் கிரஹிக்கலாகாது. ஜீவனைத்தான் எடுத்துகொள்ள வேண்டுமென்பதற்கு என்ன ஆதாரம்?

சாஸ்திரி: அப்படி நீர் சொல்கிறபடி இதம் என்பதால் ஜீவனை எடுத்துக்கொள்ளாமல் ப்ரம்மம் என்று எடுத்துக்கொள்ளும் பக்ஷத்தில் 'கிமுதத்ப்ரம்ம' ப்ரம்மம் யார் என்ற முதல் கேல்விக்கு பதில் இல்லாமல் போகிறது. அப்படிப்ரம்மம் யார்என்ற கேள்வி கேட்கப்பட்டதால் அதற்கு பதில்சொல்லப்படவேண்டியதற்காக இதம் என்பதற்கு ஜீவன் என்றுதான் அர்த்தம் செய்யவேண்டியிருக்கிறது.

ஆசாரியார்: ஓகோ: ப்ரம்மம் யார்? என்ற கேள்வி கேட்டு விட்டதற்காகவா 'இதம்' என்பதற்கு ஜீவன் என்று அர்த்தம் செய்துவிட்டீர் ரொம்பசரி. முதலில் இதைச்சொல்லும். இந்தகேள்வியே எது? எங்கே இருக்கிறது? இப்படிக் கேட்டது சுருதியா அல்லது நீரா அல்லது உமது குரு சங்காராசாரியார்தானு?

சாஸ்திரி: ஆசார்ரே! போனல் போகட்டும் என்று நல்ல கேள்வி கேட்டுவைத்தீர்? எது கேள்வியா? கதையா கேட்கிறீர்? நான் சொல்லுகிறேன் கேளும். இது என் கேள்வி அல்ல. சுருதியே கேட்டிருக்கிறது. 'கிமு தத் ப்ரம்ம' என்பது. வேதவாக்ய்ம்தானே?

ஆசாரியார்: இது சுருதியின் கேள்வி என்று எப்படிச் சொல்வதய்யா? 'கிமுதத் ப்ரம்ம அவேத்' என்றல்லவோ சுருதி ஒரே கேள்வி கேட்டிருக்கிறது?

சாஸ்திரி: ஆமாம். வாஸ்தவம்தான் அந்த ஓர் கேள்வியைத்தான் நாம் இரண்டு கேள்விகளாகச் செய்துகொண்டோம். அதாவது அந்த ப்ரம்மம் யார்? என்று ஒரு கேள்வி. 'அந்த ப்ரம்மம் எதைத் தெரிந்து கொண்டது?' என்று மற்ரொரு கேள்வி.

ஆசாரியார்: 'அந்த ப்ரம்மம் எதைத் தெரிந்துகொண்டது?' என்று ப்ரம்மம் கேட்டதாயும், அதற்கு ப்ரம்மம் முன்பு இருந்தது; அது தன்னையே அஹம் ப்ரம்மாஸ்மி என்று தெரிந்துகொண்டது என்றும், நானும் ஒப்புக்கொண்டு, 'அஹம் ப்ரம்மாஸ்மி' என்ற வாக்யம் ப்ரம்மத்தினுடையதுதான் என்றும் நான் வாதாடுகிறேனே? அதை நீங்களும் ஒப்புக்கொள்கிறீர்களே! ஆகவே நீங்கள் எதை இரண்டாவது கேள்வியாகச் சொல்கிறீர்களோ, அதை நாங்களும் ஒப்புக்கொண்டு அதில் எங்கள் இருவர்களுக்கும் ஆக்ஷேபனை இல்லை 'அந்த ப்ரம்மம் யார்?' என்ற முதல் கேள்வியில்தான் தகரார். 'இதம்' என்பதற்கு ஜீவன் என்கிறீர்கள், என் ஜீவன் என்கிறீர்கள் என்ருல் அந்த ப்ரம்மம் யார்? என்று கேள்வி இருக்கிறதே என்கிறீர்கள். அவ்வாறு 'அந்த ப்ரம்மம் யார்? என்ற கேள்வியை நீங்கள் எப்படி கல்பனை செய்துகொண்டீர்கள் என்றுதான்நான் கேழ்க்கிறேன்.

சாஸ்திரி: சுருதியில் 'கிமுதத்ப்ரம்ம அவேத்' என்று கேட்ட கேள்வியைத்தான் நாம் இரண்டாகப் பிரித்து, இரண்டு கேள்விகளாய்ச் செய்துகொண்டோமேயல்லாது, ஒன்றையும் புதிதாய்ச் செய்துவிடவில்லை அய்யா?

ஆசாரியார்: இரண்டாகவா பிரித்தீர். நீதானித்துச் சொல்லும் 'கிமு தத் ப்ரம்ம அவேத்' என்பதைப் பிரித்தால் 'கிமு தத் ப்ரம்ம1..... அவேத் 2. என்றுதானே இரண்டு கேள்விகளாகவேண்டும். 'கிமு தத் ப்ரம்த அவேத்' என்பதுதானே உமது இரண்டாவது கேள்வி. ஆதலால் 'கிமு தத் ப்ரம்ம' என்பதை ஒன்றுக்கிரண்டு தடவையாக திரித்து சேர்த்துக்கொண்டிருக்கிறீரல்லவா? அதாவது 'கிமு தத் ப்ரம்ம' என்பதை ஆவிருத்தி செய்துகொண்டு இரண்டு ப்ரசனங்களாய்ச் செய்துகொண்டிருக்கிறீர்கள். அப்படி என் செய்துகொண்டீர்கள்? என்றுதான் கேட்கிறேன். அவ்வாறு செய்துகொள்ள அவசியமென்ன? அவ்வாறு ஆவிருத்தி செய்துகொள்ள வேண்டுமென்பதற்கு உமக்கு ஆதாரம் இருக்கிறதா? சொல்லும்.

சாஸ்திரி: ஆதாரம் என்ன? எமது குரு சங்கராசாரியார் இப்படிச் செய்ததுதான் ஆதாரம்.

ஆசாரியார்: அந்த சங்கராசாரியார் செய்ததற்குத்தான் ஆதாரம் கேட்கிறேன்.

சாஸ்திரி: என்னை ஏன் கேட்கிறீர்? சங்கராசாரியாரை போய் கேளும்.

ஆசாரியார்: சங்கராசாரியாரையா கேட்கவேண்டும். அது உமக்கு தெரியாது என்று ஸ்பஷ்டமாகச் சொல்லுமே

சாஸ்திரி: பதினாயிரம் தடவை சொல்கிறேன் தெரியாதென்று.

ஆசாரியார்: பிரம்மம் யார் என்று ஏன் இந்த கேள்வி செய்துக் கொள்ளப்பட்டது என்பதற்கு உமக்கு ஆதாரம் தெரியவில்லை. ஆதாரமும் இல்லை. சரி. அவ்வாறு கேட்கப்பட்டதற்கு அவசியமாவது இருக்கிறதா பாருமே. இந்தவாக்கியத்திற்கு முன்னடியே 'ததேதத் ப்ரேய: புத்ராத் ப்ரேய: வித்தாத் ப்ரேய: ஸர்வஸ்மாத் அந்தாதரம்' என்று ப்ரம்மம் இப்பேர்பட்டதென சொல்லப்பட்டிருக்கிறதா?

சாஸ்திரி: சொல்லப்பட்டிருக்கிறது.

ஆசார்: அவ்வாறு ப்ரம்மம் எல்லாவற்றையும் விட ப்ரியன் என்றும் எல்லோரிடத்திலும் இருப்பவன் என்றும் சொல்லப்பட்டிருக்கும் பொழுது, ப்ரமம்யார்! என்று கேள்வி கேட்க அவசியம் என்னவோ?

சாஸ்திரி: சரிதான்

ஆசார்: சரிதான் என்றால் என்ன?

சாஸ்திரி: தெரியாது என்று வைத்துக் கொள்ளும். சும்மா தெரியாது தெரியாது என்று தான் நான் சொல்லவேண்டுமோ. காசுக்காய் தான் நான் ஒப்புக்கொள்ளலாம்.

ஆசார்: ஆகவே இந்தகேள்விக்காகதான் 'இதம்' என்பதற்கு ஜீவன் என்று அர்த்தம் செய்ததாய் நீர் சொன்னது தவறு என்று ஏற்பட்டது. கேள்விக்கே ஆதாரம் இல்லாமல் இருக்கையில் 'இதம்' என்பதற்கு ஜீவன் என்று அர்த்தம் செய்யவேண்டும் என்பதற்கும் ஆதாரம் இல்லாமல் போவிட்டதல்லவா?

சாஸ்திரி: ஆம்.

ஆசார்: அதனால் ஜீவன் ப்ரம்மாக இருந்தான் என்ற அர்த்தமும் ஏற்படவில்லை. அதனால் 'ப்ரம்மவா இதமக்ர ஆஸீத்' என்ற வாக்யமும் ஜீவன் ப்ரம்மம்தான் என்பதற்கு ஆதாரமாகிறதில்லை. சரிதானே.

சாஸ்திரி: ஆம். அப்படித்தான் நீங்கள் நிரூபித்திருப்பதிலிருந்து ஏற்படுகிறது.

ஆசார்: கக்ஷிக்காக 'ப்ரம்மம் யார்' என்று கேள்வி சுருதியில் கேட்டிருப்பதாகவே வைத்துக் கொள்ளுவோம். அவ்வாறு கேட்கப்பட்டு விட்டதால், நீ சொன்னபடிதான் ஜீவன் ப்ரம்மமே என்று பதில் சொல்லப்படவேண்டுமோ? அதற்காக 'இதம்' என்பதற்கு ஜீவன் என்று தான் அர்த்தம் சொல்ல வேண்டுமோ?

சாஸ்திரி: பிறகு என்ன சொல்லவேண்டும் என்கிறீர்.

ஆசார்: 'இதம்' என்பதற்கு 'இது' என்ற அர்த்தத்தை வைத்துக் கொண்டால் என்ன?

சாஸ்திரி: இது என்றால் என்ன அய்யா? கக்ஷிக்காக ஏதாவது சொல்லிவிடுகிறதா?

ஆசார்: கக்ஷிக்காக ஒன்றையும் சொல்லிவிடுவதில்லை. 'ப்ரம்ம இதம்' என்றால் ப்ரம்மம் இதுவே என்று அர்த்தமாகிறது. 'இதம்' இது என்றால் முன்னடி சொல்லியிருப்பது என்று அர்த்தமாகிறது. இந்த வாக்யத்தின் முன்னடி 'ததேதத்ப்ரேய: புத்ரார்த்ப்ரேய: வித்தாத் ப்ரேய: ஸர்வஸ்மாத் அந்தரதரம்' என்று அந்த ப்ரம்மம் எல்லோருக்கும் ப்ரியன், எல்லோரிடம் இருப்பவன் என்று சொல்லப்பட்டிருப்பதால் அந்த ப்ரம்மம் இது என்றால் இப்பேர்ப்பட்டவன் மேலே சொல்லப் பட்டவன் என்று அர்த்தமாகிறதல்லவா?

சாஸ்திரி: சரிதான்.

ஆசார்: இதனாலும் இந்த கேள்விக்காக 'இதம்' என்பதற்கு ஜீவன் என்றுதான் அர்த்தம் செய்யவேண்டுமென்பது ஏற்படவில்லையல்லவா?

சாஸ்திரி: ஆம். வாஸ்தவம்.

ஆசார்: ஆகவே நீர் சொன்னபடி 'இதம்' என்பதற்கு ஜீவன் என்று அர்த்தம் செய்ய 'கிமுதத்ப்ரம' ப்ரம்மம் யார் என்ற கேள்வி ஆதாரமாகிறதில்லை என்று உமக்கு ஸ்பஷ்டமாய் தெரிகிறதா?

சாஸ்திரி: ஆம் அப்படித்தான் சொல்லவேண்டியிருக்கிறது.

ஆசார்: சரி. ப்ரம்மம் யார்? என்று கேள்விகேட்டால் என்ன பதில் சொல்வது? ப்ரம்மம் இன்னது இப்பேர்ப்பட்டது என்றுதானே சொல்லவேண்டும்.

சாஸ்திரி: ஆம் அப்படித்தான் நாமும் சொல்லுகிறோம்.

ஆசார்: நீர் அப்படிச் சொல்வதில்லை. ஜீவன் இன்னான் இப்பேர்ப்பட்டவன் என்றுதான் பதில் சொல்கிறீர்.

சாஸ்திரி: விளங்கச் சொல்லுங்கள். உமது ஆக்ஷேபணை புரியவில்லை.

ஆசார்: 'கிமு தத் ப்ரம்ம' அந்த ப்ரம்மம் யார் என்றுதானே நீங்களே செய்துகொண்ட கேள்வி.

சாஸ்திரி: ஆம்.

ஆசார்: எதை அதற்கு பதில் எது என்று நீர் சொல்கிறீர்.

சாஸ்திரி: 'கிமு தத் ப்ரம்ம' என்ற கேள்விக்கு, 'ப்ரம்ம வா இதமக்ர ஆஸீத்' ஜீவன் ப்ரம்மமாகவே இருந்தான் என்பது பதில் என்று சொல்லுகிறோம்.

ஆசார்: ப்ரம்மம் யார்? என்ற கேள்விக்கு ப்ரம்மம் இன்னது இப்பேர்ப்பட்டது என்ற பதில் பொருத்தமா, அல்லது ஜீவன் இப்பேர்ப்பட்டவன், ஜீவன்தான் ப்ரம்மம், ப்ரம்மமே, ஜீவன் முன்பும் அதாவது ப்ரமக்ஞானம் ஏற்படுவதற்கு முன்னமேயும், ப்ரம்மமாகவே இருந்தான் என்று நீர் சொல்லும் பதில் பொருத்தமா என்று நீரே யோஜனை செய்து பாரும்.

சாஸ்திரி: ஓகோ.

ஆசார்: இதனால் உமது கேள்வியும் பதிலும் பொருத்தமாக இல்லை என்று விளங்குகிறதா?

சாஸ்திரி: விளங்குகிறது.

ஆசார்: பதிலுக்குத் தகுந்ததாய் கேள்வியை புதியதாய் நீர் ஏற்படுத்திக்கொண்டும்கூட அது பொருத்தமில்லாமல் போய்விட்டது. வேதத்தில் உமது சரக்கு செல்லுமா? ஜீவனைப் புகவிடுவதில் எத்தனை கஷ்டங்கள் இருக்கின்றன, பாரும். மற்றொன்றும் கேட்கிறேன். 'இதம்' என்பதற்கு ஜீவன் என்று எப்படி நீர் அர்த்தம் செய்தீர்?

சாஸ்திரி: ஜீவன் எல்லா சரீரங்களிலேயும் பிரவேசித்திருப்பவனாய் எல்லோர் கண்முன் தெரியவருவதால் 'இதம்' இது என்பது ஜீவனை அதாவது ஜீவசைதன்யத்தை, ஜீவப்ரம்மத்தை, குறிப்பதாய் நாம் சொல்கிறோம்.

ஆசார்: எல்லா சரீரங்களிலேயும் ஜீவசைதன்யம் ஜீவப்ரம்மம் ப்ரவேசித்திருப்பதாய்ச் சொல்வதே உம்முடைய அத்வைத சித்தாந்தத்திற்கு விரோதமாயிற்றே.

சாஸ்திரி: அத்வைத சித்தாந்தகாரர் சங்கராசாரியாரே இவ்வாறு அர்த்தம் செய்திருக்கையில், நீர், இது அத்வைத சித்தாந்தத்திற்கு விரோதம் என்று சொல்லிவிட்டதால், விரோதம் வந்துவிடுமோ?

ஆசார்: நானாக இதை சொல்லிவிடவில்லை. உம்முடைய சங்கராசாரியாரே, தைத்திரீயம் (2-6) பாஷியத்தில் 'ஏவம் தர்ஹி நைவாஸ்தி ப்ரவேச: ந ச கத்யந்தரமுபலபாமஹே ததேவானுப்ராவிசத் இதி ச ச்ருதே:......அன்யார்த்தத்வாத்......தத்ப்ரவேச: ப்ரகல்ப்யதே' என்று சொல்லியுள்ளார். அதற்கு அவருடைய சிஷ்யர் ஆனந்தகிரி 'தஸ்மாதந்தோ மணிமவிந்தத் இதிவத் அர்த்த: சூன்யமே வேதம் வாக்யமிதி நிகமயதி' என்று வியாக்யானம் செய்திருக்கிறார். பிருஹதாரண்யத்திலும் (1-4-7) சங்கராசாரியார் "நது ஸர்வகதஸ்ய நிரவயவஸ்ய திக்தேசகாலாந்த பராபக்ரமண ப்ராப்தி லக்ஷண: ப்ரவேச: கதாசிதப்யுபத்யதே' என்று சொல்லியுள்ளார். அதற்கும் ஆனந்தகிரி 'ஆத்மக்ஞானார்த்த தத்வேன ப்ரவேசாதீனாம் கல்பிதத்வாத் தத்வாக்யானாம் ந ஸ்வார்த்தே பர்யவஸானம் இத்யர்த்த:" என்று வியாக்யானம் செய்துள்ளார். இதனால் எல்லா சரீரங்களில் ப்ரவேசித்திருப்பதென்பது என்பது பரமாத்மாவுக்கு பொருந்துகிறதில்லையென்றும், அப்படி அவர் பிரவேசித்திருப்பதென்பது பொய் மித்யை என்றும் அவ்வாறு அவர் பிரவேசித்திருக்கிறார் என்று சொல்வதில் சுருதிக்கு தாத்பரியம் இல்லை என்றும், இவ்வாறெல்லாம் ஸ்பஷ்டமாக இவர்களின் அபிப்பிராயம் என்று நன்கு வெளியாகிறது. அப்படியிருக்க ஜீவசைதன்யம் ஜீவப்ரம்மம், ஜீவன், எல்லா சரீரங்களிலேயும் பிரவேசித்திருப்பதாய், எல்லோர் முன் ஸ்பஷ்டமாக காணப்படுகிறான் என்றும் அதனால் 'இதம்' என்னும் பதம் ஜீவனைக் குறிக்கிறதென்றும் சொல்வது உம்முடைய சித்தாந்தத்திற்கு விரோதம் என்று தோன்றுகிறது.

சாஸ்திரி: உம்

ஆசார்: என்ன பேசாமல் இருக்கிறீர்.

சாஸ்திரி: சரியல்லவென்றே தோன்றுகிறது.

ஆசார்: கக்ஷிக்காக உங்கள் அர்த்தத்தின்படி 'இதம்' என்பதற்கு எல்லா சரீரங்களிலேயும் பிரவேசித்திருப்பவன் என்றே வைத்துக்கொண்டாலும், அவன் ஜீவன் என்று வைத்துக்கொள்ளாமல், அவன் பரமாத்மா என்று வைத்துக்கொண்டால், "ய ஆத்மனி திஷ்டன், யோ விக்ஞானே திஷ்டன், ய ப்ருதிவ்யாம் திஷ்டன், ப்ருதிவ்யா: அந்தர: யோ அப்ஸு திஷ்டன், ஸோனுப்ரவிஷ்டோ பகவான்" இத்யாதி வாக்யங்களில், ப்ருதிவ்யாதி அபிமானி சேதனங்களில் பரமாத்மா நியாமகனாய் இருந்து வருகிறான், என்று சொல்லப்பட்டிருப்பதற்கும், இந்த வாக்யத்தின் முன்னாடி 'ஸர்வஸ்மாத் அந்தரம் என்று எல்லாவற்றிலும் இருப்பவன்

பரமாத்மாதான் என்று சொல்லப்பட்டிருப்பதற்கும் பொருத்தமாய் இருக்குமல்லவா?

சாஸ்திரி: இருக்கும்.

ஆசார்: ஆகவே 'இதம்' என்றால் ஸர்வாந்தர்யாமியான பரமாத்மா என்று அர்த்தமாகி, உங்கள் அர்த்த ரீதிப்படி அந்த பரமாத்மாதான் ப்ரம்மமே என்று ஏற்படுகிறதேயல்லாமல் 'இதம்' ஸர்வ சரீர ப்ரவிஷ்டனான ஜீவன் 'ப்ரம்ம' ப்ரம்மமே என்று அர்த்தமாவதில்லை. அதனால் 'அஹம் ப்ரம்மாஸ்மி' என்று தெரிந்துகொண்டது ப்ரம்மம்தான் என்று ஏற்படுகிறது. சரிதானே.

சாஸ்திரி: சரிதான், 'இதம்' என்பதற்கு நாம் ஜீவன் என்று அர்த்தம் செய்தது பிசகென்றே ஒப்புக்கொள்கிறேன். நீர் 'இதம்' என்பதற்கு என்னவென்றுதான் அர்த்தம் செய்கிறீர்? சொல்லுமே.

(தொடரும்)

ஸ்ரீ நாராயண பண்டிதாசாரியார் இயற்றிய

ஸங்கிரஹ ராமாயணம்.

பாலகாண்டம்.

(முன் 10-ம் வாலியம் 368-ம் பக்கம் தொடர்ச்சி.)

ஜனங்கள் ஏராளமாய்கூடியிருந்த அந்த யக்ஞ சாலையின் சமீபம் ஓர் அலாதி இடத்தில் ஸ்ரீ ராமர் விச்வாமித்திருடன் தங்கி இருந்தார். அற்புத புருஷரான ஸ்ரீ ராமசந்திரனுடன் விச்வாமித்திரர் வந்திருப்பதாய் ஜனகராஜன் கேட்டு, புரோஹிதரான சதானந்தர் முதலானவர்களால் சூழப்பட்டவராய், அங்கு வந்து சேர்ந்தார். அந்த யக்ஞ உற்சவத்திற்காக வந்திருந்த பலதேசத்தார்களும், அந்த ஊராரும், பெண்டு பிள்ளைகளுடன் சேர்ந்து, ஸ்ரீ ராமசந்திரனைப்பார்க்க அங்கு வந்தார்கள். சிஷ்யபரிவாரங்களுடன் சேர்ந்திருக்கும் விச்வாமித்திர முனிவரை விதிப்படி பூஜித்து லோகநாயகனான ஸ்ரீ ராகவனைப்பார்த்துவிட்டு, ஜனகராஜன் விச்வாமித்ரரிடம் இவ்வாறு சொன்னான்.

மரகத மாணிக்கம்போல் நீலவர்ணரும் கமல இதழ்போன்ற கண்ணுள்ளவரும் நவ யௌவனமுள்ளவருமான இந்த உத்தம புருஷன் யாரோ? ஸிம்ஹத்தினுடையது போல் தோள்களுள்ளவரும், மகத்தான மார்புள்ளவரும், பூர்ண சந்திரன்போன்ற வதனமுள்ளவரும், ஆழ்ந்த தொப்புள் உள்ள வரும், சங்கம் போன்ற கழுத்துள்ளவரும், நீண்ட புயமுள்ளவருமான இந்த உத்தம புருஷர் யாரோ? நகைக்காமல் இருந்தும் புன்னகையுடன் கூடிய முகமுள்ளவரும், உயர்ந்த யானையைப்போல் நடப்பவரும், அநேக அர்த்தங்களை சொல்பமாக பேசி வெளியிடுகிறவரும் வணக்கமுள்ளவருமான இந்த உத்தம புருஷர் யாரோ? இவர் ஸ்திரீ ஜனங்களுக்கு மன்மதனாய் இருக்கிறார். உங்களைபோன்ற பெரியோர்களுக்கு தொண்டராய் இருக்கிறார். சத்ரு ஜனங்களுக்கு கேவலம் யமனாக இருக்கிறார். யோகி ஜனங்களுக்கு சாக்ஷாத் நாராயணனாக இருக்கிறாரே? இந்த உத்தம புருஷர் யாரோ? சிறுவரான இவர் கோமள சரீரத்துடன் இருக்கிறார். பார்க்கும் ஜனங்களின் கண்களுக்கு பெரும் திருவிழாவைத் தருகிறார். இவருடைய தளிர் போன்ற கால்கள் பூமியில் படுவதைப்பார்க்க மனம்தாளுவதில்லை. இவருடைய சமீபத்தில் மற்றொருவர் இவரைப்போலவே ஸமான ரூபமுள்ளவராய் இருப்பவர் யாரோ? கோவைக்கனியைப்போல் உதடு உள்ள இவர், அவருடைய பிரதிபிம்பமோ என்னும் தோற்றத்தை பின்பற்றுகிறாரே?

என்று இம்மாதிரி சுத்தஸ்வபாவமுள்ள ஜனகராஜன் ஜனங்களின் நடுவில் ப்ரசினம் செய்யவும், ஸமர்த்தரான விசுவாமித்திரர் மந்தஹாஸம் செய்து இவ்வாறு பேசினார். நண்பனான ஜனக ராஜனே! இவன் தசரத சக்கரவர்த்தியின் திருமகன். க்ஷரமான ப்ரம்மாதி ஸர்வ ஜகத்துக்கும், அக்ஷரையான மகா லட்சுமிக்கும் மேற்பட்டவரானதால் புருஷோத்தமராயுள்ள ஸாக்ஷாத் நாராயணன்தான் இவர். தேவர்களின் வேலைகளைச் செய்ய விரும்பி மனோஹரராய் ராமர் என்ற பெயருடன் அவதாரம் செய்திருக்கிறார். இவருடன் இருப்பவர் இவருடைய தம்பி. உத்தமர். மங்களமான சரீர லக்ஷணங்களுள்ளவர், லக்ஷ்மணர் என்று இவருக்கு பெயர். அயோத்தியிலிருந்து இவர்களை என்னுடைய சித்-

தாச்ரமத்திற்கு அழைத்து வந்தேன். அங்கு என்னுடைய யக்ஞத்தை அழித்துவந்த ராக்ஷஸர்களை விளையாட்டாய் இவர்கள் சம்ஹாரம் செய்து என் யக்ஞத்தை சம்ரக்ஷித்தனர். கௌதம ரிஷியின் சாபத்தால் சிலையாய்க்கிடந்த அகல்யையையும் கடைக்கண்ணால் பார்த்து சாபத்தினின்றும் விடுவித்தார். வில்லாளிகளில் இவர் மிகவும் மேலானவர். உம்முடைய பெண்ணான சீதையின் விவாகத்திற்கு பந்தயமாக நீர் வைத்துக்கொண்டிருக்கும் சிவ தனுஸ்ஸைப் பார்க்க விரும்புகிறார். வில்லாளிகளாகிய தங்களுக்கு இவர் உறைக்கல் போன்றவர். ஸமஸ்தமான குணங்களும் இவரிடம் ஸம்பூர்ணமாய் இருக்கின்றன. ஆகவே முன்பு க்ஷீர ஸமுத்ர ராஜன் புராண புருஷரான நாராயணனை மருமகனாய்ச் செய்துகொண்டதுபோல், இவரை வீரனான ஜனகனே! நீரும் மருமகனாய்ச் செய்துகொள்ளும்.

விசுவாமித்திரரின் தபோ மகிமை.

இவ்வாறு விச்வாமித்திரர் சொன்னதை கௌதமரின் புத்ரரான சதாநந்தர் கேட்டு மகா சந்தோஷமடைந்து ஸ்ரீ ராமரைப் பார்த்து இவ்வாறு சொன்னார். ஸ்ரீராமச்சந்திரா! ஜகதீசுவரரான பிரபுவே! தம்பி லக்ஷ்மணனுடன் கூடிய தங்களுக்கு நல்வரவு அளிக்கிறேன். கருணைகொண்டு தாங்கள் என் தாயான அஹல்யையை பிழைப்பித்தீரே! சாபத்தினின்றும் விடுவித்தீரே! புருஷோத்தமரான தாங்கள் இந்த விச்வாமித்திரரை அவர் சீடர் போல் பின்தொடர்வதால் உலகில் இந்த விச்வாமித்திரர்தான் மகா பாக்யவான் என்று நினைக்கிறேன். ஸ்ரீ ராமா! காதி ராஜனின் பிள்ளையான இந்த விச்வாமித்திரர் முன்பு மகா பலிஷ்டனான அரசனாய் இருந்து உத்தமரான வசிஷ்டருடைய காமதேனுவை அபகரித்தார், அந்த காமதேனு தன் அவயவங்களினின்றும் உத்பன்னர்களான சகர்கள், மிலேச்சர்கள், யவனர்கள், முதலான ஜாதியார்களான போர்வீரர்களைக்கொண்டு இந்த விச்வாமித்ரராஜனின் சைனியத்தை நாசம் செய்தது. உடனே விச்வாமித்திரர், பரமசிவனைக் குறித்து தவம் செய்து அவரை மகிழ்வித்து, பிரம்மாஸ்திரம் முதலான எல்லா அஸ்திரங்களையும் அடைந்து அவைகளைக்கொண்டு வசிஷ்டருடன் யுத்தம் செய்தார்.

ப்ரம்ம புத்ரரான வசிஷ்டர் விஷ்ணுவையே தேவதையாகக் கொண்ட ப்ரம்ம தண்டம் வைத்துக்கொண்டு, அவைகளை எதிர்த்தார். பரபிரம்மமான விஷ்ணுவின் அனுக்ரஹத்தால் அவைகள் எல்லாவற்றையும் விழுங்கினார். பிறகு வைஷ்ணவ தபஸ்ஸால் சாமர்த்தியம் பெற்ற விச்வாமித்ரர், வசிஷ்டரின் குமாரர்களால் சண்டாளனாய்ச் செய்யப்பட்ட த்ரிசங்கு ராஜனை ஸ்வர்க்கத்தை அடையச் செய்தார். யக்ஞத்தில் பசுவாயிருக்கத் தயாரான சுனச்சேபனைக் காப்பாற்றினார். மறுபடியும் வாஸுதேவனான விஷ்ணுவை தியானம் செய்துகொண்டு மகா க்ரூரமான தவம் செய்தார். மேனகையிடம் காமமடைந்தும், ரம்பையிடம் கோபமடைந்தும், ஈசுவர இச்சையால் தபஸ் நாசமாய்ப்போய் மீண்டும் மகா தவம் புரிந்தார். ஆகாரமில்லாமலும், ஆகாரமில்லாமலும், சுவாசம் விடாமலும், பசி தாகம் முதலியவைகள் இல்லாமலும், விஷ்ணுவைக் குறித்து பல பதினாயிரம் வருஷங்கள் தவம்செய்தார். இவர், தான் செய்த மகத்தான விரதத்தால், முதலில் ராஜரிஷியாகவும், பின்பு ரிஷியாகவும், பின்பு மகரிஷியாகவும், பின்பு பிரம்ம ரிஷியாகவும் ஆகி, இந்த பிரம்மாதி தேவர்களும் ஒப்புக்கொண்டனர். இப்பேர்ப்பட்ட மகான் உம்முடன் இருப்பது நாராயணருடைய அனுக்ரஹம்தான். பிராம்மணர்களுக்கும் ஹிதம் புரிபவரான உமக்கு இவரிடம் இப்பேர்ப்பட்ட அன்பு ஏற்பட்டது ஆச்சரியமன்று.

என்று இவ்வாறு கௌதம ரிஷியின் மகனான சதாநந்தர் சொன்னவார்த்தையை ஸ்ரீ ராமச்சந்திரர் கேட்டார். விச்வாமித்திரரைப் பார்த்தார் அவர் ஸர்வக்ஞராயினும் உலகத்தாரைப் போலவே ஆங்காங்கு கதைகளைக் கேட்டு வந்தார். நல்ல ஞானமுள்ளவராயும் உலகத்துக்கெல்லாம் ப்ரதான ப்ரகாச ரூபமாயுள்ள பகவான் ஸ்ரீ ராமசந்திரமூர்த்திக்கு இந்தக் கதைகளெல்லாம் தெரியாமல் இருந்ததென்று அஞ்ஞானம் உண்டா? அஞ்ஞான லேசம்கூட அவருக்கு ஏற்படமாட்டாது. உலகத்துக்கெல்லாம் பிரகாச ரூபமாயுள்ள சூரியனிடம் எச்சமயமும் ஒரு துளி இருள் கூட காணப்படமாட்டாதுதான்.

ஆறாவது சர்க்கம் முடிந்தது.

7-வது ஸர்க்கம்.

ஸீதா விவாகம்.

மறுநாள் ஜனகன் ராமலக்ஷ்மணர்களுடன் கூடிய விச்வாமித்திரரை தன்னுடைய யக்ஞவாடத்திற்கு அழைத்துவந்து தனது இஷ்டம் பூர்த்தியடைந்தவனாய் வணக்கத்துடன் நமஸ்கரித்து நல்ல பேச்சு பேசினார். நான் யாகம் செய்வதற்காக பூமியை பரிசோதிக்க கலப்பையால் உழும் சமயம் எனக்கு மகா பாக்யவதியான ஓர் பெண் அகப்பட்டாள். கலப்பையின் நுனி பட்ட பாதையினின்று இவள் பிறந்ததால் இவள் ஸீதை எனப்படுகிறாள். தரித்திரனுக்கு மகாநிதி அகப்பட்டால் எப்படியோ அப்படி எனக்கு அகப்பட்டிருக்கிறாள். சந்திர கலையைப்போல் அவள் குணபூர்ணளாய் இருப்பதைக்கண்டு எனக்கு வெகு காலமாய் சிந்தை இருந்தது. சூத்ரனுக்கு வேதத்தை தானம் செய்தால் எப்படியோ அப்படிக்கு அனர்ஹமாயிருப்பவனுக்கு இவளை ஒருக்காலும் கொடுக்கக்கூடாதென்று எண்ணி, பரமசிவன் உத்தேசமாய் தபஸ் செய்து, அவரை சந்தோஷப்படுத்தி, அவரிடமிருந்து ஓர் உத்தமமான தனுஸ்ஸை சீக்கிரம் அடையப்பெற்றேன். ஆதிவராஹனைத்தவிர வேறு எவரால் பூமி எப்படி அசைக்கமுடியாதோ அப்படித்தான் இந்த தனுஸ்ஸும் பரமசிவனைத்தவிர வேறு எவராலும் அசைக்கமுடியாதது. முன்பு தக்ஷப்ரஜேசுவரரின் யாகத்தில் பரமசிவனுக்கு யக்ஞபாகம் கிடைக்காமற்போகவும், அவ்வாறு யக்ஞபாகத்தை கெடுத்த தேவர்களை இந்த தனுஸ்ஸைக்கொண்டு அவர்களின் அவயவங்களை சேதித்தார். அவர்கள் பரமசிவனை நமஸ்கரித்து சந்தோஷப்படுத்தவும் வெகு சீக்கிரம் சந்தோஷப்படும் தெய்வமான அப்பரமசிவம் சேதிக்கப்பட்டுப்போன அவர்களின் அவயவங்களை ஒட்டவைத்தார். அப்பேர்ப்பட்டதான இந்த சிவதனுஸ்ஸை வளைத்து நாணேற்றுபவன் யாரோ அவனுக்கு என்னுடைய குமாரத்தியை விவாகம் செய்துவைக்கிறேன், என்று நான் செய்த ப்ரதிக்ஞை உலகில் சூரியனுடைய கிரணங்கள் பரவுவதுபோல் பரவிவிட்டது. பிரகாசிக்கும்படியான க்ஷத்திரியகுமாரர்கள் என்ன, யக்ஷராக்ஷஸச்ரேஷ்டர்கள் என்ன, அஸுரர்கள் என்ன எல்லா, வீர ச்ரேஷ்

டர்களுமே தாமரை ஓடைக்கு ஹம்சங்கள் வந்து சேருவதுபோல் இந்த ஸீதா ஸ்வயம்வரத்திற்கு வந்திருந்தார்கள். சில வீரர்கள் அந்த தனுஸ்ஸைப் பார்த்தமாத்திரத்திலேயே சென்றனர். சிலர் சமீபம் வந்து சென்றனர். சிலர் அதைத் தொட்டுவிட்டுச் சென்றனர். சிலர் அசைத்தபின் சென்றனர். இந்த வீரர்கள் எல்லோருமே இவ்வாறு பராக்கிரமம் இழந்தனர். சிலர் இவ்வாறு திரும்பியவர்களைப் பார்த்தே பயந்து சென்றனர். மகாகர்விஷ்டர்களாய் அதைத் தூக்க விரும்பியவர்கள் எல்லோரும் உடம்பு வேர்த்துப்போய் பூமியில் மூர்ச்சையாய் விழுந்தனர். எதற்கும் பயப்படாதவர்களாய் துக்கத்தை அனுபவிக்காதவர்களும் கூட ராவணன் முதலானவர்களும்கூட சோகிக்கத்தகுந்ததான நிலையை அடைந்தார்களென்றால் இதர ஜனங்கள் கஷ்டப்பட்டனர் என்று சொல்வானேன்? போக்கிரிகள் கஷ்டப்பட்டனர் என்று சொல்வானேன்? இரகசியமாய் என்னிடம் துவேஷங்கொண்டவர்கள் இவளை பலாத்காரமாய் அபகரிக்க விரும்பியவர்களாய் என்னுடன் ஒரு வருஷகாலம் போர் புரிந்தும் என்னைவிட பலிஷ்டர்களாய் இருந்தும் இவளை அபகரிக்கமுடியவில்லை. பிரம்மா கொடுத்திருக்கும் அப்பேர்ப்பட்ட உத்தமமான வரம்தான் எனக்கு பலமாய் இருக்கிறது. இந்த ஸ்ரீ ராமசந்திரன்தான் அந்த தனுஸ்ஸுக்கு நாணேற்றட்டும். என் பெண்ணான ஸீதை இந்த ஸ்ரீ ராமசந்திரனைத்தான் பர்த்தாவாய் அடைந்து அவருக்குத் தகுந்தவளாய் இருந்து பூர்ணசந்திரனை சந்திரிகையைப்போலவும், சூரியனை அவனுடைய பிரபைபோலவும் பின் தொடர்ந்து இருக்கட்டும். என்றிவ்வாறு ஜனகன் சொல்லவும் உதாரசித்தமுள்ள விசுவாமித்திரர், அரசனே! சத்ருக்களை தோற்கடிக்கும் அந்த சிவதனுஸ்ஸை சீக்கிரமே கொண்டுவரச்சொல்லும் என்றார். அரசனும் அவ்வாறே உத்திரவு கொடுக்க, எட்டு சக்கரம் கொண்ட இரும்புப் பெட்டியில் பந்தோபஸ்தாய் வைக்கப்பட்டிருக்கும் அந்த சிவதனுஸ்ஸை, அதை இழுத்துவர பரமசிவனின் வரம்கொண்ட ஐயாயிரம் வீரோத்தமர்கள் இழுத்துவந்தனர்.

(தொடரும்.)

ஸ்மார்த்த பிராம்மணர்களின் மாம்ஸ பக்ஷணம்.

(முன் 14ம் பக்கத் தொடர்ச்சி)

IV எல்லோருக்குமே வெகு வேகமாக ஆயுள் முடிவடையும் கோரமான இக்காலத்தில். "அதிக்ராமதி காலேஸ்மின் ஸர்வபூதபயாவஹே| கிம்ச்ரேய: ப்ரதிபத்யேத தன்மே ப்ரூஹி பிதாமஹா||" மனுஷ்யன் எதைச் செய்தால் க்ஷேமமுண்டாகும் என்று தர்மபுத்திரர் பிரசினம் செய்ய, அந்த விஷயத்தில். ஒரு பிராம்மணருக்கும் மேதாவி என்ற அவருடைய பிள்ளைக்குமே நடந்த வெகு சிலாக்யமான சம்பாஷணையின் இடையே அந்த மேதாவி, பிராமணோத்தமர் சொல்லியிருப்பதாவது:— விஷயத்தில் ஈடுபடுவது மிருத்யுவின் வீட்டில் இருப்பதாகும், விஷயத்தில் ஈடுபடாதிருப்பது தேவர்களின் கோஷ்டியில் இருப்பதாகும். ஆகவே ஸத்யமான விரதங்களோடும் ஆசாரத்தோடும் இருக்கவேண்டும். ஸத்யமான பரபிரம்மத்தில் அபேக்ஷையுடன் இருக்கவேண்டும். இந்திரியங்களை ஜயிக்கவேண்டும், அதனால் ஸம்ஸாரத்தை ஜயிக்கவேண்டும். தேகத்திலேயே ஸம்ஸாரமும் மோக்ஷமும் இருக்கின்றன. அவிவேகத்தால்தான் ஸம்ஸாரம் உண்டாகிறது. ப்ரம்ம ஞ்ஞானத்தால் மோக்ஷம் உண்டாகிறது. ஆகையால் பிதாவே! அதற்காகத்தான் ஸோஹம் ஸத்யம் அஹிம்ஸார்த்தீ நான் அஹிம்சையோடு கூடியிருக்கிறேன், காமக்ரோதங்களை விட்டிருக்கிறேன், ப்ரம்மத்தை ஆசிரயித்து ஸம்ஸாரத்தை விடப்போகிறேன், நான் உத்தராயணத்தில் சாந்தி யக்ஞத்துடன் இருந்து, ப்ரம்ம யக்ஞத்தில் ஆஸக்தனாய், வாக்கு மனஸ் கர்மம் இவைகளுடன் யக்ஞத்தைச் செய்யப்போகிறேன். பசுயக்ஞை: கதம்ஹிம்ஸ்ரை: மாத்ருசோ யஷ்டு மர்ஹதி| அந்தவத்பி: உத ப்ராக்ஞ: க்ஷேத்ரயக்ஞை: பிசாசவத் தந்தையே! பசுவைக்கொன்று செய்யப்படும் யக்ஞத்தைச் செய்ய என்னை வற்புறுத்துகின்றீரே. என்னைப்போன்ற ப்ரம்ம க்ஞானியும் ஸம்ஸாரத்தைத் தாண்ட இச்சை கொண்டவனுமாயிருப்பவன், பிசாசுகளைப்போல் ஆட்டை அடித்து அதன் மாமிஸத்தை புஜித்து யக்ஞத்தைச் செய்வேன். நான் ஒருக்காலும் செய்யமாட்டேன். இவைகளுக்கு அதிகமான பலன் ஏது? இப்பேர்ப்பட்ட ஹிம்ஸாகாரமான யக்ஞம் பிராம்மணர்களால் செய்யத்தகுந்தது அன்று. ப்ராணி ஹிம்ஸை செய்யும் க்ஷத்திரியர்களுக்கு வேண்டுமானாலும் உரித்தாகும் என்றார்.

V ஒருசமயம் விசக்யு என்னும் அரசன் தன் யக்ஞசாலையில் ஆடுகள் கும்பல் கும்பலாய் கொல்லப்பட்டு கிடந்திருப்பதையும், அநேக ஆடுகள் கொல்லப்பட்ட யூபங்களில் கட்டப்பட்டு கத்துவதையும், கண்டு மனமிறங்கி மிகவும் துக்கப்பட்டவனாய், சிறிதும் கருணையின்றி அங்கிருந்த அந்தணர்களையும் பார்த்துவிட்டு, அவன் உலகத்தாருக்கு விடுத்த விளம்பரமாவது:— "ஸ்வஸ்தி கோப்யஸ்து லோகேஷு ததோ நிர்வசனம் க்ருதம்| அவ்யவஸ்திதமர்யாதை: விமூடை: நாஸ்திகை: நரை:| ஸம்சயாத்மபி: அவ்யக்தை: ஹிம்ஸா ஸமனுதர்சிதா| ஸர்வகர்மஸு அஹிம்ஸாம் ஹி தர்மாத்மா மனுரப்ரவீத்| காமகாராத் விஹிம்ஸந்தி பஹிர்வேத்யாம் பசூன் நரா:| தஸ்மாத் ப்ரமாணத: கார்ய: தர்ம: ஸூக்ஷ்மோ விஜானதா| அஹிம்ஸாஹ்யேவ ஸர்வேப்ய: தர்மமேப்ய: ஜ்யாயஸீ மதா| உபோஷ்ய ஸம்சிதோ பூத்வா ஹித்வா வேதக்ருதாம் சுசி:| ஆசார: இத்யநாசார: க்ருபண: பலஹேதவ:| யதிச்சிந்தந்தி வ்ருக்ஷாம்ஸ்ச யூபாம்ஸ்ச உத்திச்ய மானவா:| வ்ருதா மாம்ஸானி காதந்தி நைஷதர்ம: ப்ரசஸ்யதே| ஸுராம் மத்ஸ்யான் மதுமாம்ஸமாஸவம் க்ருஸராதனம்| தூர்த்தை: ப்ரவர்த்திதம் ஹ்யேதத் ந ஏதத்வேதேஷு கல்பிதம்| காமாத் மோஹாச்ச லோபாச்ச லௌல்யமேதத் ப்ரவர்த்திதம்| விஷ்ணுமேவ அபிஜானந்தி ஸர்வயக்ஞேஷு ப்ராம்மணா:| பாயஸை: ஸுமனோபிஸ்சதஸ்யைவ யஜனம்ஸ்ம்ருதம்| யக்ஞியாஸ்சைவ ஏ வ்ருக்ஷா: வேதேஷு பரிகல்பிதா| யச்சாபி கிம்சித் கர்த்தவ்யம் அன்யச்சோக்ஷை: ஸுஸம்ஸ்கிருதம்| மகாஸத்வை: சுத்த பாவை: ஸர்வம் தேவார்ஹமேவ தத்||" ஜனங்களே! இனி யாகயக்ஞாதிகளில் ஆடு முதலியவைகள் அடிக்காமற் போகக்கடவது. அவைகளுக்கு சௌக்யம் ஏற்படக்கடவது. பகவான் இதற்கு அனுக்ரஹிக்கட்டும். ப்ராம்மணர்கள் செய்யத்தகுந்த யக்ஞம் இன்னது க்ஷத்திரியர்கள் செய்யத்தகுந்த யக்ஞம் இன்னது என்ற அந்த விவஸ்தையை கெட்டவர்களும் மூர்க்கர்களும் நாஸ்திகர்களும் வேதார்த்தத்தில் சந்தேகங்கொண்டவர்களும் இன்னார் என்று தெரியாதவர்களும்தான், யக்ஞத்தில் பசு வதை செய்யப்படுவதுதான் வேதத்தின் தாத்பர்யமென்று சொல்லுகின்றனர். யாக யக்ஞாதிகளாயிருந்தாலும் சரியே, வேறு எந்த ஸத்கர்மாவாயிருந்தாலும் சரியே, எக்காரியம் செய்தாலும் பிராணி ஹிம்ஸை கூடாதென்றும் அஹிம்ஸைதான் இருக்கவேண்டுமென்றும் ஸமஸ்தமான வேதார்த்

தங்களை அறிந்த மனு தர்மசாஸ்திரத்தில் விதித்திருக்கிறார். இப்படி இருக்க யக்ஞத்தில் மட்டில் பசு வதை செய்வது தோஷமில்லை என்று அவர் சொல்லியிருப்பதாய், அவருடைய வாக்யத்திற்கு கபடமாய் அர்த்தத்தை கல்பித்துக்கொண்டு, கேவலம் மாம்ஸபக்ஷணம் செய்யும் ஆசையின்பேரில், வெளியில் கசாப்புக்கடை முதலியவைகளில் ஆடு மாடுகளை அடிப்பதுபோல், ஆடு மாடுகளை அடித்து அதன் மாம்ஸத்தை பக்ஷிக்கின்றனர். ஆகவே புத்திசாலி, பிரமாணங்களில் எது பலிஷ்டமானது எது துர்பலமானது என்பதை தெரிந்துகொண்டு, வேதத்தில் கூடமாய் இரகசியமாய் சொல்லப்பட்டிருக்கும் அஹிம்ஸா தர்மத்தைத்தான் அனுஷ்டித்தல்வேண்டும். ப்ராணி ஹிம்ஸை செய்யாமல் இருப்பதுவே ஸமஸ்தமான தர்மங்களைவிட மேலானது. வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறதே என்று ஸ்வர்க்காதி பலனில் ஆசை வைக்கலாகாது. அதை விடவேண்டும். உபவாஸாதிகளைச்செய்து மனதை ஜயிக்கவேண்டும். தீக்ஷணமான விரதத்தைக் கைக்கொள்ளவேண்டும். யக்ஞத்தில் பசு வதை செய்யப்படுவது அநாசாரந்தான். ஸ்வர்க்காதிகளில் பலன் உள்ளவர்கள் இம்மாதிரியான பசு வதை கொண்ட யக்ஞத்தைச் செய்கின்றனர். யக்ஞம் செய்கிறோம் என்று சொல்லி அங்கு யூபஸ்தம்பத்திற்காக விருக்ஷங்களை வெட்டுகிறோமென்று வெளியில் காட்டிவிட்டு, ஆட்டை அடித்து அதன் மாமிஸத்தை வீணாய் புஜிக்கின்றனரேயன்றி இவர்கள் தர்மத்தை ஆசரித்ததாய் ஆவதில்லை. மது, மாம்ஸம், மத்யம், மத்ஸ்யம், திலான்னம் இவைகளை சாப்பிடும்படி வேதத்தில் எங்கும் சொல்லப்படவே இல்லை. போக்கிரிகள்தான் மமதையாலும் அவிவேகத்தாலும் ஆசையாலும் இவைகளைச் சாப்பிட வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறதென்று பெயர் வைத்து ஏற்பாடு செய்திருக்கின்றனர். சக்திபூஜை முதலியவைகளில் இவைகள் அவசியம் நைவேத்யம் செய்யப்படவேண்டுமென்று ஏற்பாடு செய்திருக்கின்றனர். உலகில் உள்ள ஸமஸ்தமான யக்ஞயாகாதிகளுக்குமே முக்யமான தெய்வம் விஷ்ணுதான் என்று வேதவித்துக்களான பிராம்மணர்கள் அறிந்திருக்கின்றனர். அந்த யக்ஞமூர்த்தியான நாராயணனை பாயஸங்களாலும் புஷ்பங்களாலும்தான் ஆராதிக்கவேண்டும். சக்தி முதலான தேவதைகளை பூஜிப்பதுபோல் மாம்ஸம், மத்யம முதலானவைகளால் பூஜிக்கலாகாது. யக்ஞத்திற்கு உபயோகப்படும் விருக்ஷங்களையும் வெட்டலாகாது. அவைகளும் பகவத் பூஜைக்காகவே ஏற்பட்டது என்றும் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஸத்வகுணத்தோடு கூடிய சுத்தஸ்வபாவம் உடையவர்களும் பிறப்பாலேயே சுத்தர்களாயும் உள்ள ஜனங்கள் விலக்கும் வஸ்துக்கள் எல்லாமே பகவத்பூஜைக்கு அருகமானவைகள்.

VII பிரம்மரிஷியான ஜாஜலிக்கும் காசிமாநகரின் பிரசித்த தர்மக்ஞனான துலாதாரன் என்னும் வர்த்தகனுக்கும் நடந்த சம்பாஷணையில், துலாதாரன் அறிவித்திருப்பதாவது:— வக்ஷ்யாமி ஜாஜலேவ்ருத்திம் நாஸ்மிப்ராம்மண நிந்தக:| நயக்ஞம் சவிநிந்தாமி யக்ஞவித்து ஸுதுர்லப:| நமோ ப்ராம்மண யக்ஞாய யெக்ஞவிதோஜனா:| ஸ்வயக்ஞம் ப்ராம்மணா ஹித்வா க்ஷாத்ரயக்ஞமனுஷ்டிதா:| நமஸ்காரேண ஹவிஷா ஸ்வாத்யாயை: ஔஷதைஸ்ததா| பூஜாஸ்யாத் தேவதானாம்ஹி யதாசாஸ்த்ர நிதர்சனம்| நான் நாஸ்திகன் அன்று. நான் யக்ஞத்தை நிந்திக்கிறதில்லை. மற்றும் நான் யக்ஞஸ்வரூபத்தை அறிந்தவன். பிராம்மணர்கள் செய்யும் யக்ஞத்திற்கும் அந்த யக்ஞஸ்வரூபத்தை அறிந்த ஜனங்களுக்கும் நமஸ்காரம் செய்கிறேன். பிராம்மணர்கள் தாங்கள் செய்யவேண்டிய பசு வதையை பிரதானமாகக்கொண்ட யக்ஞத்தை செய்கின்றனர். நமஸ்காரமே ஹவிஸ்ஸாகக்கொண்ட யக்ஞத்தாலும், அத்யயனமே ஹவிஸ்ஸாக உள்ள யக்ஞத்தாலும் வ்ரீஹியவம் இந்த தானியங்களை ஹவிஸ்ஸாகக்கொண்ட யக்ஞத்தாலும் யக்ஞத்தை நடத்தலாம் என்று வேதத்தில் விதிக்கப்பட்டிருக்கிறது. புரோடாசோஹி ஸர்வேஷாம் பசூனாம் மேத்ய உச்யதே|| யக்ஞத்தில், ஸமஸ்தமான பசுக்களிலும் தானியத்தால் தயாரான புரோடாசந்தான் மிகவும் பரிசுத்தமானது என்று இவ்வாறு சொல்லியுள்ளார். (தொடரும்.)

லோக வர்த்தமானம்.

ஓர் மனைவி இருக்கும்பொழுது மற்றொருத்தியை ஏதோ ஒன்றிரண்டு விசேஷ சந்தர்ப்பங்களில் தவிர சாமானியமாய் இந்துக்களில் எவனும் விவாகம் செய்யலாகாதென ஓர் சட்டம் செய்ய இந்திய சட்டசபை மெம்பரான ஸ்ரீமதி ராதாபாய் பெரு முயற்சி செய்திருக்கிறார். அந்த அம்மாள் பிராம்மண ஜாதியினராயினும் கவுண்ட ஜாதியைச்சேர்ந்த சென்னை மந்திரி கனம் சுப்பராயனை மணந்தவள்.

° ° °

விதவைகள் புனர் விவாகம் செய்யலாகாதென ப்ரிட்டிஷ் இந்தியாவில் சட்டம் இருப்பதுபோல் மைசூரிலும் சமீபத்தில் சட்டம் நிறைவேறிவிட்டது.

தனக்கு பிடிக்காத தன்புருஷனை ஓர் நோட்டீஸ் கொடுத்த மாத்திரத்தாலேயே தள்ளிவிடலாமென்று அபிப்பிராயங்கொண்ட ஸ்திரீகளின் சங்கமொன்று சிந்து மாகாணம் ஹைதராபாத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பல வருஷகாலம் வாழ்ந்து பல பிள்ளைகளைப் பெற்றவர்களும் அச்சங்கத்தில் சேர்ந்திருக்கின்றனர். பிரம்மசரிய விரதம் அனுஷ்டிப்பது அவர்களின் நோக்கமென்று சொல்லப்படுகிறது.

⁂ ⁂ ⁂

ஸ்ரீ வைகுண்டத்தில் ஏகாகியாய் ஸினிமாவுக்கு போய் வந்து கொண்டிருந்த ஓர் ஸ்திரீயை காதை அறுத்து அங்கு அணிந்திருந்த நகையை துஷ்டர்கள் திருடிக்கொண்டுபோக, நகையை அவள் திரும்பப்பெற்றாளாயினும், அறுபட்டுப்போன காதுடன் ஏகாகியாய் வெளியே போய்வரும் தற்கால நாகரீக மாதர் உலகத்தில் அழகிய காக்ஷியை அளித்துவருகிறாள்.

⁂ ⁂ ⁂

ஜாதிமத வித்யாஸம் பாராட்டி பஞ்சமர்களை அனுமதிக்காத ஹோட்டல்களுக்கு லைசென்ஸ் கிடையாதென்று பம்பாய் காங்கிரஸ் சர்க்கார் சட்டமியற்றியிருக்கின்றனர். காந்திஜியின் வாசஸ்தலமான அகமதாபாத்திலும் பூனாவிலும் அப்பேர்ப்பட்ட ஹோட்டல்களை அவ்வூரார் பஹிஷ்கரிக்க ஹோட்டல்கள் மூடும்படி நேரிட்டிருக்கிறது.

⁂ ⁂ ⁂

ஆட்டை அடித்து அதன் மாமிஸத்தை புஜித்து நடத்தும் ப்ரத்யக்ஷ பசு வதைகொண்ட யாகமொன்று குண்டூரில் ஆரம்பிக்கப்படவும், அவ்வூர் பொதுமக்கள் அதில் அசிங்கமடைந்து பெருத்த கலகம் விளைவித்து யாகத்தை நடத்தவொட்டாமல் செய்தனர். போலீஸ் அதிகாரிகளுக்கு அந்த யாகாதிகாரிகள் செய்துகொண்ட மனுவும் புறக்கணிக்கப்பட்டது. பிரதான மந்திரிக்கு புகார் செய்தும் அவர் யாகாதிகாரிகளுக்கே புத்திமதி சொல்லி அனுப்பினார்.

⁂ ⁂ ⁂

ஹிந்து தெய்வங்களின் பெயரையும் படங்களையும் புகையிலை சுருட்டு முதலிய சாமான்களுக்கு வியாபார குறியாக உபயோகிப்பதை தடுக்க சட்டம் இயற்ற கிளர்ச்சி செய்யப்பட்டிருக்கிறது.

ஓர் ஸ்திரீ செய்துகொண்ட விவாகத்தை அவள் ரத்து செய்துகொள்ளலாமென பஞ்சாப் சட்டசபையில் ஓர் ஸ்திரீ மெம்பர் ஓர் சட்டம் கொண்டுவந்தும் காங்கிரஸ்காரர்கள் உள்பட அதை எதிர்த்தனர். பம்பாயிலும் அவ்வாறே ஓர் சட்டம் கொண்டுவர ஏற்பாடாகியிருக்கிறது.

⁂ ⁂ ⁂

பர்மாவில் மகம்மதியர்கள் பௌத்தமதத்தை தாக்கி பிரசாரம் செய்ததின் நிமித்தம் இந்தியர்களை வெறுத்திருந்த பர்மியர்கள் பலமாக கலகம் செய்து இந்தியர்களை அவர்களின் நாட்டிலிருந்து விரட்டி வருகின்றனர்.

⁂ ⁂ ⁂

கம்மாளர்கள் எனப்படும் விச்வகர்மஜாதியரை விச்வப்ராம்மணர்கள் என்று அழைக்க சென்னை காங்கிரஸ் ஸர்க்கார் ஒப்புக்கொண்டுவிட்டனர். அநேககாலமாய் அவர்கள் செய்துவரும் கிளர்ச்சிதான் இதற்குக் காரணம்.

⁂ ⁂ ⁂

காங்கிரஸ் மாஜி பிரஸிடெண்டு பண்டித ஜவஹர்லால்நேரு ஸ்பேயினில் நடக்கும் யுத்தத்தை நேரில் பார்வையிட்டு இங்கிலாந்துக்குப்போய் முக்ய மாணவர்களுடன் இந்திய பிரசினையைப்பற்றி பேசி வருகிறார்.

⁂ ⁂ ⁂

பகிரங்கமாய் பலர் போய்வரக்கூடிய விபசார கிருகங்கள் இனி எங்குமே இல்லாதிருக்க சென்னை சட்டசபையில் சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. கோயிலில் பொட்டு கட்டும் வழக்கமும் இதனால் தடுக்கப்பட்டுவிட்டது.

⁂ ⁂ ⁂

அதிசய பராக்கிரமம் வாய்ந்த மூன்று மகா வீரர்கள் இப்போது ஐரோப்பாவில் விளங்கிவருகின்றனர். ஜர்மனியில் ஹெர் ஹிட்லர் என்பவர் ஆஸ்திரேலியா தேசத்தை ஜயித்து ஜர்மனியுடன் சேர்த்துவிட்டார். தற்போது ஜெக்கோஸ்லோவோகியா என்னும் தேசத்தை குறிபார்த்துக்கொண்டு பிரிட்டிஷாரையுமே சங்கடத்தில் சிக்க வைக்கப்பார்க்கிறார். இத்தாலியில் ஸீனர் முஸோலினி என்பவர் மகா யுத்தம் செய்து அபிஸீனியா தேசத்

தை ஜயித்து தன் தேசத்துடன் சேர்த்தார். ஸ்பெயினில் ஜெனரல் பிராங்கோ என்பவர் ஜனநாயகத்தை வகித்து ஆஸ்திக புத்து படைத்தவராய் நாஸ்திகர்களான பொதுவுடமை கக்ஷிக்காரர்களின் அரசாட்சியை வீழ்த்தி முக்கால் வாசி தேசத்தைத் தன் ஸ்வாதீனம் செய்திருக்கிறார். இன்னமும் யுத்தம் நடந்துவருகிறது.

நாஸ்திகத்துக்கும் ஆஸ்திகத்துக்கும் ஸ்பெயினில் நடக்கும் யுத்தத்தில் மதாசாரியார்கள் பதிமூவாயிரம் பேரும் அந்த மதாசாரியார்களின் தலைவர்கள் பத்து பேரும் கொல்லப்பட்டனர்.

நாஸ்திகர்களின் மகத்தான மகா நாடு ஒன்று 1939ம் வருஷத்தில் அமெரிக்க ஐக்ய மாகாணத்தில் நடக்க பலமான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதைத் தடுக்க உலகிலுள்ள கத்தோலிக்கர்களும், பிராடஸ்டெண்டுகளும், யூதர்களும் மகா யத்தனம் செய்கின்றனர்.

வின்னிபாகில் கடிக்கவந்த ஒரு சிறு மாலை அதன் சொந்தக்காரர் கற்பழிக்க எத்தனித்தது வெட்ட வெளிச்சமாயிற்று.

ஸமஷ்டித் திட்டத்தைப்பற்றி இந்தியர்களின் மனப்போக்கை அறிய சீக்கிரத்தில் இந்திய மந்திரி வருகிறார்.

ஸ்ரீ அனந்தபத்மநாபர் முதலான மலையாள தெய்வங்களின் சாபத்தால் இதுவரை மிகவும் சமாதான நிலையில் செழித்தோங்கி வந்திருந்த திருவனந்தபுரம் ராஜ்யத்தில் எங்கும் அடிதடியும் உயிர் சேதமும் பெருங்குழப்பமும் உண்டாயிருக்கிறது.

பஞ்சமர்களை எங்கும் கோயிலில் பிரவேசிக்க அனுமதியளிக்க வேண்டுமென்று சென்னை சட்டசபையில் கொண்டுவந்திருந்த சட்டம் தற்போது பரீக்ஷார்த்தமாக மலையாளத்தில் மட்டும் அனுஷ்டானத்திற்கு கொண்டுவர சென்னை காங்கிரஸ் சர்க்கார் யோஜனை செய்திருக்கின்றனர்.

தார்மிக சக்கரவர்த்தியான கொச்சி மகா ராஜா தன் தேசத்தில் ஜனங்களுக்கு பொறுப்பாட்சியை சந்தோஷமாகத் தந்து

அவர்களின் அன்பைப்பெற்றுவிட்டார். திருவனந்தபுரத்தில் அவ்வாறு கொடுக்க மறுக்கப்பட்டு ஜனங்களின் மனத்தாங்கல் ஏற்பட்டிருக்கிறது.

விவாக வரியைப்போட சென்னை காங்கிரஸ் சர்க்காருக்கு யோசனையும் உண்டு.

ஜர்மனி க்ஷவரக்கடையில் ஒருவருக்கு உபயோகப்படுத்திய பிரஷ்ஷை மற்றெவருக்கும், சுகாதார முறையில் பாதகமானதால், உபயோகிக்கலாகாதென சட்டம் இருக்கிறது. இந்தியாவிலோ காபி சோடா முதலியவைகள் ஒருவர் குடித்த பாத்திரத்திலேயே தாராளமாய் குடிக்கப்படுகின்றன.

கர்னூல் நியாயாதிபதி ராமஸ்வாமி அய்யங்கார் உத்தியோக தோரணையில் ராமஸ்வாமி அய்யர் என்றழைக்க விரும்பினார். நாகப்பூர் அய்யங்கார் புரோஹிதர் அய்யர் புரோஹிதராய் மாறினார். ஸ்ரீமான் கல்லிடக்குறிச்சி ஸ்ரீனிவாஸய்யரோ பரம்பொருளின் நட்புபெற ஸ்ரீனிவாசாசாரியாரென்ற மாத்வ ஆசாரியர் ஆனார்.

வயோதிகரான பண்டித மதன்மோகன் மாளவியா 45 தினங்கள் வரையில் இருட்டறையில் வாசம் செய்து காயகல்ப சிகித்சை என்ற அபூர்வ வைத்திய முறையில் பாலியத்தை அடைந்திருக்கிறார்.

ஜர்மனி மகா வீரர் ஹெர் ஹிட்லரின் ஜன்மதினோற்சவத்தில் சிங்கக்குட்டியொன்று பரிசு அனுப்பப்பட்டது.

சென்னை சிறைச்சாலையில் கைதிகளின் சந்தோஷத்திற்காக ரேடியோ கானம் நடத்தப்பட்டு வருகிறது. வேலூர் ஸ்திரீகளின் சிறைச்சாலையிலும் இதேமாதிரிதான்.

வங்காளத்தில் காங்கிரஸின் எத்தனத்தால் ராஜீய கைதிகள் எல்லாம் விடுதலையடைந்துவிட்டனர்.

ஃ ஃ ஃ

டெல்லியில் பார்க்கில் உள்ள சிவன் கோவிலை முனிசிபாலிட்டியார் இடித்துவிட்டதற்காக அதே இடத்தில் ஈசுவரனை ஸ்தாபிக்க ஸத்யாக்ரஹம் பலமாக நடக்கிறது.

ஃ ஃ ஃ

ஆந்திரர்கள் ஆத்திரத்தைக் காட்டியதின் பயனாக ஆந்திரர்களுக்கு தனி மாகாணம் கொடுக்கப்பட காங்கிரஸ் சர்க்கார் யோசனை செய்திருக்கின்றனர்.

ஃ ஃ ஃ

ஒரு புரோஹிதர் விவாக காலத்தில் பொய்யைச் சொல்லி அதிக தக்ஷிணை வசூலித்தார் என்று அவரிடமிருந்து ரூ. 4—6—0 திரும்பப்பெற ஒரு கிரகஸ்தன் ஸிந்து ஹைதராபாத்தில் தாவா செய்திருக்கிறார்.

ஃ ஃ ஃ

20—8—38௳ யன்று திருச்சியிலிருந்து புறப்பட்ட செங்கோட்டை பாஸஞ்சர் வண்டியில் அய்யலூருக்கும் வட மதுரைக்கும் இடையில் மழை பெய்து பழுதாய்ப்போன தண்டவாளத்தின் மீதுபோய், இஞ்சினும் முன் இருந்த 5 வண்டிகளும் விழுந்து சுமார் 150 பேர்கள் காயமடைந்ததுடன் சுமார் 35 பேர்கள் இறந்துபோய்விட்டனர். வண்டியிலிருந்த 5, 6 குழந்தைகள் மட்டில் உயிர்தப்பியது ஆச்சரியமானது.

ஃ ஃ ஃ

அலகாபாத் சமீபம் கர்னல்கஞ்சில் மகாதேவ புஞ்ச்வா என்பவரின் கலலோ என்னும் 7 வயது பெண் ஆதிமுதல் லகோ லகோ என்று உச்சரித்துக்கொண்டிருந்து, இப்போது, தான் பூர்வ ஜன்மத்தில் லக்ஷ்மணபுரியில் ஒரு மிட்டாய்க் கடைக்காரனின் பெண் என்று அவருடைய அடையாளங்களை வெகு குறிப்பாய் சொல்லி அங்கு போக பிரியப்படுகிறாள். இந்த ஜன்மத்தின் பெற்றோர்கள் அங்கு அனுப்ப சம்மதிக்காததால் அவள் சென்ற சில தினங்களாக தேக அசௌக்யம் அடைந்திருக்கிறாள்.

புராணக் குறிப்புகள்.

மல்லிகை, ஜாதி, தாமரை இவைகளில் எந்த புஷ்பங்களையும் ஒரு லக்ஷம் விஷ்ணுவுக்கு அர்ச்சனை செய்தால் 40,000 நமஸ்காரத்தின் பலன். சம்பங்கியை லக்ஷார்ச்சனம் செய்தால் லக்ஷம் நமஸ்காரம் செய்த பலன். லக்ஷம் துளசியை அர்ச்சித்தால் நான்கு லக்ஷம் நமஸ்காரம் செய்த பலன்.

ஃ ஃ ஃ

குங்குமம் கஸ்தூரி இவைகளைக்கொண்டு அர்ச்சித்தலும் விஷ்ணுவுக்கு ப்ரீதிகரமாகும்.

ஃ ஃ ஃ

துளசி அகப்படாமல் இருந்தால் ஒரு தரம் அர்ச்சித்த துளசியை ஜலத்தாலலம்பிவிட்டு அர்ச்சிக்கலாம்.

ஃ ஃ ஃ

விஷ்ணுவுக்கு சலப்ரதிமை என்றும் அசலப்ரதிமை என்றும் இருவகை விக்ரஹங்கள். செம்பு பித்தளை இவைகளால் செய்த விக்ரஹம் சலப்ரதிமை ஆகும். பிராம்மணன் விஷ்ணுவின் அசலப்ரதிமை ஆவான். பிராம்மணனை போஜனாதிகளை உண்ணச் செய்வதால் விஷ்ணுவையேதான் புஜிக்கச் செய்ததாய் ஆகும்.

ஃ ஃ ஃ

நெய்யை உருக்கித்தான் அபிஷேகமும், ஹோமமும் செய்யப்படவேண்டும். உருக்காத நெய்தான் விஷ்ணுவுக்கு நைவேத்தியம் செய்யப்படவேண்டும். சிராத்தத்தில் உருக்காத நெய் போட்டால் பூர்ண பலமும் உருக்கின நெய் போட்டால் பாதி பலனும்தான் உண்டு.

ஃ ஃ ஃ

விஷ்ணுவுக்கு சந்தனத்தை த்ரவமில்லாமல் உருண்டையாகச் செய்துதான் ஸமர்ப்பிக்கவேண்டும்.

ஃ ஃ ஃ

பாரதம் பாகவதம் மற்றுமுள்ள புராணங்கள் இவைகளில் சொல்லியுள்ள கதையை தன் சொந்த வாக்யத்தைக்கொண்டு நூலாய் எழுதுபவனுக்கு அந்நூலில் உள்ள அக்ஷரங்களின் கணக்குப்படி ஸ்வர்க்க வாசம் உண்டு.

அவனவன் தன் சொந்த பாஷையில் வர்ணித்த பகவத் குணங்களை கேட்டாலும் சொன்னாலும் மகாபாரதம் சிரவண படனம் செய்த பலனில் ஆயிரத்தில் ஒரு பாகம் பலனுண்டு. அந்த நூலை இயற்றியவனுக்கு நூறு பாகம் பலனுண்டு.

ஃ ஃ ஃ

ஆயுர்வேதமாகிய வைத்திய சாஸ்திரம் ரிக்வேதத்தின் உபவேதமாதலால் தன் ஆரோக்யத்திற்காகவும் பிறர் உபகாரத்திற்காகவும் பிராம்மணர்களால் படித்தறிய வேண்டியதுதான். பிராம்மணனுக்கு மருந்து கொடுத்து அவனை புஷ்டியடையச் செய்தால் பிரம்மஹத்யாதி மகாபாபங்கள் தொலைவதோடு 400 கிருச்ரம் செய்த புண்ய பலன் வருகிறது. மருந்து கொடுத்து சொஸ்தமாகாமல் இறந்துபோனாலும் இதன் பாதி பலனுண்டு.

ஃ ஃ ஃ

சங்கீதத்தை பிராம்மணன் கற்றுக்கொள்ளவேண்டும். அதனால் அவனுக்கு கந்தர்வ லோகம் உண்டு.

ஃ ஃ ஃ

யுத்த பயிற்சியையும் சட்டத்தையும் தன் ஜீவனத்துக்காக மட்டில் பிராம்மணன் வைத்துக்கொள்ளலாமேயல்லாது அதனால் புண்ய பலனில்லை. க்ஷத்திரியனுக்கு இவைகள் வேதாத்யயனத்தில் பாதி பலனைத்தரும்.

ஃ ஃ ஃ

ஒருவன் தன் குருவையும்கூட வாதத்தில் ஜயித்தால் மகா புண்ய பலனுண்டு. பகவத்குணங்களை உலகுக்கு பிரசாரம் செய்பவனை தன் பிதாவென்று பகவான் சொல்லி அவன் தனக்கு மிகுந்த நண்பன் என்றும் அவனை சதுர்புஜ ரூபமாய் வைகுண்டத்திலேயே வைத்துக்கொள்வதாய் கூறுகிறார்.

செய்தித் திரட்டு

ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகளின் ஆராதனை மகோற்சவம்.

பம்பாய் மதுங்காவில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் வாணீவிலாஸ வித்யாலயத்தில் நாளது-ஷை ஆகஸ்டு-மீ 12, 13, 14உ களில் இவ்வுற்சவம் வெகு விமர்சையாய் நடத்தப்பட்டது என்றும் கடைசி நாளில் சுமார்

200 பிராம்மணர்களுக்கு போஜனமும் மாலை 6-மணிக்கு நியாய வித்வான் ஸ்ரீமான் கோபாலாசார் ராமாசார் கவளி M. A. அவர்களால் கன்னடத்தில் ஸ்ரீ ராகவேந்திரஸ்வாமிகளின் சரித்திரம் உபன்யாஸம் செய்யப்பட்டதென்றும் சென்ற 2 மாதகாலமாய் ஷை ஆசாரியாரவர்களால் பாகவத காலக்ஷேபம் நடத்தப்பட்டு வருகிறதென்றும் காரியதரிசி ஸ்ரீமான் T. K. ஸ்ரீனிவாஸராவ் அறிவிக்கிறார்.

தஞ்சாவூரில் வடவாற்றங்கரையிலிருக்கும் ஸ்ரீ ராகவேந்திரரின் பிருந்தாவனத்திலும், அதன் சமீபத்திலேயே மகாராஷ்டிரம் பேசும் பிராம்மணரல்லாதார் சமூகங்களாலும், தண்ணீர்பந்தலிலும் ஆக மூன்று இடங்களில் ஷை ஆராதனை வெகு சிறப்பாய் அநேக நூற்றுக்கணக்கான ஜனங்களுக்கு அன்னமிட்டு நடத்தப்பட்டதுடன், விசேஷமாய் தண்ணீர் பந்தலில் அலங்கார பந்திபோஜனமும், ஸ்ரீமான்களான கூடக்கோளம் மாதவாசாரியார், முத்கல ராஜாரியாசாரியார், G. பூவராகவாசாரியார் இவர்களின் உபன்யாஸங்களும், இரவில் ஸ்ரீஸ்வாமிகளின் திருவுருவப் படஊர்வலமும் நடைபெற்றனவென்றும், பிரதி வருஷமும் மந்திராலயம் போய் காணிக்கை செலுத்திவந்த போலூருக்கடுத்த கடலாடி டாக்டர் ஸ்ரீமான் V. சேஷகிரி ராவ் L.M.A. அவர்களை இங்கு செலுத்தும்படி ஸ்ரீ ராகவேந்திரர் ஸ்வப்னத்தில் பிரேரிபித்து அன்னார் நேரில் வந்திருந்து நடத்தியது குறிப்பிடத்தகுந்ததென்றும் எமது நிருபர் அறிவிக்கிறார்.

ஸ்ரீரங்கத்திலிருக்கும் ஸ்ரீ ராகவேந்திரரின் பிருந்தாவனத்தில் 13-8-38உ யன்று வழக்கப்படி காலஞ்சென்ற புரொபஸர் S. S. வியாஸராவ் அவர்களின் குமாரர், S. V. கிருஷ்ணமூர்த்தி ராவின் மானேஜ்மெண்டில், சுமார் 1000 பேருக்கு பிராம்மண போஜனம் நடைபெற்றதென்றும் அவருடைய தகப்பனாரைப்போலவே ஷை ராயர் வெகு சிரத்தையுடன் பரிசிரமம் எடுத்துக்கொள்வது மெச்சத்தகுந்ததென்றும் ஸ்ரீமான் டீசர் ராமச்சந்திரராவ் அறிவித்திருக்கிறார்.

பெங்களூர் சாமராஜ்பேட்டை சீதாபதி அக்ரஹாரத்தில் 1934-ம் வருஷத்தில் ஸ்ரீ ராகவேந்திரஸ்வாமி மடம் ஸ்ரீ சுசீலேந்திரஸ்வாமிகளின் பூர்வாசிரமத்தின் மாப்பிள்ளை ஸ்ரீமான் குண்டாசாரியாராலும், கும்பகோணம் கௌலகிஹரி ஆசாரியாராலும் பிரதிஷ்டை செய்யப்பட்டு, பிரதி குருவாரமும் தசமியிலும் வெள்ளிப்பல்லக்கும், பிரதி த்வாதசி

யிலும் ஊஞ்சல் உற்சவமும், பிரதி பௌர்ணமியிலும் சிறுகருப்புமரம் புவனேச்வர ரதோற்சவமும் நடத்தப்பட்டு, இரண்டாவது மந்திராலயம்போல் நூற்றுக்கணக்கான சேவார்த்திகளால் சேவை செய்யப்படுவதாய் விளங்கும், ஸ்ரீ ராகவேந்திரஸ்வாமி பிருந்தாவன கோயிலில் 12உயன்று காலையில் அபிஷேகம் மத்தியானம் அலங்காரபந்திகளுடன் சுமார் 2000 பேருக்கு பிராம்மண போஜனம் மாலையில் ஸ்ரீமான் பெட்டத ராமாசாரியாரால் ஸ்ரீ ராகவேந்திரர் சரித்திரம் உபன்யாஸமும், 13உ காலையில் வெள்ளிப்பல்லக்கில் ஸ்ரீ ராகவேந்திரருக்கு சாமராஜ்பேட்டை ரஸ்தாக்களின் வழியாக வீதிப்புறப்பாடும் அங்கு அநேகர் வீடுகளில் பாத பூஜையும், மத்தியானம் அலங்கார பந்தியுடன் சுமார் 5000 பேருக்கு பிராம்மணபோஜனமும், மாலை ஸ்ரீமான் டம்பளே ரங்காசாரியாரால் குருபரம்பரையைப்பற்றி உபன்யாஸமும், 14உ காலையில் ரதோற்சவம் ஊஞ்சல் உற்சவம் மத்தியானம் 7000 பேருக்கு பிராம்மண போஜனம் மாலை ஸ்ரீமான் டி. பீமசேனாசாரியாரால் பிரஹ்லாத சரித்திரம் உபன்யாஸமும், 15உ ஸ்ரீஸுக்ஞானேந்திரஸ்வாமிகளின் ஆராதனையும் நடைபெற்றதென்றும், பெங்களூர்ஸிடி ரிடையர்ட் போலீஸ் அஸிஸ்டெண்டு ஸூபரிண்டெண்டும் போலீஸ் ட்ரேயினிங் ஸ்கூல் ப்ரின்ஸ்பாலுமான ஸ்ரீமான் S. N. ஹனுமந்தராவ் ஷை மடத்தின் கௌரவ மானேஜராக இருந்துகொண்டு இம்மடத்தின் சகல காரிய நிர்வாகங்களையும் செய்துகொண்டு ஸேவார்த்திகளுக்கு அநுகூலமாய் இருந்து வருவது குறிப்பிடத்தகுந்ததென்றும் விஸ்தாரமாய் பெங்களூர் ஸ்ரீமான் C. V. சுந்தரராவ் அறிவிக்கிறார்.

திருநெல்வேலி மாத்வா அஸோஸியேஷனின் ஆதரவில் ஸ்ரீ ராகவேந்திரஸ்வாமி ஸன்னதியில் ஆராதனை தினத்தன்று பொதுஜனங்களின் பண உதவியைக்கொண்டு அபிஷேகம் பிராம்மண போஜனாதிகள் நடந்ததென்றும் மாலையில் ஸ்ரீமான் கிருஷ்ணமூர்த்தியாசாரியாரால் ஸ்ரீ ராகவேந்திரரின் சரித்திரம் உபன்யஸிக்கப்பட்டதென்றும் இவ்வாறே ஸ்ரீ ஜயதீர்த்தரின் புண்யதின உற்சவமும் நடைபெற்றதென்றும் ஷை சங்கத்தின் காரியதரிசி ஸ்ரீமான் வக்கீல் V. R. நாசிம்மராவ் அறிவிக்கிறார்.

கோயமுத்தூர் ஜில்லா தாராபுரம் ஸ்ரீ ஸமீர லிங்க சபாவின் மேற்பார்வையில் ஸ்ரீ ஆஞ்சநேயஸ்வாமி தேவாலயத்தில் பொதுஜனங்களின் நன்கொடை ரூ. 236—4—0 கொண்டு எலெக்ட்ரிக் விளக்குகள்

போடப்பட்டனவென்றும் தேவக்கோட்டை சப்ஜட்ஜ் ஸ்ரீமான் D. S. ராஜாராவ் அவர்கள் சாசுவதமாக இதன் பிரதிமாதச் சார்ஜை ஒப்புக்கொண்டிருக்கிறார் என்றும் மேற்படி ஆலயத்தில் 7—7—1938 முதல் ஸ்ரீமான் தோட்டக்குரிச்சி புராணம் ராகவேந்திராசாரியார் அவர்களால் ஸ்ரீ பாகவதம் புராணோபன்யாசமாக நடத்தப்பட்டு 4—8—38உல் சம்பூர்த்தியடைந்ததென்றும் ஷை சபையின் கௌரவ காரியதரிசி ஸ்ரீமான் புட்டி C. V. சுப்பாராவ் அறிவிக்கிறார்.

சேலம் ஜில்லா பாப்பாரப்பட்டி அக்கிரகாரத்தில் அவ்வூர் மிட்டாதார் அச்சுதராயரால் பிரதிஷ்டையடைந்திருக்கும் ஸ்ரீ ராகவேந்திரரின் பிருந்தாவனத்தில் சுமார் 1000 பேருக்கு பிராம்மண போஜனமும் ஸ்ரீமான்களான உடுபி அட்டே சுப்பிரமணிய ஆசாரியார், D. V. சுப்புராவ் இவர்களால் உபன்யாசங்களும் நடைபெற்றனவென்றும் ஸ்ரீமான் பக்தன் வெங்கடேசன் அறிவிக்கிறார்.

கும்பகோணம் ஸ்ரீ சாரங்கபாணி ஸ்வாமி தேவாலயத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ பாதாள ஸ்ரீனிவாஸ ஸ்வாமி, திருப்பதியிலிருந்து மகா லட்சுமிக்குப் பயந்து கொல்லைப்புரம் ஓடி ஒளிந்த திருப்பதி ஸ்ரீனிவாஸனே என்று புராண ப்ரசித்தமாயிருந்தும் சென்ற 10, 12 வருஷ காலமாய் அக்கோயில் பூட்டப்பட்டு ஓர் பட்டாசாரியாரின் ஏகாந்த அறையாய் உபயோகிக்கப்பட்டிருந்ததை ஆக்ஷேபித்து, சென்ற 5, 6 வருஷ காலமாக இப்பத்திராபர் செய்த பெருங்கிளர்ச்சியின் பயனாய் இப்பால் அக்கோயில், ஸேவார்த்திகளுக்கு உபயோகப்படும்படியாய் திறந்து வைக்கப்பட்டிருக்கிறதென்று இப்பத்திராதிபருக்கும் கும்பகோணம் சர்க்கிள் தேவஸ்தான கமிட்டி பிரசிடெண்டின் No. N. Dis. 348/38 of 4—5—38 எண்டார்சுமெண்டுக்கும் 7—7—38உயன்று மானேஜிங் டிரஸ்டி ஸ்ரீமான் N. ஹரிராவ், M.A., B.L., அவர்களால் பதில் அனுப்பப்பட்டு இப்பத்திரிகையின் எடிடர் அண்டு பப்ளிஷர்களால் பிரதி சிரவணமும் அங்கு அபிஷேக அலங்கார விநியோகாதிகள் நடக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

சமீபத்தில் மாத்வராய் மாறிய கல்லடக்குரிச்சி ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸாசாரியார் தன் சம்சாரத்துடன் ஸ்ரீ ராகவேந்திரரின் ஆராதனை உற்சவத்திற்காக ஈரோடில் தங்கியிருந்து கோகுலாஷ்டமிக்கு உடுபி சென்று ஆதிகுரு மத்வாசாரியாரின் வாசஸ்தலம் முதலியவைகளையும்

ஸ்ரீ கிருஷ்ணனையும் தரிசித்து தன் ஜென்மம் சாப்ல்யமாயிற்றென்றுப் இவ்வளவு பாக்கியத்திற்கும் இம்மாத்வ மித்திரனும் இம்மித்திரனின் ஆசிரியரும் காரணமென்றும் கொண்டாடி விரிவாய் உடுபியிலிருந்தே ஷெயாரால் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

விசேஷ தினங்கள்.

10—9—38	சனிவாரம்	மகாளயம் ஆரம்பம்
14—9—38	புதவாரம்	மகா பரணி
17—9—38	சனிவாரம்	மத்யாஷ்டமி, மகாவ்யதிபாதம்
18—9—38	பானுவாரம்	அவிதவா நவமி
20—9—38	மங்களவாரம்	ஏகாதசி உப.
21—9—38	புதவாரம்	த்வாதசி. ஸாதனி மணி 7-16க்குள் பாரணை
23—9—38	சுக்ரவாரம்	மகாளய அமாவாசை விஷ்ணுப உப.
24—9—38	சனிவாரம்	நவராத்ரி ஆரம்பம்
2-10—38	பானுவாரம்	ஸரஸ்வதி பூஜை, மகாநவமி
3-10—38	சோமவாரம்	விஜய தசமி, எந்த சுப காரியத்தையும் தொடங்கலாம்.
4-10—38	மங்களவாரம்	மத்வ ஜயந்தி, சிரவண உப. இல்லை விஷ்ணுப. உப. இல்லை
5-10—38	புதவாரம்	ஏகாதசி உப.
9-10—38	பானுவாரம்	பௌர்ணமி, விஷ்ணுப. உப. கார்த்திக ஸ்நானம் ஆரம்பம்.

மாத்வமித்திரன் பிரசுரங்கள்.

1.	ஸ்ரீ ராகவேந்திர ஸ்தோத்திரம் (தமிழிலும், தேவநாகரத்திலும் மூலமும் தமிழில் உரையும்)	0	2	0
2.	ஷை ஸ்தோத்திரம் உள்பட ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகள் அதி அற்புத ஜீவிய சரித்திரம் (தமிழ்)	0	8	0
3.	ஸ்ரீவாயுஸ்துதி (தேவநாகரத்தில் மூலமும், தமிழில் உரையும் புனஸ்சரண முறையுடன்	0	5	0
4.	மாத்வஸ்திரீகளின் ஸம்பிரதாய ஜபமந்த்ர ஸ்தோத்திரங்கள் (தமிழிலும், கன்னடத்திலுமுள்ள 38 அபூர்வமானவைகள் கொண்டது, இதுவரை யாவராலும் பிரசுரிக்கப்படாதது.	0	3	0
5.	த்வைதமத விளக்கம் (ஸ்ரீமத்வாசாரியார் ஜீவிய சரித்திரம் ஆப்டோன் படத்துடனும் தமிழ்)	0	2	0
6.	கும்பகோண மாகாத்மியம் (தமிழ்)	0	2	0
7.	ஸ்ரீமத் பாகவதம் விஷ்ணு புராணத்தின்படி துருவ சரித்திரம் (நாடகம்-தமிழ்)	0	4	0
8.	மாத்ருகாமாலாஸ்தவம், நவரத்னமாலா முதலிய அற்புத ஆறு நூல்கள் (ஸம்ஸ்கிருதம் தேவநாகரத்தில்)	0	[illegible]	0
9.	ஸ்ரீ மகாபாரத தாத்பர்ய நிர்ணயத்திலுள்ள ஸுந்தரகாண்டம் (கன்னட அர்த்தத்துடன் தேவநாகரத்தில்)	0	4	0
10.	ஜீவப்ரம்மபேதம் ஜகத்ஸத்யம் முதலான நான்கு மத்வமத ப்ரமேயங்களை நிரூபிக்கும் பகவத் கீதாதத்வம் (தமிழிலும் தேவநாகரத்திலும் மூலமும், தமிழில் அர்த்தமும்) சுமார் 250 பக்கங்கள்	0	8	0

11. மாத்வமித்திரன் ஒன்று முதல் ஏழு வால்யங்கள் சுமார் 2200-பக்கங்களைக்கொண்டது பணிமஞ்ஜரி மத்வ விஜயம் ஸ்ரீ மகாபாரத தாத்பர்ய நிர்ணயம் முதலான மாத்வ கிரந்தங்கள், உபநிஷத்துக்கள் புருஷஸூக்தம் லக்ஷ்மியாவர்தனம் முதலான மந்திரங்கள் த்வாதச ஸ்தோத்திரம் முதலான ஸ்தோத்திரங்கள் ஸ்ரீராகவேந்திரர் முதலான பல மாத்வ மகான்கள், தாஸர்கள் இவர்களின் சரித்திரங்கள் புராண விரத கதைகள் ஆசார அனுஷ்டானங்கள் தர்ம சாஸ்திர குறிப்புகள் முதலான பதினாயிரக்கணக்கான விஷயங்களைக் கொண்டது. V. P-ல் கிடையாது. பூரா பணமும் அட்வான்ஸில் தேவை. ரயில் பார்சல் செலவு தனி. முன்விலை ரூ. 21. தற்போது ரூ. 5—0—0 தான்.

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸ விலாஸம், கும்பகோணம்.

வருட சந்தா ரூ. 3. Regd. No. M. 2419.

டி. எஸ். ஆர். அண்டு கம்பெனி, கும்பகோணம்.

ஸ்தாபிதம் 1909

தந்தி விலாசம் "கோகுல்"

எங்கள் வாஸனை திரவியசாலையில் தயாரித்து விற்பனைக்குத் தயாராக இருக்கும் ஸாமான்களின் விபரம்.

வாஸனைப்பாக்கு	பலகாய்கறி ஊர்காய்கள்
வாஸனைச்சுண்ணாம்பு	ரோஜாப்பூ குல்கந்து
வாஸனைப் புகையிலை	ஷர்பத் தினுசுகள்
ஸ்னோப்பவுடர்	கொப்பரைச்சீவல்
கேஸர் பவுடர்	கோகுல் கூந்தல் [தைலம்
அம்பர், அரகஜா	பற்பொடி
தசாங்கம்	ஊதுவத்திகள்

சந்தனாதித் தைலம்,

அரைக்கீரைவிதைத் தைலம்,

மற்றும் அநேக வாஸனை சாமான்களும் கிடைக்கும்.

கேட்லாக்குக்கு எழுதுங்கள்.

Printed at Sri Venkateswar Power Printing Works and Published by Bhagavatha Ranganathachariar, Kumbakonam.

வருட சந்தா ரூ. 3. Regd. No. M. 2419.

12 OCT 1938 MADRAS

மாத்வ மித்திரன்.

THE MADHWA MITRAN.

EDITOR:

Adyam Bhagavatha Ranganathachariar,

KUMBAKONAM.

பௌர்ணமிதோறும் வெளிவரும்.

Vol. 11	பஹுதான்ய ஸம்வத்ஸரம்	No. 3
புஸ்தகம் 11	ஆசுவீஜ மாஸம். (பௌர்ணமி) (9-10-1938) பானுவாரம்.	நெ. 3

நெ.	பொருளடக்கம்.	பக்கம்.
1	ஸதுபதேசம்.	65
2.	விஷ்ணு ஸஹஸ்ரநாமம்.	66
3.	ஸ்மார்த்த பிராம்மணர்களின் மாம்ஸ பக்ஷணம்.	71
4	ஸ்ரீ மகாபாரத தாத்பர்ய நிர்ணயம். (ஸ்ரீ மத்வாசாரியார்)	76
5.	அஹம் ப்ரம்மாஸ்மி.	80
6.	உலக வர்த்தமானம்.	85
7.	ஸ்ரீ ராகவேந்த்ர அஷ்டாக்ஷர மந்த்ர ஜபக்கிரமம்.	89
8.	ஸ்ரீ ராமானுஜர்.	92
9.	விசேஷதினங்கள்.	96

ஆசிரியர்:—ஆத்யம் பாகவத ரங்கநாதாசாரியார், கும்பகோணம்.

மாத்வமித்திரன்.

மாத்வர்களின் சாஸ்திரீயமான தமிழ் பத்திரிகை இது ஒன்றே ஸ்ரீமத்வமதத்தின் அரிய இரகசியங்கள் ஸம்பிரதாயங்கள் மாகாத்மியங்கள் புராணசரிதைகள் மாத்வவகுப்பு புண்ய புருஷர்களின் சரித்திரங்கள் வேதாந்த சர்ச்சைகள் தர்மசாஸ்திர விசாரங்கள் தின்சரி விரதாதி குறிப்பு:— மகாபாரத தாத்பர்ய நிர்ணயம் முதலான அநேக கிரந்தங்களின் மொழிபெயர்ப்புகள் முதலிய எண்ணிறைந்த விஷயங்கள் நிறைந்திருக்கின்றன ஸ்ரீமத்வமதத்தை சுலபமாய் அறிந்துகொள்ள இப்பத்திரிகைக்கே உடனே சந்தாதாரராய்ச் சேருங்கள் இது பிரதி பௌர்ணமியிலும் கும்பகோணத்திலிருந்து வெளியாகிறது இதற்கு வருடசந்தா முன்பணமாய் ரூபாய் மூன்று. பிரதி சிராவணமாதமும் இப்பத்திரிகைக்கு வருடஆரம்பமாகும் எந்த மாதத்தில் சந்தாதாரராய்ச் சேர்ந்தாலும் அந்த வருஷத்திய பிந்திய சஞ்சிகைகள் அனுப்பப்படும் பழைய வாலியங்கள் விலைக்குக் கிடைக்கும் பத்திரிகை சரியானபடி கிடைக்காவிட்டால் பௌர்ணமி கழிந்தஒருவாரத்துக்குள் நமக்கு அறிவிக்கவேண்டியதுடன் அந்தந்த தபாலாபீசுக்கும் அறிவித்துவிடவேண்டும் பதிலறிய விரும்புகிறவர்கள் ஸ்டாம்பை அனுப்பவேண்டும். ஒவ்வொரு கடிதத்திலும் தெளிவாய் பூரா மேல் விலாசமும் எழுதி அனுப்பவேண்டும்

விற்பனை விளம்பரம்.

கும்பகோணம் ஸ்ரீமான் T. R. கிருஷ்ணாசாரியார் பதிப்பு.

1. ஸ்ரீ வால்மீகி ராமாயணம் (கோவிந்தராஜீய வியாக்யானத்துடன்) பூரா செட்டு பிரதி 1-க்கு 24—8—0
2. ஸ்ரீ மகாபாரதம் பூரா செட்டு 1-பிரதி 70—0—0

எமது ஆபீஸில் கிடைக்கும்.

மானேஜர், மாத்வமித்திரன்,

ஸ்ரீ வியாஸவிலாஸம், கும்பகோணம்.

ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்ஹாய நம:

மாத்வமித்திரன்.

VOL. 11 — பஹுதான்ய ஸம்வத்ஸரம் ஆசுவீஜ மாஸம். — NO. 3

OFFICE OF ... 12 OCT 1938 MADRAS

ஸதுபதேசம்.

कस्य त्वं कुत आगतः कथमरे संसारबंधक्रमः
त्वं तत्परिचिंतय स्वहृदये भ्रांतस्य मार्गं त्यज।
सोऽहं मावद सेव्यसेवकतया नित्यं भजश्रीहरिं
तेन स्यात्तव सद्गतिर्ध्रुवमधः पातो भवेदन्यथा॥

க்ஸ்யத்வம் குத ஆகத: கதமரே ஸம்ஸாரபந்தக்ரம:
த்வம் தத்பரிசிந்தய ஸ்வஹ்ருதயே ப்ராந்தஸ்ய மார்க்கம் த்யஜ।
ஸோஹம் மாவத ஸேவ்யஸேவகதயா நித்யம் பஜ ஸ்ரீ ஹரிம்
தேனஸ்யாத்தவ ஸத்கதிர்த்ருவமத: பாதோ பவேதன்யதா॥

நீ யாரைச் சேர்ந்தவன், நீ எங்கிருந்து வந்தாய், உனக்கு இந்த சம்சாரபந்தம் எப்படி நாளடைவில் வந்து சேர்ந்தது என்று அக்ஞான ஜீவனே! நீயே உன் உள்ளத்தில் யோசித்துப் பார். கேவலம் பிரமைகொண்டு ஸ்ரீ சங்கராசாரியார் குறித்திருக்கும் வழியை பின்பற்றாதே. அதிலிருந்து விலகு. ஸோஹம் ஸோஹம் என்று சொல்லாதே. பரப்ரம்மமாகிய ஸ்ரீ ஹரிக்கு நீ சேவகன் தொண்டன். அவர் உனக்கு யஜமானன். இந்த பாவனையுடன்தான் ஸ்ரீ ஹரியை நீ ஆராதனம் செய். அப்படிச் செய்தால்தான் இந்த ஸம்ஸாரபந்தத்தினின்றும் விடுதலையாகிய ஸத்கதி ஏற்படும். அப்படிக்கில்லாமல் ஸோஹம் நான்தான் அந்த ப்ரம்மம் என்று உபாஸனை செய்தால் உனக்கு அந்தம் தமஸ்ஸே வந்துசேரும்.

ஸ்ரீ மத்வ ஸித்தாந்தத்தின்படிக்குள்ள அர்த்தத்துடன்

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாமம்.

(முன் 37ம் பக்கம் தொடர்ச்சி)

509 போக்தா (ஓம் போக்த்ரே நம:) எல்லா ஜகத்தையும் புஜிப்பவர். ஹவ்யகவ்யாதி ஸமஸ்த பதார்த்தங்களை புஜிப்பவர். ரக்ஷிப்பவர்.

510 கபீந்த்ர: (ஓம் கபீந்த்ராய நம:) கபியான வாலியின் ஐசுவரியத்தை விறட்டியவர். ஸோமத்தை பானம் செய்கிறவர்களான முக்தர்களுக்கு அதிபதியானவர். ஹனுமாரை சமர்த்தராகச் செய்தவர், வானரர்களுக்கு தலைவராயிருந்தவர். வராகாவதாரமெடுத்தவரும் ஈசுவரருமானவர்.

511 பூரிதக்ஷிண: (ஓம் பூரி தக்ஷிணாய நம:) ஸுவர்ணத்தை தக்ஷிணையாகக் கொண்டவர், ஏராளமான தக்ஷிணைகளைக் கொடுப்பவர், ஏராளமாய்க் கொடுப்பவர், மிக்க அதிகமாய் ஸாமர்த்தியமுள்ளவர், பணத்திற்கு அபிமானி தேவதையான தக்ஷிணா தேவியை வலது பாரிசுவத்தில் கொண்டவர். அதிகமான யஜமானர்களைக் கொண்ட ஸத்ர யாகத்தால் ஸுகமடைகிறவர்.

512 ஸோமப: (ஓம் ஸோமபாய நம:) யாகத்தில் ஸோமரஸத்தைப் பானம் செய்பவர். உமாதேவியுடன் கூடிய ஸோமனென்கிற பரமசிவனை ஸம்ரக்ஷிப்பவர். சந்திரனை ஸம்ரக்ஷிப்பவர்.

513 அம்ருதப: (ஓம் அம்ருதபாய நம:) அம்ருதத்தை பானம் செய்பவர். அஸுரர்களினின்றும் சம்ரக்ஷிப்பவர். அமிருதமாகிற ஹவிஸ்ஸை உண்பவர். அமிர்தமாகிற ஆத்மாநந்தத்தை அனுபவிப்பவர்.

514 ஸோம: (ஓம் ஸோமாய நம:) பரமசிவன் மகாலட்சுமி இவர்களுடன் கூடியவர். உமர்கள் எனப்படுபவர்களான பூதங்களுடன் இருப்பவர். சந்திரனைப் போல் ஸௌம்யரானவர். அளவில்லாத வரும் ஸாரமாய் இருப்பவருமானவர். சங்கடமில்லாததான ஸௌக்யத்துடன் இருப்பவர். மேலான அனுபவமுள்ளவர்.

515 புருஜித் (ஓம் புருஜிதே நம:) ஏராளமான சத்துருக்களை ஜயிப்பவர். வஸ்துக்களை அடைபவர். குணங்களை அடைபவர்.

516 புருஸத்தம: (ஓம் புருஸத்தமாய நம:) பூர்ணராயும் ப்ரம்மாதி ஸத்துக்களால் விருப்பப்படுபவாராயும் இருப்பவர். பூர்ணராயும் சங்கடத்தை வாட்டுகிறவராயும் இருப்பவர். மிகவும் விசேஷமாய் ப்ரம்மாதிகளில் அந்தர்மியாய் இருப்பவர். பிரம்மாதிகளை விட தேசத்தாலும் காலத்தாலும் இருப்ப உள்ள மகாலட்சுமியைக் கொண்டவர். விச்வரூபியாயும் மிகவும் மேலானவராகவுமிருப்பவர். ஸ்திரமாகவும் தெளிவாயும் இருப்பவர்.

517 வினியோஜ்ய: (ஓம் வினியோஜ்யாய நம:) ஒருவராலும் நியமிக்கப்படாதவர். பலவகையான ஜகத்தை நியமிக்கக் கொண்டவர்.

* வினய: (ஓம் வினயாய நம:) தண்டிப்பவர்.

ஜய: (ஓம் ஜயாய நம:) ஜயிப்பவர்.

518 ஸத்யஸந்த: (ஓம் ஸத்யஸந்தாய நம:) ஸத்யமான ப்ரதிக்ஞையுடையவர். ஸத்யத்தைத்தான் ப்ரதிக்ஞை செய்பவர்.

519 தாசார்ஹ: (ஓம் தாசார்ஹாய நம:) ஆனந்தம் முதலியவைகளை தானம் செய்ய அருகரானவர். தாசர்களாகிற யாதவர்களைச் சேர்ந்தவர். யாதவ குலத்தில் பிறந்தவர். தாசராஜனின் பெண்ணான ஸத்யவதீ தேவியை வேதவியாஸரூபத்தால் தாயென பூஜித்தவர். பக்தர்களுக்கு தானம் செய்பவர்.

520 ஸாத்வதாம்பதி: (ஓம் ஸாத்வதாம் பதயே நம:) ஸாத்வதர்களான பகவத் பக்தர்களை சம்ரக்ஷிப்பவர். ஸாத்வதமாகிற பாஞ்சராத்ரத்தை அனுஸரிக்கும் ஸ்ரீ முதலான ஒன்பது மூர்த்திகளில் ஆதிமூர்த்தியானவர்.

521 ஜீவ: (ஓம் ஜீவாய நம:) ஜனங்களை உயிர்ப்பிக்கிறவர்.

522 வினயிதாசாக்ஷீ (ஓம் வினயிதாசாக்ஷிணே நம:) வினயமுள்ளதின் தன்மையைக் காண்பவர்.

523. முகுந்த: (ஓம் முகுந்தாய நம:) மோக்ஷத்தைத் தருபவர்.

524. அமிதவிக்ரம: (ஓம் அமிதவிக்ரமாய நம:) அளவிட முடியாத பராக்கிரமமுள்ளவர். ஸம்பூர்ணமாய் அறியமுடியாத வரும் கருடனுடன் சேர்ந்து நடப்பவருமானவர். அளவற்ற பராக்கிரமசாலி.

525. அம்போநிதி: (ஓம் அம்போநிதயே நம:) காம்பீர்யத்தால் கடலைப் போன்றவர். தேவர்களை நன்கு தம்மிடம் அடங்கச் செய்பவர். எல்லா கர்மங்களையும் நன்றாய் தம்மிடம் சேரச் செய்பவர். விஷ்ணு லோகாதிகளை தம்மிடம் இருக்கச் செய்பவர்.

526 அநந்தாத்மா (ஓம் அநந்தாத்மனே நம:) அபரிமிதமான சரீரங்களுள்ளவர். பந்தமில்லாதவரும் ஆத்மாவாய் இருப்பவருமானவர். அநந்த கணக்காயுள்ள முக்தர்களுக்கு ஆத்மா ஸ்வாமியாய் இருப்பவர். அநந்தரான ஆதிசேஷன் மீது சரீரமுள்ளவர்.

527 மகோததிசய:(ஓம்மகோததிசயாய நம:) உத்கிருஷ்டராயும் தயிருள்ள பாத்திரத்தைக்கொண்ட ஸ்ரீகிருஷ்ணர் ஸ்ரீவாமனர் முதலானரூபள்முளவருமானவர். மகா சமுத்திரத்தில்உத்கிருஷ்டர்களான சதுர்முகாதிகளை ஸ்வாதீனமாய்க்கொண்டவர்

528 அந்தக: (ஓம் அந்தகாய நம:) ஸ்ரீராம ரூபத்தால் ஜலத்தில் அணைகட்டியவர். எல்லோரையும் நாசம் செய்பவர். ஜராஸந்தாதிகளால் கட்டுபட்டவர்களுக்கு ஸுகத்தைத் தருபவர்.

529 அஜ: (ஓம் அஜாய நம:) அஜனான சதுர்முகனைப் படைத்தவர்.

530 மஹார்ஹ: (ஓம் மஹார்ஹாய நம:) பூஜாதிகளாகிய உத்ஸவத்திற்கு அருகமானவர்.

531 ஸ்வாபாவ்ய: (ஓம் ஸ்வாபாவ்யாய நம:) எப்போதும் எல்லா பிரயோஜனமும் அவருக்கு இருந்து வருவதால் இனி எந்த பிரயோஜனமும் உண்டாக வேண்டியதாய் இல்லாதவரும் ஸ்வதந்திரருமானவர். தன்னைப்போலவே க்ஞானனந்தாதிகளைக் கொண்டவர்களான யோக்யமான ஜீவர்களை ரக்ஷிக்கத் தகுந்தவர்

களாய்க் கொண்டவர். தன் சுற்றிலும் மங்களங்களின் சமூகங்களைக் கொண்டவர்.

532 ஜிதாமித்ர: (ஓம் ஜிதாமித்ராய நம:) சத்ருக்களை ஜயித்தவர்.

533 ப்ரமோதன: (ஓம் ப்ரமோதனாய நம:) எப்போதும் சந்தோஷப்பட்டுக் கொண்டிருப்பவர். ஜனங்களை சந்தோஷப் படுத்துகிறவர். ஜனங்களுக்கு சந்தோஷம் வரச் செய்பவர். உத்கிருஷ்டையான மகாலட்சுமியைக் கொண்டவராயும் உத்கிருஷ்டமான வாயுபகவானை கொண்டவராயுமிருப்பவர்.

534 ஆனந்த: (ஓம் ஆனந்தாய நம:)
ஆனந்தீ (ஓம் ஆனந்தினே நம:) } ஆனந்த சொரூபரானவர். வாக்குக்கும் மனதிற்கும் எட்டாத ஆனந்தமுடையவர்.

535 நந்தன: (ஓம் நந்தனாய நம:) சந்தோஷப்படுத்துபவர்.

536 நந்த: (ஓம் நந்தாய நம:) சம்பூர்த்தியடைந்தவர்.

537 ஸத்யதர்ம: (ஓம் ஸத்யதர்மாய நம:) ஸத்யமாயுள்ள க்ஞானாதிகளை தர்மங்களாய்க் கொண்டவர். ஜகத்தை தரிப்பவர்

538 த்ரிவிக்ரம: (ஓம் த்ரிவிக்ரமாய நம:) வாமனவதாரத்திற்கு பின் த்ரிவிக்ரம ரூபம் தரித்தவர். ஸ்வர்க்கம் பூமி பலிசக்ரவர்த்தியின் சிரஸ் ஆகிய மூன்று இடங்களிலேயும் காலடி வைத்தவர். பதினான்கு லோகங்களிலேயும் வியாபித்திருப்பவர். சுவேதத்வீபம் அநந்தாஸனம் வைகுண்டம் ஆகிய மூன்று உலகங்களிலும் பராக்கிரமமுடையவர். கிருதம், த்ரேதா, த்வாபரம் என்னும் மூன்று யுகங்களில் அவதாரம் செய்பவர். ரிக் யஜுஸ்ஸாமம் என்னும் மூன்று வேதங்களால் துதிக்கப்படுபவர். ஸத்வம் ரஜஸ்தமஸ் என்னும் மூன்று குணங்களை விளையாட்டாய் ஸ்வீகரித்து சிருஷ்டியாதிகளைச் செய்பவர் ஸாத்விகர்கள் ராஜஸர்கள் தாமஸர்களாகிய மூவகை ஜீவராசிகளுக்கும் யஜமானராய் நியமனம் செய்யும் பராக்கிரமமுடையவர். ஸாத்விகம் ராஜஸம் தாமஸம் என்னும் மூவகையான புராணங்களிலேயும் ஸ்ரீஹரி தான் ஸர்வோத்தமரென்று சொல்லப்படும் மகாத்மியமுள்ளவர். பூதம்பவிஷ்யத் வர்த்தமானம் என்ற மூன்று காலங்களிலேயும்

ஒரே வகையாய் பராக்கிரமம் காட்டுபவர். ஸ்ரீபூதுர்க்கா என்னும் மூன்று ரூபங்களுள்ள லக்ஷ்மீ தேவியாரை நியமனம் செய்பவர். ஹனுமார் பீமசேனர் மத்வர் ஆகிய மூன்று ரூபங்களுள்ள வாயு பகவானின் மூலமாய் ஸமஸ்த காரியங்களையும் நடத்துபவர். கருடன் சேஷன் ருத்ரன் இவர்களுள் இருந்து நியமனக்கிரியைகளை நடத்துபவர். மூன்று புருஷ ரூபங்களை தயாரித்து சிருஷ்டி காலத்தில் சிருஷ்டியாதி விக்ரமங்களைச் செய்பவர். அனிருத்தன் ப்ரத்யுமனன் சங்கர்ஷணன் என்னும் மூன்று ரூபங்களை வெளிப்படுத்தி எல்லா பராக்கிரமச் செயலையும் நடத்துபவர். சுயரூபம் ஸமஸ்த ஜீவராசிகளின் நியாமகரூபம் ஸமஸ்த ஜடர்களின் நியாமகரூபம் ஆகிய மூன்று ரூபங்களால் எல்லோரையும் நியமனம் செய்பவர். அவ்யக்த தத்வம் மஹத்தத்வம் அஹங்கார தத்வம் இந்த மூன்று தத்வங்களையும் நியமனம் செய்யும் பராக்கிரமமுடையவர். ஜாகரத், ஸ்வப்னம் ஸுஷுப்தி ஆகிய மூன்று அவஸ்தைகளில் வலது கண், கண்டம், ஹிருதயம் ஆகிய மூன்று அதிகாரணங்களில் விச்வம், தைஜஸம், ப்ராக்ஞன் என்னும் மூன்று ரூபங்களால் நியமனம் செய்யும் பராக்கிரமமுடையவர். பாஹ்ய சிருஷ்டி அண்டகோசசிருஷ்டி பிரம்மரின் அந்தர்யாமியாயிருந்து நடத்தப்படும் அந்தச் சிருஷ்டி ஆகிய மூன்று வகை சிருஷ்டியையும் பராக்கிரமும் கொண்டவர். பூலோகம் புவர்லோகம் ஸ்வர்க்கலோகம் ஆகிய மூன்று லோகங்களை தரிக்கும் விக்ரமமுடையவர். காலம் கர்மம் ஸ்வபாவம் ஆகிய மூன்றிலிருந்து தன்னையே தான் வெளிப்படுத்தும்பராக்கிரமமுடையவர். க்ஷரர்களான ஜீவராசிகளின் உத்தமன் அக்ஷரையான மகாலட்சுமியின் உத்தமன் ஸர்வாந்தர்யாமி என்னும் மூன்று ரூபங்களால் நியமனதி காரியங்களைச் செய்பவர். தேசத்தாலும் காலத்தாலும் குணங்களாலும் அநந்தமான குணங்களால் க்ரீடிப்பவர். ஜாக்ரத், ஸ்வப்ன, ஸுஷுப்தி என்னும் மூன்று அவஸ்தைகளுக்கு விருத்தமாயுள்ள ஸ்துல போகம், ப்ரவிபக்த போகம் ஆனந்த போகம் என்னும் மூவகை காரியங்களுள்ளவர். ஹனுமத் பீம மத்வர் என்னும் மூன்று அவதாரங்களில் எல்லா ஜீவர்களை விட அதிகமான க்ஞானத்தின்

க்ரமத்தை வைப்பவர். மூவகை ஜீவர்களுக்கு விருத்தமான முக்தி, ஸாந்தானிகலோகம் தமஸ்ஸு என்னும் தனித்தனியான க்ரமத்தை வைத்தவர். பூ: புவ: ஸ்வ: என்னும் மூன்று வ்யாஹ்ருதிகளால் பூர்ணமாயும் பூதியுள்ளதாயும் அனந்த ஸுகமுள்ளதாயும் உள்ள ஐசுவரியம் கொண்டவர். மூன்று உலகங்களிலும், கருடனுடன் சஞ்சரிப்பவர். தேவர்கள் மனுஷ்யர்கள் தானவர்கள் என்னும் மூவகையார்களையும் காலடியால் மிதிப்பவர். சேதனம் அசேதனம் மிச்ரர்கள் ஆகிய மூவர்களை வியாபிப்பவர்.

(தொடரும்)

யக்ஞத்தில்

ஸ்மார்த்த பிராம்மணர்களின் மாம்ஸ பக்ஷணம்.

(முன் 50ம் பக்கம் தொடர்ச்சி)

VII முன் ஒரு சமயம் நகுஷ சக்கரவர்த்தியின் அரண்மனைக்கு த்வஷ்ட்ரு ப்ரஜேசுவரராகிய கபில முனிவர் வந்திருந்தார். அச்சமயம் அவரை அர்க்யம் பாத்யம் முதலியவைகளால் அரசன் உபசரித்தான். பிறகு அவரை மதுபார்க்கத்தால் பூஜிக்க ஓர் பசுவைக் கொல்ல அந்த ஸன்யாஸியாரின் எதிரில் கொண்டு வந்து நிறுத்தினார். தனக்காக அந்த பசு கொல்லப்படப் போவதைப் பார்த்து, கபிலர், சகியாமல் ஓவொன்றவாய் விட்டலறி ஹம்ஹோ வேதா: ஹா ! நல்ல வேதங்கள் அய்யா ! இப்படி ப்ராணி ஹிம்சை செய்யச் சொல்லுகின்றன என்று துக்கத்துடன் வேதங்களை பழித்தார். இதைக் கண்டு சகியாத ஸ்யூமரச்மி என்பவர் அந்த பசு மாட்டில் பிரவேசித்து "ஹம்ஹோ வேதா இதி மதா: தர்மா: கேன அபரேமதா:" ஜீவ ஹிம்சையை வேதங்கள் விதிக்கின்றனவே என்று நீங்கள் நிந்தை செய்யும் பக்ஷத்தில் அஹிம்ஸா தர்மம் மட்டில் எதனால் சித்திக்கின்றன. எல்லா வேதங்களும் நாராயணனுடைய வார்த்தைகள் தான். வேதத்தில் பிசகாய் சொல்லவேண்டுமென்று அந்த நாராயணனுக்கு எண்ணம் இருக்குமா என்ன ? என்று சொல்ல, கபிலர் "நாஹம் வேதான் விநிந்தாமி நவிவக்ஷ்யாமி கர்ஹிசித்" நான் வேதங்களை தூஷிப்பதில்லை. வேதங்கள்

விஷமமாகச் சொல்வதாய்ச் சொல்லுகிறதில்லை, என்று சொல்லிக் கொண்டு, யக்ஞ சம்பந்தமாய் விஸ்தாரமாய் சம்பாஷித்துக் கொண்டு வந்த சந்தர்பத்தில் "ஏவம் விதித்வா ஸர்வார்ந்தான் ஆரபேதேதி வைதிகம்] நாரபேதேதி சான்யத்ர நைஷ்டிகீச்ருயதே ச்ருதி:] அநாரம்பே ஹ்யதோஷ: ஸ்யாத் ஆரம்பேதோஷ உத்தம:" நச்வரமான ஸ்வர்க்காதி பலன்களைக் கொடுக்கும் ஸ்வர்க்கத்தை அபேக்ஷிப்பவன் யாகத்தைச் செய்ய வேண்டுமென்றும் வேதம் அறிவிக்கிறது. வாலிகில் யசாகை முதலான பிரகரணங்களிலோ கர்மத்தை ஆரம்பிக்கலாகா தென்று சொல்லப்பட்டிருக்கிறது. கர்மங்களை செய்யாமற்போனால் தோஷமில்லை. யக்ஞாதி கர்மங்களைச் செய்தால் ஹிம்ஸாதி தோஷங் கள் உண்டாகின்றன. "ஏவம் ஸ்திதஸ்ய சாஸ்த்ரஸ்ய துர்விக்ஞேயம் பலாபலம்" இப்படி கர்மம் செய்யவேண்டுமென்று ஒரு புறமும் ஹிம் ஸாதி தோஷமுண்டாவதால் கர்மம் விடவேண்டுமென்று ஒரு புறமும் சொல்லும் சாஸ்திரத்தின் தாத்பர்யம் இன்னதென்று அறியகூட வில்லை என்று சொல்லும் பக்ஷத்தில், வேதத்தைத் தவிர்த்துள்ள ஹிம்ஸையைச் சொல்லும் எந்த சாஸ்திரம் தான் ப்ரத்யக்ஷபலனைக் கொடுக்கிறது. எதுவும் கொடுப்பதில்லை. ஆதலால் ஹிம்ஸையுள்ள கர்மத்தை விதிக்கிற சாஸ்திரம் துர்பலம் தான். ஸ்வர்க்கத்தில் ஆசை யுள்ளவன் தான் யக்ஞம் செய்யவேண்டுமென்று விதிக்கிறதேயல்லாமல் எல்லோரும் செய்யவேண்டுமென்றில்லை. "பசவஸ்சாத தான்யம் ச யக்ஞஸ்யாங்கமிதிச்ருதி:" பசுக்களும் தான்யங்களும் யக்ஞத்திற்கு அங்கங்களென்று சொல்லப்பட்டிருக்கிறது. "ஆஜ்யேன பயஸா தத்னா சக்ருதா அமிக்ஷயா த்வசா] வாலை: ச்ருங்கேண பாதேன ஸம்பவத்யேவ கௌர்மகம்" பசுவானது நெய்யாலும் பாலாலும் தயிராலும் சாணியாலும் தயிர்கலந்த பாலாலும் தோலாலும் வாலா லும் கொம்பாலும் கால் துளியாலும் யக்ஞத்தை பூர்த்தி செய்கிறது. "யக்ஞார்த்தானி ஹிச்ருஷ்டானி யதார்த்தா ச்ருயதே ச்ருதி:" ஓஷதி முதலானவர்கள் யக்ஞத்திற்காகவே சிருஷ்டிக்கப்பட்டிருக் கின்றனவென்று வேதமே சொல்லுகிறது. "ஏவம் பூர்வதரா: பூர்வே ப்ரவ்ருத்தாஸ்சைவமானவா:" இப்படியேத்தான் ப்ராசீனர்களும் அவர்களின் முன்னோர்களும் யக்ஞாதிகளை நடத்தியிருக்கின்றனர். என்று இவ்வாறு ஹிம்ஸையுள்ள கர்மத்தை கீர்த்தித்திருக்கிறார்.

VIII முன்னொரு சமயம் விதர்ப்பதேசத்தில் தர்மிஷ்டனான ஸத்யன் என்ற உஞ்ச்ச விருத்தியை எடுக்கும் ஓர் ப்ராம்மணன் யக்ஞ மூர்த்தியான விஷ்ணுவைக் குறித்து யக்ஞத்தை நடத்த உத்சேசித்துக் கொண்டான். உதிர்ந்த மயிற்தோகைகளை வஸ்திரமாக அணிந் திருந்த உத்தமியான புஷ்கரதாரணி என்ற அவனுடைய பாரியை பிராணி ஹிம்ஸையோடு கூடியயக்ஞத்தை நடத்துவதில் உடன்தையா யிருக்க ஸம்மதிக்கவில்லை. உஞ்சவிருத்திப் ப்ராம்மணனும் பிராணி ஹிம்ஸை செய்வதில்லை என்று நிச்சயித்து, சாமாக அரிசி முதலியவை களால் தான் யக்ஞத்தை நடத்தினான். இது உலகப்ரசித்தமாய் விட்டது. சுக்ராசாரியாரின் சூழ்ச்சியின்பேரில் நாதர் என்ற ஓர் மகரிஷி, மானின் உருவமெடுத்து அந்த உஞ்சவிருத்தி ப்ராம்மணனின் சமீபம் வந்து "யக்ஞமென்றால் மந்த்ரம் அங்கம் என்று இரண்டும் வேண்டும். ஒன்றிருந்து மற்றொன்று இல்லாமல் இருந்தால் பாபம் தான் வந்து சேரும். யக்ஞத்தின் அங்கமாகிற பசுவதை இல்லாமற் செய்த உன் யக்ஞத்தால் பாபம் தான் சம்பவித்திருக்கிறது. இப்போதும் பாதகமில்லை. இதோ நான் உயிர்கொடுக்கத் தயாராயிருக்கிறேன். "மாபோ: ப்ரக்ஷிப ஹோத்ரேத்வம் கச்சஸ்வர்க்க மதந்த்ரித:" என்னை அக்னியில் போடு. அதனால் உன் பாபம் தொலையும். நீ ஸ்வர்க்கத்திற்கு போகலாம். என்று வெகு சமத்காரமாய் பேசிற்று. அந்தப்ராம்மண னுக்கு புத்தி மயக்கம் தர அச்சமயம் ஸூரியமண்டலத்தினின்றும் அங்குள்ள ஸாவித்ரீதேவி நேரில் வந்து "ப்ராம்மணா! என் ஊடம் செய்கிறாய்? இந்த மிருகத்தை ஹோமம் செய்" என்றாள். அதற்கும் அந்த ப்ராம்மணன் சிறிதும் மயங்காதவனாய் நான் இந்த மிருகத்தைக் கொல்ல மாட்டேன் என்று சொல்லி அந்த ஸாவித்ரியின் வார்த்தை யையும் நிராகரித்து விட்டான். அந்த தேவிக்கு ரஸாதளலோகத்தைப் பார்க்க விருப்பமிருந்தால் எல்லோர் பார்த்திருக்கையில் உடனே அந்த அக்னி குண்டத்திலேயே ப்ரவேசித்து விட்டாள். இதன் மர்மத்தை அறியாதிருந்த அங்குள்ளவர்களனைவரும் திடுக்கிட்டுப்போயினர். மறு படியும் அந்த மான் சமீபம் வந்து தன்னை ஹோமம் செய்ய வெகுவாய் கேட்டுக் கொண்டது. 'ஸது பத்தாஞ்ஜலிம் ஸத்யமயாசந்தரின: புன: ஸத்யேன ஸபரிஷ்வஜ்ய ஸந்திஷ்டோ கம்யதாம் இதி" அப்பொழுது அந்த ஸத்யன் அந்த மானை யூபஸ்தம்பத்தில் கட்டி வைத்து பர்யக்னி காணம வரையில் ஸம்ஸ்காரத்தைச் செய்து அதை அவிழ்த்து விட்டு நீ வெளியே சுகமாய் போகலாம் என்று அனுப்பி விட்டான். "தத: ஸ ஹரிணோ கத்வா பதான்யஷ்டௌ ந்யவர்த்தத] ஸாது ஹிம்ஸயமாம்] ஸத்ய ஹதோயாஸ்யாமி ஸத்கதிம்" அந்த மானும் எட்டடி தூரம் சென்றுவிட்டு பின்பு திரும்பி வந்து 'ப்ராம்மணா! என்னைக்கொன்று விடு. யக்ஞத்தில் நீ கொன்றால் தான் எனக்கு நல்ல கதி உண்டாகும்.

உனக்கும் ஸ்வர்க்கம் வாசம் உண்டு. மகாஸௌந்தரிகளான ரம்பா திலோத்தமா முதலான அப்ஸரஸ்ஸுகளோடு சுகிக்கலாம். நான் சொல்வது பொய்யல்ல. "பச்யஹ்யப்ஸரஸோ திவ்யா மயா தத்தேன சக்ஷுஷா| விமானானி விசித்ராணி கந்தர்வாணாம் மகாத்மனாம்" உனக்கு திவ்ய சக்ஷுஸ்ஸைத் தருகிறேன் பார். அப்ஸரஸ்ஸுக் கூட்டங்களைப்பார். அவர்கள் ஏறிப்போகும் விமானங்களைப்பார். அவர்களுடன் இருக்கும் கந்தர்வங்களையும் பார். என்னைக் கொன்று இந்த யக்ஞம் செய்தாயோ நானும் இந்த லோகத்தை அடைவேன். நீயும் ரம்பா சம்போகாதி ஸகல போகங்களையும் அனுபவிக்கலாம் என்று பலவாறு ஆசை வார்த்தைகளைச் சொன்னவுடன், அந்தப்ராம்மணன் முடிவில் அதில் மயங்கி விட்டான். ஸ்வர்க்கத்தில் வசிக்க ப்ரியங் கொண்டான். முடிவில் மானைக் கொன்றான். யக்ஞத்தைப் பூர்த்தி செய்தான். "ஸது தர்மோம்ருகோ பூத்வா பஹுவர்ஷோஷிதோ வனே| தஸ்ய நிஷ்க்ருதி மாதத்த நத்யஸௌ யக்ஞஸம்மித:|' தஸ்ய தேனனுபாவேன ம்ருகஹிம்ஸாத்மனஸ்ததா| தபோமஹத் ஸமுச்சின்னம் தஸ்மாத் ஹிம்ஸா நயக்ஞியா" தர்ம தேவதையே பலவருஷ காலம் மானாய் காட்டில் வசித்திருந்ததால் தன் தேகத்தைத் தொலைக்க இவ்வாறெல்லாம் அந்த ப்ராம்மணனைச் சொல்லி தன் தேகத்தை தொலைத்துக்கொண்டதேயல்லாமல் யக்ஞத்தில் பசுவதை செய்வது விதியாகாது. மேலும் அந்த உஞ்சவ்ருத்திப்ராம்மணன் முடிவில் ஸ்வர்க்கத்தில் வசிக்கப்ப்ரியப்பட்டதால் தான் பசுவதை செய்தான். இதனால் அவன் முன்பு செய்திருந்த மகத்தான தபஸ்ஸெல்லாம் அழிந்து போயிற்று. ஆதலால் யக்ஞத்தில் பசு வதை கூடவே கூடாது. "அஹிம்ஸா பரமோ தர்ம: ஹிம்ஸா தர்ம: ததா அஹித:| ஸத்யம் தேஹம் ப்ரவக்ஷ்யாமி யோ தர்ம: ஸத்யவாதினாம்" அஹிம்ஸைதான் ஸம்பூர்ணமான தர்மம். ஹிம்ஸையோடு கூடிய யக்ஞம் ஸ்வர்க்கத்தை மட்டில் கொடுக்க வல்லது. தர்மபுத்திரா! நான் சொல்வது இது ஸத்யம். ப்ரம்மக்ஞானிகளுக்கு ஹிம்சையோடு கூடிய யக்ஞம் தர்மமேயன்று.

மேற்கண்ட பிரமாணங்களில் III வது பிரமாணம் மகாபாரதம் அசுவமேதபர்வம் 93வது அத்யாயத்திலும் மற்ற I. II. IV. V. VI. VII. VIII, பிரமாணங்கள் முறையே மகாபாரதம் சாந்திபர்வத்திலுள்ள மோக்ஷதர்மத்தில், 344, 345, 283, 271, 269, 274, 278, வது அத்யாயங்களிலும் சொல்லப்பட்டிருக்கின்றன.

இவைகளை எல்லாம் பூராவாய் விமரிசை செய்து பார்த்தாலும் வேதவித்துக்களான மகரிஷிகளும் ஆட்டை அடித்து அதன் மாம்ஸத்தை புஜித்து நடத்தும் யாகத்தை ஆமோதிக்காததுடன் அதை ஸ்பஷ்டமாய் வாய் விட்டு கண்டித்திருக்கின்றனர் என்று நன்கு வெளியாகிறது. வேதத்தில் ஸ்பஷ்டமாய் ப்ராணி ஹிம்சை செய்யலாகாதென்று தடுத்திருக்கையில், பசு வதையைச் செய்து யாகத்தை நடத்த வேதம் விதித்திருப்பதாய் சொல்பவர்களை, நாஸ்திகர்களென்றும் மூடர்களென்றும் பலவாறு நிந்தித்திருக்கின்றனர். ஸுராபானத்தையும் மத்ஸ்ய போஜனத்தையும் மாம்ஸ பக்ஷணத்தையும் வேதம் விதிக்குமா என்று இவைகளையே யோசிக்கச் சொல்கின்றனர். போர் முனையிலும் வேட்டை ஆட்டத்திலும் ப்ராணி ஹிம்சை செய்யும் மாமிஸ பக்ஷணிகளான க்ஷத்திரியர்களுக்கு ஒருக்கால் இது சொற்ப பாபமுள்ள கர்மமாயிருந்தாலும் இருக்கலாம் என்றும் ப்ரம்ம நிஷ்டர்களாய் மோக்ஷத்தை விரும்பும் ப்ராம்மணர்களுக்கு இது ஒருக்காலும் தர்மமாகாதென்றும் திடமாய் கூறுகின்றனர். ப்ராம்மணர்கள் பிராம்மணர்களுக்குரித்த அன்னமான அரிசி முதலான தான்யங்களைக் கொண்டு தான் யாகத்தை நடத்த வற்புறுத்துகின்றனர். அதுவே தர்மம் என்று சாதிக்கின்றனர். வேதங்கள் அப்படித்தான் கூறுவதாய் காட்டுகின்றனர். வேதார்த்தத்தை நன்கு அறிந்த மகான் அப்படித்தான் விதித்திருப்பதாய் உரையாடுகின்றனர். இதற்கு மாறாய் கக்ஷியாடிய இந்திராதி தேவர்களையும் அவர்கள் ஸ்வயலம் கருதி மாமிஸத்தை புஜிக்க இச்சித்து சுருதி சூத்ரங்களுக்கு விருத்தமாய்ப் பேசியவர்களென்று நிருபித்துக் காட்டினர். அவ்வாறு தேவர்களுக்கு சாதகமாய் தீர்ப்பு கூறிய வஸுராஜனை தக்க தண்டனையை அனுபவிக்க விட்டு ஆட்டை அடித்து அதன் மாமிஸத்தை புஜித்து நடத்தும் யாகம் சுருதி சூத்ரங்களுக்கு விரோதமானதென்பதை உலகத்தார் யாவரும் எக்காலத்திலும் நன்கு கண்டு கொள்ளும்படி பகிரங்கப்படுத்தினர். இதற்கு யக்ஞ மூர்த்தியான நாராயணனின் சகாயத்தையும் அடையப் பெற்றனர். அதிகம் சொல்வானேன். மேற்கண்ட பிரமாண சரிதைகளும் வாக்யங்களும் இவைகளை விவரித்து கூறுகின்றன.

வேதவேத்தான பரப்ரம்மமாகிய ஸ்ரீகிருஷ்ணரும் வேதவித்துக்களான மகரிஷிகளும் ஆமோதித்து இவ்வாறு பசுவதை கொண்ட யாகத்தை நடத்துவது வேதத்தின் தாத்பர்யமல்லவென்று சொன்ன பின், ஒருக்காலும் வேதம் யக்ஞத்தில் பசுவதை செய்ய வற்புறுத்தி

யிருக்கமாட்டாதென்று நாம் திடமாய் நம்பலாம். தற்போது கிடைக்கும் எல்லா வேதங்களைப் பார்த்தாலும் வேதத்தில் எங்குமே பசுவதை செய்ய சொல்லப்படவில்லை. அப்பேற்பட்ட ஓர் வேதவாக்ய மாகிலும் எங்குமே காணப்படுவதில்லை. பசு ஹிம்ஸை செய்யச் சொல்லும் ஓர் வேத வாக்யமும் காணப்படாததோடு பசு ஹிம்ஸை செய்யாதிருக்கச் சொல்லும் எண்ணிலடங்காத வேத வாக்யங்கள் தான் காணப்படுகின்றன. யாகயக்ஞாதிகர்மங்களை செய்யச் சொல்லும் கர்ம காண்ட மடங்கிய யஜுர்வேதத்தின் முதல் மந்திரத்திலேயே 'யஜமானஸ்ய பசூன் பாஹி' யஜமானனுடைய பசுக்களைக் காப்பாற்று என்று சொல்லப்படுகிறது.

(தொடரும்)

ஸ்ரீ மத்வாசாரியார் இயற்றிய

ஸ்ரீ மகாபாரத தாத்பர்ய நிர்ணயம்.

(முப்பத்திரண்டாவது அத்யாயம்)

(முன் 26ம் பக்கம் தொடர்ச்சி.)

துரியோதனனின் ஸ்வர்க்கவாசம்.

எல்லா லோகங்களிலும் சிரேஷ்டமான இந்திரலோகத்திற்கு தர்மபுத்திரர் வந்து சேர்ந்து இந்த இடம் நீர் வசிக்க அருகமானது என்று தேவர்களால் சொல்லப்பட்டு துரியோதனனைக் கண்டார். தம்பிகளுடன் கூடி ஜொலிப்பதாயுள்ள எல்லா அரசர்களுக்கும் மேலானதான ஸ்தானத்தில் இருந்துவரும் துரியோதனனைப் பார்த்து மகாகோப முள்ளவராய், தர்மபுத்திரர், சுபமான தன் இருகண்களையும் மூடிக்கொண்டு, "கர்ணன் முதலான என் அண்ணன் தம்பிமார்களும், துரௌபதி த்ருஷ்டத்யும்னன் முதலான பந்து ஜனங்களும், கடோத்கசன் முதலான பிள்ளைகளும், எல்லா யாதவர்களும், எங்கு இருக்கின்றனர்" என்று தேவர்களைக் கேட்டார். அதற்கு தேவர்கள் "தர்மபுத்திரா! உமக்கு அவர்களால் என்ன பிரயோஜனம். இந்த ஸ்வர்க்க லோகத்தில் அவரவர்கள் செய்த கர்மாவை அவரவர்கள் அனுபவிக்கின்றனர் மற்றவர்கள் அதை அனுபவிப்பதில்லை." என்று பதில் சொன்னார்கள். இதைக் கேட்ட தர்மபுத்திரர் சொன்ன

தாவது:—பூமியில் இருக்கும் எல்லா ராஜாக்களின் நாசத்திற்கும் காரணமானவனையும் எல்லோரிடமும், பாபமிருப்பதாய் சந்தேகங் கொண்டவனையும், மித்ரத்வேஷியாயும், நாராயணனின் ஸேவையிலிருந்து விலகியவனையும், நாஸ்திகனையும், மகாதூர்த்தனையும், க்ரூரனையும், விஷ்ணு த்வேஷியாயும், விஷ்ணு பக்த த்வேஷியாயும், பாபிஷ்டனையுமுள்ள இந்த துர்யோதனன் ஸர்வோத்தமமாயுள்ள பதவியை எந்த காரணத்தால் அடைந்தான். எல்லா தர்மங்களையும் அறிந்தவர்களாயும் நாராயணனிடம் ஈடுபட்டவர்களாயும் பாகவத தர்மத்தில் திடமாய் இருப்பவர்களாயும் எனக்கு ப்ரியர்களுமான பீமசேனாதிகள் இங்கு ஏன் காணப்படுவதில்லை. ஸாது ஜனங்களான பீமசேனாதிகள் எல்லோருமே எங்கு இருக்கின்றனரோ, அது நகரமாயினும் அங்குதான் நான் வசிக்கவேண்டும். இது உத்தமஸ்தானமாயினும் பாபியான துர்யோதனனுடன் சேர்ந்து நான் இருக்கமாட்டேன்" என்றார். அப்பொழுது தேவர்கள் மகாவீரனை துர்யோதனனுக்கு இந்த ஸ்தானம் தான் அருகமானது என்று சொல்லி, தன் சொந்த ஜனங்களைப் பார்க்க விருப்பமுள்ள தர்மபுத்திரருக்கு அந்த இடத்தைக் காட்ட தேவர்கள் ஓர் தூதனை அனுப்பி வைத்தார்கள்.

தர்மபுத்திரரின் நரகயாதனை

துர்கந்தமுள்ளதும் அதிகஷ்டமானதும் இருள் சூழ்ந்ததுமான தேவ தூதன் காட்டிய மார்க்கமாய் சிறிது தூரம் சென்று, அந்த நாற்றத்தைப் பொறுக்கமுடியாமல் திரும்பி விட தர்மபுத்திரர் இச்சிக்கும் சமயம், அந்த இடத்தில் தன் சொந்த ஜனங்களின் குரல் போன்ற குரலைக்கேட்டார். "மஹாராஜா! இங்கு சிறிது நேரம் நில்லும். உம்முடைய ஸந்நிதான ஸாமார்த்தியத்தால் எங்களுக்கு மகத்தான துக்கம் உண்டாவதில்லை." என்றிவ்வாறு தேவர்கள் வேண்டுமென்று தர்மபுத்திரரை வஞ்சிப்பதற்காக ஏற்பாடு செய்த மோசவார்த்தையைக் கேட்டு, தர்மபுத்திரர் அழுகைக் குறலால் அவர்கள் தம் தம்பிமார்களோவென்று சம்சயமடைந்து, நீங்கள் யார் என்று கேட்டார். அதற்கு நான் பீமசேனன், நான் அர்ஜுனன், நான் கர்ணன், நான் துரௌபதி, என்று இம்மாதிரியாய் சொன்னதாய் கேட்டார். இந்த

வார்த்தைகளைக் கேட்டு தர்மபுத்திரர் துக்கம், கோபம், கருணை இவைகளுடன் கூடியவராய், ஹே! தூதா! உன் இஷ்டப்படி செல்லலாம் நான் இந்த இடத்தை விட்டு செல்லமாட்டேன். இப்போது கஷ்டப்படும் சொந்த ஜனங்களை விட்டு எனக்கு இந்த ஸ்வர்கத்தாலும் பிரயோஜனமில்லை, என்று தூதனைப் பார்த்து சொன்னார். இதைக் கேட்டு தேவதூதனும் போய் விட்டான். தர்மபுத்திரர் அந்த இடத்திலேயே நின்றார்.

• தர்மபுத்திரரின் பாபம்

தேவதூதன் புறப்பட்டுப் போனபின், இந்திராதி தேவர்கள் தர்மபுத்திரரிடமுள்ள சிநேகத்துக்கு வசர்களாகி, அந்த துர்கந்த ஸ்தலத்திற்கு வந்தனர். அவர்கள் வந்து சேரவும் அந்த இடத்தில் அழுகைக்குரல் நின்றது. துர்கந்தமுள்ள அந்தகாரத்தையும் தர்மபுத்திரர் காணவில்லை. இந்திராதிகள் வந்துசேர தர்மபுத்திரர் மோகம் விலகிய புத்தி கொண்டவராய், தான் கண்டிருந்த இடத்தை ஸ்வர்க்கத்தில் உத்தமமான இடமாகக் கண்டார். அச்சமயம் யமதர்மராஜன் மறுபடியும் தன்னுடைய சிலாக்கியமான கீர்த்தியை வெளிக்காட்டிக் கொண்டு தன் ஸ்வரூபனாயுள்ள தர்மபுத்திரரைப் பார்த்து, "ஹே தர்மபுத்திரா! எல்லா தர்ம ஸமூகங்களைவிட உத்தமம் எப்பொழுதுமுள்ள உபகாரஸ்மரணைதான். அந்த தர்மத்தை நான் உன்னிடம் யக்ஷபிரசின சந்தர்பத்தில் முதல் தடவையும், நாய்விஷயத்தில் இரண்டாவது தடவையும், இந்தசமயத்தில் மூன்றாவது தடவையும் அதிகமாகவே கண்டு கொண்டேன் என்று சொன்னார்.

பீமசேனாதிகளுக்கு நரகம் இல்லை.

பிறகு இந்திரன் சொன்னதாவது:—"துரோணாசாரியாரைக் கொல்லும் பொருட்டு, அஸத்தியம் பேசின உனக்கு இல்லாதிருப்பதான துர்கந்தாதிகள் காண்பிக்கப்பட்டன. ஸ்ரீகிருஷ்ணர் உன்னை பார்த்து 'அசுவத்தாமாஹத:' என்று அஸத்தியம் பேசச்சொல்லியும், மிகவும் சிரமப்பட்டுதான் நீ அவ்வாறு சொன்னாய். ஸ்ரீகிருஷ்ணருடைய வாக்யத்தில் உனக்கு அதிகவிசுவாசம் உண்டாகவில்லை. ஸ்ரீகிருஷ்ணரின் ஆக்ஞையின் பேரில் எல்லா தர்ம விரோத காரி

யங்களைச்செய்த போதிலும், அதனால் சிறிதும்பாபம் ஏற்படமாட்டாதுதான் உனக்கு யமனின் பதவி ஏற்படுமுன், ப்ரம்மாபரோக்ஷக் ஞானம் உண்டாயிருப்பினும், ஸ்ரீகிருஷ்ணரின் வாக்கியத்தில் அவிசுவாசமாகிய உன்னுடைய விருத்தகர்மமானது உன் ப்ராப்த பாபத்தை குறிக்கிறது. விஷ பக்ஷணம் செய்வதால் மரணம் ஏற்படுமாயின் அது ப்ராப்தபாபத்தின் பலனாகுமேயல்லாது விஷ பக்ஷணத்தின் பலமாகாது. ஏனெனில் விஷத்தைசாப்பிட்டும் சிலர் பிழைத்து விடுகின்றனர். அதுபோல் ப்ரம்மாபரோக்ஷம் உண்டானபின் பாபகர்மா ப்ரஸக்தமாகும் பக்ஷத்தில், அதுப்ராரப்த பாபத்தின் பலனைப்பெறகாரணமாகும். இஸ்வர்கத்தில் தேவர்களால் பூஜிக்கப்பட்டவர்களாய் திவ்யரூபமுடையவர்களாய் ஸுகானுபவம் செய்யும் பீமசேனாதிகளைப்பார். பரபிரம்மத்தின் சாக்ஷாத்காரம் அடைந்தவர்களாயும், மகாசுத்தமான பகவானுக்கு சமர்ப்பணம் செய்யப்பட்ட கர்மங்களுள்ளவர்களாயும், விஷ்ணுபக்தர்களாயும் உத்தமமான த்யானத்தால் சரீரம் விட்டவர்களாயும், தேவர்களுக்கு உத்தம ஸ்வாமிகளாயுமுள்ள, பீமசேனாதிகளுக்கு துக்கம் எப்படிதான் வரும்? இந்த பீமசேனாதிகளாக பூமியில் வாயு பகவான் முதலான தேவர்களே பிறந்தார்கள். பூமியின் பாரத்தை தொலைப்பதில் இச்சையுள்ள விஷ்ணுவை அவரிடம் ஸமர்ப்பணம் செய்யப்பட்டதான புத்தியாலும் கர்மங்களாலும் சந்தோஷப்படுத்திவிட்டு, பிறகு அந்த விஷ்ணுவுடன் சேர்ந்தே ஸ்வர்கத்திற்கு சென்றனர். ஹே தர்மபுத்திரா! உனக்குத்தான் இன்னமும் மனுஷ்ய ஸ்வபாவம் போகவில்லை. ஆகவே துர்யோதனாதிகளிடம் த்வேஷம் செய்கிறாய். ஆகையால் ஆகாசகங்கா ஜலத்தில் ஸ்நானம் செய்து இந்த ஜலத்தில் சரீரத்தை விட்டு தேவதாஸ்வரூபத்தை அடை. இந்த துரியோதனாதிகள் மகாபாபிஷ்டர்களாதலால் ஸ்வர்க்கபோகத்தால் பாரப்த புண்யத்தின் நாசத்தை அடைந்து சம்பூர்ண சௌக்கியமில்லாதான நித்ய துக்க ஸ்வரூபமான அந்தம் தமஸ்ஸில் மீண்டும் திரும்புதல் இல்லாமல் விஷ்ணுவுக்கு வசர்களாய் விழப்போகின்றனர். தேவதைகளின் அம்சங்களினின்றும் பிறந்த பீமசேனாதிகள் எல்லோருமே தங்களுடைய மூலரூபங்களை அடைந்து மோக்ஷத்திற்கு செல்லும் பொழுது,

தங்களுடைய தாரதம்யத்திற்கு ஒத்ததான மோக்ஷத்தை அடைகின்றனர். தேவர்களுக்கு மோக்ஷம் கிடைப்பதிலேயும் சம்சயம் ஒன்றுமே இல்லை.''

தர்மபுத்திரர் சரீரம் விட்டது.

என்றிவ்வாறு இந்திரபகவானால் சொல்லப்பட்ட தர்மபுத்திரர் சீக்கிரமே ஆகாசகங்கையில் ஸ்நானம் செய்து, அங்கு அவருடைய மனுஷ்யசரீரத்தை விட்டு, அக்ஷணமே தேவதாசரீரத்தை அடைந்து கோபம் முதலான ஸமஸ்த தோஷங்களையும் விட்டு பிரகாசித்தார்.

(தொடரும்)

அஹம் ப்ரம்மாஸ்மி.

(முன் 44-ம் பக்கம் தொடர்ச்சி.)

சாஸ்திரியாரும், ஆசாரியாரும்.

ஆசார்: நாம் 'இதமக்ரே' என்று ஒரே பதம் செய்துகொண்டு, அதற்கு 'அஸ்ய அக்ரே' ஜகத்தின் சிருஷ்டிக்கு முன், என்று அர்த்தம் செய்துவிடுகிறோம்.

சாஸ்திரி: 'இதம் அக்ரே' இரண்டு பதங்களல்லவோ இருக்கின்றன. நீர் ஒரே பதம் செய்துவிடுவதாவது? 'இதம்' என்ற முதல் வேற்றுமைக்கு 'அஸ்ய' ஜகத்தின் என்ற ஆறும் வேற்றுமையின் அர்த்தம் எப்படி உண்டாகுமோ?

ஆசார்: ஒரே பதமாய் வைத்துக்கொண்டால், என்ன அர்த்தமோ, அதே அர்த்தம்தான் இரண்டு பதங்களாய் செய்துகொண்டாலும் ஏற்படும். அதனால் எமது அர்த்தம் கெட்டுப்போவதில்லை. 'ஸுபாம ஸுலுக்' என்னும் வியாகரண சூத்திரத்தின்படி 'இதம்' என்னும் முதல் வேற்றுமை ஆறும் வேற்றுமை பதமுமாகி, 'அஸ்ய' ஜகத்தின் என்ற அர்த்தத்தைக் கொடுக்கிறது. அல்லது 'இதம்' என்னும் பதத்தை 'ப்ரம்ம' என்னும் பதத்துடன் சேர்த்து அன்வயம் செய்வதிலும் எனக்கு ஆக்ஷேபணை இல்லை. அதனால் என் அர்த்தத்திற்கு யாதொரு பாதகமும் இல்லை.

சாஸ்திரி: நீர் என்னமோ வாயடி அடித்து என்னை மௌனமாக்குகிறீரேயொழிய, இந்த வாக்கியத்தின் முன் பின் அம்சங்களை கலந்து யோசித்தால் உமது அர்த்தம் சரியாய் இருக்குமாவென்றுதான் நான் சந்தேகப்படுகிறேன்.

ஆசார்: அதையும் நிரூபித்துக் காட்டுகிறேன். ''ததாஹு: ப்ரம்ம வித்யயா ஸர்வம் பவிஷ்யந்த: மனுஷ்யா: மன்யந்தே | கிமுதத் ப்ரம்ம அவேத் யஸ்மாத் தத்ஸர்வம் பவத் இதி'' ப்ரம்மக்ஞானத்தால் பூர்ணதையை அடைவதாய் மனுஷ்யர்கள் அறிகின்றனர். அவர்கள் அவ்விஷயத்தில் இவ்வாறு விசாரம் செய்கிறார்கள். ''பூர்ணர்கள் ஆவதற்கு, ப்ரம்மக்ஞானம் காரணமாய் இருந்தால், ப்ரம்மம் பூர்ணதையை அடைந்திருப்பதற்கு அந்த ப்ரம்மம் பிரம்மக்ஞானத்தை அடைந்திருக்கிறதா, அதாவது அந்த ப்ரம்மம் ப்ரம்மத்தை அறிந்திருக்கிறதா! என்றார்கள். அவர்கள் விசாரம் செய்யும் வகையை விளங்கச்சொல்லுகிறேன். கேளும். ப்ரம்மக்ஞானம் இருந்தால்தான் பூர்ணனாகமுடியும். ப்ரம்மக்ஞானம் இல்லாவிடில் பூர்ணனாகமுடியாது. அப்படியிருந்தால்தான் ப்ரம்மக்ஞானம் பூர்ணதைக்குக் காரணமாகும். இதற்கு திருஷ்டாந்தம் போஜனம் செய்தால் திருப்தி உண்டாகிறது. போஜனம் செய்யாவிடில் திருப்தி உண்டாகிறதில்லை. இதனால் போஜனம் என்பது திருப்திக்குக் காரணமாகும். போஜனம் செய்யாமலேயே திருப்தி உண்டாவதாய் இருந்தால், திருப்திக்கு போஜனம் காரணம் என்று சொல்வதற்கில்லை. அதுபோல் ப்ரம்மக்ஞானம் இல்லாமலே பூர்ணதை உண்டாவதாய் இருந்தால், பூர்ணதைக்கு ப்ரம்மக்ஞானம் காரணமென்று சொல்ல இடமிராது அல்லவா? ப்ரம்மமோ பூர்ணமாய் இருக்கிறது. ஆகவே அதனிடத்திலும் ப்ரம்மக்ஞானம் இருந்தே தீரவேண்டும். ப்ரம்மக்ஞானம் இல்லாமல் அதனிடத்தில் பூர்ணதை இருக்கும்பக்ஷத்தில் ப்ரம்மக்ஞானமில்லாமலே நம்மிடத்திலும் அந்த பூர்ணதை இருக்கும் பக்ஷத்தில் ப்ரம்மக்ஞானமில்லாமலே நம்மிடத்திலும் அந்த பூர்ணதை ஏன் உண்டாகக்கூடாது. அதாவது நாமும் ப்ரம்மக்ஞானமில்லாமல் ஏன் பூர்ணர்களாகக்கூடாது என்று ஓர் பிரசினம் செய்துகொள்ளப்பட்டது ''அதற்குத்தான் ப்ரம்மவா. இதமக்ர ஆஸீத், ததாத்மானமேவ அவேத் அஹம் ப்ரம்மாஸ்மீதி, தஸ்மாத் ஸர்வமபவத்'' என்று பதில் கொடுக்கப்பட்டது. ப்ரம்மம் இந்த ஜகத்தின் சிருஷ்டிக்கு முன்னமே இருந்தது. அந்த ப்ரம்மம் தன்னையே தான் அஹம் ப்ரம்மாஸ்மி நான் ப்ரம்மமாய் இருக்கிறேன் என்று அறிந்தது. இவ்வாறு இந்த

ப்ரம்மத்திற்கு ப்ரம்மக்ஞானம் இருந்தால் அந்த ப்ரம்மம் பூர்ணமாக ஆயிற்று "தத்யோயோ தேவானாம் ப்ரத்யபுத்யத ஸ எவ ததபவத் ததர் ஷீணாம் ததாமனுஷ்யாணாம்" இம்மாதிரியேதான் தேவர்களின் மத்தியில் யார் யார் ப்ரம்மத்தை அறிகின்றனரோ அவரவர் பூர்ணனாகிருர். ரிஷி களின் மத்தியில் யார் யார் ப்ரம்மத்தை அறிகின்றனரோ அவர் பூர்ண ராகிருர். மனுஷ்யர்களின் மத்தியில் யார் யார் ப்ரம்மத்தை அறிகின் றனரோ அவர் பூர்ணராகிருர். என்று இந்த வாக்யத்தில் ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அர்த்தம் இந்த வாக்யத்திலுள்ள பதங் களின் சரியாய் ஒழுங்காய் பதங்களை முறித்தோ திறித்தோ புதிய அபிப்பிராயங்களை புகவிட்டோ எவ்வகை ரண சிகித்ஸையும் செய்யாமல் ஏற்படுகிறது. ஆகவே 'அஹம் ப்ரம்மாஸ்மி' என்பதின் பூர்வோத்தர வாக்யங்களைக் கவனித்தால் ப்ரம்மக்ஞானமே பூர்ணமாவதற்குக் காரண மென்றும், பரப்ரம்மமும் ப்ரம்மக்ஞானத்தால் பூர்ணமாய் இருக்கிற தென்றும் தேவர்களும் சரியே, ரிஷிகளும் சரியே, மனுஷ்யர்களும் சரியே, ப்ரம்மக்ஞானத்தால் பூர்ணர்களாய் இருக்கின்றனரென்றும், அர்த்தம்தான் ஏற்படுகிறதே ஒழிய அஹம் ப்ரம்மாஸ்மி என்னும் வாக் யத்தால், ஜீவன் தன்னையே நான் ப்ரம்மமென்று அறிந்தான் என்ற அர்த்தம் ஏற்படுவதில்லை, அப்படி 'அஹம் ப்ரம்மாஸ்மி' என்று அறிந் தது ஜீவனாய் இருக்கும் பக்ஷத்தில் எல்லா ஜீவர்களும் இவ்வாறு தங்களை ப்ரம்மமென்று அறிந்து ஸர்வபாவத்தை பூர்ணதையை அடைந்தனர் என்று முன் வாக்யத்தாலேயே முன்னதாய் ஏற்பட்டிருக்கையில் மறு படியும் பின்னடி தனியாய் தேவதைகள் அறிந்துகொண்டனர், மனிதர் கள் அறிந்துகொண்டனர் என்று திருப்பிச்சொல்வானேன் ?

சாஸ்திரி: சரிதான்.

ஆசார்: சரிதானவது; பின்னடி தேவானாம், ரிஷீணாம், மனுஷ் யாணாம் என்று பஹு வசனமுள்ள பதங்களால் தனித்தனியே சொல் லப்பட்டிருப்பதிலிருந்து ப்ரம்மம், தேவதைகள், ரிஷிகள், மனுஷ்யர் கள், இவர்களில் பேதமும் தேவதைகளுக்கும் ரிஷிகளுக்கும் பேதம், மனுஷ்யர்களுக்கும ரிஷிகளுக்கும் பேதம், மனுஷ்யர்களுக்கும் தேவ தைகளுக்கும் பேதம் ப்ரம்மத்துக்கும் தேவதைகளுக்கும் பேதம், ப்ரம் மத்துக்கும் ரிஷிகளுக்கும் பேதம், ப்ரம்மத்துக்கும் மனுஷ்யர்களுக்கும் பேதம், தேவர்களிலும் பரஸ்பரம் பேதம், ரிஷிகளில் பரஸ்பர பேதம், மனுஷ்யர்களில் பரஸ்பரம் பேதம் இவ்விதமான அநேக பேதங்கள் இவ்வாக்யத்தால் போதிக்கப்பட்டதாய் ஏற்படுகிறதல்லவா ?

சாஸ்திரி: பிரம்மாண்டமாய் பேதங்களை அடுக்கிக்கொண்டே போகிறீரே ?

ஆசார்: இவ்வாறு பேதங்கள் போதிக்கப்படுவதை நீர் ஒப்புக் கொள்ளுகிறதில்லையா ? சொல்லுமே. தனித்தனியே பஹுவசன ப்ரயோகமுள்ள பதங்கள் இருக்கின்றனவா ? இல்லையா ? நீர் ஒப்புக் கொள்ளாவிடினும் உமது குரு சங்காராசாரியாரே இந்த வாக்யத்தால் அநேக பேதங்கள் போதிக்கப்படுகின்றன என்று ஸ்பஷ்டமாய் ஒப்புக் கொண்டுவிட்டார் ?

சாஸ்திரி: இந்த பேதங்களை நிஜம், ஸத்யம், என்று ஒப்புக்கொண் கொண்டிருக்கிருர் ? என்ன அப்படிச் சொல்லுகிறீர் ?

ஆசார்: இந்த வாக்யத்தால் பேதம் போதிக்கப்படுகிறதென்றே ஒப்புக்கொண்டிருக்கிருர். ஆனல் அந்த பேதம் உண்மையன்று; கல்பிதம் வாய் மித்யை என்று தன் மதத்திலுள்ள அபிமானத்தால், வழக்கப்படி பல்லவி பாடிவிட்டார்.

சாஸ்திரி: சும்மா சொல்லிவிடவில்லை. அதற்கு காரணமும் கூறி யிருக்கிருர்.

ஆசார்: அவர் சொன்ன காரணம் என்ன தெரியுமா ? இந்த வாக் யத்தால் போதிக்கப்படும் பேதங்களை எல்லாம் உண்மை, ஸத்யம், என்று தான் ஒப்புக்கொண்டுவிட்டால், "புர: புருஷ ஆவிசத்" என்ற மற்றொரு வாக்யத்திற்கு விரோதம் வருகிறதாம். அந்த அலாதியான சுருதி ப்ரம்மமே ஜீவன் என்று அறிவிக்கிறதாம். அந்த சுருதிக்கு இந்த சுருதி விரோதமாய் இருப்பதால் இந்த சுருதியில் சொல்லப்பட்டிருக் கும் இந்த பேதம் கல்பிதம் பொய் நம்பத்தகுந்ததில்லை என்று தீர்ப்புக் கூறிவிட்டாரேயன்றி, இந்த வாக்யத்தால் பேதம் போதிக்கப்படுகிற தென்பதை, அவர் தமது சித்தாந்தத்தில் ஆக்ஷேபித்திருக்கிருரா என்ன?

சாஸ்திரி: சரிதான்.

ஆசார்: சரிதான் என்னய்யா ? இல்லை என்று சொல்லுமே இதில் என்ன சந்தேஹம். அல்லது அஹம் ப்ராம்மாஸ்மி என்னும் வாக்யமாவது உம்முடைய சித்தாந்தத்தின்படி அபேதத்தை போதிக்கிறதா என்ன ? சொல்லுமே.

சாஸ்திரி: ஆசார்வாள், என்ன இப்படி சொல்கிறீர். எமது அத் வைத சித்தாந்தத்திற்கு இது மகா வாக்யமல்லவா ?

ஆசார்: அந்த மகாவாக்யத்திற்கு சேர்ந்திருக்கும் அவன்றைதயைத் தான் சொல்லிக்கொண்டு வருகிறேனே. 'தத்வமஸி'யைப்போல இந்த 'அஹம் ப்ரம்மாஸ்மி' என்னும் வாக்யமும் உம்முடைய மதத்தில் அகண்டார்த்தபோதகம்தானே ?

சாஸ்திரி: ஆம் ஆக்ஷேபனை இல்லை.

ஆசார்: அகண்டார்த்தபோதகம் என்றால் என்ன ? இந்த 'அஹம் ப்ரம்மாஸ்மி' என்னும் பூரா வாக்யமும் 'சித்' ப்ரம்மம் என்றுதானே போதிப்பதாய் சொல்லுகிறீர்கள்.

சாஸ்திரி: ஆம்.

ஆசார்: ஜீவனுக்கும் ப்ரம்மத்திற்கும் ஐக்யமிருப்பதாய் நீர் சொல்லுகிறீர். அதற்கு அஹம் ப்ரம்மாஸ்மி என்னும் வாக்யம் ஆதாரம் என்கிறீர். அஹம் ப்ரம்மாஸ்மி என்பதற்கு என்ன அர்த்தமென்றால் சித் சித் ப்ரம்மம் ப்ரம்மம் என்கிறீர். யோசனைசெய்துபாரும். ப்ரம்மம் ப்ரம்மம் என்றால் ஜீவனுக்கும் ப்ரம்மத்திற்கும் ஐக்யத்தை அபேதத்தை இந்த வாக்யம் சொல்வதாய் ஆகிறதா ? இதனால் அபேதம் சித்திக்கிறதா என்ன ?

சாஸ்திரி: இவ்வாக்யத்திற்கு இருவகையான தாத்பரியங்களுண்டு. ஒன்று முக்யமான தாத்பரியம் (ப்ரைமரி மீனிங்கு) இரண்டாவது அமுக்யமான தாத்பர்யம் (செகண்டரி மீனிங்கு) முக்யமான தாத்பரியத்தால், அஹம் ப்ரம்மாஸ்மி தத்வமஸி முதலான எந்த மகா வாக்யமும் அபேதத்தை அறிவிப்பதில்லை தான். அமுக்யமான தாத்பரியத்தால் தான் ஐக்யத்தை அறிவிக்கிறது.

ஆசார்: சரியாய்ச் சொன்னீர். உங்கள் அபிப்பிராயத்தையே விவரித்துச் சொல்லுகிறேன் பாரும். அஹம் ப்ரம்மாஸ்மி என்பதில் 'அஹம்' என்னும் பதத்தால் அதன் முக்ய வ்ருத்தியால் அந்தக் காணத்துடன் கூடிய ஜீவன் போதிக்கப்படுகிறான் என்றும், 'ப்ரம்ம' என்னும் பதத்தால், அதன் முக்ய வ்ருத்தியால், பூர்ணதை முதலான குணங்கள் உள்ள ப்ரம்மம் போதிக்கப்படுகிறான் என்றும், இப்படிப்பட்ட குணங்கள் பொருந்திய இவ்விரு ஜீவப்ரம்மர்களுக்குள் ஐக்யம் என்பது, இவ்விருவர்களில் விருத்தமான தர்மங்கள் இருப்பதைக்கொண்டு, பொருந்துவதில்லையென்றும், அதனால் முக்ய வ்ருத்தியால் இவர்களின் ஐக்யம் சித்திப்பதில்லை என்றும், நீரே ஒப்புக்கொள்ளுகிறீர். சரிதானே.

(தொடரும்)

உலக வர்த்தமானம்.

தன் விடுமுறைநாளை கழிக்க எகாகியாய் எழு வயதுப் பெண் மிஸ் டெயிலர் என்பவள் லண்டனிலிருந்து காராச்சிக்கும் வரும் சிறப்பை வழி நெடுக போடோ பிடித்து பலர் அகமகிழ்கின்றனர்.

ஃ ஃ ஃ

ஆமதாபாத்தில் மது விலக்கு விளம்பரத் தட்டிக்களைக் கொணரவும் திருட்டுத் தனமாய் குடிப்பவர்களின் தகவலை அறிவிக்கவும் சர்க்காரால் **5000** குழந்தைகள் 25—7—38ல் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டனர்.

ஃ ஃ ஃ

ஹார்தாயி ஜில்லாவைச் சேர்ந்த ராகோபு கிருமத்தில் ஓர் தாகூர் ஸ்திரீக்கு ஒரே சமயத்தில் பிரசவமான மூன்று குழந்தைகளில் ஓர் குழந்தை விக்னேசுவரர் போல் துதிக்கை போன்ற அவயவங் கொண்டு அதன் வழியாய் மூச்சு விடுவதும் வாயால் பால் பருகுவதும் எல்லா குழந்தைகளும் உயிருடன் இருப்பதும் நூற்றுக்கணக்கான ஜனங்களுக்கு காக்ஷியளிக்கிறது.

ஃ ஃ ஃ

இந்திய சமஷ்டி திட்ட சம்பந்தமாய் யோசனை செய்ய ஸ்ரீமான் காந்தியை லண்டனுக்கு வரும்படி அழைக்க இந்திய உதவி மந்திரி கர்னல் மூர்ஹெட் வருவதாகவும் அதன்படி இவர் லண்டன் சென்றால் அதற்கு பதிலாய் எமது மகாராஜ சக்கரவர்த்தி இந்தியாவுக்கு வந்து சமஷ்டி சபையை திறந்து வைப்பார் என்றும் ஓர் பத்திரிகை கூறுகிறது.

ஃ ஃ ஃ

நல்ல பாம்பு கடித்தால் உடனே பதிலுக்கு முன் பணம் கட்டி "வேமூர்நரசய்யா, போலிரெட்டிப்பாளயம், நாயுடு பேட் போஸ்ட், நெல்லூர் ஜில்லா" என்ற விலாஸத்துக்கு தந்தியடித்தால், அவர் வழக்கப்படி தன் வீட்டின் சமீபத்தில் உள்ள மரத்தில் தன் மந்த்ர புஸ்தகத்தை கட்டி மந்திரிக்கவும். அக்ஷணமே வெளியூர் வாசிகளுக்கும் விஷநிவிருத்தியாகி பதில் தந்தியும் அனுப்பப்படுகிறது.

அமெரிக்காவுக்குச் சென்று இஞ்ஜினீயர் பரீக்ஷையில் படித்து தேறிய பி. எல். வர்மா என்பவர் வேலை அகப்படாமல் தனது சொந்த ஊரான லூடியானாவிலேயே தெருவில் வெற்றிலை விற்று ஜீவனம் செய்கிறார்.

ஃ ஃ ஃ

மத்ய மாகாணத்தில் சர்க்கார் தஸ்தா வேஜிகளில் ஸ்ரீமான் காந்தி என்று இனி காணப்படலாகாதென்றும் மகாத்மா காந்தி என்று தான் சொல்லப்படவேண்டுமென்றும் காங்கிரஸ் அரசியல் பிரதம மந்திரி உத்தரவிட்டிருககிறார்.

ஃ ஃ ஃ

குவெட்டாவில் சமீபத்தில் நடந்த பூகம்பத்தில் இடிந்து போன ஹிந்து கோயிலைக் கட்ட அந்த பூகம்ப நிதியிலிருந்து கவர்னர் ஜெனரல் 12,000 ரூபாய் தந்திருக்கிறார்.

ஃ ஃ ஃ

கர்பம் ஏற்படாமலிருக்க ஆண் பெண் இருபாலர்களுக்கும் உதவி புரியும் கருவிகளும் பாட புஸ்தகங்களும் இந்தியாவில் தற்போது தாராளமாய் பிரசாரம் செய்யப்படுகின்றன. இத்தாலியாவில் பிரஜா விருத்திக்காக விவாகமானவர்களுக்குத்தான் சர்க்கார் உத்யோகமும் பிரமோஷன்களும் கொடுக்கப்படுகின்றன.

ஃ ஃ ஃ

இந்தியாவில் 1454 கோடி ரூபாய் மதிப்புள்ள தங்கம் இருக்கிறதென்றும் இதில் 326 கோடி ரூபாய் தங்கம் இந்தியாவிலிருந்து வெளி நாடுகளுக்கு இதுவரையில் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறதென்றும் ஒருவர் புள்ளி விவரம் கூறுகிறார்.

ஃ ஃ ஃ

மலையாளத்தில் அமுலுக்கு கொண்டுவரப்போகும் ஆலயப்ரவேச சட்டத்தை கள்ளிக்கோட்டை ஜாமொரினும் கொல்லங்கோடு ராஜாவும் தம்முழுபலத்துடனும் எதிர்க்க உத்தேசித்திருக்கின்றனர்.

ஃ ஃ ஃ

காசி முனிசிபாலிட்டியார் குரங்குகளின் பாதை நீக்கிக் கொள்வதற்காக ரூ. 3520 செலவிட தீர்மானித்திருக்கின்றனர்.

ஸ்ரீராம் புராபக்கத்தில் ஓர் ஸிக்கியஜாதி ஸ்திரீ 1936௵ ஜனவரி மாதத்தில் ஒரே சமயத்தில் 3 குழந்தைகளையும் 1937௵ மே மாதத்தில் ஒரே சமயத்தில் 3 குழந்தைகளையும் 1938௵ ஜுலை மாதத்தில் ஒரே சமயத்தில் 3 குழந்தைகளையும் ஆக இந்த மூன்று வருஷங்களில் ஒன்பது குழந்தைகளுடன், இந்த பெண் பெரிய சம்சாரியாய் ஆகிவிட்டாள்.

ஃ ஃ ஃ

77 வருஷத்துக்கு முன் ஓர் ஸ்திரீயை காதலித்து அவளை விவாகம் செய்து கொள்ளும் முன் அவள் மற்றொருவருக்கு விவாகமாகிவிட்டதன் நிமித்தம் அந்த அம்மாளின் யோசனையின் பேரில், இதுவரை கார்த்திருந்து, நாளது ௵ செப்டம்பர் ௴ 1௳ ஜான் என்பவர் மத்ய போலண்டிலுள்ள கப்பினோஸ் நகரில் அந்த அம்மாளை விவாகம் செய்து கொண்டார். அந்நகரின் பிரபலஸ்தர்கள் யாவரும் விவாககாலத்தில் பிரஸன்னமாயிருந்தனர். விவாகம் செய்து கொண்ட புருஷரின் வயது 105 ஸ்திரீயின் வயது 96

ஃ ஃ ஃ

ஹைதராபாத்தில் பிச்சைக்காரர்கள் வெளியில் பிச்சை எடுக்காமல் செய்து அவர்களுக்கு உதவ அதே முனிசிபாலிடியார் பத்துலக்ஷ ரூபாய்க்கு லாட்டரி நடத்த தீர்மானித்திருக்கின்றனர்.

ஃ ஃ ஃ

1923 ௵ முதல் 1938 ௵ வரையில் தென்னிந்தியா ரயில்வேயில் 8,340 லட்சம் பேர்கள் பிரயாணம் செய்திருப்பதாயும் இரண்டு விபத்துக்கள் தான் ஏற்பட்டு 10 பேர் தான் இறந்திருக்கின்றனரென்றும் அதாவது 83,403 பேருக்கு ஒருவர் வீதம் தான் இறந்திருக்கிறாரென்றும் சந்தோஷப்பட்டு விட்டு, அயலூர் விபத்து சோகிக்கத் தகுந்ததென்று ரயில்வே அதிகாரிகள் விளம்பரம் செய்கின்றனர்.

ஃ ஃ ஃ

சென்னை சர்க்காருக்கு வருஷ வருமானம் 16 கோடி ரூபாயாம். தற்போது வாங்கிய கடன் சொற்பம்தான். அதாவது 110 லக்ஷம் ரூபாய்.

ஹிமயமலையின் எவரெஸ்டு சிகரத்தைக் கண்டுபிடிக்க மீண்டும் தற்போது ஓர் கூட்டத்தார் ஹிமயமலையில் 27,300 அடிவரையில்போய் அதற்குமேல் போகமுடியவில்லை என்றும் 29,00 அடி செல்லவேண்டியிருக்கிறதென்றும் அறிவிக்கின்றனர்.

ஃ ஃ ஃ

தீபாவளிப்பண்டிகையில் சீனவெடியை உபயோகிக்கலாகாதென்று தடுக்க பம்பாய் சர்க்கார் யோசிக்கின்றனர்.

ஃ ஃ ஃ

சென்னையில் ஓர் சினிமாப் படம் இலவசமாய் ஓர் நாள் காட்டப்படுவதாய் அறிவிக்கப்பட்டவுடன் நூற்றுக்கணக்கான ஸ்திரீ புருஷர்கள் கூடிப்போய் நெருக்கடியால் ஓர் பெண் கீழே மிதிபட்டு இறந்தாள் என்றால் சினிமா மோகம் எவ்வளவு பலமாக இருக்கிறதென்று ஒருவர் வியப்படைகிறார்.

ஃ ஃ ஃ ஃ

வேதாந்ததேசிகர்மேல் ஒருவர் செய்த ராமானுஜ தயாபாத்ரம் என்ற சுலோகத்திற்கு பத்தாவது ஷஷ்டிபூர்த்தி உத்ஸவத்தைப் பலவூர்களில் ஸ்ரீவைஷ்ணவர்கள் வெகு பிரபலமாய் நடத்தியிருக்கின்றனர். அதை முன்னிட்டு பலருக்கு பலவகை பட்டங்கள் பரகால மடத்தாராலும் அகோபில்மடத்தாராலும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

ஃ ஃ ஃ ஃ

ஈரோட்டில் ஸ்ரீராகவேந்திரரின் ஆராதனை மகோற்சவம் வெகு சிறப்பாய் 1000 பேருக்கு பிராம்மண போஜனத்துடனும் 3 நாள் பல்லக்கு உற்சவத்துடனும் நான்காவது நாள் வீதி ஊர்வலத்துடனும் நடத்தப்பட்டதென்று விஸ்தாரமாய் ஸ்ரீமான் M. S. ஸ்ரீனிவாஸராவ் அறிவிக்கிறார்.

ஃ ஃ ஃ ஃ

கும்பகோணம் பாணபுரீஸ்வரஸ்வாமி கோயில் மிகவும் பழுதடைந்து விட்டபடியால் ஆஸ்திக கனவான்கள் முன்வந்து ஜீர்ணோத்தாரம் செய்ய வேண்டுமென்று ஸ்ரீமான் C. S. தீக்ஷிதர் கேட்டுக்கொள்ளுகிறார்.

பிழை திருத்தம்.

சென்ற இதழ் 53வது பக்கத்தில் புனர்விவாகம் செய்யலாகாதென்பதை செய்யலாமென என்றும், 55வது பக்கத்தில் ஆஸ்திரேலியா என்பதை ஆஸ்டிரியா என்றும் 59வது பக்கத்தில் சலப்ரதிமையை அசலப்ரதிமை என்றும் அசலப்ரதிமையை சலப்ரதிமை என்றும் வாசகர்கள் திருத்தி அமைத்துக்கொள்வார்களாக.

ஸ்ரீராகவேந்த்ர அஷ்டாக்ஷரமந்த்ர ஜபக்ரமம்.

1 நமஸ்காரம்.

(1) ஸ்ரீகுருப்யோநம: (2) ஸ்ரீபரமகுருப்யோநம: (3) ஸ்ரீமத் ஆனந்த தீர்த்த பகவத்பாதாசார்யேப்யோ நம: (4) ஸ்ரீவேதவ்யாஸாய நம: (5) ஸ்ரீபாரத்யை நம: (6) ஸ்ரீஸரஸ்வத்யை நம: (7) ஸ்ரீவாயவே நம: (8) ஸ்ரீப்ரம்மணே நம: (9) ஸ்ரீலக்ஷ்ம்யை நம: (10) ஸ்ரீநாராயணாய நம: (11) ஸ்ரீராகவேந்திர குர்வந்தர்கத சீதாபதி ஸ்ரீராமசந்த்ராய நம: (12) ஸ்ரீவாஸுதேவாய நம:

2 ப்ராணாயாமம்.

ஓம் ஸ்ரீ ராகவேந்த்ராய நம: ஓம் என்று 12 தடவை ப்ராணாயாமம் செய்யவேண்டும்.

3 அங்கந்யாஸம்.

ஸ்ரீம் ஹ்ருதயாய நம:; ராகவேந்த்ராய சிரஸே ஸ்வாஹா; நம: சிகாயைவௌஷட்; ஸ்ரீம் கவசாயஹும்; ராகவேந்திராய நேத்ராப்யாம் வௌஷட், நம: அஸ்த்ராயபட் இதிதிக்பந்த:

4 ரிஷ்யாதி ந்யாஸம்.

அஸ்ய ஸ்ரீ ராகவேந்த்ர அஷ்டாக்ஷரமந்த்ரஸ்ய ஸ்ரீஅப்பண்ணாசார்ய ரிஷி: சிரஸி காயத்ரிச்சந்த: முகே ஸ்ரீராகவேந்த்ர குர்வந்தர்கத சீதாபதி ஸ்ரீராமசந்த்ரோதேவதா, ஹ்ருதயே ஸர்வாபீஷ்ட ஸித்யர்த்தே ஜபே விநியோக:॥

5 த்யானம்.

தப்த காஞ்சன ஸங்காசம் அக்ஷமாலாகமண்டலும்।
தோர்ப்யாம் ததானம் காஷாயவஸனம் ராமமானஸம்।
யோகீந்த்ர தீர்த்த வந்த்யாங்க்ரிம் துளஸீதாம பூஷிதம்।
ஜ்ஞானபக்திதப: பூர்ணம் த்யாயேத் ஸர்வார்த்தஸித்தயே॥

6 ஜபம்.

ஓம் ஸ்ரீராகவேந்த்ராய நம:
ஓம் ஸ்ரீராகவேந்த்ராய நம:

என்று 108 தடவைக் குறையாமல் ஜபம் செய்யவேண்டும்.

7 பிறகு ஓம் ஸ்ரீராகவேந்த்ராய நம: ஓம் என்று 12 தடவை ப்ராணாயாமம் செய்து அங்கந்யாஸத்தையும் ரிஷ்யாதிந்யாஸத்தையும் செய்து அதில் ஸீதாபதி ஸ்ரீராமசந்த்ரோ தேவதா ஹ்ருதயே என்று சொன்னபின், ஜபோபஸம்ஹாரே விநியோக: என்று த்யானத்தை சொல்லி அனேன ஸ்ரீராகவேந்த்ர அஷ்டாக்ஷரமந்த்ரஜபேன பகவான் ஸ்ரீராகவேந்த்ரகுர்வந்தர்கத ஸீதாபதி ஸ்ரீராமசந்த்ர: ப்ரீயதாம். ஸ்ரீக்ருஷ்ணார்ப்பணமஸ்து.

8 பிறகு பத்து ஜபத்திற்கு ஒன்றாக, ஓம் ஸ்ரீராகவேந்த்ராய நம: ஸ்ரீராகவேந்த்ரம் தர்பயாமி என்று அர்க்யம் விடவேண்டும்.

9 பிறகு யஸ்யஸ்மிருத்யாச முதலானவைகளை சொல்லி முடிவில் அனேக ஸ்ரீராகவேந்த்ர அஷ்டாக்ஷரமந்த்ரஜபேன பகவான் ஸ்ரீராகவேந்த்ரகுர்வந்தர்கத பாரதீரமண முக்யப்ராணாந்தர்கத ஸ்ரீராமசந்த்ர: ப்ரீயதாம். ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து.

ஸ்திரீகளும் புருஷர்களும் உபனயனமான பையன்களும்கூட இந்தமந்த்ரத்தை ஜபிக்கலாம். ஸ்திரீகள் மட்டில் ஓம் என்பதற்கு பதிலாக ஸ்ரீம் என்று நெடுகச்சொல்லி வரவேண்டும். அவர்களுக்கு மந்த்ரம் ஸ்ரீம் ஸ்ரீராகவேந்த்ராய நம: ஸ்ரீம் என்று. ஸமஸ்த அபீஷ்டங்களின் ஸித்யர்த்தமாகவும் ஜபிக்கலாம். அல்லது ஸ்ரீ ராகவேந்த்ரகுருப்ரஸாத ஸித்யர்த்தம் என்று அவருடைய அருள் பெறவேண்டியும் ஜபிக்கலாம்.

வாயுஸ்துதி புனஸ்சரணம் போலவே இந்த ராகவேந்த்ர ஸ்தோத்திரத்தையும் புனஸ்சரணம் செய்யப்படுவது உண்டு. வாயு ஸ்துதியைப்போலவே இதின் ஒவ்வொரு சுலோகத்திற்கும் ஒவ்வொருபலன் உண்டாவதாய் சொல்லப்படுகிறது. அதன் விவரம் பின்வருமாறு.

1—2 'பூர்ணபோத, ஜீவசபேத' இந்த சுலோகங்களால் வாக் சித்தி

3 'ஸ்ரீராகவேந்த்ரஸ் ஸகல' என்பதால் பாபபரிகாரம்

4 'ஸ்ரீராகவேந்த்ரோ ஹரிபாத' என்பதால் இஷ்டஸித்தி

5 'பவ்யஸ்வரூப:' என்பதால் க்ரஹபாதைகள் பிசாச பாதைகள் முதலியவைகள் நீங்கும்.

6 'நிரஸ்தகோஷ:' என்பதால் எதிரிபேசினால் வாய்ப்பூட்டு போடலாம்.

7 'ஸந்தான ஸம்பத்' என்பதால் ஜ்வரம் முதலிய ரோகாதிகளும் புத்ரப்ரதிபந்தக தோஷாதிகளும் நீங்கும்.

8 'யத்பாதோதக' என்பதால் எல்லாவகை மனக்லேசம் நீங்குவதுடன் புத்ரஸந்தானம் உண்டாகும்.

9 'யத்பாதகஞ்ச' என்பதால் பாபநிவிருத்தி.

10 'ஸர்வதந்த்ர' என்பதால் சாஸ்திரக்ஞானம் உண்டாகும்.

11 'ஸ்ரீராகவேந்த்ரோ' என்பதால் க்ஞான பக்தியாதிகளின் விருத்தி.

12 'ப்ரதிவாதிஜய' என்பதால் ஸர்வவித்யா ஸாமர்த்தியம் வளரும்.

13 'அபரோக்ஷீக்ருத' என்பதால் இந்திரியநிக்ரஹம் உண்டாகும்.

14 'தயாதாக்ஷிண்ய' என்பதால் தபஸ் விருத்தியாகும்.

15 'அக்ஞான விஸ்மிருதி' என்பதால் குஷ்டம் காக்காவலிப்பு முதலிய பூர்வஜன்ம பாப பலன்கள் நிவிருத்தி.

16 'ஓம் ஸ்ரீராகவேந்த்ராய' என்பதால் ஸமஸ்த அபீஷ்டங்களின் ஸித்தி.

17 'ஹந்து:' என்பதால் சதுர்வித புருஷார்த்தங்களும் ஸித்திக்கும்.

18 'இதிகாலத்ரயே' என்பதால் மனோநிலை உண்டாகும்.

19 'அகம்யமஹிமா' என்பதால் ஆத்ம ஞானிகளின் ஸம்ரக்ஷணை உண்டாகும்.

20 'ஸர்வயாத்ரா' }
21 'ஸர்வாபீஷ்டா' } என்பதால் தீர்த்த க்ஷேத்ரயாத்திரை பலன் ஸித்திக்கும்.

22 'ஸம்ஸாரே' என்பதால் ஸம்ஸாரதுக்க நிவிருத்தி.

23 முதல் 32 சுலோகங்கள் பலஸ்துதியாகின்றன.

ஸ்ரீ ராமானுஜர்

ஸ்ரீ வைஷ்ணவர்களின் மூல குருவாயும் விசிஷ்டாத்வைத மதத்தின்படி பாஷ்யகாரராயுமுள்ள ஸ்ரீ ராமானுஜரின் சரித்திரம் சமீபத்தில் இந்நகரில் சினிமா மூலமாய் நடித்துக் காட்டப்பட்டது. நகரெங்கும் சுவர்களில் ஸ்ரீ ராமானுஜர்; தீண்டாமை ஒழித்த பெரியார் என்றும், ஜாதி பேதத்தை தொலைத்த ஆசாரியர் என்றும், கொட்டை எழுத்துக்களில் அச்சான பலவகை விளம்பரங்கள் ஒட்டப்பட்டிருந்தன. இதற்கனுசரணையாகவே அவருடைய சரித்திரமும் காட்டப்பட்டது. ஸ்ரீரங்கத்தில் ஆளவந்தார் ஹீனஜாதியினரை உயர்த்துவது முதலான மூன்று அபிலாஷைகளைக் கொண்டிருந்து அதை பூர்த்தி செய்விக்க ஸ்ரீராமானுஜரிடம் சொல்லி பிரேரேபிக்கும் முன், ஆளவந்தாருடைய காலமானதும், இதரர்கள் மூலமாய் ஸ்ரீராமானுஜர் அறிந்து இவைகளை பூர்த்தி செய்வதாய் ப்ரதிக்ஞை செய்யவும், மடங்கி இருந்த ஆளவந்தார் சவத்தின் மூன்று விரல்கள் விரிந்ததும், பிராம்மணரல்லாத சாத்தார ஜாதியிற்பிறந்த திருக்கச்சி நம்பியை ஸ்ரீராமானுஜர் குருவாகவரித்ததும், அதற்கு அந்த நம்பி சம்மதிக்காததால் அவருடைய உச்சிஷ்டத்தை சாப்பிட்டாவது அவரை குருவாய்க் கொள்வதென்று ஸ்ரீராமானுஜர் நிச்சயித்து தன் வீட்டிற்கு அவரை போஜனத்திற்கழைத்ததும், ஸ்ரீராமானுஜர் இல்லாதசமயம் நம்பி சாப்பிடவந்து அவருடைய பாரியாள் இந்த சூத்ர சேஷம் வீட்டில் கலக்காதிருக்க அவஸரமாய் வீட்டின் ஒதுப்புறத்தில் திருக்கச்சி நம்பிக்கு போஜனம் செய்வித்து, அவருடைய எச்சில் இலையை கோலால் தள்ளி சுத்தம் செய்து, அந்த தோஷம் நீங்க தான் ஸ்நானம் செய்து வந்ததும், இதை அறிந்த ஸ்ரீராமானுஜர் துக்கப்பட்டு தன் ஸம்ஸாரத்தை நிந்திக்க, ஜாதி வித்யாஸம் பாராட்டாமல் அவர் இருப்பதற்குதான் அனுசரணையாக இருக்கமுடியாதென்று அவருக்கும் அவருடைய பாரியாளுக்கும் சச்சரவு ஏற்பட்டதும், அது விருத்தியாகி ஸ்ரீராமானுஜர் தன் பாரியாளை ஒதுக்கி விட்டு ஸந்யாஸம் வாங்கியதும், ஒரையூர் மல்லன் முதலிய தாழ்ந்த ஜாதியினரின் ஸம்பர்க்கமடைந்திருந்

தும்கூட ஸ்ரீராமானுஜருக்கு மரியாதை செய்யவேண்டியிருக்கிறதே என்று துக்கப்பட்டு ஸ்ரீரங்கம் கோவிலதிகாரிகள் அவருடைய ப்ரஸாதத்தில் விஷமிட யோஜனை செய்ததும், அதை அறிந்த ஸ்ரீராமானுஜர் உபவாஸ விரதத்தை மேற்கொண்டதும், பிறகு திருக்கோட்டியூர் நம்பியின் வார்த்தையின் பேரில் ஸ்மார்த்தரான ப்ரணதார்த்தி ஹரரின் வீட்டில் ஸ்ரீராமானுஜர் சாப்பிட்டு வந்ததும், டெல்ஹி நவாபிடமிருந்து ஸ்ரீராமப்ரியரின் விக்ரஹத்தைப் பெற்று திரும்பி வரும் சமயம் திருடர்களிடமிருந்து சில பஞ்சமர்கள் காப்பாற்றியதின் நிமித்தம் அவர்களை சிஷ்யர்களாய் ஏற்றுக்கொண்டு அவர்கள் தீண்டாதவர்களல்லவென்று உறுதி கூறி, தீக்குலத்தார்களான அவர்களுக்கு திருக்குலத்தார்கள் என்று பெயரிட்டு அந்த விக்ரஹமுள்ள திருநாராயணபுரம் கோயிலில் பஞ்சமர்கள் வருஷத்திற்கொரு முறை போய் வரலாம் என்று அநுமதியளித்து, அவ்வாறு சாசுவதமாய் நடைபெற ஏற்பாடு செய்ததும், விஸ்தாரமாய் நடித்துக்காட்டப்பட்டிருக்கிறது. எல்லாவற்றிற்கும் சிகரமாக மற்றொன்றும் அறிவிக்கப்பட்டது. ஸ்ரீராமானுஜரே மறுபிறப்பை அடைந்து உலகில் தீண்டாமையை ஒழிக்கப் போவதாயும், உலகிலுள்ள எல்லா கோயில்களிலும் எப்போதுமே எல்லா பஞ்சமர்களும் தாராளமாய் போய்வர ஏற்பாடு செய்யப்படுமென்றும் உறுதி கூறியதைக்காட்டி, அதன்படி ஸ்ரீராமானுஜர் தான் ஸ்ரீமான் காந்தியாக அவதரித்ததாயும், அவர்தான் சரியான ஸ்ரீவைஷ்ணவர் என்றும், அவர் தீண்டாமை ஒழிக்க உபதேசம் செய்யும் அவருடைய வலக்கை தான் ஐந்து படங்களுள்ள ஸ்ரீராமானுஜரின் மூலரூபமான ஆதிசேஷன் என்றும் காண்பிக்கப்பட்டது. இதைக் கண்டு இந்நகர் ஸ்ரீவைஷ்ணவர்கள் மிகவும் துக்கப்பட்டனர். வர்ணாசிரம முறையை உயிர் நிலையாகக் கொண்ட ராமானுஜ ஸம்பிரதாயத்திற்கு இதை விட வேறு அவமானம் என்னவென்றும், காஞ்சீபுரம் முதலான இடங்களில் ஓர் சுலோகத்தின் ஷஷ்டியப்த பூர்த்திக்காக நூற்றுக் கணக்காய் கூடிய ஸ்ரீவைஷ்ணவர்கள் ததீயாராதனத்திலேயும் சம்பாவனையிலுமே திருஷ்டி வைத்தனரேயல்லாது இதை ஆதி முதல் கண்டிக்காமல் வளர விட்டிருக்கின்றனரே என்றும் பலவாறு துக்கப்பட்டு ஒருவர் பத்திரிகையிலும் பிரசுரித்தார்.

சமீபத்தில் சென்னையிலிருந்து வெளியான 'சுதந்திரச் சங்கு' என்னும் காங்கிரஸ் பத்திரிகையின் ஆசிரியரான நமது நகர் சுப்பிரமணிய அய்யர் ராமானுஜராகவும், மற்றும் தேசத்தொண்டு செய்து சிறைவாசம் புகுந்த அநேக காங்கிரஸ்காரர்கள் அநேக நடிகர்களாகவும் இதில் நடித்திருக்கின்றனராதலால் கதையின் போக்கு எவ்வாறு இருந்திருக்கக்கூடும் என்று வாசகர்களே ஊகிக்கலாம். நல்ல சினிமா படத்திற்கு அவசியம் இருக்கவேண்டியதாயுள்ள டைரெக்ஷன் போடோ ஸௌண்ட் ரிகார்ட் முதலியவை பல இடங்களில் ஆபாஸமாய் இருந்ததின் நிமித்தம் அவைகள் புதிப்பிக்கப்படவும் ஏற்பாடு ஆகிவிட்டது. சீக்கிரமே முழுமுஸ்தீப்புடன் இம்மாகாணம் முழுவதும் பிரதான நகரங்களில் ஸ்ரீராமானுஜர் படம் காட்டப்பட்டு ஸ்ரீவிசிஷ்டாத்வைத மதாசாரியாளான ஸ்ரீராமானுஜர் ஜாதிவர்ணாசிரம தர்மங்களைப் பாழாக்கியவர் என்று பிரசித்தம் ஆவது நிச்சயம். ஸ்ரீசங்கராசாரியார் சரித்திரமும் நாடகரூபமாய் ஏற்கனவே வெளியாயிருப்பதால் அதன்படி சினிமாவிலும் காட்டப்பட ஏற்பாடு ஆகியிருப்பதாயும் அறிகிறோம். அடுத்தபடி மீதியுள்ள ஸ்ரீ மத்வாசாரியார் சரித்திரமும் சந்தியில் இழுக்கப்படக்கூடும். ஏற்கனவே பல நாடகங்களிலும் சினிமாக்களிலும் மாத்வர்களின் நடை உடை பாவனைகள் இதரர்கள் ஹேளனம் செய்யும்படியான ரீதியில் காட்டப்பட்டிருக்கின்றன. மாத்வர்களின் குருவும் ஹேளனம் செய்யப்படும்படியான ரீதியில் ஸ்ரீ ராமானுஜரைப்போல் காட்டப்பட ஆரம்பமாகிவிட்டால், உண்மையான மதாபிமானங்கொண்ட எந்த மாத்வனும் அதைப் பார்த்து சகியான். அவன் மனம் கொந்தளிக்காமல் இருக்கமாட்டாது. இதை முன்யோசனை செய்தே 1929ஷுத்திலேயே, ஸ்ரீமத்வ விஜயத்திற்கும் ஸ்ரீமத்வமதக் கொள்கைகளுக்கும் விருத்தமாய் இல்லாத ரீதியில் நாடக உலகிலும் தக்கஸ்தானம் பெறும்படியாய் ஸ்ரீமத்வாசாரியாரின் சரித்திரநாடகம் இம்மித்திரனின் ஆசிரியரால் எழுதப்பட்டு, இம்மித்திரனின் 2, 3, வால்யங்களில் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. ஸ்ரீராமானுஜாசாரியார், ஸ்ரீசங்கராசாரியார், தொண்டரடிப்பொடி ஆழ்வார், திருஞானசம்பந்தர் முதலிய மதாசாரியார்களின் சரித்திரங்களை அப்பொழுது நாடகரூபமாய் முதன் முதலில் எழுதிவெளியிட்ட எமது நண்பர் டிஸ்டிரிக்ட் முன்சீப்

ஸ்ரீமான் S. K. பார்த்தசாரதி அய்யங்கார் B.A., B.L., அவர்கள் "ஸ்ரீமத்வாசாரியாரின் சரித்திரம் ஒன்றே பாக்கி இருக்கிறது. நாடகரூபமாய் அதை நீங்கள் எழுதுகிறீர்களா அல்லது அதையும் நான் எழுதட்டுமா" என்று இம்மித்திரனின் ஆசிரியரைக்கேட்டதற்கு, ஸ்ரீராமானுஜருக்கும் ஸ்ரீசங்கரருக்கும் நேர்ந்த கதியைக் கண்ணுற்ற ஸ்ரீமத்வாசாரியார் கொள்ளைத்தின்றதும், 4000 வாழைப்பழங்களை உண்டதும், 30 குடம் பாலைக்குடித்ததும், பெரும் பாறையை பிறட்டியதும், கங்கையில் கைம்மாறு போட்டு நீந்தியதும், மல்லர்களுடன் குஸ்தி செய்ததும், இவை முதலியவை மட்டில் புகவிடப்பட்டு ஸ்ரீமத்வாசாரியாருக்கும் இத்தகைய துரவஸ்தை ஏற்படுமோவென்று பயந்து, ஸ்ரீமான் அய்யங்கார் அவர்களின் பிரேரணையை சிரமேற்கொண்டு தன் நாடக அனுபவத்தை உபயோகப்படுத்தி இம்மித்திரனின் ஆசிரியரால் ஸ்ரீ மத்வாசாரியார் நாடகம் எழுதப்பட்டது.

ஸ்ரீஉத்தராதிமடம் ஸ்வாமிகள் முதலான பல பெரியார்கள்கூட இந்த நாடகத்தை சம்பூர்ணமாய் படிக்கக்கேட்டு உள்ளம் உருகி வெகுவாய் சிலாகித்திருக்கிறார்களாயினும், போதுமானவளவு மாத்வர்களல்லாதவர்களில் இந்த நாடகம் பிரசித்தியடையவில்லை. சினிமாவுக்கு கதைகளைத் தேடித்திரியும் சினிமா ஸ்டுடியோக்களின் முதலாளிகளில் எவராவது யாரைக்கொண்டாவது மனதிற்கு தோன்றியபடி ஸ்ரீமத்வாசாரியாரின் சரித்திரத்தை எழுதச்செய்து படத்தைத் தயாரித்து வெளியில் கொண்டுவருவதற்கு முன், இந்த எமது ஸ்ரீமத்வாசாரியாரின் சரித்திர நாடகத்தை தனிப்புத்தகமாய் அச்சிட்டு எங்கும் அதிகமாய் வினியோகம் செய்யப்பட்டுபோனால், சினிமாவுக்கு அவசியமானவளவு சிற்சில மாறுதல்களுடன் இப்படம் வெளிவந்தாலும்கூட ஆத்யந்திகமாய் மாத்வர்களுக்கு சங்கடகரமான சரிதை எதுவும் வெளியாகாதென்றே எமது துணிபு. படம் பிடிப்பதற்கு அனுகூலமான சம்பாஷணை ஸ்வாரஸ்யங்களுடன் நாடகரூபமாகவே எழுதப்பட்டு ஸுலபமாய் கிடைப்பதைத்தான் எந்த முதலாளியும் கைக்கொள்வார். அவ்வாறுதான் தற்போது ஸ்ரீராமானுஜர் சரிதையும் கைப்பற்றப்பட்டிருக்கிறது. ஆதலால் நம் மாத்வர்கள் இப்போதே விழித்தெழுந்து உலகில் வெகு விரைவில் ஓடும் சினிமா மோகப்ரவாஹத்திற்கு நற்போக்கு காட்டி ஸ்ரீ ராமானுஜருக்கு நேர்ந்த கதி ஸ்ரீமத்வாசாரியாருக்கு ஏற்படாவண்ணம் தகுந்தகாபந்துசெய்து கொள்ள வற்புறுத்துகிறோம்.

புத்தக வரவு.

ஸ்ரீ ராகவேந்த்ர ஸ்தோத்திரம்.

தேவநாகர லிபியில் மூல சுலோகங்களும் கன்னட பாஷையில் ஷெடி லிபியில் அர்த்தமும் ஹைதராபாத் ஸெட்டில்மெண்ட் ஆபீஸ் ஸ்ரீமான் V. கோபாலகிருஷ்ணராவ் அவர்களால் எழுதப்பட்டு, உடுபி ஸ்ரீமன் மத்வஸித்தாந்த கிரந்தாலயம் ஸ்ரீமான் பாவஞ்சே குருராவ் அவர்களால் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இப்புத்தகம் கிரயத்துக்குக் கொடுக்கப்படுவதில்லை என்றும் தபால் கிரயத்துக்காக 0—1—3 முன்பணம் அனுப்பி இவருக்குத்தான் எழுதப்படவேண்டுமென்றும் ஒரு நபருக்கு ஒரு புஸ்தகம்தான் கொடுக்கப்படுமென்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இது இரண்டாவது பதிப்பாகும். இப்பதிப்புகளை வெளியாக்கி மாத்வர்களுக்கு இலவசமாய் விநியோகிக்கப்பட உதவியவர் சத்வைஷ்ணவமான மத்வ மதத்தில் தீவிர உணர்ச்சி கொண்ட தாராள நோக்கமுள்ளவரான எமது நண்பர் தேசபூஷணம் ஸ்ரீரங்கம் ஸ்ரீமான் ப்ரஸன்ன வெங்கடேச ராவ் அவர்களே என்றறிய மிகவும் மகிழ்கிறோம்.

விசேஷ தினங்கள்.

17—9—38 சோமவாரம் துலாஸ்நானம் ஆரம்பம், புண்யகாலம் மணி 11-21 முதல்
19-10—38 புதவாரம் ஏகாதசி உப.
21-10—38 சுக்ரவாரம் தீபாவளி இரவு பண்டிகை
22-10—38 சனிவாரம் விடியற்காலை மணி 4-52க்கு அப்யங்கம் தீபாவளி பகல் பண்டிகை, திலதர்ப்பணம்.
23-10—38 பாநுவாரம் விஷ்ணுப. உப.
31-10—38 சோமவாரம் சிரவணம் உப. விஷ்ணுப. உப.
3—11—38 குருவாரம் பாண்டுரங்கி சம்பிரதாயத்தார்களுக்கும் வியாஸராஜ மடத்தார்களுக்கும் மட்டில் இன்று ஏகாதசி உப.
4-11—38 சுக்ரவாரம் மேற்கண்டவர்களுக்கு மட்டில் இன்று த்வாதசி ஹரிவாஸரம் மணி 10-13க்குமேல் பாரணை. மற்ற எல்லா சம்பிரதாயத்தார்களுக்கும் மடத்தார்களுக்கும் ஏகாதசி உபவாஸம்
5-11—38 சனிவாரம் முந்திய நாள் உபவாஸம் செய்தவர்களுக்கு த்வாதசி.
7-11—38 சோமவாரம் பௌர்ணமி, விஷ்ணுப. உப. கார்த்திக ஸ்நானம் பூர்த்தி, சந்திரகிரஹணம், இரவு மணி 2.8க்கு ஸ்பரிசம், 5.41க்கு மோக்ஷம். மோக்ஷகாலத்தில் தர்ப்பணாதிகள் அவசியம் இன்று பகல் மணி 2-28க்குமேல் போஜனம் கூடாது.

மாத்வமித்திரன் பிரசுரங்கள்.

1. ஸ்ரீ ராகவேந்திர ஸ்தோத்திரம் (தமிழிலும், தேவநாகரத்திலும் மூலமும் தமிழில் உரையும்)	0	2	0
2. ஷெடி ஸ்தோத்திரம் உள்பட ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகள் அதி அற்புத ஜீவிய சரித்திரம் (தமிழ்)	0	8	0
3. ஸ்ரீவாயுஸ்துதி (தேவநாகரத்தில் மூலமும், தமிழில் உரையும் புனஸ்சரண முறையுடன்	0	5	0
4. மாத்வஸ்திரீகளின் ஸம்பிரதாய ஜபமந்த்ர ஸ்தோத்திரங்கள் (தமிழிலும், கன்னடத்திலுமுள்ள 38 அபூர்வமானவைகள் கொண்டது, இதுவரை யாவராலும் பிரசுரிக்கப்படாதது.	0	3	0
5. த்வைதமத விளக்கம் (ஸ்ரீமத்வாசாரியார் ஜீவிய சரித்திரம் ஆப்டோன் படத்துடனும் தமிழ்)	–	2	9
6. கும்பகோண மாகாத்மியம் (தமிழ்)	0	2	0
7. ஸ்ரீமத் பாகவதம் விஷ்ணு புராணத்தின்படி துருவ சரித்திரம் (நாடகம்-தமிழ்)	0	4	0
8. மாத்ருகாமாலாஸ்தவம், நவரத்னமாலா முதலிய அற்புத ஆறு நூல்கள் (ஸம்ஸ்கிருதம் தேவநாகரத்தில்)	0	2	0
9. ஸ்ரீ மகாபாரத தாத்பர்ய நிர்ணயத்திலுள்ள ஸுந்தரகாண்டம் (கன்னட அர்த்தத்துடன் தேவநாகரத்தில்)	0	4	0
10. ஜீவப்ரம்மபேதம் ஜகத்ஸத்யம் முதலான நான்கு மத்வமத ப்ரமேயங்களை நிரூபிக்கும் பகவத் கீதாதத்வம் (தமிழிலும் தேவநாகரத்திலும் மூலமும், தமிழில் அர்த்தமும்) சுமார் 250 பக்கங்கள்	0	8	6

11. மாத்வமித்திரன் ஒன்று முதல் ஏழு வால்யங்கள் சுமார் 2200-பக்கங்களைக்கொண்டது மணிமஞ்ஜரி மத்வ விஜயம் ஸ்ரீ மகாபாரத தாத்பர்ய நிர்ணயம் முதலான மாத்வ கிரந்தங்கள், உபநிஷத்துக்கள் புருஷஸூக்தம் ஸந்தியாவந்தனம் முதலான மந்திரங்கள் த்வாதச ஸ்தோத்திரம் முதலான ஸ்தோத்திரங்கள் ஸ்ரீராகவேந்திரர் முதலான பல மாத்வ மகான்கள், தாஸர்கள் இவர்களின் சரித்திரங்கள் புராண விரத கதைகள் ஆசார அநுஷ்டானங்கள் தர்ம சாஸ்திர குறிப்புகள் முதலான பதினாயிரக்கணக்கான விஷயங்களைக் கொண்டது. V. P-ல் கிடையாது. பூரா பணமும் அட்வான்ஸில் தேவை. ரயில் பார்சல் செலவு தனி. முன்விலை ரூ. 21. தற்போது ரூ. 5—0—0 தான்.

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸ விலாஸம், கும்பகோணம்.

டி. எஸ். ஆர்.
அண்டு
கம்பெனி,
கும்பகோணம்.

ஸ்தாபிதம் 1909

தந்தி விலாசம் "கோகுல்"

எங்கள் வாஸனு திரவியசாலையில் தயாரித்து விற்பனைக்குத் தயாராக இருக்கும் ஸாமான்களின் விபரம்.

வாஸனைப்பாக்கு	பலகாய்கரி ஊர்காய்கள்
வாஸனைச்சுண்ணாம்பு	ரோஜாப்பூ குல்கந்து
வாஸனைப் புகையிலை	ஷர்பத் தினுசுகள்
ஸ்னானப்பவுடர்	கொப்பரைச்சீவல்
கேஸர் பவுடர்	கோகுல் கூந்தல் [தைலம்
அம்பர், அரகஜா	பற்பொடி
தசாங்கம்	ஊதுவத்திகள்

சந்தனாதித் தைலம்,

அரைக்கீரைவிதைத் தைலம்,

மற்றும் அநேக வாஸனை சாமான்களும் கிடைக்கும்.

கேட்லாக்குக்கு எழுதுங்கள்.

Printed at Sri Venkateswar Power Printing Works and Published by Bhagavatha Ranganathachariar, Kumbakonam

ஓம்



மாத்வ மித்திரன்.
THE MADHWA MITRAN.

EDITOR:

Adyam Bhagavatha Ranganathachariar,
KUMBAKONAM.

பௌர்ணமிதோறும் வெளிவரும்.

Vol. 11 புஸ்தகம் 11	பஹுதான்ய ஸம்வத்ஸரம் கார்த்திக மாஸம். (பௌர்ணமி) (7-11-1938) சோமவாரம்.	No. 4 நெ. 4

நெ.	பொருளடக்கம்.	பக்கம்.
1	ஸதுபதேசம்.	97
2.	விஷ்ணு ஸஹஸ்ரநாமம்.	98
3.	அஹம் ப்ரம்மாஸ்மி.	102
4.	தீண்டாமை (ஒரு நாயின் ஆஸ்திகம்)	105
5.	இக்காலத்தில் சடக ச்ராத்தம்தான் மேலானது	108
6.	உலக வர்த்தமானம்.	111
7.	ஸங்கிரஹ ராமாயணம்	115
8.	ஸ்மார்த்த பிராம்மணர்களின் மாம்ஸ பக்ஷணம்.	121
9.	ஸ்ரீ மத்வவிஜயம் (ஸ்ரீநாராயண பண்டிதாசாரியார்)	127
10	விசேஷ தினங்கள்.	128

ஆசிரியர்:—ஆத்யம் பாகவத ரங்கநாதாசாரியார், கும்பகோணம்.

மாத்வமித்திரன்.

மாத்வர்களின் சாஸ்திரீயமான தமிழ் பத்திரிகை இது ஒன்றே ஸ்ரீமத்வமதத்தின் அரிய இரகசியங்கள் ஸம்பிரதாயங்கள் மாகாத்மியங்கள் புராணசரிதைகள் மாத்வவகுப்பு புண்ய புருஷர்களின் சரித்திரங்கள் வேதார்த்த சர்ச்சைகள் தர்மசாஸ்திர விசாரங்கள் தினசரி விரதாதி குறிப்பு:— மகாபாரத தாத்பர்ய நிர்ணயம் முதலான அநேக கிரந்தங்களின் மொழிபெயர்ப்புகள் முதலிய எண்ணிறைந்த விஷயங்கள் நிறைந்திருக்கின்றன ஸ்ரீமத்வமதத்தை சுலபமாய் அறிந்துகொள்ள இப்பத்திரிகைக்கே உடனே சந்தாதாரராய்ச் சேருங்கள் இது பிரதி பௌர்ணமியிலும் கும்பகோணத்திலிருந்து வெளியாகிறது இதற்கு வருடசந்தா முன்பணமாய் ரூபாய் மூன்று. பிரதி சிராவணமாதமும் இப்பத்திரிகைக்கு வருடஆரம்பமாகும் எந்த மாதத்தில் சந்தாதாரராய்ச் சேர்ந்தாலும் அந்த வருஷத்திய பிந்திய சஞ்சிகைகள் அனுப்பப்படும் பழைய வால்யங்கள் விலைக்குக் கிடைக்கும் பத்திரிகை சரியானபடி கிடைக்காவிட்டால் பௌர்ணமி கழிந்தஒருவாரத்துக்குள் நமக்கு அறிவிக்கவேண்டியதுடன் அந்தந்த தபாலாபீசுக்கும் அறிவித்துவிடவேண்டும் பதிலறிய விரும்புகிறவர்கள் ஸ்டாம்பை அனுப்பவேண்டும். ஒவ்வொரு கடிதத்திலும் தெளிவாய் பூரா மேல் விலாசமும் எழுதி அனுப்ப வேண்டும்.

விற்பனை விளம்பரம்.

கும்பகோணம் ஸ்ரீமான் T. R. கிருஷ்ணாசாரியார் பதிப்பு.

1. ஸ்ரீ வால்மீகி ராமாயணம் (கோவிந்தராஜீய வியாக்யானத்துடன்) பூரா செட்டு பிரதி 1-க்கு 24—8—0
2. ஸ்ரீ மகாபாரதம் பூரா செட்டு 1-பிரதி 70—0—0

எமது ஆபீஸில் கிடைக்கும்.

மானேஜர், மாத்வமித்திரன்,

ஸ்ரீ வியாஸ விலாஸம், கும்பகோணம்.

ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்ஹாய நம:

மாத்வமித்திரன்.

VOL. 11 | பஹுதான்ய ஸம்வத்ஸரம் கார்த்திக மாஸம். | NO. 4

ஸதுபதேசம்.

नानायोनिषु गर्भवासविषये दुःखं महत् प्राप्यते
स्वर्गेवा नरके पुनः पुनरहो जीवत्वया भ्रम्यते ।
सोऽहं ज्ञानमिदं भ्रमस्तव भजत्वं पादपद्मं हरेः
तस्य त्वं किल सेवकः स भगवान् त्रैलोक्य नाथो यतः ॥

நாநாயோனிஷு கர்பவாஸவிஷயே துக்கம் மஹத் ப்ராப்யதே!
ஸ்வர்க்கே வா நரகே புந: புனரஹோ ஜீவதவயா ப்ரம்யதே!
ஸோஹம் க்ஞானமிதம் ப்ரமஸ்தவ பஜத்வம் பாதபத்மம் ஹரே:
தஸ்யத்வம் கிலஸேவக: ஸ பகவான் த்ரைலோக்ய நாதோயத:॥

அடேஜீவா! உன் அநாதி கர்மத்திற்குத் தகுந்தபடி பலவகை ஜன்மங்களில் பத்து மாதம் கர்ப்பத்தில் இருந்து மகத்தான துக்கத்தை அனுபவிக்கிறாய். ஸ்வர்க்கத்திலே ஆகட்டும் அல்லது நரகத்திலே ஆகட்டும் திருப்பி திருப்பி நீ சுற்றிக்கொண்டிருக்கிறாய். இதிலிருந்து இன்னும் நீ தப்பவில்லை. இப்படியிருக்க நான் தான் அந்த ஜகதீசுவரன் ஸோஹம் என்று என் உருப்போடுகிறாய். இது ஓர் அறிவா? இது கேவலம் மோகமே. ஸோஹம் என்பது அறிவு அல்ல. அத்துடன் தா என்ற எழுத்தை சேர்த்துச் தாஸோஹம் என்று சொல் நான் ஹரியின் தாஸன் என்பது தான் அறிவு. ஸ்ரீஹரியின் பாத கமலத்தை பஜனம் செய். உண்மையில் நீ அவனுடைய தாஸன். அவர் உன்னுடைய ஸ்வாமி உனக்கு மட்டிலுமன்று. நீ இப்போது உழன்று வரும் ஸ்வர்க்கம் நரகம் பூமி என்ற மூன்று உலகத்துக்கும் அவர்தான் நாதன்.

பிழைத் திருத்தம்.

சென்ற இதழில் 65வது பக்கத்தில் த்வம் தத் பரிசிந்தய என்பதை தத்வம் தத் பரிசிந்தய என்று திருத்தி அமைத்துக்கொள்ளவும். [ப-ர்

ஸ்ரீ மத்வ ஸித்தாந்தத்தின்படிக்குள்ள அர்த்தத்துடன்

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாமம்.

(முன் 71ம் பக்கம் தொடர்ச்சி)

539 மகர்ஷி: (ஓம் மகர்ஷயே நம:) மகத்தாயும் ரிஷியாயும் இருப்பவர்.

540 கபிலாசார்ய: (ஓம் கபிலாசார்யாய நம:) ஸம்ஸாரத்தின் நடுக்கத்திற்கும் நாசத்திற்கும் காரணமானவரும் ஆசாரியாருமாயிருப்பவர். ஆனந்தத்தை அனுபவிப்பவரும் ஸமஸ்த உலகத்தை கைப்பற்றுபவருமானதால் கபிலரும் ஆசாரியாருமானவர். பிரம்மாவையும் பிறகியானருத்திரனையும் லாலனம் செய்பவரும் ஆசாரியாருமானவர்.

541 க்ருதக்ஞ: (ஓம் க்ருதக்ஞாய நம:) ஒருவன் செய்ததை அறிபவர்.

542 மேதினீபதி: (ஓம் மேதினீபதயே நம:) பூமியின் பதி.

543 த்ரிபதா: (ஓம் த்ரிபதாய நம:) அனந்தாஸனம் சுவேதத்வீபம் வைகுண்டம் ஆகிய மூன்று ஸ்தானங்களைக்கொண்டவர் காயத்ரியின் மூன்று பாதங்களை தன்னை அறிவிப்பவைகளாய்க் கொண்டவர். மூவகை பாபங்களினின்றும் ஸம்ரக்ஷிக்ககூடிய க்ஞானத்தைத் தருபவர்.

544 த்ரிதசாத்யக்ஷ: (ஓம் த்ரிதசாத்யக்ஷாய நம:) பிறப்பு இருப்பு இறப்பு என்ற மூன்று அவஸ்தைகளை அளிப்பவர். தேவர்களின் அதிபதியானவர்.

545 மகாச்ருங்க: (ஓம் மகாச்ருங்காய நம:) மத்ஸ்யாவதாரத்தில் மகத்தான கொம்பை முக்யமாகக்கொண்டவர். மகத்தான க்ஞான முள்ளவர்.

546 க்ருதாந்தக்ருத் (ஓம் க்ருதாந்தக்ருதே நம:) ஒருவன் செய்த துஷ்கர்மத்திற்கு நாசத்தைச் செய்பவர். யமனை ஜயிப்பவர். தம்மால் செய்த ஜகத்திற்கு தாமே ஸம்ஹாரம் செய்பவர். பௌருஷேய க்ரந்தங்களுக்கு நிர்ணயம் செய்பவர். ஒருவன் செய்த கர்மாவால் அவனுக்கு பந்தத்தை செய்பவர். ப்ரம்ம சூத்ராதிகளை இயற்றுவதால் சித்தாந்தம் செய்பவர்.

547 மகாவராஹ. (ஓம் மகாவராஹாய நம:) தைத்ய ச்ரேஷ்டரைக் கொல்பவராதலாலும் ருக்மணி ஸ்வயம்வரகாலத்தில் கல்யாண புருஷனாய் வந்த சிசுபாலாதிகளைக் கொல்பவராதலாலும் உத்தமர்களான ப்ரம்மாதிகளால் நிராகரிக்கத் தகாதவராயிருப்பதாலும் வராஹர் எனப்படுகிறார். மகத்தாயும் வராஹராயும் இருப்பதால் மகாவராஹர் மிகமிக நீசர்களான கலிமுதலானவர்களை அந்தம் தமஸ்ஸில் போட்டு ஹதம் செய்வதாலும் மகாவராஹராகிறார்.

548 கோவிந்த: (ஓம் கோவிந்தாய நம:) பூமியை அடக்குபவராய் அதை அடைபவர். வேதத்தால் சொல்லப்படுகிறவராய் அதை அடைபவர் உபேந்திரனென்ற ரூபத்துடன் ஸ்வர்க்கத்திற்கு அதிபதியாய் இருப்பவர். இந்திரியங்களால் அறியப்படாதவர். கோக்களுக்கு அதிபதியானவர். பசுக்களைப்போல் வசமாயிருப்பவர்களான பிரஜைகளை சதுர்முகனிடம் கொண்டுபோய் விடுபவர். ஸ்தோத்திரத்தைப் பெறுபவர். சத்ருக்களை பசுப்ராயமாய் நிக்ரஹம் செய்பவர். த்ரவமாய் ஓடும் ஸோமரஸத்தைப் பானம் செய்பவர். பக்தர்கள் ஸமர்ப்பணம் செய்யும் அன்னத்தை அடைந்து சந்தோஷப்படுபவரும் சத்ரு நகரங்களை விசேஷமாய் சேதிப்பவருமானவர். வேதங்களை மத்ஸ்யாவதாரத்தில் ஹயக்ரீவாஸுரனை ஸம்ஹரித்து சதுர்முகனுக்கு உபதேசித்தவர். காம்யகர்மம் செய்தவர்களுக்கு நச்வர பலமான ஸ்வர்க்கத்தைக் கொடுப்பவர். சந்திரனை அவனுடைய அந்தர்யாமிரூபமான ஹயக்ரீவ ரூபத்தையும் ஹம்ஸ ரூபத்தையும் தந்வந்தரி ரூபத்தையும் ததபின்னமாக அடைபவர். கௌவான வாயுபகவானாகிய ஹனுமாரை சீதையைத் தேடுவதற்காக ஸ்ரீ ராமாவதார காலத்தில் அடைபவர். பீமசேனரை முன்னிட்டு ஸ்ரீகிருஷ்ணவதாரத்தில் கௌரவசேனையை அழிப்பவர். ஸ்ரீ மத்வாசாரியாருக்கு விருத்தமான சித்தாந்தத்தை ஸ்ரீ வேதவியாஸ ரூபத்தால் கண்டிப்பவர். ஸமுத்ர ஜலத்தை அடைபவர். சூரியனை அந்தர்யாமி ரூபியாய் உலக ஸம்ரக்ஷணைக்காக காயத்ரீ நாமகராய் அடைபவர்.

549 ஸுஷேண: (ஓம் ஸுஷேணாய நம:) அழகான ஸேனையுடையவர். மிகவும் அதிகமாய் தானம் செய்பவர்.

550 கனகாங்கதீ (ஓம் கனகாங்கதினே நம:) ஸுவர்ண மயமான தோள்வளைகளை உடையவர்.

551 குஹ்ய: (ஓம் குஹ்யாய நம) ரஹஸ்யமாய் வைக்கப் படுபவர். குஹனால் அர்ச்சிக்கப்படுபவர்.

552 கபீர: (ஓம் கபீராய நம:) கம்பீரமாய் இருப்பவர். கமனமும் காந்தியும் பொருந்தியவரும் லக்ஷ்மியுடன் ரமிப்பவரு மானவர். அக்ஞானிகளான ராக்ஷஸர்களுக்கு பயத்தை அளிப் பவர்.

அகபீர: (ஓம் அகபீராய நம:) அகமாகிற கோவர்த் தன பர்வதத்தைத் தூக்கியதால் நந்தகோகுலத்திற்கு நேர்ந்த விருஷ்டிபயத்தை பரிகரித்தவர்.

553 கஹன: (ஓம் கஹனாய நம:) அறியமுடியாதவர்.

அகஹன: (ஓம் அகஹனாய நம:) பர்வதங்களின் சிறகுகளை சேதித்து நாசம்செய்த இந்திரனை நடத்துகிறவர்.

554 குப்த: (ஓம் குப்தாய நம:) அயோக்யர்களுக்கு மறைந்திருப்பவர்.

555 சக்ரகதாதர: (ஓம் சக்ரகதாதராய நம:) சக்ரம் கதை இவைகளை தரிப்பவர். ஸைனியத்துடன் உள்ள நாகாஸுரன் முதலானவர்களை சேதிப்பவராயும் உலகத்தை நன்கு தரிப்பவராயு முள்ளவர்.

556 வேதா: (ஓம் வேதஸே நம:) விசேஷமாய் தாரணத் தையும் போஷணத்தையும் செய்பவர்.

557 ஸ்வாங்க: (ஓம் ஸ்வாங்காய நம:) ஸ்வரூப பூதமான அங்கங்களுடையவர். ஸ்வதந்திரமான அங்கங்களுடையவர். சுயம் இருந்து சிருஷ்டியாதிகளில் அங்கமாய் இருப்பவர்.

558 அஜித: (ஓம் அஜிதாய நம:) ஒருவராலும் ஜயிக்கப் படாதவர்.

559 கிருஷ்ண: (ஓம் க்ருஷ்ணாய நம:) கருத்த நிறமுள்ள வர். பாபமாகிற பஞ்சப்பொதிக்கு அக்னி போன்றவர். கிருஷ்ண த்வைபாயனராய் அவதரித்தவர்.

560 த்ருட: (ஓம் த்ருடாய நம:) சரீரத்தின் திடமுடைய வர்.

561 ஸங்கர்ஷண: (ஓம் ஸங்கர்ஷணாய நம:) உலகை நன்றாய் சேர்த்து இழுப்பவர்.

562 அச்யுத: (ஓம் அச்யுதாய நம:) தம் ஸ்வரூபத்தை விட்டு வழுவாதவர்.

563 வருண: (ஓம் வருணாய நம:) உலகை க்ஞானத் தாலோ அக்ஞானத்தாலோ மறைப்பவர். உத்தம ஜீவர்களை ஊர்த்வலோகத்திற்கு கொண்டுபோகிறவர். உத்தமமான ஆனந்த முள்ளவர். பக்தர்களால் வரிக்கப்பட்டும் பக்தர்களை வரித்தும் இருப்பவர்.

564 வாருண: (ஓம் வாருணாய நம:) அறிவாளியாயும் அருண ரூபியாயும் இருப்பவர்.

வாரண: (ஓம் வாரணாய நம:) பக்தர்களின் அநிஷ் டத்தைத் தடுப்பவர். ஜல சமூஹமாகிய ஸமுத்திரத்திற்கு ஸுகத் தை அளிப்பவர். ச்ரேஷ்டமானவர்.

565 வ்ருக்ஷ: (ஓம் வ்ருக்ஷாய நம:) பக்தர்களின் அபீஷ் டத்தை அளிப்பதில் கல்ப விருக்ஷத்துக்கு சமானமானவர். ஆசிரித ஜனங்களுக்கு விருக்ஷம்போல் சுககரமானவர். ஜனங்களால் வரிக்கப்படுகிறவர்.

அவ்ருக்ஷ: (ஓம் அவ்ருக்ஷாய நம:) தன்னைப்பிளப் பவர் இல்லாதவர்.

566 புஷ்கராக்ஷ: (ஓம் புஷ்கராக்ஷாய நம:) கமலமலரைப் போல் கண்களுள்ளவர்.

567 மஹாமனா: (ஓம் மஹாமனஸே நம:) மஹத்தான மனமுடையவர். மஹத்தான க்ஞானமுடையவர்.

568 பகவான் (ஓம் பகவதே நம:) பூர்ணமான ஐச்வரி யம், தர்மம், கீர்த்தி, ஸ்ரீ [illegible] ஆகிய ஆறு குணங்கள் பொருந்தி[illegible] ...ரும்)

208173

அஹம் ப்ரம்மாஸ்மி.

(முன் 84-ம் பக்கம் தொடர்ச்சி.)

சாஸ்திரியாரும், ஆசாரியாரும்.

சாஸ்திரி: சரிதான்.

ஆசார்: இதனால் என்ன ஏற்பட்டது? கணக்கற்ற எல்லா வேத சமூகங்களும் உங்களுக்கு சம்மதமில்லாத ஜீவ ப்ரம்ம பேதத்தை அறிவிப்பதால், அவைகள் எல்லாமே பொய் பேசுகின்றனவென்று வெளியில் ஆடம்பரம் செய்துவிட்டுஎல்லா வேத வாக்கியங்களையுமே சிறிதும் கூச்சமன்னியில் குப்பைத் தொட்டியில் வாரிவைத்துவிட்டு, தத்வமஸி, அஹம் ப்ரம்மாஸ்மி, ப்ரக்ஞானம் ப்ரம்ம, முதலான 5, 6 வாக்கியங்கள் மட்டில் மலைபோல், குவிந்து கிடக்கும் வேதங்களில் தமக்கு ப்ரியமான அபேதத்தை அதாவது அத்வைதத்தை அறிவிக்கின்றனவென்றும், ஆகலால் இந்த ஐந்தாறு வாக்கியங்கள் மாத்திரம்தான் ஸத்யம் பேசுகின்றனவென்றும், எண்ணினீர்கள். முதுகில் தட்டிக் கொடுத்தீர்கள், பொறுக்கி எடுத்து வைத்துக்கொண்டீர்கள், மகா மரியாதை காட்டினீர்கள். எல்லா பண்டிதர்களைப் போலவேயுள்ள ஒரு சில பண்டிதர்களை, சில உத்யோகஸ்தர்களின் சிபார்சின்பேரில் தற்போதுள்ள அரசாங்கத்தார் மகாபண்டிதர்கள் என்று பிரமித்து, அவர்களுக்கு லோக விலக்ஷணமாய் மரியாதை செய்து, மகாமஹோபாத்யாய பட்டம் கொடுத்து கொண்டாடி வருவது போல், நீங்கள் எல்லா சுருதிகளைப்போலவே பேதத்தையே அறிவிக்கும் சிலவாக்யங்களை அபேதத்தை அறிவிப்பதாய் பிரமித்து, சங்கராசாரியார் முதலானவர்களின் வார்த்தையால் மோசம்போய் அவைகளுக்கு மிகுந்த மரியாதை செய்து 'மகாவாக்யம்' என்ற பட்டங்கள் கொடுத்து கொண்டாடிவருகிறீர்கள். இந்த ஐந்தாறு 'மகாவாக்யம்' பட்டதாரிகள் உமது அபிமதமான அத்வைதத்தை அதாவது அபேதத்தை போதித்துக் கொடுக்கின்றனவென்று உலகெங்கும் பறைசாற்றினீர்கள். இந்த ரகசியத்தை நீங்கள் கண்டு பிடித்து விட்டதாய் மகா கர்வங்கொண்டீர்கள். இதுவே வேதாந்த ரகசியமென்றும், ஆதலால் வேதாந்தம் என்றால் அத்வைத வேதாந்தம் தான் என்றும் இப்படி எல்லாம் கட்டுபாடு செய்துகொண்டீர்கள். இதைக்கேட்டு எல்லா மத[illegible]ரும் திடுக்கிட்டுப் போயினர். கோ[illegible]கணக்காய் கூடினர். கா[illegible]த்துக்கொண்டு, இந்த மகாவாக்[illegible] பட்டதாரிகள் என்ன அர்த்தம் சொ[illegible]லுகிறார்களோ கேட்போம் [illegible]ன்று ஆவல் கொண்டிருக்க ஜலதோஷ[illegible] வந்தவன் தும்புவது

போல், மூன்று தரம் சித் சித் சித் என்று சொல்லி வாயைமூடிக்கொண்டது. அதை நீங்களும் உமது நூல்களில் ஒப்புக்கொள்ளுகிறீர்கள். ப்ரம்மம் பிரம்மம் என்று சொன்னால் அது அபேதத்தைச் சொன்னதாய் ஆகுமா? ஓர் நகையைக்கண்டு இது தங்க நகையா, வெள்ளி நகையா, என்று ஸந்தேகம்வர அந்த ஸந்தேகத்தை நீக்கிக்கொள்ள ஓர் காசுகடை கோமுட்டியை வரவழைத்து கேட்டால், அவன் இது தங்க நகைதான் அல்லது வெள்ளி நகைதான் என்று ஏதாவது ஒன்று சொல்லவேண்டுமா இரண்டையும் விட்டு நகை என்று மட்டில் சொல்லிவாயை மூடிக்கொண்டால் எப்படி அந்த கோமுட்டி சாக்ஷி சிறிதும் உபயோகமில்லையோ, அப்படி, ஜீவப்ரம்மர்களில் பேதம் இருப்பதாய் ஒருவரும், அபேதம் இருப்பதாய் மற்றொருவரும் விவாதம் செய்துகொண்டு சுருதியை சாக்ஷியம் கேட்டால் அது சித், ப்ரம்மம் என்று மட்டில் சொல்லி வாயை மூடிக்கொண்டால், அந்த சாக்ஷியம் யாருக்கு என்ன உபயோகம்? வெகு அழகாய் இருக்கிறது உங்கள் வேதாந்தத்தின் பெருமை. ஆகவே இந்த ஐந்தாறு மகாவாக்ய பட்டதாரிகளும் உங்கள் வேதாந்தத்தை உங்கள் இஷ்டப்படி சாதித்துக்கொடுப்பதில்லை. ஆகவே அப்படி உங்களுக்கு ஸம்மதமான அர்த்தத்தை இந்த மகாவாக்ய பட்டதாரிகளும் சாதித்து கொடுக்காததால் இவைகளுக்கு உங்கள் அபிமதமான அத்வைத அர்த்தத்தை ஏற்படுத்திக்கொள்ள; வேறொரு அர்த்தத்தை அதுவும் அமுக்யமான அர்த்தத்தை கல்பனை செய்துகொள்ள ப்ரியப்படுகிறீர். சரிதானே.

சாஸ்திரி: ஆம்.

ஆசார்: அப்படியாவது அபேதம் சித்திக்கிறதா? பார்ப்போம். அந்த அமுக்யமான அர்த்தம்தான் எது?

சாஸ்திரி: 'அஹம்' என்பதால் போதிக்கப்படும் ஜீவனின் எல்லா தர்மங்களையும் விட்டுவிட்டு, லக்ஷணையால் அதாவது அமுக்யவிருத்தியால் ஜீவனுடைய 'சித்' என்பதை மட்டில் எடுத்துக்கொள்கிறோம். 'ப்ரம்மம்' என்பதால் போதிக்கப்படும் ப்ரம்மத்தின் எல்லா தர்மங்களையும், விட்டு விட்டு, லக்ஷணையால், ப்ரம்மத்தின் 'சித்' என்பதை மட்டில் எடுத்துக் கொள்ளுகிறோம். அதனால் 'அஹம்' என்றால் ஜீவசித்து 'ப்ரம்மம்' என்றால் ப்ரமமசித்து இவ்விரண்டும் அஸ்மி என்றால் ஒன்று என்று ஏற்படுகிறது.

ஆசார்: ஜீவனுடையவும் ப்ரம்மத்தினுடையவும் தர்மங்களை நீர் விட்டுவிடுகிறேனென்றால் என்னவோ? இயற்கையாய் இருந்துவரும் ஸத்யமான குணங்கள் எப்படி போகுமய்யா? அத்தைக்கு மீசை முளைத்தால் சித்தப்பா தான் முளைப்பது எப்படியோ? குதிரைக்கொம்பு எப்பவும

இல்லை. அதில் 'அஸத்வம்' எப்பவும் இல்லாதிருத்தல் என்னும் தன்மை இருக்கிறது. லக்ஷணையால் அர்ததன்மை எப்படி போகும். அப்படிபோகு மென்றால், உமது அர்த்தரீதிப்படி குதிரைக்கொம்பு ஆகவேண்டும்? அதை ஒப்புக் கொள்ளுகிறீரோ?

சாஸ்திரி: சரிதான்.

ஆசார்: ஆகவே முக்யார்த்தத்தை விட்டு அமுக்யமான அர்த்தத்தை கைக்கொள்ள வேண்டிய அவஸ்தை உமக்கு ஏற்பட்டபின் நான் ப்ரம்மம் என்று தான் ஏனோ அர்த்தம் செய்யவேண்டும். என்ன அப்பேர்ப்பட்ட நிர்பந்தம்? நான் ப்ரம்மத்தின் அதீனன் என்றும் நான் ப்ரம்மத்தினின்றும் பிறந்தவன் என்றும் இவ்வாறெல்லாம் அர்த்தம் ஏன்செய்யலாகாது?

சாஸ்திரி: அஹம் ப்ரம்மாஸ்மி நான் ப்ரம்மமாய் இருக்கிறேன் என்று ஸ்பஷ்டமாய் அறிவித்துக்கொண்டிருக்கையில், நான் ப்ரம்மத்தின் அதீனன், ஆசிரயன், என்றெல்லாம் எந்தபுத்திசாலி அர்த்தம் செய்வான்.

ஆசார்: "த்வம் ப்ரம்ம, த்வம் யக்ஞ:, த்வம் லோக: என்று தந்தை சொன்னதாகவும், "அஹம் ப்ரம்ம, அஹம் யக்ஞ: அஹம் லோக:" என்று மகன் பதில் சொன்னதாகவும் இதே உபனிஷத்தில் இந்த வாக்யத்திற்கு முந்தி சொல்லப்படுகிறது. அதற்கு உமது சங்கராசாரியாரே முக்யார்த்தத்தை கைக்கொண்டால் விரோதம் வருகிறதென்று அதை விட்டுவிட்டு, லக்ஷணையை அதாவது அமுக்யார்த்தத்தைக் கைக்கொண்டு, த்வம் என்றால் த்வத்கர்த்ருகம், அஹம் என்றால் மத்கர்த்ருகம், ப்ரம்ம என்றால் வேதாத்யயனம் என்று சொல்லி, த்வம் ப்ரம்ம என்பதற்கு உன்னால் வேதாத்யயனம் செய்யத்தகுந்ததென்றும் த்வம் யக்ஞ: என்றால் உன்னால் யக்ஞம் செய்யத்தகுந்தது என்றும், த்வம்லோக: என்றால் உன்னால் புண்ய லோகம் ஜயிக்கத்தகுந்த தென்றும். அஹம் ப்ரம்ம என்றால், நான் வேதாத்யயனம் செய்கிறேன் என்றும் அஹம் யக்ஞ: என்றால் நான் யக்ஞம் செய்கிறேன் என்றும், அஹம் லோக: நான் புண்யலோகங்களை ஜயிக்கிறேன் என்றும் அர்த்தம் செய்துள்ளார். இந்த சுருதியில் ஸ்பஷ்டமாய் அஹம், ப்ரம்ம, என்ற இரண்டு பதங்களும் ஒரே வேற்றுமையில் இருந்து ஸ்பஷ்டமாய் ஐக்யம் போதிக்கப்பட்டிருந்தபோதிலும் ஏன் இவ்வாறெல்லாம் அர்த்தம் செய்தார், என்றால் இப்படி எல்லாம் அர்த்தம் செய்வது புத்திசாலிகளின் வழக்கம்தான் முக்யார்த்தத்திற்கு விரோதம் ஏற்படும்பொழுது கௌணார்த்தத்தை கல்பிக்க வேண்டியதுதான். இந்த அஹம் ப்ரம்மாஸ்மி என்பதில் நீங்கள் அஹம் என்பதற்கும், ப்ரம்ம என்பதற்கும் ஆக இரண்டுக்குமே கௌணார்

த்தத்தை கல்பித்து, இவ்விருவர்களின் சித்தை எடுத்துக் கொள்கிறீர், நாங்கள் ப்ரம்ம என்பதற்கு மட்டில் கௌணார்த்தத்தைக் கொடுத்து, ப்ரம்மம் என்றால் ப்ரம்மத்தின் அதீனன் ப்ரம்மத்தின் ஆசிரயன் பிரம்மத்தினின்றும் பிறந்தவன் பிரம்மத்தை ஆதாரமாய்க்கொண்டவன் என்று அர்த்தம் செய்கிறோம். இரண்டுவார்த்தைகளுக்கு லக்ஷணையை கல்பித்து சொல்லும் அர்த்தம் ச்ரேஷ்டமா? ஒரு வார்த்தைக்கு மட்டில் லக்ஷணையை கல்பித்து சொல்லும் அர்த்தம் சிரேஷ்டமா? சொல்லும்.

சாஸ்திரி: இரண்டுக்கும் லக்ஷணையை கல்பிப்பதைவிட ஒன்றுக்கு மட்டில் கல்பிப்பது உத்தமம் என்று எவன் தான் ஒப்புக்கொள்ளமல் இருக்கமுடியும்?

ஆசார்: ஆதலால் 'அஹம்' நான் 'ப்ரம்ம' ப்ரம்மத்தின் ஆதீனன் ப்ரம்மத்தின் ஆசிரயனாக இருக்கிறேன், பிரம்மத்தினின்றும் பிறந்தவனாய் இருக்கிறேன் என்று இத்யாதிரீதியில் அர்த்தம் சொல்வது தானே உத்தமம்.

சாஸ்திரி: பதினாயிரம் தடவை உத்தமம் என்று சொல்ல ஆக்ஷேபணை இல்லை.

ஆசார்: இவ்வாறு அநேக காரணங்களை முன்னிட்டு உங்கள் மகா வாக்யமாகிய 'அஹம் ப்ரம்மாஸ்மி' கூட அபேதத்தை அதாவது அத்வைதத்தை சாதித்துத் தருவதில்லை என்பதை அறிந்துகொண்டீர்களா?

சாஸ்திரி: நீங்கள் இதை நன்றாய் நிரூபித்துக் காட்டியபின் இனி எனக்கு என்ன சந்தேகம். நேரம் அதிகமாகிவிட்டது. இத்துடன் இந்த விசாரத்தை முடித்துக்கொள்வோம்.

ஆசார்: எனக்கு ஆக்ஷேபணை இல்லை. நீர் தத்வத்தை அறிந்து கொள்ளவேண்டுமென்பதுதான் என் நோக்கம்.

தீண்டாமை

ஓர் நாயின் ஆஸ்திகம்

ஸ்ரீராமசந்திரன் அயோத்தியில் அரசாண்டுவரும் பொழுது தன் ராஜ்யத்தில் எல்லா பிரஜைகளுமே மனு நீதிக்கு வழுவாது தம் தம் ஜாதிவர்ணாசிரமாசாரங்களை நன்கு நடத்தி வருகிறார்களா

வென்று அறிய ஆவல் கொண்டிருந்தார். அப்படி அவைகள் நடக்க வொட்டாமல் எவ்வகை பாதகங்கள் இருப்பினும், அவைகள் ஒவ்வொன்றையும் ஊக்கத்துடன் கவனித்து அவைகளை நிவிருத்தித்து வந்தார். அதனால் அவருடைய பிரஜைகள் யாருமே தாராளமாய் அவரை அணுகவும், தம் தம் குறைகளை அறிவிக்கவும் சந்தர்ப்பம் சுலபமாய் கிடைத்திருந்தது. ஆகவே "ராமோ ராமோ ராம இதி ப்ரஜானாம் அபவன் கதா:" என்றபடி ஏகசக்கரவர்த்தியாகிய அவருடைய அகண்ட ராஜ்யத்தில் எங்கு சென்றாலும், அவருடைய பிரஜைகள் ராமா ராமா என்றே எந்த பேச்சிலும் சேர்த்து சொல்லிக்கொண்டிருந்தனர். அப்படியிருந்தும் பகவான் ராமசந்திரன் ராஜ நீதியை அனுசரித்து பகிரங்க ஸ்தலமான தன் ராஜ சபையில் சிம்ஹாஸனத்தின் மீது உட்கார்ந்து கொண்டு தம்பி லக்ஷ்மணனைக் கொண்டு 'பிராது கொடுக்கிறவர்கள் கொடுக்கலாம்' என்று பிரதி தினமும் கூப்பிடச் செய்தார். பிரஜைகளுக்கு குறை இருந்தால் தானே ஏராளமான பிராதுகள் வந்து குவியும். வழக்கப்படி ஒருவரும் முன் வராதிருப்பினும் பல மணி நேரம் அச்சபையிலேயே வீற்றிருந்து, வசிஷ்டாதி மகாஞானிகளுடன் தத்வார்த்தங்களை பேசிவிட்டு அந்தப்புறம் போய்விடுவார். இவ்வாறு ஒரு நாள் ஸ்ரீராமசந்திரன் ராஜ சபையில் ஓர் புறம் உட்கார்ந்து, தம்பி லக்ஷ்மணனை வழக்கப்படி கூவச் செய்ய, ஓர் நாய் மண்டை உடைந்து, ரத்தம் பெருக வேகமாய் லக்ஷ்மணரின் முன் வந்து நின்றது. லக்ஷ்மணர் அதைப் பார்த்து "ச்வானமே! ஏதாவது பிராது கொடுக்க ஓடிவந்திருக்கிறாயா! என்ன" என்று கேட்க. "ஆமாம் ப்ரவுவே! ஸ்ரீராமசந்திரனிடம் நேரில் சொல்லிக் கொள்ளவேண்டும்" என்று சொன்னது அதைக் கேட்டு லக்ஷ்மணர் பிரமித்துப் போய் வசிஷ்டாதி சபையோர்களுடன் கூடிய ஸ்ரீராமசந்திரனிடம் இவ்வாறு ஓர் நாய் பிராது கொடுக்க வந்திருப்பதாயும் அது நேரிலேயே அறிவிக்க பிரியப்படுவதாயும் அறிவித்தார். இதைக் கேட்டு சபையோர்கள் அனைவரும் ஆச்சரியப்பட்டனர். ஸ்ரீராமசந்திரனும் சபையோர்களுக்கு பிரஜைகளின் தர்மத்தை காட்டிக் கொடுப்பதற்காக "லக்ஷ்மணா! அந்த ச்வானத்தை இங்கு வரச்சொல்" என்று

சொன்னார். லக்ஷ்மணனும் அவ்வாறே அந்த ராஜ சபையின் வெளி வாசலுக்குச் சென்று "நாயே! உள்ளே போய் சொல்லிக் கொள்ளவேண்டியதை சொல்" என்றார். அதற்கு அந்த நாய் சொன்னதாவது:—தேவாகாரே ந்ருபாகாரே த்விஜ வேச்மஸு வைததா । வன்ஹி: சதுக்ரதுஸ் சைவ ஸூர்யோ வாயுஸ்ச திஷ்டதி" நாத்ரயோக்யாஸ்து ஸௌமித்ரே யோனினாம் அதமாவயம் । ப்ரவேஷ்டும் நாத்ர சக்ஷ்யாம: தர்மோ விக்ரஹவான் ந்ருப. ।।" தேவாலயத்திலும் அரசனின் வாஸ ஸ்தலத்திலும் பிராம்மணனுடைய வாஸ ஸ்தலத்திலும் அக்னியும் இந்திரனும் சூரியனும் வாயு பகவானும் வசிக்கின்றனர். இப்பேர்ப்பட்ட பரிசுத்தமான இடங்களில் பிறப்பால் மிக மிகத்தாழ்ந்தவர்களான என்னைப் போன்றவர்கள் ஓர் நிமிஷமும் தங்கியிருக்க அர்ஹர்கள் அன்று. இந்த இடங்களுக்குள் பிரவேசிக்கவும் எங்களுக்கு தர்மத்தின்படி அதாவது சட்டப்படி அதிகாரம் இல்லை. அரசன் தர்மமே உருவெடுத்து வந்தவர் ஆவார். ஆகவே நான் உள்ளே வர மாட்டேன். நான் வாசலில் தான் நிற்கத் தகுதியுள்ளவன். அப்படியேத்தான் நான் வாசலிலேயே நிற்பேன். இதை ஸ்ரீராமசந்திரனிடம் சொல்லும். அவருடைய ஆக்ஞையை எதிர்பார்க்கிறேன் என்று சொல்லவும். லக்ஷ்மணர் இதை ஸ்ரீராமசந்திரனிடம் அறிவிக்க, எல்லோரும் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கையில், ஸ்ரீராமசந்திரமூர்த்தி அழகிய ரத்ன கசிதமான ஸுவர்ண பாதுகைகளை தரித்து கால் நடையாய் சபையின் வெளியே வந்து உன் பிராது என்னவென்று கேட்டார். அதற்கு அந்த நாய்! ஹே ராமா! என் மண்டையைப் பாரும். நான் ஒரு குற்றமும் செய்யாதிருக்கையில் ஓர் பிராம்மணன் இவ்வாறு என் மண்டையை உடைத்திருக்கிறார் என்று சொல்லிற்று. அந்த பிராம்மணன் இன்னான் என்பதைத் தெரிந்து கொண்டு, அவனை ராஜபடர்கள் மூலமாய் அழைத்து வந்து, கேழ்க்கவும் "ராமா! நான் இதன் மண்டையை உடைத்தது உண்மை. நான் பிச்சை எடுத்தலைந்து வரும்பொழுது இது ஒதுங்காமல் வழியில் நின்றிருந்தது. மத்யான்ஹத்தில் நான் களையுடன் இருந்ததால், நான் அறியாமலே எனக்கு கோபம் வந்து என் கையிலுள்ள குச்சியால்

அடித்து விட்டேன். என்னை மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டான். இதைக்கேட்டிருந்த எல்லோரும் ஸ்ரீராமர் எவ்வாறு தீர்ப்பு கூறுகிறார் என்று எதிர் பார்த்திருக்கையில், "ச்வானமே! இவன் செய்தது குற்றம் தான். இவனுக்கு என்ன சிக்ஷை விதிக்கலாம் என்பதை நீயே சொல்" என்று கேட்டார். அதற்கு அந்த நாய் "ராமா! இவனை உள்ளூர் சிவன் கோயிலுக்கு மணியக்காரனாய் செய்து விடும். தாரித்திரயத்தால் கஷ்டப்படும் இவர் நாளடைவில் சிவசொத்தைக் கைப்பற்றி விடுவார். நான் முன்பு அவ்வாறு இருந்து தற்போது எனக்கு இந்த ஜன்மம் கிடைத்தது போல் இவர் பிறகு நாயாகவே பிறப்பார் என்றது. வசிஷ்டாதிகளும் இதை ஆமோதிக்க அந்த ப்ராம்மணன் சத்ரசாமராதி வைபவங்களுடன் சிவன் கோயில் மணியக்காரனாக செய்யப்பட்டான் என்று ஆனந்த ராமாயணம் வால்மீகி ராமாயணம் முதலியவை அறிவிக்கின்றன.

இக் காலத்தில்
சடக ச்ராத்தம் தான் மேலானது

"பூர்வோக்த ஸத்விஜாபாவே குசக்ரந்திம் நிவேசயசே। தத்புர: பாத்ரமாஸாத்யக்ருதம் ஸம்பரிவேஷயேத்। குசக்ரந்திஷு சாவாஹ்ய பித்ரூன் தேவான் யதாவிதி। யதைவ ப்ராம்மணே பூஜா ததாக்ரந்திஷு காரயேத்। ஆவாஹிதான் பித்ரூன் தேவான் அந்தே ஸ்வஸ்ய நிவேசயேத்॥ ஆஹூய ப்ராம்மணான் ஸர்வான் கர்த்தவ்யம் பூரி போஜனம்। ஏவம்ய: குருதே பக்த்யா கயாச்ராத்த பலம் லபேத்। விதிருக்தோ த்விஜா பாவே ஸதி தேஷு ஸமர்ப்பயேத்। வ்யாதிஷ்டம் குநகம் வ்யங்கம் துஸ்சாஸ்த்ரக்ஞம் அதாத்விதகம்। துர்வ்யாஸக்தம் துஷ்ட ரூபம் ஸதாசார விவர்ஜிதம்। மாதா பித்ர விநீதம், ச பார்யா புத்ராதம் ஸதா। ஏகாதசீ வ்ரத ப்ரஷ்டம் ஜபௌபாஸன விவர்ஜிதம்। வர்த்பா பதிம் சவிதாரம் மாதா பித்ராதிதூஷகம்। குருஸத்விப்ரவித்வேஷம் குர்வர்தம் ஜாரிணீபதிம। ஸ்வசாகாத்யாயரஹிதம் அன்யசாகாரதம் ஸதா। யஜு: சாகா ஸமாஸக்தம் ஸந்த்யாகர்மாதிலோபினம்। இத்யாதி தோஷஸம்யுக்தான் ச்ராத்தே து நநிமந்த்ரயேத்। ஏதேஷு தத்தம் யச்ச்ராத்தம் ததாஸுரமிதீரிதம்। த்ரவ்ய ஹானி: க்ரியா ஹானி: தேஹாயாஸஸ்ததைவச। பித்ரூணமப்யத்ருப்தி: ஸ்யாத் நரகே பதந்திஹி। ஸ்வய மந்தே சதமவி பதத்யேவ நஸம்சய:। ப்ராம்மணான் போஜனே ஸக்தான் பாதகே ச யம: ஸ்வயம்। அதோ துர்ப்ராம்மணதானாத் குசக்ரந்தி: விசிஷ்யதே। ....யுதிஷ்டிர உவாச। கலௌது ச்ராத்தகரணம் கடினம் மமபோசதே। ஏவம் சேத் ச்ராத்த ஸந்த்யாக: ஸமீசீன இதிப்ரபோ। த்யாகே சண்டாளதாம் யாதீத்யேவம் விப்ரா விதுர்புதா:। மமைதம் சம் சயம்சிந்தி தேவ தேவ சிகாமணே॥ ஸ்ரீகிருஷ்ண:। ச்ருணு ராஜன் ப்ரவக்ஷ்யாமி ஸமாஹிதமனா: ச்ருணு। ச்ராத்ததாய விப்ராய தாதவ்யம் பூர்வோக்த குண பூஷிணே। தத்தம் விருத்தகுணகே வந்த்யாரேத இவ தத்ருவம்। ச்ராத்தயோக்ய த்விஜாபாவே ஸ்வயம் புஞ்ஜீத புத்திமான்। புத்ரம் ப்ராதரம் வாபி வேதஹீனம் நபோஜயேத்। தஸ்மாத் த்விஜான் பரீக்ஷ்யைவ கர்த்தவ்யம் ச்ராத்தமஞ்ஜஸா। மௌட்யாத் மௌலாக்யாத் க்ருதம் ச்ராத்தம் வ்யர்த்தமேவ நஸம்சய:। குசக்ரந்தே: அதோஷத்வாத் தத்ர பித்ர்யர்ச்சனம வரம்। தத்ர தத்தம் சயச்ச்ராத்தம் கயாச்ராத்த ஸமம் பவேத்। ப்ராம்மணான் போஜயேத் பஸ்சாத் யதாசக்திம் சபக்தித:" (மகாபாரதம் அனுசாசன பர்வம்)

இதன் தாத்பர்யமாவது;—நான் முன்னாடி சொன்ன யோக்யதையுள்ள பிராம்மணன் சிராத்தத்திற்கு நிமந்திரணத்திற்கு உட்கார்த்தி வைக்க அகப்படாமற் போனால், அந்த பிராம்மணர்களின், ஸ்தானத்தில் தர்பங்களின் முடிச்சை வைத்து, அதன் எதிரில் இலையை போட்டு அன்னாதிகளையும் நெய்யையும் பறமாறவேண்டும். பித்ரு ஸ்தானத்திலேயும் தேவர்களின் ஸ்தானத்திலேயும் இந்த தர்ப முடிச்சுகளை வைத்து அதில் பித்ருக்களையும் தேவதைகளையும் சிராத்த விதானப்படியே வேத மந்திரங்களால் ஆவாஹனம் செய்து, சாக்ஷாத்தாய் உட்காரும் பிராம்மணர்களுக்கு பூஜை செய்வது போலவே, இந்த குசக்ரந்திகளுக்கும் எல்லா பூஜைகளும் செய்யப்படவேண்டும். பிறகு அவர்களை விஸர்ஜனம் செய்து விட்டு பிராம்மணர்களுக்கு மிருஷ்டான்னம் போஜனம் செய்விக்க வேண்டும். இப்படி ஒருவன் செய்யும் பக்ஷத்தில் அவன் கயா ச்ராத்தம் செய்த பலனையே அடைவான். விதியில் சொல்லப் பட்டிருக்கும் யோக்யதை உள்ள பிராம்மணன் கிடைக்காதிருக்கும்

பக்ஷத்தில் தான் இவ்வாறு தர்ப முடிச்சு பிராம்மணர்களை வைத்து சிரார்த்தம் நடத்த இந்த விதி சொல்லப்பட்டிருக்கிறது. தகுதியான பிராம்மணன் கிடைக்கும் பக்ஷத்தில் அவர்களை உட்கார்த்தி வைத்தே சிராத்தத்தை நடத்தவேண்டும். வியாதிஸ்தனையும், சொத்தை நகமுள்ளவனையும், அங்க ஹீனனையும், துச்சாஸ்திரத்தை படித்தவனையும், தத்வ க்ஞானமில்லாதவனையும், துஷ்ட காரியங்களில் ஈடுபட்டிருப்பவனையும், தோஷமுள்ள வேஷமுள்ளவனையும், ஸதாசாரம் இல்லாதவனையும், தாய் தந்தையர்களுக்கு சுவாதீனமில்லாதவனையும், எப்போதும் ஸம்ஸாரத்தின் வார்த்தையை கேட்பவனையும், ஏகாதசி விரதம் அனுஷ்டிக்காதவனையும், ஜபம்ஔபாஸனம் செய்யாதவனையும், மலடியின் பர்த்தாவாய் இருப்பவனையும், பாரியை இல்லாதவனையும், வ்யபிசாரியின் பர்த்தாவையும், தாய் தந்தையர் முதலியவர்களை தூஷிப்பவனையும், தன் சாகை வேதத்தை அத்யயனம் செய்யாதவனையும், குருவையும் ஸத்ப்ராம்மணர்களை த்வேஷம் செய்பவனையும், இதர சாகை வேதங்களை அத்யயனம் செய்தவனையும், கேவலம் கர்ம காண்டத்திலேயே ஈடுபட்டிருப்பவனையும், ஸந்த்யா வந்தனாதி நித்ய கர்மங்களை விட்டிருப்பவனையும், இத்யாதி தோஷங்கள் உள்ளவனை சிராத்தத்தில் ஒருக்காலும் நிமந்த்ரணம் செய்விக்க கூடாது. இப்பேர்ப்பட்ட பிராம்மணர்களை உட்கார்த்தி வைத்து அவர்களின் எதிரில் செய்யும் சிராத்தம் அஸுர சிராத்தமாகும். இந்த சிராத்தத்தால் திரவியமும் நாசமாகிறது. கிரியையும் நாசமாகிறது. கேவலம் சரீரப்ரயாசையே ஆகும். பித்ருக்களுக்கும் திருப்தி ஏற்படாததுடன், அவர்களை இந்த ச்ராத்தத்தால் நரகத்தில் தான் போடுகின்றனர். தானும் அந்தம் தமஸ்ஸை அடைகின்றனர். சிராத்த போஜனம் செய்த பிராம்மணர்களை யம பகவான் தான் நேரில் சிக்ஷை செய்ய பார்த்துக்கொள்கிறார். ஆகவே இத்யாதி அநேக காரணங்களை யோசித்தால் மேற்கண்ட யோக்யதை இல்லாத தோஷங் கொண்ட பிராம்மணர்களை சிரார்த்தத்தில் போஜனம் செய்விப்பதை விட, தர்ப முடிச்சுகளை வைத்து செய்யப்படும் சிரார்த்தம் மிகவும் மேலானதாகும். தர்மபுத்திரர் கேட்கிறார். கிருஷ்ணா! இப்படியானால் கலியுகத்தில் சிரார்த்தம் செய்வது மிகவும் கஷ்டம் என்று எனக்கு தோன்றுகிறது. இப்படி துஷ்ட பிராம்மணர்களை வைத்து சிரார்த்தம் செய்து பாழாய் போவதைவிட சிரார்த்தத்தை விட்டு விடுவதே சிரேஷ்டம். அப்படியேச் செய்யலாம் என்றால் சிராத்தம் விட்டவன் சண்டாளன் என்று பிராம்மணர்கள் சொல்கிறார்களே. ஆதலால் பகவன்! என்ன செய்யலாம். என் சந்தேகத்தை தெளியவையுங்கள் என்றார்.

ஸ்ரீகிருஷ்ணர் சொன்னதாவது:—தர்ம புத்திரா! நான் சொல்வதை கவனித்துக் கேள். நான் மேலே சொன்ன தோஷங்களில்லாத் குணஸம்பன்னனை பிராம்மணனை உட்கார்த்தி வைத்து தான் ச்ரத்தையுடன் ச்ராத்தம் செய்யப்படவேண்டும். அப்படிக்கில்லாமல் இந்த தோஷங்களுள்ள பிராம்மணனை உட்கார்த்திவைத்து சிராத்தம் செய்யும் பக்ஷத்தில், மலடியிடம் ஸேசனம் செய்த ரேதஸ்ஸைப் போல வீணாகவே முடியும். அர்ஹமான பிராம்மணன் கிடைக்காதிருந்தால், புத்திசாலியிருப்பவன் ஒருக்கால் தானே போஜனம் செய்யலாம அல்லது தன் பிள்ளையையோ தம்பியையோ உட்கார்த்தி வைக்கலாமேயல்லாது யோக்யதை இல்லாதவனை ஒருக்காலும் உட்கார்த்தி வைக்கவே கூடாது. பிராமணனை பரீக்ஷித்தே அவன் தகுதியுள்ளவனாயிருந்தால் தான் அவனை வைத்துக்கொண்டு சிரார்த்தத்தை செய்யவேண்டும். கேவலம் மூடத்தனத்தாலோ பிடிவாதத்தாலோ இதற்கு மாறாய செய்த சிரார்த்தம் வீண்தான், சந்தேகமில்லை. தர்பகர்த்திக்கு இந்த வகை பிராம்மணர்களின் எந்த தோஷமும் சிறிதும் இல்லை. ஆதலால் தர்ப்பை முடிச்சில் பித்ராதிகளின் அர்ச்சனை மிகவும் சிரேஷ்டம். அந்த தர்ப பிராம்மணர்களின் எதிரில் செய்யும் சிராத்தத்திற்கு கயையில் செய்த சிராத்தத்தின் பலனே கிடைக்கும். இவ்வாறு இந்த தர்ப பிராம்மணர்களை வைத்து சிரார்த்தத்தை செய்தபின், அவரவர்களின் சக்திக்கும் பக்திக்கும் தகுந்தபடி, பிராம்மணர்களுக்கு போஜனம் செய்விக்க வேண்டிய அவசியம்.

உலக வர்த்தமானம்.

இந்த அக்டோபர்-மீ 1உயில் ஐரோப்பாவில் ஆரம்பமாக இருந்த மகா யுத்தத்தை பிரிட்டிஷ் பிரதம மந்திரி சேம்பர்லேனும் பிரன்சு பிரதம மந்திரி டலாதியேரும் இத்தாலியின் அதிபதி முஸ்ஸோலினியை வரச்சொல்லி ஆகாய விமானம் மூலமாய் ஜெர்மனியில் மூனிச் நகருக்கு பறந்து வந்து, ஜெர்மனி மகாவீரர் ஹிட்லரை சமாதானப்படுத்தி அவர் இஷ்டப்படி ஸெகோஸ்லவோகியாவிலுள்ள முக்ய ஸ்தலமான ஸுடேடன் பிரதேசத்தை எடுத்துக் கொள்ளலாமென்று அனுமதி கொடுத்து, செப்டம்பர் 30உ இரவு மணி 1-30க்கு யுத்தம் நிறுத்தியதாய் அவரிடமிருந்து

வாக்கு பெற்று, லக்ஷக்கணக்கான ஜனங்கள் மடியப் போகாவிருந்த லோக பயத்தை நீக்கி உலகத்தாரால் மிகவும் கொண்டாடப் படுகின்றனர். ஜர்மன் துருப்புகளும் ஜயகோஷத்துடன் ப்ரவேசித்து மூக்கு மூளியன்றி அந்த் பெரிய தேசத்தையும் கைப்பற்றியதுடன் ஹிட்லரும் பரமானந்தத்துடன் 30 மோட்டார்கள் நிறைய பந்து மித்திரர்களுடன் கூடி, எகெர் நகரில் ஊர்வலம் வந்து, வீரரஸம் ததும்பும் வார்த்தைகளை தம்பிரஜைகளுக்கு உரையாடியிருக்கிறார். ஓர் துளி ரத்தத்தை சிந்தாமலும், ஓர் பீரங்கியை வெடிக்காமலும், ஐரோப்பாவிலுள்ள இரண்டு முக்கியமான தேசங்களை அவர் இதுவரை பிடித்து விட்டாரென்றால், ஐரோப்பா முழுதும் இவர் பெயர் கேட்ட மாத்திரத்தாலேயே நடுங்குகிறது என்று ஒரு பத்திரிகை கூறுவது மிகையாகாது. இத்துடன் நில்லாமல் அவர் இப்போது 8 கோடி ஜனங்கள் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் ஜர்மனிக்கு குடியேறும் நாடுகள் இல்லாமல் இருப்பது எப்படி சாத்யமென்றும், அதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்றும் பிரிட்டிஷ் மந்திரியை கேட்டுக்கொண்டு இதர கண்டங்களிலுள்ள தேசங்களையும் அவர் கடாக்ஷிக்கத் தொடங்கி விட்டார். இந்த மகாவீரனால் எச்சமயம் யாருக்கு எந்த பயம் ஏற்படகூடுமோவென்று பயந்து, உலகத்திலுள்ள தேசத்தார்கள் யுத்த முஸ்தீப்பு செய்து கொண்டிருப்பதுடன், பிரிட்டிஷாரும் அநேக கோடி ரூபாய்கள் செலவில் யுத்த தளவாடங்களையும் யுத்த பாதுகாப்புகளையும் செய்து வருகின்றனர்.

கராவல் ஜில்லாவில் நாகபூர் பட்டியில் 20 நிமிஷம் ஆலங்கட்டி மழை பெய்து 18 கிராமங்களில் பயிராயிருந்த நெல் ஜாடாவும் சேதமாகி விட்டது.

ஐக்கிய மகாணத்தில் பள்ளிக்கூடத்தில் ஸ்திரீகளுக்கும் தேகாப்யாஸ முறை கற்றுக்கொடுக்க ஏற்பாடு ஆகியிருக்கிறது.

லக்னோ நகரின் சமீபத்திலுள்ள ஓர் கிராமத்தில் கட்டிலின் மீது ஒருவன் படுத்திருக்கவும் அவன் வளர்த்திருந்த பூனை அதன் கீழ் படுத்திருக்கவும் அங்கு ஓர் ஸர்பம் வந்துசேர, பூனை செய்த ஆரவாரத்தினால் விழித்தெழுந்து, பூனை ஒருபுறமும் இவன் மற்றொரு புறமும் அந்த ஸர்பத்தை தாக்கவும், ஸர்பம் மெதுவாய் அச்சமயம் ஓடிப்போய் சிறிது நாள் கழித்து பூனைக்கு தெரியாமல் வந்து இவனை தீண்டித் தன் பகையைத் தீர்த்துக் கொண்டது.

திருவனந்தபுரத்தில் இதுவரை கைதியான ராஜீயக்கைதிகள் மகாராஜாவின் பிறந்த தினத்தை முன்னிட்டு விடுதலை செய்யப்

பட்டிருப்பதுமன்றி தாத்காலிகமாக கிரிமினல் திருத்த அவசரச் சட்டம் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

பிராமணர்களாயிருந்தாலும் சரி பிராமணர்களல்லாதார்களாயிருந்தாலும் சரி எல்லா ஜாதி வைஷ்ணவர்களும் ஸ்ரீவைஷ்ணவர்கள்தான் என்று சென்னை ஹைகோர்ட் சமீபத்தில் தீர்ப்பு அளித்திருக்கிறது.

ஹைதராபாத்தில் ஸ்திரீகள் போலீஸ் சேவகர்களாய் நியமிக்கப்படுகின்றனர்.

ஸிந்து மகாணத்தின் ஓம் மண்டலி என்னும் சங்கத்தாரின் பிரசாரத்தின் பயனாக கலாவதி என்பவள் குடும்பத்தை விட்டு சங்கத்து கட்டிடத்திற்குள்ளே இருக்கிறாள் என்று, அவளை தன் சுவாதீனமாக்க அந்த சங்கத்தின் ஸ்தாபகர்மீது அவள் புருஷன் ஸாதுராம் என்பவர் பிராது செய்து பாரியையைத் திரும்பப் பெற்றார். இவ்வாறே அநேக பிராதுகள் தாக்கலாகி வருகின்றன.

மிர்ஜாபூரில் ஓர் சாதுவின் சமாதி கட்டிடத்தின் மேல் மாளிகையில் குடி இருந்து வந்த தந்தி இலாகா குமாஸ்தா ஒருவரின் குழந்தை அந்த சமாதியை தீண்டி விட்டதன் காரணமாக, அந்த குழந்தைக்கு நோய்கண்டு, அந்த சமாதியை காவல் காத்துக்கொண்டிருந்த ஓர் பிசாசம், மார்வாரி ஸ்திரீயைப்போல் அந்த குழந்தையின் தாயின் முன் தோன்றி, பதினைந்தாவது நாள் அந்த குழந்தையை கொல்லப் போவதாய் அறிவித்து, அதன் படியே தாய் தந்தையர்கள் குழந்தையுடன் வெளியூர் ஓடிப்போயும், பல டாக்டர்கள் மந்திரவாதிகள் இவர்களின் ஸஹாயத்தைப் பெற்றும் பிரயோஜனப் படாமல், தாயின் மடியின்மீது படுத்திருந்த குழந்தையை குறித்த நாளில் கொன்றுவிட்டது.

லாகூரில் ஓர் பிராம்மணப் பையன் படித்தும் வேலை அகப்படாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்க, ஒரு நாள் தன் தாயை தன் செலவிற்கு நாலணா தரும்படி கேட்க, அவள் கொடுக்க மறுத்ததின் காரணமாக தன் துணியில் மண்ணெண்ணையை ஊற்றி, நெருப்பு வைத்துக் கொண்டு உயிர் துறந்தான்.

ஜப்பல்பூரில் 12—10—38உ யன்று ஒருவனுக்கு செத்துப் பிறந்த குழந்தை ஒன்று சுடு காட்டிற்கு கொண்டுபோகப்பட்டு பலமான காற்று மழை பெய்ததால், அங்கு அது புதைக்கப்படா

மல் சில மணி நேரம் வெளியில் கிடந்திருக்க நேரிட்டு, அதனால் அந்த குழந்தை பிராணனை அடைந்து திரும்ப வீட்டிற்கு கொண்டு பட்டது.

இந்த மாதம் 6வ யன்று ஜப்பல்பூருக்கடுத்த க்வாரிகாட் என்னும் ஊரில் ஓர் தச்சன் இறந்து போக 16வயதுள்ள அவனுடைய சம்சாரம் தன் பர்த்தாவுடன் உடன்கட்டை ஏறுவதாய் அறிவிக்கவும், நூற்றுக்கணக்கான ஜனங்கள் கூடிப்போய் அவள் எரியும் பர்த்தாவின் சிதையில் விழும் சமயம், ஓர் மோட்டார் நிறைய போலீஸ்காரர்கள் வந்து அவளை தடுத்து பலாத்காரமாய் இழுத்துப் போய் அவளுடைய சொந்தக்காரர்களிடம் ஒப்புவித்தனர்.

கொரக்பூரில் அங்க ஈனர்களுக்குத்தான் லைசன்ஸ் கொடுக்கப்படவும் இவ்வாறு லைசன்ஸ் பெற்றவர்கள் தான் பிச்சை எடுக்க வெளியில் வரவும் உத்திரவு செய்யப்பட்டிருக்கிறது.

கானடாவில் டியோன் என்பவள் ஏககாலத்தில் பெற்ற 5 குழந்தைகள் அந்த அரசாங்கத்தாரின் சம்ரக்ஷணையில் சௌக்யமாய் வளர்ந்துவந்து இப்போது 4வது வயதை முடித்துக்கொள்வதால், கத்தோலியர்களின் ஆசார்ய பீடமாகிய போப் சென்ற மாதத்தில் உலகமறிய அக்குழந்தைகளுக்கு விசேஷ ஆசீர்வாதத்தை அனுக்ரஹித்திருக்கிறார்.

பூகம்பத்தின் கஷ்ட நிவாரணத்திற்காக கடனாய் கொடுத்து ஜனங்களிடம் வசூலித்துவந்த 30 லட்சம் ரூபாயை, நேபாள் மகாராஜா இனாமாக விட்டுவிட்டு வசூலித்ததை அவரவர்களிடம் திருப்பிக்கொடுக்கும்படி உத்தரவிட்டிருக்கிறார்.

கோயம்புத்தூரில் இருந்துவந்த ரிடையர்டு டிபுடி கலெக்டர் ஸ்ரீமான் வாஸுதேவ ராவ் அவர்களுடைய ஞாபகார்த்தமாக ஏற்படுத்தப்பட்ட புத்தகாலயம் தற்போது பொது ஜனங்கள் தாராளமாய் வந்து போக சௌகரியத்துக்காக, சலவன் வீதியிலுள்ள ஸப் ஜட்ஜ் ராமஸ்வாமி அய்யங்கார் வீட்டில் மாற்றப்பட்டிருப்பதாயும், ரிடையர்டு தாசில்தார் ஸ்ரீமான் T. K. ஸ்ரீனிவாஸ ராவ் அவர்கள் செகரெடரியாகவும், ஸ்ரீமான் T. R நாராயணராவ் லைப்ரேரியனாகவும் நியமிக்கப்பட்டிருப்பதாயும், காலை 8 மணி முதல் 9 மணி வரையிலும், மாலை 3 மணி முதல் 6 மணி வரையிலும் லைப்ரேரி திறந்து வைக்கப்படுவதாகவும், மணிமஞ்சரி முதல் சுதா வரையிலுள்ள மத்வ சித்தாந்த புத்தகங்கள் யாவும் சேகரித்து வைக்கப்பட்டிருக்கின்றனவென்றும், அனைவரும் வந்து படித்து

மோக்ஷ மார்க்கத்தை அடையும்படிக்கும், மத்வ சித்தாந்த பாடசாலைக்காக பண்டர்கேர் மடம் ஸ்ரீ வித்யாமான்ய தீர்த்த ஸ்வாமிகள் அதிகமாய் 2 உபாத்தியாயர்களை நியமிப்பதற்காக ரூ. 33 3—10—38ல் நன்கொடை அளித்திருப்பதாகவும் கோயமுத்தூர் ஸ்ரீமான் V. ராமராவ் அறிவிக்கிறார்.

ஸ்ரீ நாராயண பண்டிதாசாரியார் இயற்றிய

ஸங்கிரஹ ராமாயணம்.

7வது ஸர்க்கம்

(முன் 49ம் பக்கம் தொடர்ச்சி)

சிவதனுஸ்ஸு கொண்டுவரப்பட்டவுடன் விச்வாமித்ர முனிவர் ராமரைப் பார்த்து, "ராமா! இந்த சாபச்ரேஷ்டத்தை நாணேற்று" என்று சொல்ல, சக்ரவர்த்திதிருமகன் அப்படியே ஆகட்டும் என்று சொல்லி எழுந்து நின்றார். நீலமேகச்யாமளரும், அசையும் கர்ண குண்டலங்களால் சோபிக்கும் கன்னங்களுள்ளவரும், அழகு ஸமுத்திரரும், ஜகதீசுவரருமான, ராமர் தனுஸ்ஸிடம் செல்லப்போவதைக் கண்டு, அங்கு வேடிக்கை பார்க்க கூடியிருந்த விதேஹ தேசத்து ஸ்திரீகள் இவ்வாறு பேசிக்கொண்டனர்.

கல்யாணப் பேச்சு

இந்த அழகனைப் பெற்ற அந்த கௌஸல்யை தான் மகா பாக்கியவதி. பார்த்த மாத்திரத்தில் எல்லா கஷ்டங்களைப் போக்கும் இந்த ராமரால் அப்பா என்று அழைக்கப்படுகிறாரே. அந்த தசரதர், ராஜச்ரேஷ்டராயிருந்தும் மகாபாக்கியவான். உலகில் உள்ள இந்த ராமமாணிக்யத்தை பிரம்மா சிருஷ்டித்திருக்கிறார் என்பது பெரும் பொய். உலகத்தாரை சந்தோஷப்படுத்துவதற்காக ஒருவராலேயும் செய்யப்படாததாய் தானாகவே அதி ஆச்சரியமான இந்த ராமமாணிக்யம் தோன்றியிருக்கிறது. ஸீரத்வஜ

ஜனகரின் பெண்ணான ஸீதையும் எல்லா பெண்களைப் போலவா? உலகத்தாரால் மிகவும் மதிக்கப் பெற்றவள். அமிர்த மதன காலத்தில் க்ஷீர ஸமுத்திரத்தினின்றும் மகாலட்சுமி பிறந்தது போல், யாக ஆரம்ப காலத்தில் பூமியினின்றும் இவள் பிறந்திருக்கிறாள். சீதை ராமருக்கு பத்னியாய் வாய்த்துவிட்டால், எப்படி மகாலட்சுமி மகாவிஷ்ணுக்கு தகுதியானவளாயும் மகாவிஷ்ணு மகாலட்சுமிக்கு தகுதியானவ்ராயும் இருக்கிறாரோ அப்படித்தான் சீதைக்கு ராமரும், ராமருக்கு சீதையும் தகுதியானவர்கள். ராமர் சீதைக்கு பதிதானா என்பதை ஜனகன் இந்த சிவதனுஸ்ஸை வளைக்கச்செய்தா பரீக்ஷித்தறிய வேண்டும். சூரியனுக்கு பிரகாசம் இருக்கிறது என்பதை தீபத்தைக் கொண்டு பரீக்ஷிப்பதில்லை. ராமரும் தசரத ராஜகுமாரன். சீதையும் ஜனக ராஜகுமாரி. ராமரும் அழகன். சீதையும் அழகி இருவரும் ஸமானமாய் இருக்கிறார்கள். ஆதலால் ஸ்ரீராமர் தான் சீதையின் பாணிக்ரஹணம் செய்யட்டும். இதை ஸ்ரீநாராயணர் முடித்துக்கொடுக்கட்டும். நாம் இதுவரை செய்திருந்த எங்கள் புண்யங்களை இதற்காக தத்தம் செய்கின்றோம்.

ராமர் தனுஸ்ஸை ஒடித்தது.

என்று இவ்வாறு மிதிலையின் ஸ்திரீ ஜனங்கள் பேசும் புருஷர்களின் காதுக்கினிமையாயுள்ள இந்த வார்த்தைகளை எல்லாம் கேட்டுக்கொண்டு, ராமர் சிறிதும் ஆச்சரியப்படாதவராய் புன்னகைக் காட்டிக்கொண்டு தனுஸ்ஸின் சமீபம் சென்று அலக்ஷியமாகவே இடது கையால் தனுஸ்ஸை தூக்கினார். ஆயிரக்கணக்கான ஜனங்கள் இதைக் கண்டு திடுக்கிட்டு ஆவலுடன் பார்த்திருக்கவும், நல்லது ஆகட்டும், என்று ஜனகராஜனும் விச்வாமித்ர முனிவரும் சொல்லிக் கொண்டிருக்கவும், தம்பி லக்ஷ்மணன் புன்னகைக் காட்டி சிரித்துக் கொண்டிருக்கவும், ராமர் விளையாட்டாகவே தனுஸ்ஸில் நாணேற்றினார். ஓர் பனைமரம் நீண்டிருந்த அந்த மகாதனுஸ்ஸை நாணேற்றுவதற்காக லோகநாதனான ராகவன் இழுக்கவும், மகேந்திரனின் யானையான ஐராவதம் கருப்பங்கழியை இழுத்தால் எப்படியோ அப்படி சிறிதும் சிரமமின்றி நடுவில் முறிந்தது. அந்த சிவதனுஸ்ஸு முறிந்த சப்தம் மிகுந்த

வேகமுள்ள ஓர் தூதனைப் போல் ஸ்ரீராமருக்கு சீதை கிடைத்துவிட்டாள் என்ற செய்தியை உத்கோஷிப்பது போல் மூவுலகிலும் பரவியது. ஒருக்காலும் ஒருவராலும் ஒடிக்க மாளாத அந்த உத்தம சாபமான சிவதனுஸ்ஸை மேலான காரியங்களிலுள்ள அந்த ராமர் ஒடித்தெறிந்து சுபலக்ஷணங்களுள்ள லக்ஷ்மண ஸமேதராய் விச்வாமித்ரரின் முகசந்திரனைப் பார்த்து நின்றார்.

சீதை மாலையிட்டது.

உடனே பெயருக்கு மட்டில் ஜனகராஜனின் பெண்ணாயிருக்கும் உண்மையில் ஸாக்ஷாத் லக்ஷ்மீதேவியாகிய சீதை, வேதத்தின் கர்ப்பத்திலிருந்து வேத வாக்கு போல், ஸமஸ்த ஸம்பத்துகள் நிறைந்த அந்தப் புரத்தினின்றும் வெளிக்கிளம்பினாள். கால் சிலம்புகளின் சப்தம் எல்லா திக்குகளிலும் ஒலிக்க, நடை அழகால் ராஜ ஹம்ஸத்தின் நடையை லஜ்ஜைப்படச் செய்து, ஒவ்வொரு காலடி வைக்கும் பொழுதும், பாதங்களால் வெகு மனோஹரமாய் இருப்பவளான, சீதை மெதுவாய் ஸ்ரீராமசந்திரனிடம் வந்தாள். அடிக்கடி ஜனங்கள் பார்த்திருந்தும் ஒவ்வொரு தடவையும் புதிதாய் காணப்படுபவளாய், வாய் விட்டு சிரிக்காமல் இருந்தும் காந்தியால் சிரிப்பவளாய், வாய் விட்டுப் பேசாமல் இருந்தும் ஏதோ வார்த்தையாடுபவள்போல் காணப்படுபவளாய், ஜனங்களின் பார்வைக்கு பெரும் திருவிழாவையே உண்டாக்கினாள். சீதைக்கு இருந்து வரும் ஔதார்யம் ஸௌந்தர்யம் முதலான எல்லா குணங்களையும், சதுர்முகன் குதூஹலத்துடன் வாய் விட்டு சொல்லப் போய் முடிவில் அவரே சதுரனாகவில்லை என்றால் யார் தான் ஸம்பூர்ணமாய் அவைகளைச் சொல்வார். வெகு வேகமாய் ஓடும் வெள்ளமுடைய லஜ்ஜையாகிய ஆற்றை பக்தி மகா சமுத்ரமாகிய வெள்ளத்தால் அலக்ஷ்யம் செய்து விட்டு, மெதுவாய் கடைக் கண்ணால் மங்கள சரீரமுள்ள ஜகதீசுவரான ஸ்ரீராமசந்திரனைப் பார்த்தாள். சிரித்த முகமுள்ளவரும் கமலக் கண்ணரும் ச்யாமளவர்ணரும் நல்ல வாசனையுள்ள சிவந்த சந்தனம் பூசியவரும் சூரரும் பாலரும் ப்ரஜைகளின் சரணரும் மனோஹரருமான ஸ்ரீராமனைப் பார்த்து விட்டு, மனோஹரையான சீதை சந்தோஷப்பட்டாள். உடனே சீதை புதிய சந்தனத்தில் தோய்ந்த

ஸுவர்ண மயமான கமல மலர் மாலையை ஸ்ரீராமசந்திரனின் கழுத்தில் போட்டாள். ஸ்ரீராமரும் சீதையிடம் சிநேக மாகிற அமிர்தம் தோய்ந்த மனோரம்யமான பார்வையைப் போட்டார். பிரம்மா, ருத்திரன், இந்திரன் முதலானவர்கள் பரிவார தேவர்களுடன் கூடியவர்களாய் ஸுந்தரியாகிய ஸீதையுடன் சேர்ந்த ஸுந்தரனாயிருப்பவரும் ஸமஸ்த ஜீவராசிகளின் தந்தையும் ஆதிபுருஷருமான ஸ்ரீராமரை ஸ்தோத்திரம் செய்தனர். இவர்களைப் பார்த்து சந்தோஷமடைந்தனர். அச்சமயம் நடந்த கந்தர்வர்களின் சங்கீத த்வனியையும் அப்ஸரஸுகளின் நர்த்தனத்தையும் தேவ ஸ்திரீகள் ஸமர்ப்பணம் செய்த உத்தமமான பாரிஜாத மலர்களையும் வாத்ய கோஷங்களையும் தங்களுக்கு காட்டிய மரியாதைகளையும் ஸ்ரீராமரும் அவருடைய பாரியாளான சீதையும் ஏற்றுக் கொண்டு மிகுந்த சந்தோஷம் அடைந்தனர்.

7வது ஸர்க்கம் முடிந்தது.

8வது ஸர்க்கம்

ஜனகன் தசரதனை விவாகத்திற்கு அழைத்தல்.

விச்வாமித்ரரின் அனுமதியின் பேரில் ஜனகராஜன் ஸ்ரீராமரின் ஜனகனான தசரதனுக்கு தூதர்களை அனுப்பிவைத்தான். அந்த தூதர்கள் மூன்று நாட்கள் வழி நடந்து தசரதனின் அரண்மனை வந்து சேர்ந்து ஹம்ஸ பக்ஷிகள் மானஸஸரோவரத்தை அடைந்து சோர்ந்து களைப்பாறினது போல், சோர்ந்து போய் களைப்பாறினார்கள். பிறகு மந்திரிமார்களுடன் சூழ்ந்திருந்த தசரதனிடம் நன்றாய் அஞ்சலி கூப்பிக் கொண்டு விதேஹ தேசத்து மன்னனான ஜனகன் சொல்லச் சொன்ன காரியத்தை இவ்வாறு சொன்னார்கள். "உலகிலுள்ள எல்லா வீரர்களும் என் சிவதனுஸ்ஸுவை அணுகி அதை நாணேற்ற முடியாமல் திரும்பிப் போயினர். கமலக் கண்ணரான ஸ்ரீராமன் அந்த தனுஸ்ஸை நாணேற்றப் போய் ஒடித்தார். என் பெண்ணான சீதை மேல் நடக்க வேண்டியதைத் யோசிக்கலாமென்று உத்தேசங்

கொண்டு ஸ்ரீராமரிடம் அன்பு கொண்டிருக்கிறாள். தங்கள் நண்பரான விசுவாமித்ரர் தங்களை எதிர்பார்க்கிறார். தங்கள் திருமகனான ஸ்ரீராமபிரானின் கல்யாணத்திற்கு தாங்கள் தங்கள் பந்துக்களுடன் வந்து சேருங்கள்".

தசரதனின் புறப்பாடு.

என்று தூதர்கள் சொன்னதை அஜகுமாரனான தசரதன் கேட்டு சந்தோஷமடைந்து, மந்திரிமார்களுடன் யோசனை செய்து, அன்றிரவு முடிந்ததும் பிரயாணம் செய்வதாய் நிச்சயம் செய்தார். அதற்கு முன்பே பெருந்துகையுடன் தூதர்களை அனுப்பி வைத்தான். மந்திரியான ஸுமந்திரரும் தசரதனின் உத்தரவின் பேரில் வேகமாய்ச் செல்லும் ரதத்தை ஏற்பாடு செய்தார். தசரதன் மந்திரி மார்களுடனும் பிராம்மணர்களுடனும் ரதகஜதுரக பதாதிகளுடன் கூடிய சதுரங்க சைனியத்தை கௌஸல்யை, ஸுமித்திரை, கைகேயி, முதலான பத்னிமார்களுடனும், வசிஷ்டர் முதலான புரோஹிதர்களுடனும் கூடி அயோத்தியினின்றும் வெளிக்கிளம்பினார். சுயம் ரதத்தில் ஏறி ஜனகனின் இடத்திற்கு வந்து சேர்ந்தார்.

ஜனகரின் ப்ரார்த்தனை

தன் மிதிலா நகரத்தினுள்ளே வரப்போகும் தசரதனை, ஜனகராஜன் கண்டு, சதாநந்தர் முதலியவர்களுடன் கூடி ஆனந்தமாய் எதிர் கொண்டழைத்தார். தசரதரை பட்டண பிரவேசம் செய்வித்து, சாஸ்திரக்ஞனான ஜனகன் சாஸ்திரப்படி மரியாதை செய்து ரிஷிச்ரேஷ்டர்களின் நடுவில் அவரைப் பார்த்து இவ்வாறு சொன்னார். ராஜச்ரேஷ்டரே! தெய்வாதீனமாய்த்தான் தங்களைப் பார்த்தேன். தங்களைக் காண்பது எளிதல்ல. என் விசேஷ நண்பர்களான ரகு குலத்தார்களுடன் இப்பேர்ப்பட்ட பந்துத்வம் தெய்வாதீனமாய் ஏற்பட்டது. ராமருக்கும் லக்ஷ்மணருக்கும் கூட என்னுடைய இரண்டு பெண்களை விவாகம் செய்து கொடுக்கப் போகிறேன். ஸீதையையும் ஊர்மிளையையும் ஸ்ரீராமர் லக்ஷ்மணர்களுக்கு கொடுத்து, என் மகாயக்ஞத்தை நிச்சயமாய் முடிக்கப் போகிறேன், என்று ஜனகன் சொல்லவும், ரகுகுலத்தரசனான

தசரதன் சிறிது சிரித்துக்கொண்டு, பெறுவது தருபவரின் அதீனமாய் இருப்பதால் அப்படியே நடக்கட்டுமென்று சொல்லி விட்டு, பிள்ளைகளுடனும் எப்போதுமே பகவத் கதைகளைப் பேசும் விசுவாமித்ர வசிஷ்டாதிகளுடனும் வேறொரு அரண்மனை யில் தங்கினார்.

விவாகச் சடங்குகள் நடந்தது.

மறுநாள் ஜனகன் இந்த விவாகத்திற்காக தன் தம்பியும் வீரனுமான குசத்வஜராஜனை இக்ஷுமதீதீரத்திலிருந்தும் தூதர்கள் மூலமாய் வரவழைத்தான். நற்குலத்தில் பிறந்த இந்த அரசர் களுக்கு அவரவர்களின் குலாசார்யர்கள் குலதர்மங்களை நடத்தி வைத்தனர். சபையில் அரசர்களின் எதிரில் வசிஷ்டர் பிள்ளையின் வம்சத்தை எடுத்துச் சொன்னார். இதில் இக்ஷ்வாகு ராஜன், மாந்தாத சக்கரவர்த்தி, ஸகரராஜன், அம்பரீஷன், ரகு முதலான விஷ்ணு பக்தர்களான சக்கரவர்த்திகள் சொல்லப்பட்டனர். ஜனகராஜனும் ரிஷிகளின் ஆக்ஞையின் பேரில் பெண்ணின் வம்சத்தையும் எடுத்துச் சொன்னார். அதில் நிமிராஜன் தேவராஜன் ஹ்ரஸ்வரோமா முதலான அரசர்கள் சொல்லப் பட்டனர். ராமலக்ஷ்மணர்களுக்கு சீதா ஊர்மிளா தேவியார் களுடன் விவாகம் செய்து வைப்பதாய் ஜனகன் வாக்தானம் செய்தார். அப்பொழுது விச்வாமித்ரரும் வசிஷ்டரும் ஜனகனைப் பார்த்து சொன்னார்கள் "உம்முடைய தம்பியான குசத்வஜ ராஜ னுடைய அழகால் ஜொலிக்கும் மங்களமானவர்களான இரண்டு பெண்களை பரதனுக்கும் சத்ருக்னனுக்கும் அவசியம் விவாகம் செய்து கொடுக்கத் தகுந்தது" என்று சொன்னார்கள். இவ்விரு ரிஷிச்ரேஷ்டர்களின் வார்த்தைகளைக் கேட்டு இது நாங்கள் பிரார்த்திக்கத் தகுந்ததே ஆகும். இதைத் தான் நீங்கள் சொல்லி யிருக்கிறீர்கள். நாளை நடக்கும் உத்ஸவத்தில் இவைகளையும் நாம் நடத்துகிறோம் என்று அந்த மைதிலர்களான ஜனகனும் குசத் வஜனும் ஒப்புக்கொண்டனர். பிறகு தசரதன் பிராம்மணர்களை அழைத்து நாராயணன் சந்தோஷமடையட்டுமென்று நாந்தி ச்ராத்தங்களை நான்கு குமாரர்களுக்குமே சௌக்யத்திற்காக செய்து பிராம்மணர்களுக்கு ஸுவர்ணம் வஸ்திரங்களுடன்

கூடிய நாலாயிரம் பசுக்களை பணத்தோடும் ஆகாரங்களோடும் கொடுத்து, அவர்களை சந்தோஷப்படுத்தினார். அச்சமயம் பரதனு டைய தாய் மாமனான யுதாஜித்ராஜனும் அங்கு வந்து சேர்ந்தார். பந்துக்களுடன் கூடி தசரதனும் பிராம்மணர்கள் மூலமாய் புண் யாஹவாசனம் செய்து சௌண்டு குணங்களால் பூஷிதர்களான நான்கு குமாரர்களையும் பூஷணங்களால் அலங்காரம் செய்தார். தசரதராஜன் எப்படிச் செய்தாரோ அப்படித்தான் ஜனகராஜன் குசத்வஜராஜன் இவ்விருவர்களும் தம் புரோஹிதரான சதா நந்தரின் அபிப்பிராயத்தின்படி பெண்களுக்கு செய்யவேண்டிய தான சடங்குகளைச் செய்து முடித்தனர். (தொடரும்)

யக்ஞத்தில்
ஸ்மார்த்த பிராம்மணர்களின் மாம்ஸபக்ஷணம்.

(முன் 76ம் பக்கம் தொடர்ச்சி)

சுக்லயஜுஸ் ஸம்ஹிதை பதின்மூன்றாவது அத்யாயத்தில் "காம் மா ஹிம்ஸீ: (43) இமம் மா ஹிம்ஸீ: த்வி பாதம் பசும் (47) இமம் மா ஹிம்ஸீ: ஏகசபம் பசும் கனிக்ரத வாஜினம் வாஜிநேஷு (48) க்ருதம் ஸஹஸ்ரமிதிம் ஜஞ்யாக்னே மா ஹிம்ஸீ: கவயம் (49) இமமூர்ணாயும் வருணஸ்ய நாபிம் த்வசம் பசூனாம் த்விபதம் சதுஷ் பதாம் மாஹிம்ஸீ: உஷ்ட்ரமாரண்யம்" (50) பசுவைக்கொல்லாதே இரண்டு கால் பிராணிகளையும் பசுவையும் கொல்லாதே; ஒத்தைக் குளம்புள்ள பிராணியையும் கொல்லாதே, ஏனெனில் அப்பேர்ப்பட்ட தான குதிரை யுத்தத்தில் உபயோகப்படுகிறது. ஜனங்களுக்கு நெய்யை பூர்த்தி செய்து கொடுக்கும் பசுவையும் அதைப் போன்றதையும், ஹே அக்னியே! நீ ஹிம்சை செய்யாதே; சரீரத்தில் உரோமமுள்ள ஆடு என்ன, அரண்யத்திலுள்ள ஒட்டகை என்ன, இரண்டு கால்களுள்ள பிராணி என்ன, நான்கு கால்கள் பிராணி என்ன. இவை முதலான

வைகளின் மேல் தோலையும் துக்கப்படுத்தாதே என்று சொல்லப்பட்டிருக்கிறது. இரு கால் பிராணிகளையும், நான்கு கால் பிராணிகளையும் எதையுமே ஹிம்சிக்கக்கூடாதென்றும், அவைகளின் மீதுள்ள மேல் தோல் கூட நோவும்படி செய்யலாகாதென்றும் வேதமந்திரங்களில் சொல்லப்பட்டிருக்கும்பொழுது, ஆட்டை சித்திரவதை செய்யும்படி இந்த யஜுர் வேதத்தில் சொல்லப்பட்டிருக்குமாவென்பதை வாசகர்கள் யோசிக்க வேண்டும். ஏன் இந்த பசுவைக் கொல்லலாகாதென்பதற்கு "க்ருதம் துஹாநாம்" என்ற காரணமும் சொல்லப்பட்டிருக்கிறது. இவை பால் தயிர் வெண்ணெ நெய் முதலியவைகளால் உலகத்தாருக்கு திருப்தி செய்விக்கிறதாதலால் எங்களுக்கு உபகாரம் செய்யும் பிராணிகளை கொல்லக்கூடாதென்று நிஷேதிக்கிறது. பாலைத் தந்து உதவுவது பசுமட்டில் அன்று, ஆடும் பால் கறக்கிறது. ஒட்டகையும் கழுதையும் கூட சில பிராந்தியங்களில் பால் கறக்கின்றன. ஆதலால் அவைகள் எதையுமே கொல்லலாகாதென்று வேதம் நிஷேதிக்கிறது. இப்படியேதான் மாடும் குதிரையும் ஜனங்களுக்கு உபயோகப்படுகிறது. இவை வண்டி கலப்பை முதலியவைகள் இழுத்து தானியங்களின் உற்பத்திக்கு காரணமாகின்றன. ஆதலால் எந்தப்ராணியுமே அது இரண்டு காலுள்ளவைகளாயிருந்தாலும் சரி நான்கு காலுள்ளவைகளாய் இருந்தாலும் சரி அதை ஹிம்சிக்கலாகாது என்று ஸ்பஷ்டமாய் வேதம் கூறுகிறது.

சுக்லயஜுஸ் 4வது அத்யாயத்தில் ஓஷதே த்ராயஸ்வ ஸ்வதிதே மைனம் ஹிம்ஸீ: ஹே ஓஷதியே! இந்த ப்ராணியை ஸம்ரக்ஷணம் செய். ஓ ஆயுதமே! இந்த ப்ராணியை ஹிம்சிக்காதே என்று ப்ரார்த்திக்கப்படுகிறது. இதில் ஓர் இரகசியம் அடங்கியிருக்கிறது. அதாவது இந்த மந்திரம் சொல்லித்தான் யக்ஞத்தில் ஆடு அறுக்கப்படுகிறது. "ஓஷதியே! இதைக் காப்பாற்று ஆயுதமே! இதை ஹிம்சிக்காதே என்று சொல்லிக்கொண்டே ஆடு அறுக்கப்படுகிறதென்றால், இந்த வேதமந்த்ரத்தால் அறிவிக்கப்படும் அர்த்தத்திற்கும் இந்த வேதமந்த்ரத்தால் செய்யப்படும் காரியத்திற்கும் பொருத்தமாய இருக்கிறதாவென்பதை வாசகர்கள் கவனிக்கவேண்டியது அவசியமாகும். எதைச் செய்யாதே என்று எந்த மந்தரம் சொல்லுகிறதோ, அந்த மந்த்ரத்தைக் கொண்டே அதையே செய்வதென்றால், இதைவிட வெட்கக்கேடான காரியம் யாது உண்டு? இவ்வாறு வெட்டவெளிச்சமாய் விரோதமாயுள்ள மந்த்ரத்தைக் கொண்டு யக்ஞத்தில் ஆட்டை அறுப்பதைக் கொண்டே, ஆட்டை அறுப்பதற்கு சாதகமான எந்த மந்த்ரமும் வேதத்

தில் இல்லவே இல்லை என்றும், அப்படி சாதகமான எந்த மந்திரமாவது காணப்பட்டால் அதைக்கொண்டு ஆட்டை அறுக்கப்படும் என்றும் நன்றாய் வெளியாகிறது. இவ்வாறு இருப்பதால்தான் மேற்கண்ட 1வது பிரமாணத்தில் கண்டபடி பிருஹஸ்பதியின் பிரசினத்திற்கு "பசு ஹிம்ஸா வாரிதாச யஜுர்வேதாதி மந்த்ரத:" யஜுர் வேத மந்திரங்களாலே பசு வதை கூடாது என்று தடுக்கப்பட்டிருக்கிறதே; நானு கூடாது என்று சொல்லுகிறேன்; என்று உபரிசரவஸு சொல்லியிருக்கிறார். வேதவித்தாகவும் வேதார்த்தத்தை நிர்ணயம் செய்தவருமான ஸ்ரீவேதவியாஸரும் இவ்வாறுதான் அர்த்தம் செய்து இச்சந்தர்பத்தில் தன் அர்த்தத்தைப் புகவிட்டிருக்கிறார். இப்படியேத்தான் எல்லா பாஷ்யகாரர்களும் அஹிம்ஸா பரமாகத்தான் இந்த மந்த்ரத்திற்கு அர்த்தம் செய்திருக்கின்றனர். இதற்கு மாறாக ஹிம்ஸாபரமாக இம்மந்திரத்திற்கு அர்த்தம் செய்யவும் இந்த மந்த்ரத்தில் எந்த பதமும் இடம் தரகூடியதாய் இல்லை. சிறிது அவகாசமிருந்தால் யாராவது எப்படியாவது ஹிம்ஸா அர்த்தத்தை புகவிட்டிருப்பார்கள் நிரவகாசமாய் இது ப்ராணி ஹிம்சையைத் தடுக்கிறது. இப்படி இந்த மந்த்ரத்தைச் சொல்லியே பசு வதை செய்வதைப் பார்த்துவிட்டு, கௌத்ஸர் என்பவருக்கு மிகுந்த சந்தேகம் வந்து, அவருடைய குருவான யாஸ்க முனிவரை இவ்வாறு பிரசினம் செய்தார். "அனுபபன்னார்த்தா பவந்தி! ஓஷதே த்ராய ஸ்வைனம் ஸ்வதிதே மைனம் ஹிம்ஸீரித் யாஹ ஹிம்ஸன்" (நிருக்தம். பூ. அ. 1. பா 5 கண். 1) குருவே! இந்த வேத மந்திரம் பொருத்தமான அர்த்தமுள்ளதாய் காணப்படுகிறதில்லையே! "ஓஷதியே! இதை ரக்ஷணம் செய். ஆயுதமே! இதைக் கொல்லாதே" என்று மந்திரத்தைச் சொல்லி, பிராணி ஹிம்சை செய்யப்படுகிறதே இதற்கு காரணமென்னவென்று கேட்டார். அதற்கு வேதார்த்தங்களை நிர்ணயித்துக் கொடுக்கும் நிருக்தகாரரான யாஸ்க முனிவர் பதில் சொன்னதாவது:—"யதோ ஏததனுபபன்னார்த்தா பவந்தீத்யாம்னாய வசனாத் அஹிம்ஸா ப்ரதீயேத! கைஷ ஸ்தாணோர பராத: ஸபவதி (நிருக்த பூ. அ. 1—5—2)" ஒருவன் செய்யும் காரியத்தின்படி வேதமந்திரம் பொருத்தமான அர்த்தமுள்ளதாய் இல்லை என்று கேட்டதற்கு இது தான் ஸமாதானம், வேத மந்திரத்தின்படி அஹிம்ஸைதான் ஸ்பஷ்டமாய் ஏற்படுகிறது. குருடனுக்கு எதிரில் இருக்கும் கம்பம் தெரிவதில்லை என்றால் இது கம்பத்தின் குற்றமா என்ன? அது அந்த மனுஷ்யனின் குற்றமே ஆகும் என்றார். ஓர் குருடன் கம்பத்தில் மோதிக்கொண்டு மண்டையை உடைத்துக்கொண்டு

கை கால்களை ஒடித்துக்கொண்டான் என்றால், நாம் கம்பத்தின் மீது பழிபோடுவதா? அது போல் வேதமந்திரம் ஸ்பஷ்டமாய் அஹிம்சையைக் கூறிக்கொண்டிருக்க அதைச் சிறிதும் கவனியாமல் குருட்டுத்தனமாய் கேவலம் அவிவேகத்தால் ஆடு அறுத்து, பிராணி ஹிம்சை செய்து, பாழாய் போனானென்றால் வேதம் என்ன செய்யும்? அதன் மீது என்ன குற்றம்? வேதம் என்னமோ ஸ்பஷ்டமாய் ஜீவஹிம்சை கூடாதென்று சொல்லுகிறது என்றார்.

இவ்வாறு யஜுர்வேதம் பிராணி ஹிம்சை கூடாதென்று அறிவித்திருப்பதுடன் 'எல்லாப் பிராணிகளையும் சிநேக பாவத்தால் தான் நடத்தப் படவேண்டும் என்று 36 வது அத்தியாயத்தில் ஸ்பஷ்டமாய் கூறுகிறது. "மித்ரஸ்யாஹம் சக்ஷுஷா ஸர்வாணி பூதானி ஸமீக்ஷே। மித்ரஸ்ய சக்ஷுஷா ஸமீக்ஷாமஹே" (18) ஸுமித்ரியா ந ஆப ஓஷதயஸ்ஸந்து துர்மித்ரியா ஸ்தஸ்மை ஸந்து। யோஸ்மான் த்வேஷ்டி யஞ்சவயம் த்விஷ்ம: (23) நான் எல்லா பிராணிகளையும் சிநேக பாவத்தால் காண்கிறேன். சிநேக பாவத்தால் நாம் பார்க்கிறோம். என்றும் ஜலமும் ஓஷதி வகையறாவும் எங்களுக்கு நன்மையைச் செய்கின்றன; எங்களுக்கு த்வேஷம் எவை செய்கின்றனவோ நாம் எவைகளுக்கு த்வேஷம் செய்கின்றோமோ, அவைகளுக்கு ஜலமும் ஓஷதி வகையறாக்களும் கெடுதலை உண்டாக்குகின்றன என்றும் சொல்லப்படுகிறது. இதனால் எங்களிடம் பகை காட்டும் சிங்கம் புலி முதலிய கொடிய விலங்குகளிடம் நாம் த்வேஷிக்கலாமென்றும், அதற்கு ஈசுவர ஸங்கல்பத்தால் ஜலமும் ஓஷதி முதலியவைகளும் ஸகாயம் செய்யும் என்றும், பால் முதலியவைகளைக் கொடுத்தும், நிலம் சாகுபடி முதலியவைகளில் உதவியும், எங்களை போஷிக்கும் ஆடு மாடு முதலியவைகளை நாம் சிநேக பாவத்துடன் நடத்த வேண்டுமென்றும் அதற்கு மாறாக நடத்தினால் ஜலம் ஓஷதி முதலியவைகள் நமக்கு விரோதமாக ஏற்படுமென்றும், தெரிகிறது. இவ்வாறு பொதுவாய் ஆடு மாடு முதலான பசுக்களை வதம் செய்யலாகாதென்று சொன்னது போதாதென்று நினைத்து பிராமணத்தில் ஸ்பஷ்டமாகவே யக்ஞத்தில் ஆடு மாடுகளை அடிக்க வேண்டாமென்றும் அதன் மாமிசத்தை புஜிக்க வேண்டாமென்றும் வேதம் தடுத்திருக்கிறது.

ஐதரேய ப்ராம்மணம் இரண்டாவது பஞ்சாதியில் சொல்லப்பட்டிருப்பதாவது:—

"புருஷம் வைதேவா: பசுமாலபந்த। தஸ்மாத் அச்வோமேத உதக்ராமத்। ஸோச்வம் ப்ராவிசத் தஸ்மாத் அச்வோமேத்யோ அபவத்। அதைனமுத்க்ராமந்தமேதம் அத்யார்ஜந்த। ஸ கிம்புருஷோபவத்। தே அச்வமாலபந்த। ஸோ அச்வா தாலப்தாதுதாதக்ராமத்। ஸகாம் ப்ராவிசத்। தஸ்மாத் கௌர்மேத்யோபவத்। அதைனமுத்க்ராமந்தமேத மத்யார்ஜந்த। ஸ கௌர மிருகோபவத்। தே காமாலபந்த। ஸகோராலப்தாத் உதக்ராமத் ஸோ அவிம் ப்ராவிசத்। தஸ்மாதவிர் மேத்யோபவத்। அதைனமுதக் ராமந்த மேத மத்யார்ஜந்த। ஸ கவயோ பவத்। தே அவிமாலபந்த। ஸோவேராலப்தாதுதக்ராமத்। ஸோஜம் ப்ராவிசத்। தஸ்மாதஜோ மேத்யோ பவத்। அதைனமுத்க்ராமந்தமேத மத்யார்ஜந்த। ஸ உஷ்ட்ரோ பவத்। ஸோஜே ஜ்யோக்த மாமிவாரமத। தஸ்மாதேஷ ஏதேஷாம் பசூனாம் ப்ரயுக்ததமோ யதஜஸ்தே ஜமாலபந்த। ஸோஜா தாலப்தாதுதக்ராமத்ஸ இமாம் ப்ராவிசத்। தஸ்மாதியம் மேத்யாபவத்। அதைனமுத்க்ராமந்த மேத மத்யார்ஜந்த। ஸ சரபோ பவத்। த ஏவஉத்க்ராந்த மேதா அமேத்யா: பசவ:। தஸ்மாதேதேஷாம் நாச்னீயாத் தமஸ்யாவமன்வ கச்சத் ஸோனுகதோ வ்ரீஹிரபவத்। தத்யத்பசௌ புரோளாசமனு நிர்வபத்தி। ஸமேதேன ந: பசுனேஷ்ட மஸத்। கேவலேன ந: பசுனேஷ்ட மஸத்। இதி। ஸமேதேன ஹாஸ்ய பசுனேஷ்டம் பவதி। கேவலேன ஹாஸ்ய பசுனேஷ்டம் பவதி ய எவம் வேத॥"

தேவர்கள் முன்னொரு சமயம் யக்ஞத்தில் மனுஷ்யனை பசுவாகக் கொன்றனர். உடனே அந்த மனுஷ்ய சரீரத்தினின்றும் அங்கிருந்து வந்த யக்ஞத்தில் ஹோமம் செய்யப்பட அர்ஹமான ஹவிர்பாகம், அந்த மனுஷ்யனை விட்டு குதிரையின் சரீரத்தில் பிரவேசித்தது. அதனால் குதிரை யக்ஞத்தில் கொல்லப்பட அருஹமான பசுவாய் ஆயிற்று. மனுஷ்யனின் சரீரத்திலிருந்து ஹவிர்பாகம் வெளியேறி விட்டதால் யக்ஞத்தில் மனுஷ்யனை பசுவாய் கொல்லுவதை அவர்கள் விட்டு விட்டனர். அதன்பின் அந்த மனுஷ்ய சரீரத்திலிருந்து கிம்புருஷன் பிறந்தான். அது முதல் குதிரையை தேவர்கள் யக்ஞத்தில் பசுவாய்ச் செய்து கொன்று வந்தனர். பினபு அந்த குதிரையின் சரீரத்தினின்றும் யக்ஞத்தில் ஹோமம் செய்யப்பட வேண்டியதான ஹவிர்பாகம் வெளிக்கிளம்பி பசுமாட்டிற் பிரவேசித்தது. அதனால் பசுமாடு யக்ஞ பசுவாய் ஆகிவிட்டது. ஹவிர்பாகம் வெளியேறி விட்டதால் குதிரையை விட்டு விட்டனர். அந்த குதிரையின் சரீரத்தினின்றும் கௌர

மிரும் அதாவது வெள்ளைமான் உண்டாயிற்று, பிறகு தேவர்கள் யக்ஞத்தில் பசுமாட்டைக் கொன்றனர். உடனே அந்த பசுமாட்டின் சரீரத்தினின்றும் ஹவிர்பாகமானது செம்மறி ஆட்டில் பிரவேசித்தது அதனும் செம்மறி ஆடு யக்ஞ பசுவாய் ஆயிற்று. பசுமாட்டிலிருந்து ஹவிர்பாகம் வெளிக் கிளம்பிப் போனதால் பசுமாட்டை யக்ஞத்தில் பசுவாய்க் கொள்வதை விட்டு விட்டனர். பிறகு அந்த பசுமாட்டிலிருந்து கவய மிருகம் உண்டாயிற்று. ஹவிர்பாகம் செம்மறி ஆட்டில் பிரவேசித்து விட்டதால் அது முதல் தேவர்கள் பசுமாட்டை விட்டு செம்மறி ஆட்டைத்தான் யக்ஞத்தில் கொன்றனர். பின்பு அந்த செம்மறி ஆட்டின் சரீரத்தினின்றும் ஹவிர்பாகம் வெளிக்கிளம்பி வெள்ளாட்டில் பிரவேசித்தது. அதனல் அது முதற்கொண்டு வெள்ளாடு யக்ஞ பசுவாய் ஆயிற்று. ஹவிர்பாகம் வெளியே போய் விட்டதால் செம்மறி ஆட்டை யக்ஞத்தில் கொல்லப்படுவதை விட்டு விட்டனர். அந்த சரீரத்தினின்றும் ஒட்டகை பிறந்தது. யக்ஞத்தில் ஹோமம் செய்யப்படவேண்டிய ஹவிர்பாகம் வெள்ளாட்டிலேயே நின்றது. பிறகு தேவர்கள் வெள்ளாட்டை யக்ஞத்தில் கொன்றனர். பிறகு அந்த வெள்ளாட்டினின்றும் ஹவிர்பாகம் வெளிக்கிளம்பியது. அந்த ஹவிர்பாகம் பூமியில் பிரவேசித்தது. அதனல் பூமியானது யக்ஞ சம்பந்தமாயிற்று. அதனல் தேவர்கள் யக்ஞத்தில் வெள்ளாட்டை பசுவாய்க் கொள்வதை விட்டனர். பிறகு அந்த வெள்ளாட்டின் சரீரத்தினின்றும் சாபமிருகம் உண்டாயிற்று. இவ்வாறு இந்த பிராணிகளின் சரீரத்தினின்றும் யக்ஞத்தில் ஹோமம் செய்யப்பட வேண்டியதாயுள்ள ஹவிர்பாகம் வெளிக்கிளம்பி போய் விட்டதன் நிமித்தம் இந்த எல்லா பசுக்களும் யக்ஞத்திற்கு உபயோகிக்க அருகமாகாதவைகளாய் அமேத்யங்களாய் ஆயின. அகவே இந்த பிராணிகளின் மாமிஸத்தை யக்ஞத்தில்புஜிக்கலாகாது. யக்ஞத்தில் ஹோமம் செய்யப்பட வேண்டிய ஹவிர்பாகம் எல்லா பிராணிகளையும் விட்டு பூமியில் வந்து சேர்ந்த பிறகு, எல்லா தேவர்களும் பூமியில் வந்து கூடினர். இதற்குள் பூமியினின்றும் நெல் (அரிசி) உண்டாயிற்று. ஆதலால் தேவர்கள் மனுஷ்யன் குதிரை முதலான பசுக்களிடமிருந்த ஹவிர்பாகம் எல்லாம் புரோடாசத்தில் அதாவது நெல்லில் பிரவேசித்ததால் புரோடாசத்தையே ஹோமம் செய்தனர்.

(தொடரும்)

ஸ்ரீ நாராயண பண்டிதாசாரியார் இயற்றிய

ஸ்ரீ மத்வ விஜயம்.

பதின்மூன்றுவது ஸர்க்கம்

(முன் 6ம் பக்கம் தொடர்ச்சி.)

ஜயசிம்ஹராஜன் ஸ்ரீமத்வாசாரியாரை அழைத்தது

1. இவ்வாறு ஸ்ரீமத்வாசாரியார் ப்ராக்ர்யவாடம் என்னும் ஊரில் சாதுர்மாஸ்ய ஸங்கல்பத்துக்காக தங்கியிருந்து ஸங்கல்பம் முடிந்து பௌர்ணமியன்று எழுந்த சமயம், அங்கு தான் சாதுர்மாஸ்யத்திற்காக தங்கியிருந்த பத்மதீர்த்தன் என்ற அத்வைதி ஸன்னியாஸி ஒருவரிடமும் சொல்லாமல், நடுநிசியில் அவ்வூரை விட்டு சென்றதன் நிமித்தம், காணமற்போன ஸ்ரீமத்வாசாரியாரின் புத்தக மூட்டைகள் அந்த பத்மதீர்த்தனலேயே களவாடப்பட்டிருக்க வேண்டுமென்று அவ்வூரார் அவரைத் தொடர்ந்துபோய் பரீக்ஷித்ததில், அவருடைய கைவசமிருந்த அந்த புத்தக மூட்டைகளை திருப்பிக்கொணர்ந்து மத்வாசாரியாரிடம் கொடுக்க, ஸ்ரீமத்வாசாரியார் அவைகளைப் பெருமல் அந்நாட்டு அரசன் இதன் உண்மையை அறிந்து, பத்மதீர்த்தனை திரஸ்கரிக்கும் வரை அந்த கிராமத்திய அதிகாரியிடமே அப்புஸ்தக மூட்டைகளை இருக்கும்படி செய்து, அவ்வூரை விட்டு புறப்பட்டு, அவருடைய சிஷ்யர்களின் வேண்டுகோளுக்கிணங்கி, அவர்களை அனுக்ரஹிப்பதற்காக ஸஹ்யாத்ரி பிராந்தியத்தில் தங்கியிருக்கையில், அரசனன ஜயஸிம்ஹராஜன் ஸ்ரீமத்வாசாரியாரின் மாகாத்மியத்தைக் கேட்டு அவரை தரிசிக்க இச்சை கொண்டு, தன் நமஸ்காரத்தை அறிவிப்பதாயும் தன்னை அனுக்ரஹிக்க தன் நகருக்கு வரும்படிக்கும் சொல்லி, ஓர் தூதன் வந்து சேர்ந்தான். 2. அந்த ஜயஸிம்ஹராஜனின் தூதன் ஸ்ரீமத்வாசாரியாரை நமஸ்காரம் செய்து, ஆசார்யாளே! தங்கள் அடியார்களான எங்களைப் போன்றவர்களை அனுக்ரஹிப்பதற்காக சீக்கிரமே என் ராஜ்யத்திற்கு வரவேண்டும் என்று, சொல்லி ப்ராக்ர்யவாடத்தில் கிராமாதிகாரியின் வசமிருந்த தங்கள் புஸ்தக மூட்டைகளை திருப்பிக்கொடுப்பதற்காக தங்களை அங்குவர வேண்டுகிறூர் என்று சொன்னன். 3. இந்த வார்த்தையைக் கேட்டபின் ஸ்ரீமத்வாசாரியார் சூரியனைப் போலவே கீழ்திசையை

விட்டு மேற்திசைக்கு செல்லும்பொழுது தன் கிரணமாகிற சரண சம்பந்தத்தால் பூமியை பரிசுத்தப்படுத்திக்கொண்டு தேஜஸ்ஸால் பரிபூர்ணமாய் விளங்கினர்.

ஸ்ரீமத்வாசாரியாரின் விஷ்ணுமங்களம் பிரயாணம்

4. உத்தமமான ஆனந்தமாகிய மோக்ஷத்தைத் தரும் மங்களமான சாஸ்திரத்தை இயற்றியதால் ஸ்ரீஆனந்த தீர்த்தர் என்று சொல்லப்படுபவரான இந்த மகாக்ஞானி, அந்நகருக்கு பிரயாணம் செய்யும் பொழுது, ஸுரநதியான கங்கையின் அவிச்சின்னமான வெள்ளம் போலவே மிகவும் அதிகமாய் பிரகாசித்தார். எப்படி எனில் மாயாவாதிகளால் வசீகரம் செய்யப்பட்ட துர்ஜனங்களை விட்டு, உத்தமமான சிநேகத்துடன் முதலில் அவரை தரிசிப்பது; பிறகு அவருடைய பாதத்தை ஸ்பரிசிப்பதும், பிறகு அவருடன் பேசுவதும் இவ்வாறு இதனால் கிரமமாய் மனதின் தெளிவை அடைந்த ஸாது ஜனங்களால் ஸ்ரீமத்வாசாரியார் வேகமாய் பின் தொடரப் படுகிறார். கங்காப்ரவாஹமோ வஞ்சகர்களால் ஆசிரயமடைந்திருக்கும் சிறு சிறு குன்றுகளை விட்டு, இயற்கையாகவே ஓடுதலுள்ளதால் மழை காலத்தில் கலக்கமுடையதாயிருப்பினும் கிரமமாய் சரத்காலத்தில் தெளிவு அடைந்ததாயுள்ள, மகாபர்வதங்களில் உண்டாகும் மகாநதிகளால் பின் தொடரப்படுகிறது.

(தொடரும்.)

விசேஷ தினங்கள்.

15—11—38	மங்களவாரம்	துலாஸ்நானம் பூர்த்தி
18—11—38	சுக்ரவாரம்	ஏகாதசி உப.
21—11—38	சோமவாரம்	அமாவாசை திலதர்ப்பண விஷ்ணுப. உப.
28—11—38	சோமவாரம்	சிரவணம் உப. விஷ்ணுப.
3—12—38	சனிவாரம்	உப. ஏகாதசி உப.
7—12—38	புதவாரம்	பௌர்ணமி. விஷ்ணுப. உப

மாத்வமித்திரன் பிரசுரங்கள்.

1. ஸ்ரீ ராகவேந்திர ஸ்தோத்திரம் (தமிழிலும், தேவநாகரத்திலும் மூலமும் தமிழில் உரையும்)	0	2	0
2. ஷஷ்டி ஸ்தோத்திரம் உள்பட ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகள் அதி அற்புத ஜீவிய சரித்திரம் (தமிழ்)	0	8	0
3. ஸ்ரீவாயுஸ்துதி (தேவநாகரத்தில் மூலமும், தமிழில் உரையும் புனஸ்சரண முறையுடன்	0	5	0
4. மாத்வஸ்திரீகளின் ஸம்பிரதாய ஜபமந்த்ர ஸ்தோத்திரங்கள் (தமிழிலும், கன்னடத்திலுமுள்ள 38 அபூர்வமானவைகள் கொண்டது, இதுவரை யாவராலும் பிரசுரிக்கப்படாதது.	0	3	0
5. துவைதமத விளக்கம் (ஸ்ரீமத்வாசாரியார் ஜீவிய சரித்திரம் ஆப்டோன் படத்துடனும் தமிழ்)	–	2	9
கும்பகோண மாகாத்மியம் (தமிழ்)	0	2	0
ஸ்ரீமத் பாகவதம் விஷ்ணு புராணத்தின்படி துருவ சரித்திரம் (நாடகம்-தமிழ்)	0	4	0
மாத்ருகாமாலாஸ்தவம், நவரத்னமாலா முதலிய அற்புத ஆறு நூல்கள் (ஸம்ஸ்கிருதம் தேவநாகரத்தில்)	0	2	0
ஸ்ரீ மகாபாரத தாத்பர்ய நிர்ணயத்திலுள்ள ஸுந்தரகாண்டம் (கன்னட அர்த்தத்துடன் தேவநாகரத்தில்)	0	4	0
ஜீவப்ரம்மபேதம் ஜகத்ஸத்யம் முதலான நான்கு மத்வமத ப்ரமேயங்களை நிரூபிக்கும் பகவத்கீதாதத்வம் (தமிழிலும் தேவநாகரத்திலும் மூலமும், தமிழில் அர்த்தமும்) சுமார் 250 பக்கங்கள்	0	8	6

மாத்வமித்திரன் ஒன்று முதல் ஏழு வால்யங்கள் சுமார் 2200-பக்கங்களைக்கொண்டது மணிமஞ்ஜரி மத்வ விஜயம் ஸ்ரீ மகாபாரத தாத்பர்ய நிர்ணயம் முதலான மாத்வ கிரந்தங்கள், உபநிஷத்துக்கள் புருஷஸூக்தம் ஸந்தியாவந்தனம் முதலான மந்திரங்கள் த்வாதச ஸ்தோத்திரம் முதலான ஸ்தோத்திரங்கள் ஸ்ரீராகவேந்திரர் முதலான பல மாத்வ மகான்கள், தாஸர்கள் இவர்களின் சரித்திரங்கள் புராண விரத கதைகள் ஆசார அனுஷ்டானங்கள் தர்ம சாஸ்திர குறிப்புகள் முதலான பதினாயிரக்கணக்கான விஷயங்களைக் கொண்டது. V. P-ல் கிடையாது. பூரா பணமும் அட்வான்ஸில் தேவை. ரயில் பார்சல் செலவு தனி. முன்விலை ரூ. 21. தற்போது ரூ. 5—0—0 தான்.

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸ விலாஸம், கும்பகோணம்.

வருட சந்தா ரூ. 3. Regd. No. M. 2

டி. எஸ். ஆர். அண்டு கம்[illegible]
[illegible] மோக்ஷத்தைக் தரும், [illegible]

கும்பகோணம்.

ஸ்தாபிதம் 1909 — தந்தி விலாசம் "கோகுல்"

எங்கள் வாஸனை திரவியசாலையில் தயாரித்து விற்பனைக்குத் தயாராக இருக்கும் ஸாமான்களின் விபரம்.

வாஸனைப்பாக்கு	பலகாய்கரி ஊர்காய்கள்
வாஸனைச்சுண்ணும்பு	ரோஜாப்பூ குல்கந்து
வாஸனைப் புகையிலை	ஷர்பத் தினுசுகள்
ஸ்னானப்பவுடர்	கொப்பரைச்சீவல்
கேஸர் பவுடர்	கோகுல் கூந்தல்
அம்பர், அரகஜா	பற்பொடி [தைல
தசாங்கம்	ஊதுவத்திகள்

சந்தனாதித்தைலம், அரைக்கீரைவிதைத் தைலம், மற்றும் அநேக வாஸனை சாமான்களும் கிடைக்கும்.

கேட்லாக்குக்கு எழுதுங்கள்.

Printed at Sri Venkateswar Power Printing Works an
Published by Bhagavatha Ranganathachariar, Kumbakon

Regd. No. M. 2419.

3.

4 மாத்வஸ்ரீகளின் ஸம்பிரதாய [illegible] கண்ட

மாத்வமித்திரன்.

THE MADHWA MITRAN.

EDITOR:

Adyam Bhagavatha Ranganathachariar,
KUMBAKONAM

பௌர்ணமிதோறும் வெளிவரும்.

Vol. 11 புஸ்தகம் 11	பஹுதான்ய ஸம்வத்ஸரம் மார்கசீர்ஷ மாஸம். (பௌர்ணமி) (7-12-1938) புதவாரம்.	No. 5 நெ. 5

நெ. — பொருளடக்கம். — பக்கம்.

நெ.	பொருளடக்கம்.	பக்கம்.
1.	ஸதுபதேசம்.	129
2.	ஸ்மார்த்த பிராம்மணர்களின் மாம்ஸ பக்ஷணம்.	130
3.	ஸங்கிரஹ ராமாயணம்	136
4.	ஸ்ரீ மத்வவிஜயம் (ஸ்ரீநாராயண பண்டிதாசாரியார்)	141
5.	ஏகாதசி நிர்ணயம்	145
6.	ஸ்ரீ மகாபாரத தாத்பர்ய நிர்ணயம்	149
7.	உலக வர்த்தமானம்.	154
8.	விஷ்ணு ஸஹஸ்ரநாமம்.	158
9.	விசேஷதினங்கள்.	160

ஆசிரியர்:—ஆத்யம் பாகவத ரங்கநாதாசாரியார், கும்பகோணம்.

மாத்வமித்திரன்.

மாத்வர்களின் சாஸ்திரீயமான தமிழ் பத்திரிகை இது ஒன்றே ஸ்ரீமத்வமதத்தின் அரிய இரகசியங்கள் ஸம்பிரதாயங்கள் மாகாத்மியங்கள் புராணசரிதைகள் மாத்வவகுப்பு புண்ய புருஷர்களின் சரித்திரங்கள் வேதாந்த சர்ச்சைகள் தர்மசாஸ்திர விசாரங்கள் தினசரி விரதாதி குறிப்பு:— மகாபாரத தாத்பர்ய நிர்ணயம் முதலான அநேக கிரந்தங்களின் மொழிபெயர்ப்புகள் முதலிய எண்ணிறைந்த விஷயங்கள் நிறைந்திருக்கின்றன ஸ்ரீமத்வமதத்தை சுலபமாய் அறிந்துகொள்ள இப்பத்திரிகைக்கே உடனே சந்தாதாரராய்ச் சேருங்கள் இது பிரதி பௌர்ணமியிலும் கும்பகோணத்திலிருந்து வெளியாகிறது இதற்கு வருடசந்தா முன்பணமாய் ரூபாய் மூன்று. பிரதி சிராவணமாதமும் இப்பத்திரிகைக்கு வருடஆரம்பமாகும் எந்த மாதத்தில் சந்தாதாரராய்ச் சேர்ந்தாலும் அந்த வருஷத்திய பிந்திய சஞ்சிகைகள் அனுப்பப்படும் பழைய வாலியங்கள் விலைக்குக் கிடைக்கும் பத்திரிகை சரியானபடி கிடைக்காவிட்டால் பௌர்ணமி கழிந்தஒருவாரத்துக்குள் நமக்கு அறிவிக்கவேண்டியதுடன் அந்தந்த தபாலாபீசுக்கும் அறிவித்துவிடவேண்டும் பதிலறிய விரும்புகிறவர்கள் ஸ்டாம்பை, அனுப்பவேண்டும். ஒவ்வொரு கடிதத்திலும் தெளிவாய் பூரா மேல் விலாசமும் எழுதி அனுப்பவேண்டும்.

விற்பனை விளம்பரம்.

கும்பகோணம் ஸ்ரீமான் T. R. கிருஷ்ணசாரியார் பதிப்பு.

1. ஸ்ரீ வால்மீகி ராமாயணம் (கோவிந்தராஜீய வியாக்யானத்துடன்) பூரா செட்டு பிரதி 1-க்கு 24—8—0
2. ஸ்ரீ மகாபாரதம் பூரா செட்டு 1-பிரதி 70—0—0

எமது ஆபீஸில் கிடைக்கும்.

மானேஜர், மாத்வமித்திரன்,

ஸ்ரீ வியாஸ விலாஸம், கும்பகோணம்.

15 DEC 1928
MADRAS

ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்ஹாய நம:

மாத்வமித்திரன்.

VOL. 11 — பஹுதான்ய ஸம்வத்ஸரம் மார்கசீர்ஷ மாஸம். — NO. 5

ஸதுபதேசம்.

न्यस्तः श्री परमेश्वरेण कृपया चैतन्यलेशस्त्वयि
त्वं तस्मात्परमेश्वरः स्वयमहो नायाति वक्तुं शठ ।
लब्ध्वा कश्चन दुर्जनः खलु यथा हस्त्यश्वपादातकं
भूपादेव तदीयराज्यपदवीं चक्रे ग्रहीतुं मनः ॥

ந்யஸ்த: ஸ்ரீ பரமேச்வரேண க்ருபயா சைதன்யலேச: த்வயி
த்வம் தஸ்மாத் பரமேச்வர: ஸ்வயமஹோ நாயாதி வக்தும் சட।
லப்த்வா கஸ்சன துர்ஜன: கலு யதா ஹஸ்த்யச்வ பாதாதகம
பூபாதேவ ததீய ராஜ்ய பதவீம் சக்ரே க்ரஹீதும் மன:॥

அடே ஜீவா! பரமைசுவரியம் படைத்த ஸ்ரீ ஹரி கருணை கொண்டு உன்னிடத்தில் ஓர் துளி சைதன்யம் இருக்கச்செய்தார். அதனால் நீ சிறிது சைதன்யம் படைத்தவனாய் ஆனாய். இந்த தத்வத்தை, உன்னைப்போன்ற எண்ணிறைந்த ஜீவராசிகளுக்கு ஏக சக்கரவர்த்தியாய் இருந்துவரும் அந்த ஸ்ரீ ஹரியான பரப்ரம்மமோ உன்னிடம் நேரில் சொல்ல வருவரா. நன்றி கெட்ட அயோக்யா! இதை நீ மறந்தாய், அந்த சைதன்யத்தை நீ துஷ்பிரயோகம் செய்தாய். உடனே நான்தான் அந்த பரமேசுவரன் ஸோஹம் என்று சொல்லத் துவக்கிவிட்டாய். ஓர் அரசன் ஒருவனுக்கு மனமிரங்கி ரத கஜ துரக பதாதியாகிய சதுரங்க ஸைனியத்தை கொடுத்தால் அதே ஸைனியத்தையே வைத்துக்கொண்டு அந்த ராஜ்யத்தையே அபகரிக்க அவன் நினைக்கும் பக்ஷத்தில், அவன் யோக்யனாவானா? இதை அறிந்து, ஸோஹம் என்று உபாஸிப்பதை இனி விட்டுவிடு.

யக்ஞத்தில் ஸ்மார்த்த பிராம்மணர்களின் மாம்ஸ பக்ஷணம்.

(முன் 126ம் பக்கம் தொடர்ச்சி)

யக்ஞ பசுக்களிடமிருந்த ஹவிர்பாகம் நெல்லில் பிரவேசித்துவிட்டதால் ஹவிர்பாகம் கொண்ட புரோடாசத்தால் ஹோமம் செய்வதே எங்களுக்கு பிரியமாகிறது, இதில் சந்தேகமில்லை. நிச்சயமாய் இதில் பிரவேசித்துவிட்டதால் இந்த ஹவிர்பாகம் கொண்ட புரோடாசத்தாலேயே ஹோமம் செய்வது எங்களுக்கு பிரியம். என்று இருமுறை அறிவிக்கப்பட்டது. தேவர்கள் இவ்வாறு தானியத்தை பசுவாய்செய்து யாகத்தை நடத்தினார்கள் என்றால் ஆட்டை அடித்து அதன் ஹவிர்பாகத்தால் தேவர்களை திருப்திசெய்ததாய் ஆகுமா வென்று பலருக்கு சந்தேகம் எழலாம் என்று, அதுவும் அடுத்த மந்திரத்தால் நிவிருத்தி செய்யப்படுகிறது.

"ஸவா ஏஷ பசுரேவாலப்யதே யத் புரோளாச:] தஸ்யயானி கிம்சாருணி தானி ரோமாணி.] யே துஷா: ஸா த்வக்] யே பலீகரணா: தத் அஸ்ருக்] யத் பிஷ்டம் கிக்னஸாரம்ஸ்தன் மாம்ஸம் யத்கிஞ்சித்கம் ஸாரம் ததஸ்தி] ஸர்வேஷாம் வா ஏஷ பசூனாம் மேதேன யஜதே ய: புரோளாசேன யஜதே தஸ்மாதாஹு: புரோளாசஸத்ரம் லௌக்யம்" யக்ஞத்தில் ஹோமம் செய்யப்படும் புரோடாசம் அதாவது தானியத்தால் செய்த ஹவிஸ் என்பது பசுவே ஆகும். நெல்லின் பேரில் உள்ள முன் இத்த தானிய பசுவின் ரோமம். அதன் உமிதான் இந்த பசுவின் தோல். தவிடுதான் ரத்தம். மாவு இந்தபசுவின் மாம்ஸம். மாவாய் அரை படாமல் கெட்டியாய் நின்றபாகம் இந்த தான்யபசுவின் எலும்பு. ஆதலால் தானியத்தால் யக்ஞத்தில் ஹோமம் செய்யப்பட்டால் ஆடு மாடு முதலான பசுக்களின் மேதஸ்ஸைத்தான் ஹோமம் செய்ததாய் ஆகும். ஆகவேதான் யாகம் செய்யும் ஸாதுசிகாமணிகள் புடோசமாகிற மாவினால் செய்யப்பட்ட பசுவைக்கொண்டு நடத்தப்படும் யக்ஞம்தான் தரிசிக்கத்தகுந்ததென்று சொல்கின்றனர். என்று சொல்லப்பட்டிருக்கிறது ஸாக்ஷாத்தாய் பசுவைக்கொன்று நடத்தப்படும் யக்ஞம் பார்ப்பதற்கு மிகவும் பயங்கரமாயிருக்குமென்றும், அசிங்கமாய் ஸாதுக்களால் வெறுக்கத் தகுந்ததாய் இருக்குமென்றும், மாவினால் செய்யப்

பட்ட பசுவைக்கொண்ட யக்ஞம் தான் சுத்த ஸாத்விகமாய் தரிசிக்க தகுந்ததாய் இருக்குமென்றும் ஆதலால் யாகம் செய்யும் மகான்கள் ப்ரத்யக்ஷபசுவைக் கொண்ட யாகத்தைச் செய்யாமல், பிஷ்டபசுவைக் கொண்ட யக்ஞத்தைச் செய்கின்றனர் என்றும் அவ்வகை பிஷ்ட பசு யக்ஞம்தான் ஸாதுக்களும் யாக்ஞிகர்களும் தரிசிக்கவேண்டுமென்றும் அதற்குமாறாக நடத்தப்படும் யக்ஞம் தர்சனம் செய்யவும்கூட அருகமல்லவென்றும் சூசிக்கப்பட்டிருக்கிறது.

நாட்டிலுள்ளவைகளும் காட்டிலுள்ளவைகளுமான யக்ஞ ஒஷதிகள் தானியங்கள் எவை என்பதும் விஷ்ணுபுராணம் முதல் அம்சம் 6-வது அத்யாயத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறது. "ஒஷத்யோ யக்ஞியாஸ்சைவ க்ராம்யாரண்யா: சதுர்தச] வ்ரீஹய: ஸயவா: மாஷா: கோதுமா: அணவ: திலா:] ப்ரியங்கு: ஸப்தமாஹ்யேதா: அஷ்டமாஸ்துகுளித்தகா:] ச்யாமாகா: ஸ்த்வத நீவாரா: ஜர்த்திலா: ஸகவேதுகா:] ததா வேணுயவா: ப்ரோக்தா: தத்வத் மர்கடகா: முனே]" நாட்டிலுள்ள தானியங்கள் எட்டு; அரிசி, யவை, உளுந்து, கோதுமை, சிறு நெல், எள்ளு, தினை, கொள்ளு, காட்டிலுள்ள தானியங்கள் ஆறு, ச்யாமகாம் நீவாரம், ஜர்த்திலம், காட்டு கோதுமை, வேணுயவம், மர்க்கடகம். ஆக இந்த பதினாங்கு தானியங்களும் யக்ஞத்தில் உபயோகமானவை என்று விவரித்து கூறப்பட்டிருக்கிறது.

இந்த தானியங்கள் யக்ஞத்தில் உபயோகப்படுவதின் காரணம் மனுஷ்யன் முதற்கொண்டு வெள்ளாடு வரையிலுள்ள யக்ஞபசுக்களிடம் இருந்த ஹவிர்பாகம் முடிவில் பூமியில் பிரவேசித்து இந்ததானியங்களாய் முளைத்ததாய் மேற்கண்ட வேதவாக்யங்கள் ஸ்பஷ்டமாய் அறிவிக்கின்றன. அத்துடன் ஹவிர்பாகம் அந்தந்த பசுக்களில் தங்கி இருந்ததால் தான், அந்தந்த பசுக்கள் ஒவ்வொருகாலங்களில் கொல்லப்பட்டுவந்தன வென்றும், ஹவிர்பாகம் போனபின் அந்தந்தபசுக்கள் கொல்லப்படாமல் கைவிடப்பட்டன வென்றும், ஸ்பஷ்டமாய் தெரியவருவதுடன் இந்த தான்யங்களில் ஹவிர்பாகம் முடிவில் பிரவேசித்து தங்கியிருப்பதால்தான் யாக்ஞிகர்கள் தான்யங்களை பசுவாய் உபயோகிக்கின்றனர் என்றும் ஸ்பஷ்டமாய் தெரியவருகிறது.

இப்படியிருக்க முழுப்பூசனியை சோற்றில் மறைக்க ஒருவன் எத்தனித்ததுபோல், ஆட்டை அடித்து அதன் மாமிஸத்தை புஜித்து நடத்தும் யக்ஞத்திற்கு நேர் விரோதியான இந்த வேதப்ரமாணத்தை மாம்ஸபக்ஷணத்தில் ஆசைகொண்டவர்கள் மழுப்பப்பார்க்கின்றனர்.

இவ்வேத வாக்யங்கள் புரோடாசத்தை சிலாகிக்கத்தான் தாத்பர்யங் கொண்டதென்றும், ஆடு முதலான பசுக்களை கொல்வதையும் அதன் மாமிஸத்தை புஜிப்பதையும் நிஷேதிக்க தாத்பர்யங்கொண்டதல்ல வென்றும், ஆகவே இந்த வேதவாக்யங்கள் ஸ்வார்த்தே பிராமணமல்ல வென்றும் உரையாடுகின்றனர். புரோடாசத்தை இவ்வேத வாக்யங்கள் சிலாகித்து கூறுகிறது என்பது உண்மைதான். ஆனால் அவைகள் காரணமின்றி சிலாகித்து கூறுவதில்லை. ஆடு மாடு முதலிய பசுக்களிடம் நிலைநின்று வந்த ஹவிர்பாகம் நெல்லில் பிரவேசித்து விட்டதால், நெல்லால் தயாரான புரோடாசம் சிலாக்யம் என்று கூறப்பட்டது. ஆடு மாடு முதலிய பசுக்களைப்போல் புரோடாசமும் சிலாக்யம் என்று மட்டில் சொல்லப்பட்டிருந்தால், சிலர் ஆடு மாடுகளைக்கொல்லுவதாயும், ஆடு மாடுகளுக்குப் பதிலாய் சிலர் தானியங்களை உபயோகிப்பதாயும் ஆகவே இவ்விருவர்கள் செய்வதும் பிரமாணங்களுக்கனுசரித்தது என்றும்சொல்லக்கூடும். அப்பேர்பட்ட சந்தேகத்திற்குகூட இடம் கொடாமல் வேதம் ஸ்பஷ்டமாய்த்தான் "தஸ்ய உத்க்ராந்தமேதா: அமேத்யா: பசவ: தஸ்மாதேதேஷாம் நாச்னீயாத்" ஆடு மாடு முதலிய பசுக்களிடமிருந்து வந்த ஹவிர் பாகம் அங்கு தங்காமல் வெளியே போய்விட்டதால் இந்த பசுக்கள் ஹவிர்பாகம் போய் காலியாய் நின்று விட்டதாயும், யாக்ஞிகர்கள் அவைகளை யக்ஞத்தில் பசுவாய்க்கொள்வதை விட்டு விட்டதாயும் ஆதலால் இவ்வாறு யக்ஞத்தில் ஹோமம் செய்யப்பட அருஹமான ஹவிர்பாகம் போய் விட்டதால், மனுஷ்யன் முதற்கொண்டு ஆடுவரையிலுள்ள யக்ஞபசுக்கள் எல்லாமே அமேத்யங்களாய் அதாவது யக்ஞத்தில் அவைகள் அடிக்கப்படவும் அவைகளின் மாமிஸத்தை புஜிக்கப்படவும் அசுத்தமானவைகளாய் போய்விட்டதாகவும் இந்த காரணத்தைக்கொண்டு யக்ஞத்திலேயும் கூட இந்த பசுக்களை கொல்லக் கூடாதென்றும், அவைகளின் மாமிஸங்களை புஜிக்கலாகாதென்றும், நிஷேதிக்கிறது. ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு பசுவிடம் ஹவிர்பாகம் தங்கியிருந்ததால் தான் அந்தந்தபசு உபயோகிக்கப்பட்டதென்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு ஆடுமாடு முதலியவைகளிலுள்ள ஹவிர்பாகம்போனதால், அவைகளை உபயோகிக்கலாகாதென்று ஸ்பஷ்டமாய் நிஷேதிக்கும் வேத வாக்யங்களை, கேவலம் புரோடாசத்தின் ப்ரசம்ஸாபரம் என்று சொல்லிவிட்டு, இந்த சாக்கில் ஆடு மாடுகளை யதேச்சையாய்க்கொன்று அவைகளின் மாமிஸங்களை வைதிகர்கள் என்போர் எப்படி புஜிக்கக் கூடுமோ தெரியவில்லை.

ஹவிர்பாகம் தங்கியிருந்து ஒரு சமயம் மேத்யங்களாய் இருந்துவந்த ஆடு மாடுகளில், இப்போது ஹவிர்பாகம் வெளியேறிப்போய், அவைகள் அமேத்யங்களாய் போய்விட்டதாய் ஸ்பஷ்டமாய் அறிவிக்கப்பட்டிருக்கையில், விவேகமுள்ளவன் எவன்தான் அமேத்யத்தை சாப்பிட முன் வருவான்? அதைப் பகிரங்கமாய் சாப்பிட்டுவிட்டு தான் செய்ததே சரி என்றும் மார்தட்டிக்கொள்வான்? அப்படியே ஒருவன் சங்கோசமின்றி செய்து வந்தான் என்றால் அவன் வேதத்தை விட்டவன் என்றும், வேதார்த்தத்தை புறக்கணித்தவன் என்றும், மாமிஸத்தை புஜிக்கும் ஆசையால் கேவலம் டம்பார்த்தமாக யக்ஞம் என்ற சாக்கை வைத்து இவ்வாறு அமேத்யம் என்று பிறர் சொல்லியும்கூட அதை புஜிக்கிறான் என்றும் நிச்சயம் ஏற்படக்கூடுமல்லவா? ஆசாரசீலனாயிருக்கும் ஒருவன் இவ்வாறு ஓர் அகாரியத்தை செய்தால், அவனுக்கு சாஸ்திரார்த்தத்தை எடுத்துக்காட்டி நற்புத்தி புகட்டி அவனைத் தடுத்து இந்த அகாரியத்தை அவன் இனி செய்யாமல் செய்வது ஸாதுக்களின் கடமை. அதை அனுசரித்துத்தான் உலகில் உண்மையான அறிவை நிலைநிறுத்த, வேத விபாகம் செய்து வேதார்த்தங்களை நிர்ணயித்துக்கொடுக்கும் பிரம்ம ஸூத்திரங்களை இயற்றி, அதற்கு வியாக்யானமாய் 18 புராணங்கள் 18 உபபுராணங்களையும் இயற்றிய ஸ்ரீ கிருஷ்ணத்வைபாயனரான ஸ்ரீவேத வியாஸர் ஸ்பஷ்டமாய் பலவாறு யக்ஞத்தில் ஆட்டை அடித்து அதன் மாமிஸத்தை புஜிக்கலாகாதென்று இதிஹாஸமான மகாபாரதத்திலேயும் பல புராணங்களிலேயும் கூறியுள்ளார். பல இடங்களில் இதர மகான்களின் அபிப்பிராயத்தையும் அனுவாதம் செய்து கூறியிருக்கிறார். ஸ்ரீ பகவத்கீதை உபதேசித்த ஸ்ரீ கிருஷ்ணரும் இதை அனுசரித்து தான் "வ்ருதா பசூன் விநிக்னந்தி ஹிம்ஸயந்தே ப்ரோத்யதைஸ்துதே" இவர்கள் வீணுக்குத்தான் ஆடுகளை வதைக்கின்றனர். இதற்கு தண்டனை இந்த ஆடுகளாலேயே இவர்களுக்கு ஏற்படப்போகிறது என்று எச்சரித்தார். "சாகம் ப்ரோக்ஷந்து மர்ஹத, நைஷதர்ம: ஸதாம்தேவா: யத்ர வத்யேத வைபசு:" ஆட்டை அடிக்காதீர்கள். இது சரியானபடி வேத சாஸ்திரமறிந்தவர்கள் செய்யும் காரியமல்ல வென்றும் "பீஜைர்யக்ஞேஷு யஷ்டவ்யம் இதிவை வைதிச்ருதி: அஜஸம்க்ஞானி பீஜானி" என்றும் "தான்யைர்யஷ்டவ்யம்" என்றும் "யஜபீஜை ஸஹஸ்ராக்ஷ" என்றும் தானியங்களைக் கொண்டு தான் யாகம் செய்யவேண்டுமென்ற வேதம் கூறுவதால் பீஜங்கள் தான் அஜமாகின்றன வென்றும், மகரிஷிகள் அனைவரும் பெருங் கூட்டத்தில் கூக்குரல் இட்டிருக்கின்றனர். "காமகாராத் விஹிம்ஸந்தி பஹிர் வேத்யாம் பசூன் நரா:" வெளியில் கசாப்பு

கடைகளில் ஆடுகளை அடிப்பது போலத்தான் யக்ஞத்தில் சாஸ்திர விதி இல்லாமல் ஆடுகளை அடிக்கின்றனர் என்றும் "பாயஸை: ஸுமனோபிஸ் ச தஸ்யைவ யஜனம் ஸ்ம்ருதம்" அந்த யக்ஞமூர்த்தியான நாராயணனை தானியங்களால் தயாரான பாயஸங்களாலும் புஷ்பங்களாலும் ஆராதிக்க வேண்டுமென்றும் க்ஷத்திரியனான விசக்யுராஜன் விளம்பரம் செய்தான். துலாதாரன் என்னும் தார்மிக வைச்யனும்கூட "புரோடாசோஹி ஸர்வேஷாம் பசூனாம் மேத்ய உச்யதே" தானியங்களால் தயாரான புரோடாசம் தான் யக்ஞத்தில் ஹோமம் செய்யப்பட மேத்யமானது அதாவது சுசியானது. மற்ற ஆடு மாடு முதலிய பசுக்கள் யக்ஞத்தில் ஹோமம் செய்யப்பட அமேத்யமாகும் என்று "த ஏவ உத்க்ராந்த மேதா அமேத்யா: பசவ:" என்னும் வேத வாக்கியங்களை ஒட்டி தனது அபிப்ராயத்தை கூறியுள்ளான். இவ்வாறு ஸாது ஜன மகா மண்டலியால் பரம பிரமாணமாய் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கும் இவ்வேத வாக்யம் மாம்ஸ பக்ஷணத்தில் ஆசைகொண்ட இவ்வகுப்பார்களுக்கு ஸ்வார்த்தேபிரமாணமல்லவாம். அதாவது இவ்வாக்கியம் அறிவிக்கும் எல்லா அர்த்தங்களும் பிரமாணமல்லவாம். அப்படி இந்த வேத வாக்கியங்கள் ஸ்வார்த்தே ப்ரமாணமல்லவென்றிருந்தால், இவர்களுக்கு ராமாயணம் பாரதம் முதலானவைகளும்கூட ஸ்வார்த்தே பிரமாணமற்றதாய் ஆகிவிடவேண்டும். ஆதலால் இவர்களின் கக்ஷி சிறிதும் ஏற்கத்தகுந்ததில்லை. இது கேவலம் ஸ்வப்ரயோஜனத்திற்காக சாஸ்திரத்தை விட்ட கக்ஷியேயாகும். இப்படியேதான் வேத வேதாங்கங்களில் மகா பாண்டித்யம் படைத்தவராய் ஆங்காங்கு அத்வைத பரமான அர்த்தங்களை புகவிட்டு ஸம்பூர்ணம் மகா பாரதத்திற்கு வெகு சிலாக்யமாய் வியாக்யானம் செய்த ஸ்மார்த்த சிரேஷ்டரான ஸ்ரீநீலகண்ட தீக்ஷிதரும்கூட அபிப்பிராயப்பட்டிருக்கிறார். மேற்கண்ட மகா பாரத சுலோகங்களை வியாக்யானம் செய்யும்போதெல்லாம் நாம் எடுத்துக்காட்டிய அபிப்பிராயத்தை கூறி, ஆட்டை அடித்து அதன் மாமிஸத்தை புஜித்து நடத்தும் யாகத்தை வெகுவாய் நிந்தித்திருப்பதுடன், இவ்வேத வாக்யத்தை பரம பிரமாணமாகவே கொண்டிருக்கிறார். "அஜஸம்க்ஞானி பீஜானி" என்று முதற் பிரமாணத்திலுள்ள சுலோகத்தை வியாக்யானம் செய்யும்பொழுது அவர் சொல்லுவதாவது:—

"இயம் ச்ருதி: புரோடச ஸ்துதி மாத்ரபரா ந து பசூனம் அமேத்யத்வ ப்ரதிபாதன பரா, நஹி நிந்தா நிந்த்யம் நிந்திதும் ப்ரவ்ருத்ததே, அபிது விதேயம் ஸ்தோதுமிதி ந்யாயாத், இதி போகலோலுபானாம் தேவானும் மதம்| வீதராகாணாம் ரிஷீணாம் து மானுர்தாதிவிஸம்வாதாத் அஹிம்ஸா சாஸ்த்ரானுக்ரஹாச்ச அவாந்தர தாத்பர்யேண ப்ரதீயமானோ அர்த்த: யதா பூத ஏவ, ந து ஸஸ்வார்த்தே அப்ரமாணம்...............

அத: அர்த்தவாதோப்யயம் ஸ்வார்த்தே அவாந்தர தாத்பர்ய விதயா தேவதாதிகரண ந்யாயேன ப்ராமாண்யம் அச்னுவீத| அன்யதா பாரத ராமாயணாதீனாம் அபி ஸ்வார்த்தே ப்ராமாண்யம் விஹன்யேதேதி| தஸ்மாத் அஜஸ்தஸ்ய மேதஸ்ய பீஜேஷு ஸங்க்ரமாத் பீஜான்யேவ அஜஸம்க்ஞானீதி யுக்தம்." பஹ்வரிச பிராம்மணத்திலுள்ள "புருஷம் வை தேவா:" என்னும் சுருதி புரோடாசத்தை துதிக்க மட்டில் தாத்பர்யங் கொண்டதென்றும், ஆடு மாடு முதலான யக்ஞ பசுக்களை அமேத்யமென்று நிரூபிக்க தாத்பர்யங் கொண்டதல்லவென்றும், நஹி நிந்தா நியாயம் இதற்கு ஆதாரமென்றும், மாம்ஸ பக்ஷணத்தில் ஆசையுள்ளவர்களான தேவர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். ஆசை விட்டவர்களான ரிஷிகளோ இப்படி இந்த வேதத்தை குறைகூறுவதற்கு அனுகூலமாய் வேறு எந்த பிரமாணமும் இல்லாததாலும், பிராணி ஹிம்சை செய்யலாகாதென்று எண்ணிறைந்த வேத விதிகள் இதற்கு அனுகூலமாய் இருப்பதாலும், இந்த வேத வாக்கியத்தின் அவாந்தர தாத்பர்யமாக காணப்படுவதாயுள்ள ஆடு மாடு முதலான யக்ஞ பசுக்கள் அமேத்யமென்றும் அவைகளைக் கொல்லலாகாதென்றும் ஏற்படும் அர்த்தம் இந்த வேதத்தின் உண்மையான அர்த்தமாகும். இந்த வாக்யம் ஸ்வார்த்தே பிரமாணமல்லவென்பது ஏற்படாது. இந்த வாக்யம் அர்த்தவாதமாய் இருந்த போதிலும், அர்த்த வாதம் மூன்று வகையாய் இருப்பதால், இது ஸ்வார்த்தே அவாந்தர தாத்பர்யம் கொண்டிருப்பதன் நிமித்தம், தேவதாதிகரண நியாயத்தின்படி இந்த வேத வாக்யம் பிரமாணமே ஆகும். அப்படி இந்த வேத வாக்யம் பிரமாணமில்லாவிடில் பாரதம் ராமாயணாதிகளும்கூட ஸ்வார்த்தே அபிரமாணமாய் விடும் என்று ஸத் ஸம்பிரதாயமறிந்த பெரியோர்கள் கூறியிருக்கின்றனர். ஆகவே ஆட்டிலுள்ள ஹவிர் பாகம் தானியங்களில் போய் சேர்ந்து விட்டதால் அஜமென்றே சொல்லப்பட்டது. என்று தமது வியாக்யானத்தில் எழுதியுள்ளார்.

ஆதலால் இத்யாதி காரணங்களைக்கொண்டு மேற்கண்ட, "புருஷம் வைதேவா:" என்னும் பிராம்மண வாக்யம் கேவலம் புரோடாசத்தின் ப்ரசம்ஸா பரமேயன்றி ஆட்டை அடிப்பதையும் அதன் மாமிஸத்தை புஜிப்பதையும் தடுப்பதில்லை என்று எதிர் கக்ஷியினர் வாதாடுவதை வேத வித்துக்களான மகனீயர்கள் ஒப்புக்கொள்ளாததுடன் ஸ்மார்த்த பண்டிதோத்தமர்கள் பலரும் ஒப்புக்கொள்வதில்லை என்று ஸ்பஷ்டமாய் ஏற்படுகிறது. (தொடரும்)

ஸ்ரீ நாராயண பண்டிதாசாரியார் இயற்றிய

ஸங்கிரஹ ராமாயணம்.

7-வது ஸர்க்கம்.

(முன் 121ம் பக்கம் தொடர்ச்சி)

சீதாராம விவாகம்.

உத்தார பல்குனி நக்ஷத்திரத்தின் முகூர்த்தத்தில் இந்த விவாகம் நடந்தது. பிரஜாபதியான பகனை தேவதையாகக் கொண்ட இந்த முகூர்த்தத்தில் விவாகம் நடத்தப்படு வதை அறிவாளிகள் சிலாகிக்கின்றனர். தசரதராஜனின் நான்கு குமாரர்களுக்குமே இந்த முகூர்த்தத்தில் நடந்த விவாகம் உல கத்தாருக்கு பிரியமாயிற்று. ஒரே முகூர்த்தத்தில் நால்வர்களுக் கும் விவாகம் குலதர்மத்தை அனுசரித்து அவசியமான சாம க்ரிகளை சேகரித்து பிரம்மவாதிகளான பிராம்மணர்களால் நடத் தப்பட்டது. வசிஷ்டரும் விச்வாமித்திரரின் ஆக்ஞையின்பேரில் அக்னியில் ஹோமம் செய்தார். ஜகதீசுவரரான ஸ்ரீராமர் சக்ர ரேகையுள்ள சிவந்த தன் கையால், கமல ரேகையுள்ள சீதையின் சிவந்த கையைப் பிடித்துக்கொண்டு மூன்று தடவை அக்னியை ப்ரதக்ஷிணம் செய்து, பாக்கி விவாஹ காரியத்தை நடத்திவைத்து, ஸம்பூர்ணமாய் சடங்குகளை முடித்தார். உலகத்திற்கு தந்தை யான ஸ்ரீ ராமசந்திரனும் தாயான சீதா தேவியும் கல்யாணப் பெண் பையன்களாய் ஆயிருப்பதை தேவோத்தமர்கள் கண்டனர். ரத்னங்களால் ஜொலிக்கும் விமானங்களின் வரிசைகள் தேவர் களும் தேவர்களின் பரிவாரங்களும் அடர்ந்திருந்த ஆகாயத்தை அலங்கரித்திருந்தன. தேவர்கள் அச்சமயம் தங்கள் வாத்யங்களை வாசித்தனர். கந்தர்வர்களில் உத்தமர்கள் சங்கீதம் பாடினர். புஷ்பமாரி பொழிந்தனர். அப்ஸரஸ்ஸு கூட்டங்கள் நர்த்தன மாடினர். ஜனங்களின் கண்களுக்கு இன்பம் தருகிறவர்களாயும் ஸமஸ்த ஆபரணங்களால் அலங்காரம் செய்து கொள்ளப்பட்டவர் களாயும் அழகிய அவயவமுள்ளவர்களாயுமுள்ள ஸ்திரீகள் இந்த

விவாகோற்சவத்தில் ஸ்வர்க்கத்தில் தேவ ஸ்திரீகளைப்போல் சஞ்சரித்து வந்தனர். லக்ஷ்மணருடைய பாரியாள் ஊர்மிளை, பரதனுடைய பாரியாள் மாலவீ, சத்ருக்னனுடைய பாரியாள் மங்களமான சுருதகீர்த்தி என்பவள். வசிஷ்டர் முதலான புரோகிதர்களையும் இதர பிராம்மணர்களையும் உயர்தரமான திரவியங்களால் ஜனகராஜன் பூஜித்தான். மிகவும் சந்தோஷ மடைந்த மனமுள்ளவனாய் வசிஷ்டருடனுள்ள தசரதனை போய் வரக்கேட்டுக் கொண்டான். ஆனந்த பாஷ்பம்பெருக தசரத னால் உபசார வார்த்தை சொல்லப்பட்ட விச்வாமித்ர முனிவர் காலையில் பிரயாணமானார். ஜனகராஜன் ராம லக்ஷ்மணர்களுக்கு வெண்பட்டுகளையும் ரத்னங்களின் குவியல்களையும் இரத்தினக் கம்பளிகளையும் வஸ்திரங்களையும் ஒரு லக்ஷம் பசுக்களையும் சதுரங்க சைனியத்தையும், இருபதினாயிரம் பாரம் தங்கங்களையும், இருபதினாயிரம் வேலைக்காரிகளையும் சீராகக் கொடுத்தான். யக்ஞ மூர்த்தியை தக்ஷிணாதேவி போலும், நாராயணனை மகாலட்சுமி போலும், ரிஷபமூர்த்தியை ஜயந்தீ தேவி போலும், சீதை ஸ்ரீ ராமச்சந்திரனை பின் தொடர்ந்தாள். இந்த தம்பதிகளுக்கு கிழத்தனமோ நித்ரை முதலிய ஆலஸ்யமோ தோஷமோ எப்போதும் இல்லை. இவ்விருவர்களும் பரிசுத்தமான ஸ்வரூப முள்ளவர்கள். கணக்கிட முடியாத குணங்கள் நிறைந்த வர்கள். இவர்கள் உலகத்தாரின் தாய் தந்தையர்களான லக்ஷ்மீ நாராயணர்கள். தேவசிரேஷ்டர்களால் பிரார்த்திக்கப்பட்ட வர்களாய் இவ்விருவர்கள் பூமியில் அவதாரம் செய்திருக்கின்றனர் என்று மூவுலகில் பாபத்தை போக்குவதாயும் முக்தி மாளிகைக்கு படிக்கட்டாயுமுள்ளதான இப்பேர்ப்பட்ட வார்த்தை இந்த சீதாராம தம்பதிகளின் விஷயமாய் ஒவ்வொரு வீட்டிலும் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

அயோத்யா பிரயாணம்

பிறகு தசரதராஜன் ஜனகராஜனிடம் அனுமதி பெற்று பிராம் மணர்களோடும் சைனியங்களோடும் பிள்ளைகளோடும் நாட்டுப் பெண்களோடும் பத்னிமார்களுடனும் அயோத்யா பட்டணம் புறப்பட்டார். சதனங்களை அறிந்த தசரதன் மார்க்கத்தில்

உண்டான அப சகுனங்களைப்பார்த்து, ஆபத்து ஏற்படும் என்று சந்தேகித்து, புரோஹிதரான வசிஷ்டரிடம் இவ்வாறு சொன்னார். ஆகாயத்தில் பக்ஷிகளின் சப்தம் என் மனஸைப் பிளப்பது போல் சங்கடத்தை விளைவிக்கிறது. அப்படியிருக்க பூமியில் நடமாடும் மிருகங்கள் பிரதக்ஷிணமாய் வந்து க்ஷேமத்தையே சூசிக்கின்றனவே இதன்பலம் என்ன என்று தசரதன் சொன்ன வார்த்தையைக் கேட்டு, வசிஷ்டர் ஆச்சரியப்பட்டு, "எங்களுக்கு பயம் என்னமோ வரக்காத்திருக்கிறது. அது நிவிருத்தியடையப் போகிறது" என்று சொன்னார்.

பரசுராமரின் ஸமாகமம்.

இதற்குள் ஆயிரக்கணக்கான கிரணசமூகங்கள் நிறைந்தவராயும் அற்புதராயும் ப்ரளய காலத்திய அக்னிபோன்றவராயுமுள்ள ஒருவர் அங்கு தோன்றவும், அவரைக்கண்டு மகரிஷிகள், "பூமியில் இருபத்தி ஒன்று தடவை க்ஷத்திரிய பீஜமே இல்லாமல் க்ஷத்திரியர்களை நாசம் செய்த சாக்ஷாத் நாராயணரான இந்த பரசுராமர் கடோரமான கைக்கோடரியை தோளில் மாட்டிக் கொண்டு மீண்டும் இங்கும் ஏன் ஜொலிக்கிறார்? நெருப்புத் தணலைப்போன்ற வர்ணமுள்ள பாணத்துடன் இங்கு என்ன செய்ய இச்சைக்கொண்டு வந்திருக்கிறாரோ தெரியவில்லையே? பரசுராமராகிய அக்னியானது க்ஷத்திரியவம்சமாகிய வைக்கோலை கொளுத்தாதிருக்கக்கடவது. மூவுலகத்தையும் கொளுத்தாதிருக்கக் கடவது என்று சொன்னார்கள். வசிஷ்டாதி பிராம்மணோத்தமர்கள் பரசுராமரிடம் ஓடிவந்து அனுக்ரஹம் செய்யவேண்டும் என்று வேண்டிக்கொண்டனர். இவர்களால் அர்க்ய பாத்யாதிகளால் பூஜை செய்துகொள்ளப்பட்ட பரசுராமர் ராமரைப்பார்த்து இவ்வாறு பேசினார்.

பரசுராமர் சண்டைக்கு இழுத்தது.

முன்பு விஷ்ணுவும் சிவனும் இரண்டு தனுஸ் ச்ரேஷ்டங்களை அடைந்து உலகத்தாரால் ஒப்புக்கொள்ளப்பட்ட அந்த பிரசித்தமான இரண்டு தனுஸ்ஸுகளால் தேவாஸுரர்களோடு கூடிய ஸமஸ்த உலகத்தையும் அவர்கள் ஜயித்தனர். இவர்களுள் யார் பலிஷ்டன் என்பதை தெரிந்து கொள்ள தேவர்கள் இச்சை

கொண்டு இவர்களை ப்ரார்த்திக்கவும், பக்தர்களின் ப்ரார்த்தனையை கொடுத்தருளும் இந்த இரண்டுதேவர்களும் தன்பலத்தைக்காட்டுவதற்காக இந்த இரண்டு தனுஸ்ஸுகளை தரித்துக்கொண்டு யுத்தம் செய்ய நின்றனர். அஹங்காரமயனான சிவனை ஹூங்காரத்தாலேயே கேசவனான விஷ்ணு ஓர் க்ஷணத்திலேயே கருடன் பாம்பை ஸ்தம்பிக்கச் செய்வதுபோல் ஸ்தம்பிக்கச்செய்தார். அப்பொழுது பிரம்மாதி தேவதைகள் விஷ்ணுவைத்தான் விஜிஷ்ணு அதாவது— ஜயிக்கும் தன்மையுடையவர் என்று ஸ்தோத்திரம் செய்தனர் எல்லா ஜகத்துமே அந்த விஷ்ணுவுக்கு அடங்கியிருக்கும்பொழுது பரமசிவன் ஸ்தம்பித்து போனது விஷ்ணுவுக்கு ஆச்சரியம் அன்று என்று ஸ்தோத்திரம் செய்தனர். அவ்வாறு பரமசிவன் தோல்வியடைந்த தனுஸ்ஸைத்தான், ராமா! நீ இப்போது ஒடித்திருக்கிறாய், இதனால் உனக்கு இணையான புருஷன் இல்லை, என்று பெயர் பிரசித்தமாய்விட்டது. அந்த பரமசிவனை ஜயித்த விஷ்ணு தனுஸ்ஸு இதுவே. இதை நீ வளைத்து நாணேற்றும் பக்ஷத்தில் நீ எனக்கு சமானமான பலமுள்ள வீரனும் உத்தம புருஷனும் ஆவாய் என்று கம்பீரமாய் பேசும் பரசுராமரைப்பார்த்து, தசரதன் கண்ணீர் விட்டு கம்மல் தொண்டையுடன் மிக்கபயந்தவனாய் நமஸ்கரித்துக்கொண்டு இவ்வாறு பேசினான்.

தாங்கள் ஆசைத்வேஷம் முதலான தோஷமில்லாத சாக்ஷாத் நாராயணர். ஜமதக்னி மகாமுனிவரால் ரேணுகாதேவியிடம் பூமியின் பாரத்தை குறைப்பதற்காக அவதாரமெடுத்தவர். பக்தர்களிடம் வாத்ஸல்யம் கொண்டப்ரபுவே! தங்கள் பக்தனும் வயது முதிர்ந்தவனுமுள்ள எனக்கு, ஆயுதத்தை கீழேவைத்து யுத்தம் செய்வதை நிறுத்திவிட்டு தவத்திலமர்ந்து விட்ட தாங்கள் எனக்கு புத்ர பிக்ஷையை அளிக்க ப்ரார்த்திக்கிறேன். என்று தசரதன் ப்ரார்த்திக்கவும், பிருகுவம்சத்தில் பிறந்த பசுராமன் தசரதா. உனக்கு மூன்று பிள்ளைகள் விடப்பட்டிருக்கின்றனர். ராமன் மட்டில் என்னுடன் பதில் யுத்தம் செய்பவனாய் ஆகட்டும்! ஹே ராமா ராமா! இந்த தனுஸ்ஸை எடுத்துக்கொள் என்று பரசுராமர் அடுத்தடுத்துச்சொல்ல, பார்க்கவா! அப்படியே ஆகட்டு

மென்று சொல்லி, சிரித்துக்கொண்டு பரசுராமரிடமிருந்து அந்த வைஷ்ணவ தனுஸ்ஸை வாங்கிக்கொண்டார். ஜோதிர்மண்டலத்துடன் கூடிய அந்த தனுஸ்ஸை சிரித்துக்கொண்டே நாணேற்றி சுளுவாகவே ஓர் க்ஷணத்தில் பாணத்தையும் ஸந்தானம் செய்தார். ஆச்சரியமான காரியங்களைச் செய்யும் இந்த ராம பரசுராமர்களின் விளையாட்டைப்பார்த்து சந்தோஷப்பட தேவர்களும் கந்தர்வர்களும் ரிஷிகளும் ஆகாயத்தில் அலங்கரித்தனர். பரப்ரம்ம சொரூபமானதால், பரசுராமா! நீர் இந்த பாணத்தால் பிளக்கப் படமாட்டீர் என்று சொல்லி, பாணத்தை காதுவரை இழுத்துப் போடப் பார்க்கும் ராமனைப்பார்த்து, பரசுராமர், ராமா! நான் வேறொரு காரணத்தால்தான் வேண்டுமென்று இவ்வாறு செய்தேன். அதுளன் என்ற ஓர் அஸுரன் பிரம்மாவின் வரபலத்தால் தபோமயமாயும் லோகமயமாயும் இருந்து வருகிறான். அவனை இந்த மகத்தான பாணத்தால் கொல் என்று ஜமதக்னி புத்ரரான பரசுராமர் சொல்ல, ராமரிடமிருந்து விடப்பட்ட அந்த பாணம் அந்த அதுளாஸுரனை சீக்கிரம் பஸ்மமாக்கியது. அப்பொழுது பகவான் பரசுராமர், ஹே தசரதராஜ குமாரா! ராமா! நீர் ஸாக்ஷாத் நாராயணர் என்பதை ஜனங்கள் இப்பொழுது நன்கு கண்டு கொண்டனர். என்று சொல்லி பக்தியுடன் சாமர்த்தியமுள்ள லக்ஷ்மணாக்ரஜரான ராகவனை ப்ரதக்ஷிணம் வந்து அவருடன் சிறிது நேரம் ஐக்யமாய் இருந்து விட்டு பின்பு வெளியே வந்து மகேந்த்ரபர்வதம் சென்றார். இது ஹரிஸ்வரூபிகளான இவ்விரு ராமர்களின் விளையாட்டே ஆகும். ஆகவே இந்த பரசுராம ரூபத்திற்கும் தாசரதிராம ரூபத்திற்கும் சிறிதும் பேதம் இல்லை என்று சொல்லி தேவர்கள் ஸ்வர்க்கலோகம் சென்றனர். எப்படி இராத்திரிகாலத்திய பனியால் மூடிப்போயிருந்த தாமரை சூரியனின் காந்தியால் மலருவதுபோல், துக்கத்தால் வாடிப்போயிருந்த தசரதனின் முகம் ராமனுடைய தேஜஸ்ஸால் மலர்ந்தது. பரமானந்தத்துடன் பிள்ளைகளோடும் சைனியங்களோடும் சூழ்ந்தவனாய் சத்ருக்களால் ஜயிக்கமாளாததாயும் பன்னீர் தெளிக்கப்பட்டதாயும் புஷ்பங்கள் அக்ஷதைகள் வாரி இறைக்கப்பட்டதாயும், கொடிகள் பறக்கவிடப்பட்டிருப்பதாயும் ஸுவர்ணமயமான பூர்ணகலசங்கள்

வைக்கப்பட்டிருப்பதாயும், பலவகை வாத்தியங்கள் சப்திப்பதாயும் உள்ள அயோத்யா பட்டணம் போய்ச்சேர்ந்தான். கலியாணமாகி வதூவரர்கள் பட்டணப்பிரவேசம் செய்வதால் ஸ்திரீ புருஷர்கள் அனைவரும் எதிர்கொண்டுவந்தனர். மகேந்திரனின் அமராவதிக்கு சமானமான அந்தப்புரத்தை ஸ்வஸ்திவாசனம் சொல்லும் பிராம்மணர்களுடன் பிராமணப் பிரியனான தசரதன் பிரவேசித்தான். அழகிய லக்ஷணமுள்ள லக்ஷ்மணாதிகள் மூவர்கள் அவர்களின் பத்தினிமார்களுடன் மூன்று அக்னிகள் தம்தம் ஜ்வாலைகளுடன் பிரகாசிப்பதுபோல் பிரகாசித்தனர். ஸ்ரீ ராமசந்திரனும் ஜகத்துக்கெல்லாம் மங்களத்தைக் கொடுப்பவைகளுக்கும் மங்களத்தைக் கொடுக்கும் அவயவங்களுள்ள சீதாதேவியை பாரியையாக அடைந்து பிரகாசித்தார். குண ஸம்பத்துக்களைக்கொண்டுபார்த்தால் ஸாக்ஷாத் லக்ஷ்மியே ஸீதை ஆவாள். இது ஸத்தியமே. இது கேவலம் உபசாரவார்த்தையன்று, சுவேதத்வீபத்தில் பிரகாசிக்கும் ரத்னமயமான மண்டபத்தில் மிகவும் சோபிப்பதாயுள்ள இணையற்றதான சேஷசயனத்தில் அநந்தகல்யாணகுண ஸம்பன்னராய் ஸ்ரீமந்நாராயணன் மகாலட்சுமீ ஸமேதனாய் எப்படி க்ரீடிக்கிறாரோ, அப்படித்தான் இந்த பூலோகத்தில் அதிலும் ஜம்புத்வீபத்திலும் அதிலும் அயோத்தியா நகரில் ஸமஸ்தகல்யாணகுண ஸம்பன்னரான ஸ்ரீ ராமரும் மிகவும் சோபிக்கும் சீதாதேவியுடன் ஜகதீசுவரியான ஜயந்தீ தேவியுடன் ரிஷபமூர்த்தியைப்போல் க்ரீடித்தார்.

ஏழாவது ஸர்க்கம் முடிந்தது.

(தொடரும்.)

ஸ்ரீ நாராயண பண்டிதாசாரியார் இயற்றிய

ஸ்ரீ மத்வ விஜயம்.

பதின்மூன்றாவது ஸர்க்கம்

(முன் 128ம் பக்கம் தொடர்ச்சி.)

5. ஸ்ரீமத்வாசாரியார் நிர்மலமான மனதின் பலமாகிய க்ஞானம் பக்தி வைராக்யம் முதலான குணங்களால் சோபிக்கும் மோக்ஷ

யோக்யர்களான புருஷர்களை தன் வாக்யங்களால் வணங்கச் செய்கிறார். கங்கா பிரவாஹமோ தன் ஜலத்தால் பழுகிய புஷ்பங்கள் பழங்கள் இலைகளால் சோபிக்கும் உத்தமமான விருக்ஷங்களை வணங்கச் செய்கிறது. ஸ்ரீமத்வாசாரியார் உறுதியான அபிப்பிராயமுள்ளவர்களாய் தமக்கு கீழ்படியாத மற்றவர்களை வாதத்தில் பராஜயமடையச் செய்கிறார். கங்காப்ரவாஹமும் திடமான நிலை கொண்டு, வளையாதிருக்கும் மரங்களை முறித்து விடுகிறது. ஸ்ரீமத்வாசாரியார் எவராலும் தடுக்க மாளாத பராக்கிரமமுள்ளவர். கங்காப்ரவாஹமும் அப்படியேத்தான். 6. ஸ்ரீமத்வாசாரியார் ஓர் ஊரைவிட்டு மற்றொரு ஊர் போகும்பொழுது அவருடைய பிரயாண உற்சவத்தில் ஆச்சரியமுள்ள அந்தந்த தேசத்தார்களால் பிரதிதினமும் வந்தனாதிகளால் சேவிக்கப்படுகிறார். கங்கா ப்ரவாஹமும் அதன் இருகரைகளிலுள்ள பலவகை தேசத்தார்கள் அதன் ஓட்டத்தின் பெருமையைக் கண்டு மகிழ்ந்து ஸ்நான யானாதிகளால் சேவிக்கப்படுகிறது. ஸ்ரீமத்வாசாரியார் ஒவ்வொரு நாளும் பரவிவரும் கீர்த்தியுள்ளவராய் ஸம்ஸார கஷ்டம் நிவிருத்தியாக வேண்டுமென்று தூர்தேசத்திலுள்ள ஜனங்களால் ஆராதிக்கப்பட்டு பின் தொடரப்படுகிறார். கங்காப்ரவாஹமும் உலகத்தை வியாபித்த கீர்த்தியுடையதாய் ஸமஸ்த துக்கங்கள் விலக தூர தேசத்து ஜனங்களாலும் சேவிக்கப்படுகிறது. 7. மனுஷ்யர்களின் கண்களுக்கு புலப்படாமல் தேவர்களாலும், கந்தர்வர்களாலும், ரிஷிச்ரேஷ்டர்களாலும் ஸ்ரீமத்வாசாரியார் யதேச்சையாய் சேவிக்கப்படுகிறார். கங்காப்ரவாஹமும் அப்படியேதான். ஸ்ரீநாராயணனின் பாதகமலத்தின் சம்பந்தம் பெற்றதால் ஸ்ரீமத்வாசாரியார் உலகில் மகாபரிசுத்தரானவர். கங்கா ப்ரவாஹமும் அப்படியேதான். 8. ஸ்ரீ மத்வாசாரியார் ஒருவராலும் தடுக்க முடியாதவர். கங்காப்ரவாஹமும் ஒரே வெண்மையான ரூபம் கொண்டது. இப்பேர்ப்பட்ட ஆநந்த தீர்த்த முனிவராகிய க்ஞானிச்ரேஷ்டர் தேவநதியாகிய கங்கையின் அவிச்சின்னமான ப்ரவாஹம்போல் அவருடைய பிரயாண காலத்தில் அத்யந்தமாய் பிரகாசித்தார்

ஸ்ரீ மத்வாசாரியாரின் பிரயாண அழகு.

9. ஸ்ரீ மத்வாசாரியார் சீக்கிரமே ஸ்தம்பம் என்னும் வார்த்தையை தொடர்மொழியாய்க்கொண்ட பெயருடைய தேசத்திற்கு வந்து, அங்கு ஸமஸ்த ஜனங்களும் வணங்கும்படியான அழகிய மதனேசுவரரின் தேவாலயத்தில் பிரவேசித்தார். 10. அந்த தேவாலயத்தில் ஓர் இரவு தங்கியவராய் மறுநாள் காலையில் அனுஷ்டிக்கப்படவேண்டியதாயுள்ள ப்ராத ஸ்நானம் முதலான ஆன்ஹிகங்களை செய்து முடித்தவராய் உள்ள ஸ்ரீ மத்வாசாரியார் பிரயாணத்துக்குரிய லக்ஷணங்களால் அங்கிருந்து புறப்பட எத்தனித்திருப்பதாய் சீக்கிரமே அவருடைய சிஷ்ய கூட்டங்கள் தெரிந்துகொண்டனர். 11. ஸ்ரீமத்வாசாரியாரின் சிஷ்ய கூட்டங்களில் சேர்ந்த ஸன்யாஸிகள், அவர்களுக்கு அநுகமான பரசு முதலான அடையாளங்களுடன் கூடிய தண்டகாஷ்டாதிகளை தரித்துக்கொள்ளுதல் முதலான எத்தனத்துடன், ஆன்ஹிகத்தில் தங்கள் மனம் சலிக்காதிருக்க எதிரில் கட்டிக்கொண்ட, சிவந்த வர்ணமுள்ள காஷாயங்களையும் அவஸரமாய் வெளியே எடுத்து விட்டனர். 12. க்ஞானியான ஸ்ரீ மத்வாசாரியார் தனது வக்ஷஸ்தலத்திலேயும் புஜங்களிலேயும் தரித்திருக்கும் கோபீ சந்தன நாமங்களுடையவும் சக்ர சங்க முத்திரைகளுடையவும் ஸ்பஷ்டமான சின்ஹங்கள் ஈரமில்லாமல் உலர்ந்துபோனதைப்பார்த்து, ஸ்ரீமத்வாசாரியாரின் சிஷ்யரொருவர், ஸ்ரீ ஹரிக்கு ஸமர்ப்பணம் செய்து நிர்மால்ய சேஷமான கோமளமான துளஸீ தளங்களால் தயார் செய்யப்பட்ட ஒரு மாலையை ஸ்ரீ மத்வாசாரியாரின் கழுத்தில் போட்டார். 13. மூச்சு காற்றையும் பேச்சு வார்த்தைகளையும் அடக்கிய இந்திரிய நிக்ரஹம் படைத்த ஒரு சிஷ்ய ஸன்யாஸியார், கைகால்களை ஜலத்தால் சுத்தப்படுத்திக்கொண்டு, மேலே கயிறுகளால் வட்டமாய் அலங்கரிக்கப்பட்டதாயும், கயிறுகளால் கட்டப்பட்டிருப்பதாயும் மேல் உறையுடன் மூடப்பட்டதாயுமுள்ள ஸ்ரீமத்வாசாரியாரின் ஸாலக்ராமங்கள் ப்ரதிமைகள் நிறைந்ததான ஸ்வாமி பெட்டியை தன் தலைமீது தரித்தார். 14. அநேக ஜல பாத்திரங்களை எடுத்துக்கொண்டு மிகுந்த பளுவான புஸ்தகம் முதலானவைகளின் சுமையை ஸ்ரீமத்வாசாரியாரின்

சிஷ்யர்களில் இளம் பிராயமுள்ள கூட்டத்தார் சிரமமன்னியில் தலையில் சுமந்தனர். சாமர்த்தியத்துக்கு சமானமான குணம் யாது உண்டு? 15. அவர்களில் நூதனமாய் வந்து சேர்ந்த சிஷ்யரொருவர் தான் சுமந்து போகவேண்டிய புஸ்தக மூட்டையை கட்டும் கயிறை வெகு நேரம் தேடியும் காணாமல், அது வைக்கப்பட்டிருந்த இடத்தை மறந்துபோய் அடிக்கடி அங்கிருந்தவர்களை அதைப்பற்றி கேட்டுக்கொண்டு, தன்னால் பிரயாணம் தவக்கப்படலாகாதென்ற எண்ணத்தால், மிகுந்த பரபரப்புடன் அங்குமிங்கும் ஓடியாடித்திரியாடுவதைப் பார்த்துவிட்டு சில சிஷ்யர்கள் அவரைப் பரிகசித்தனர். 16. இவ்வாறு சிஷ்ய சமூகங்கள் மூட்டை முடிச்சுகளை தூக்கிக்கொண்டு அந்த தேவாலயத்தினின்றும் வெளியே புறப்பட்டுக்கொண்டிருக்க, அந்த மதனேசுவரரின் தேவாலயத்தில் உயரக்கட்டியிருந்த மணியை தேவதரிசனத்துக்காகவந்த ஒருவர், தாமாக கையால் அறைந்து, அந்த பெரிய மணியின் பலமான சப்தம் ஏற்பட்டதால், அந்த சாக்கை வைத்து, ஸ்ரீ மதனேசுவரரான ஸ்ரீ ஹரியாலேயே பிரயாணம் புறப்பட பிரேரிபிக்கப்பட்டதாய் நிச்சயித்து ஸ்ரீ மத்வாசாரியார் வெளியே புறப்பட்டார். 17. எல்லோராலும் ஸேவிக்கத்தகுந்தவராயும் ஸன்யாஸி ச்ரேஷ்டராயுமுள்ள ஸுவர்ணம்போல் தேககாந்தி படைத்த ஸ்ரீமத்வாசாரியாரின் தலையின்மேல், அச்சமயம் ஓர் சிஷ்யன் பிடித்த அதி உத்தமமான வெண்குடை, எப்போதுமே சம்பவிக்காத உதய சூரியனின் மீது வந்து சேர்ந்த பூர்ண சந்திரனின் காந்திபோன்ற காந்தியை அடையப்பெற்றது. 18. த்ரிபுவனங்களையும் தரிக்கும் ஸ்ரீ ஹரியை ஹ்ருதயத்தில் தரித்திருக்கும் ஸ்ரீ மத்வாசாரியாரை ஒரு சிஷ்யன் தன்தோளின்மீது தரித்தது ஆச்சரியமன்று. முக்ய ப்ராணரான அந்த ஸ்ரீ மத்வாசாரியார் தான், தன்னை வகிக்கும் புருஷனின் உள்ளே இருந்து அவனை சுயம் வகிக்கிறார். 19. அப்பொழுது அந்த பிரயாண காலத்தில் வேத மந்த்ரங்களையும் யாக மந்த்ரங்களையும் பாராயணம் வியாக்யானம் செய்பவர்களாயும், விலக்கப்பட்டதான நிஷித்த காம்ய கர்மங்களுள்ளவர்களாயுமுள்ள நூற்றுக்கணக்கான ஸன்யாஸிகளும், ஏகாந்தாசிரமிகளும் பிரம்மசாரிகளும், வேதத்தில் சொல்லப்பட்டதாயும் விலக்கப்பட்ட நிஷித்தமான காம்யகர்மங்களை சுபாவமாய்க் கொண்டவைகளுமான அவரவர்களின் வர்ணாசிரம கர்மங்கள் சரீரமெடுத்து வந்தாற்போல் அந்த ஸ்ரீ மத்வாசாரியாரை பின் தொடர்ந்தார்கள். 20. புருஷச்ரேஷ்டரான ஸ்ரீ மத்வாசாரியாரைப் பார்த்துக்கொண்டிருப்பதால், இந்த பரிவார ஜனங்களனைவரும் வழிப்பிரயாணத்தின் களையை அடையவில்லை. ஸம்ஸாரத்தில் வருந்தும் ஜனங்கள் இந்த ஆசாரியாளை மனதில் எண்ணிய மாத்திரத்தில் ஸம்ஸாரத்தினின்றும் விடுதலையாகிய மோக்ஷ ஸுகத்தையே அடைகின்றனரென்றால், அவரை நேரில் தரிசித்து வந்த பின்பும் வெகு ஸ்வல்பமான இந்த வழி நடையின் துக்கத்தை அவர்கள் அடையவில்லை என்பது ஆச்சரியமன்று. (தொடரும்.)

ஏகாதசி நிர்ணயம்.

ஓர் சம்பாஷணை.

[தேவதத்தன் எழுதியது]

கல்லம்மாள்: ஆசார்யரே! எனக்கு ஏகாதசி வியாழக்கிழமையா வெள்ளிக்கிழமையா?

குண்டாச்சார்: வியாஸராஜ மடத்தாருக்கு வெள்ளிக்கிழமைதான்.

கல்லம்மாள்: மாத்வ மித்திரன் காலண்டரில் கார்த்திக சுத்த ஏகாதசி உபவாஸம் வியாஸராஜ மடத்தாருக்கு பட்டியல் 3—11—38 வியாழக்கிழமை என்று போட்டிருக்கிறதே?

குண்டாச்சார்: வியாஸராஜ மடம் ஸ்வாமிகளுங்கூட வியாழக்கிழமைதினம் உபவாஸம் செய்ய நிச்சயித்திருந்தார்கள். "யத்ராதிகஸாமதா" என்று எந்த பஞ்சாங்கத்திலாவது தசமி அதிக நேரம் இருந்துவிட்டால் தசமி வேதம் வியாஸராஜ மடத்தார்கள் அனுஷ்டிப்பது வழக்கம். பம்பாய் மாகாணம் ஸவணூர் பஞ்சாங்கத்தில் தசமி வேதம் வந்திருக்கிறதென்று கடைசி நிமிஷத்தில் அவர்கள் கண்டுகொண்டு, வியாழக்கிழமை உபவாஸம் செய்வதை மாற்றி வெள்ளிக்கிழமை உபவாஸம்

செய்ய நிச்சயித்திருக்கிறார்கள். ஆகையால் நீங்கள் வியாஸராஜ மடமாதலால் உங்கள் ஸ்வாமிகளின் அனுஷ்டானப்படி வெள்ளிக்கிழமை தான் நீங்கள் உபவாஸம் செய்யவேண்டும்.

கல்லம்மாள்: அதிலென்ன ஆக்ஷேபணை! நாங்கள் எங்கள் ஸ்வாமிகளின் அனுஷ்டானப்படிதான் ஏகாதசி செய்வது தொன்று தொட்டு வழக்கம். ராகவேந்திர ஸ்வாமி மடத்திலும் அப்படித்தானே?

குண்டாச்சார்: ஆம். உத்தராதி மடத்தார்களில்தான் சுயம் ஆசாரிய புருஷர்கள் ஸம்பிரதாய பிரவிருத்தகர்கள் அநேகம். வித்யாதீச ஸ்வாமிகளின் காலத்தில் தம் சிஷ்யர்கள் அவரவர்களின் சம்பிரதாய நூல்களின்படி ஏகாதசி அனுஷ்டானம் செய்யலாம் என்று அவர் அனுமதி கொடுத்திருக்கிறார். குருவின் அனுமதி பெற்று குருவின் அனுஷ்டானத்திற்கு ஒரு சமயம் வித்தியாசமாக இருந்தாலும்கூட அவர்களின் சாஸ்திரத்தில் பாரம்போட்டு அவர்கள் அவ்வாறு அனுஷ்டிக்கின்றனர்.

கல்லம்மாள்: நம்ம வியாஸராஜ மடம் ஸ்வாமிகளுக்கு வெள்ளிக்கிழமைதானே ஏகாதசி. அதில் சந்தேகமில்லையே.

குண்டாச்சார்: வியாஸராஜ மடத்திலிருந்தே ஸ்ரீரங்கம் தேசபூஷணம் ப்ரஸன்ன வெங்கடேச ராயர்வாளுக்கு தந்தி வந்திருக்கிறது. அவர் பதிலுக்கு கூட பணம் கட்டி தந்தி அனுப்பியிருந்தார். இந்த விபரம் அதில் கண்டிருக்கிறது. என் கண்ணாலேயே கண்டேன்.

சாமிராவ்: மேற்தெரு சப்பக்கா வியாஸராஜ மடம் தானே! அவன் வெள்ளிக்கிழமை த்வாதசி, கட்டளை செய்வதாக மகத்தான ஏற்பாடுகளை செய்திருக்கிறானே!

குண்டாச்சார்: ஆம் வாஸ்தவம்தான். இந்த பாழாய்ப்போகும் ஏகாதசித் தகரார் உத்தான ஏகாதசியில் வந்து தொலையவேண்டுமா? "நான் கறிகாய்களை வாங்கி சமையற்காரனை சொல்லி சித்தம் செய்து விட்டேன். எந்த ஸ்வாமிகள் எப்படிச் செய்தாலும் பரவா இல்லை. எனக்கு வெள்ளிக்கிழமைதான் த்வாதசி" என்று சொல்லிவிட்டான்.

சாமிராவ்: அவனுக்கு வியாஸராஜ மடம் நிஷ்டை அதிகமாயிற்றே. வியாஸராஜ மடத்தார்களைத் தவிற வேறு ஜனங்களை அவன் அழைக்க மாட்டான். தானதர்மம் எல்லாம் அவர்களுக்குத்தானே! பத்து பேர் வியாஸராஜ மடத்து பிராம்மணர்களாவது எப்படி அன்று சாப்பிடப் போகிறார்கள்?

குண்டாச்சார்: பத்து போவது! அன்று ஐம்பது பேர் வியாஸராஜ மடத்து வைதிகர்கள் சாப்பிடப் போகிறார்கள். இனி மடமாவது சுவாமியாவது. எல்லாம் நாம்கே வாஸ்தேதான்.

சாமிராவ்: அந்த மடத்து சிஷ்யர்களென்று பெயர் வைத்துக் கொண்டு உங்களுக்காவது உங்கள் சம்பிரதாயப்படி உங்கள் குருவின் அனுஷ்டானத்தை பின்பற்ற சிரத்தை வேண்டாமா?

குண்டாச்சார்: ராயர்வாள்! நீங்கள் லௌகிகர். வைதிகர்களின் சுக துக்கம் உங்களுக்குத் தெரியாது. நீர் வைதிகராயிருந்தால் இப்படி கேட்டிருக்கமாட்டீர். சாமி பூதம், சாஸ்திரம் கீஸ்திரம், என்று பார்த்துக்கொண்டிருந்தால் வரும்படி எப்படி வருமோ? தலா பெரிய வெங்கலப்பானை பாயஸ தானத்திற்கு சுமார் 1 வராகன் பெறும், அரை ரூபாய் தக்ஷிணை, போளி, அப்பளாம் ஆமவடையோடு நல்ல சாப்பாடு இதை எல்லாம் விட்டுவிடுவதா?

சாமிராவ்: இதை எல்லாம் யார் விடச்சொல்லுகிறார் வெள்ளிக்கிழமை ஏகாதசியன்று கொட்டிக்கொள்வதை சனிக்கிழமை துவாதசியன்று கொட்டிக்கொள்கிறதுதானே.

குண்டாச்சார்: யார் என் வார்த்தையை கேட்கிறார்? எனக்கு வயசாகிவிட்டதாம். இதாளுடைய தாபத்ரயங்களை பார்க்காமல் நான் சாஸ்திரம் சொல்லுகிறேனாம். நேற்று பிறந்தவர்கள் சாஸ்திரத்தையும் சம்பிரதாயத்தையும் சொல்ல புறப்பட்டுவிட்டார்கள். வியாஸராஜ மடம் ஸ்வாமிகளுக்கு என்ன தெரியும் என்றும் இந்த ஆசார் பாலியம், இவர்தான் மெத்த படித்திருக்கிறார், எங்கள் இஷ்டம் சௌகரியம் பார்த்து சாஸ்திரம் சொல்லுகிறார், இவர்தான் எனக்குப் பிடித்தம் என்றும் அந்த அம்மாள் நம்ம ஆசாமியை கொண்டாடத் துவக்கி விட்டாள்.

சாமிராவ்: இவர்தானுகட்டும் எப்படிச் சொன்னார்?

குண்டாச்சார்: என்னைப்போலவே இவரும் சொல்லிவிட்டால், சம்பிரதாயம் அறிந்த வயதான எனக்கு கௌரவம் வந்துவிடுமே என்று என்மீது இவருக்கும் மாச்சரியம். அது கூடாது என்று எனக்கு விருத்தமாய்த்தான் அவர் எப்போதும் சொல்லுகிறாரே! பத்திரிகைகளில் எழுதுகிறார். வாயடி அடிக்கிறார். வியாஸராஜ மடத்தார் ப்ராசீனர்கள் ஒருவரும் அதை எதிர்ப்பதில்லை, கண்டிப்பதில்லை, விருத்தமான பிரமாணம் காட்டுவதில்லை. இவர் பெரிய பண்டிதராகிவிட்டார். பத்து சம்மண்டாட்டிகள் கொண்டாடுகின்றனர். தினம் அவரை சாப்பாட்டுக்கு அழைக்கின்றனர். அவர் வைதிகத் தொழில் பலமாகிக்கொண்டு வருகிறது. இப்படி எல்லோரும் உதாசீனமாய் இருக்கும்பொழுது எனக்குத்தான் என்ன கவலை?

சாமிராவ்: இந்த ஊரில் உங்கள் வியாஸராஜ மடம் ஸ்வாமிகளின் பிருந்தாவனம் ஒன்றும் இருக்கின்றதே? அதற்குமா ஏகாதசியன்று சாதத்தைப் போடச்செய்து விட்டீர்கள்.

குண்டாச்சார்: இவர்கள் பூஜை செய்ய ஆரம்பித்தபின் அந்தக் கல்லிலா அந்த மகா ஸ்வாமிகள் இருக்கின்றனர்? தானே அந்த பாபத்தைஅவர்கள் அனுபவிக்கப்போகின்றனர். என்னை இதில் சேர்த்துச் சொல்லாதேயும்.

சாமிராவ்: நீர் வியாஸராஜ மடம் சிஷ்யராயிருந்து, இப்படி செய்வது ஸம்பிரதாய விரோதம், அக்ரமம் என்று தெரிந்த பின்பு, உங்கள் ஸ்வாமிகளுக்கு எழுதி, ஏகாதசி அனுஷ்டானத்தில் வியாஸராஜ மடத்துக்கு பிரமாணமாயுள்ள வாக்யங்களை வெளியிட்டு, அதற்கு விருத்தமாய்ச் செய்பவர்களை அவர்களைக்கொண்டு சிக்ஷை செய்விப்பதுதான் உங்கள் கடமை.

குண்டாச்சார்: எங்களுக்கும் இந்த நியாயமெல்லாம் தெரியும், எங்கள் வியாஸராஜமடத்து சிஷ்யர்களிடமும் அறிவாளிகள் இருக்கிறோம். பெரிய பெரிய சங்கங்களை கூட்டுகிறோம். மகத்தான காரியங்களைச் செய்கிறோம் பிறர் ஏதாவது சொன்னால் லேசாய் விடுவதில்லை. சீறி சீறி விழுகிறோம். வெகு கட்டுப்பாடாகத்தான் இருக்கிறோம். நாம் சிஷ்யர்கள் என்ன செய்தால் என்ன? எங்கள் ஸ்வாமிகள் என்னமோ ஒன்றையும் காதிற் போட்டுக்கொள்வதில்லை. நாம் மட்டில் ஒழுங்காய் இருந்தால் போதுமென்று நினைத்திருக்கிறோம்.

சாமிராவ்: பேஷ் உங்கள் சிஷ்யர்களின் ஒழுங்கு தெரிந்துவிட்டதே. உங்கள் குருவுக்கு வெள்ளிக்கிழமை ஏகாதசி. சிஷ்யர்களுக்கு அன்று அவர் அனுமதியன்னியில், அவருடைய ஆக்ஞைக்கு விரோதமாகவே, மிருஷ்டான்ன போஜனம், பாயஸ தானம், தக்ஷிணை, ஸம்பாவனை எல்லா போகமும் அன்றே. இது நல்ல ஒழுங்கு, நல்ல குரு பக்தி அய்யா! நீங்கள் செய்வதெல்லாம் வெறும் வேஷம், டம்பம், என்பதற்கு இதைவிட வேறு என்ன அத்தாக்ஷி வேண்டும்.

குண்டாச்சார்: ராயரே! நீர் இதுவும் சொல்லலாம், இன்னமும் சொல்லலாம். நாம் ஒழுங்கு தவறிய பிறகு பிறர் ஏளனம் செய்கிறார்களென்று வருத்தப்பட்டு பிரயோஜனமென்ன? அம்மா! நீங்கள் போகலாம். நீங்கள் நம்ம ஸ்வாமிகள் அனுஷ்டிப்பதுபோல் வெள்ளிக் கிழமை அன்றே உபவாஸம் செய்யுங்கள்.

சாமிராவ்: ஆசார்யரே! அப்படியானால் உங்களுக்கு சுப்பக்கா த்வாதசி கட்டளை பாயஸ தானம் ப்ராப்தம் இல்லைபோலும்.

குண்டாச்சார்: ஏனோ எனக்கு ப்ராப்தம் இல்லை. நான் செய்யும் உபவாஸ ஒழுங்குக்கு எனக்கு ஏகாதசி வேறு, த்வாதசி வேறு. தாராளமாய் எல்லோருடன் நானும் அன்று சாப்பிடப்போகிறேன். நானும் தான் வைதிகன். எனக்கும் வரும்படிதான் முக்யம்.

[குறிப்பு:—இந்நகரிலும் கூட வியாஸராஜ மடத்தார் பலர், வெள்ளிக்கிழமையன்று ஸ்ரீ வியாஸராஜ மடம் ஸ்வாமிகள் ஏகாதசி உபவாஸம் அனுஷ்டிப்பதாய் அறிந்தும்கூட, வியாழனன்று தான் உபவாஸம் செய்தனர். பாஷ்யதீபிகாசாரியார் முதலான 3 பிருந்தாவனங்களுக்கும் சுவாமிகளின் உபவாஸ தினமாகிய வெள்ளிக்கிழமையன்று அன்னோதகம் அளிக்கப்பட்டது என்றறிவிக்க வருந்துகிறோம்.

[ப–ர்.]

ஸ்ரீ மத்வாசாரியார் இயற்றிய

ஸ்ரீ மகாபாரத தாத்பர்ய நிர்ணயம்.

முப்பதிரண்டாவது ஸர்க்கம்.

(முன் 80.ம் பக்கம் தொடர்ச்சி)

துரௌபதியின் இரகசிய நிலை வெளியானது.

தர்மபுத்திரர் அவரவர்களின் மூல ரூபங்களின் அதி சமீபத்தில் உட்கார்ந்திருக்கும் தன் எல்லா சொந்த ஜனங்களையும் பார்வையிட்டு நாற்பத்தி ஒன்பது மருத்கணங்களின் நடுவில் பிரகாசித்திருந்தவரும் பீமசேனரை முக்ய ப்ராணரின் சமீபத்தில் கண்டார். அந்த பீமசேனரின் சமீபத்தில் காந்தியால் பிரகாசிப்பவளாயும், தன் சரீரத்தினின்றும் பார்வதி முதலான தேவ ஸ்திரீகளை அனுப்பிவிட்டு அலாதியாய் சுத்தமாயிருப்பவளாயும் உள்ள துரௌபதியையும் கண்டார். பூர்வ ஜன்மத்தின் வாஸனைக்குள்ளாகி தர்மபுத்திரர் துரௌபதியை ஸ்பரிசிக்க விரும்பினார். அப்பொழுது மகேந்திரன் துரௌபதியைத் தொடாதே என்று இவ்வாறு சொன்னார். "இந்த துரௌபதி ஸாது ஜனங்களுக்கு

ப்ரியரும் யஜமானருமான முக்ய ப்ராணருக்கு ப்ராணனைப்போல் வேண்டியவள். சுகரூபியான வாயு பகவானிடம் இவள் எப்போதும் ரமிப்பதால், இவள் ஒருவளுக்கே ஸ்ரீ என்று பெயர். பீமசேன ரூபமுள்ள வாயு பகவானுக்கும், மற்ற நால்வர்களாகிய உங்கள் சரீரத்திலுள்ள வாயு பகவானுக்கும், போகத்திற்காக வாயு பகவானின் பத்னியான பாரதி தேவி உங்கள் சந்தோஷத்திற்காக உங்கள் பத்னிமார்களுடன் கூடி த்ரௌபதியாய் விஷ்ணுவால் ஸ்ருஷ்டிக்கப்பட்டாள். அதனால்தான் த்ரௌபதி தேவிக்கு பீமசேனரின் விஷயமாக அதிக அன்பு இருந்தது. பீமசேனருக்கு அடுத்தபடி அர்ஜுனனிடம் அவளுக்கு அன்பு இருந்தது. அர்ஜுனனுக்கு அடுத்தபடி உன்னிடமும் நகுல சகதேவர்களிடமும் அன்பு இருந்தது, என்றால் வாயு பகவானின் ஆவேசம் யார் யாரிடம் எந்த தாரதம்யத்துடன் இருந்ததோ, அந்த க்ரமத்தின்படி அவரவர்களிடம் அன்பு இருந்தது. இப்பொழுது த்ரௌபதி, இந்திர பத்னி சசிதேவி, யம பத்னி சாமளா, அச்வினி பத்னி உஷா, பார்வதி இந்த நால்வர்கள் விலகிப்போய் இவர்களின் சம்பந்தம் இல்லாதவளாயும் உத்தம சரீரமுள்ளவளாயும், சுத்தமான சரீரமுள்ளவளாயும் ஆகிவிட்டாள். நீங்கள் எல்லோரும் வாயு பகவானின் விசேஷ அம்சம் இல்லாதவர்களாய் உங்கள் மூல ரூபத்தில் இருக்கிறீர்கள். ஆகவே இந்த வாயு பத்னியான பாரதி தேவியை ஸ்பரிசிப்பதிலேயும் உங்களுக்கு விசேஷ பரிசுத்தம் இல்லை. இனியும் உங்களுக்கு இந்த ஸ்பரிசாதிகாரம் ஏற்படமாட்டாது. மனுஷ்ய சரீரம் வந்தவனுக்கு தேவர்களைத் தொடும் அதிகாரம் எவ்வாறு வரமாட்டாதோ அதன்படித்தான் இதுவும்.

தர்மபுத்திரருக்கு மனுஷ்ய வாசனை விலகியது.

என்று மகேந்திரன் சொல்லி த்ரௌபதியைத்தொட விரும்பியதிலிருந்து விலகிய தர்மபுத்திரரை மனுஷ்ய வாஸனையினின்றும் திருப்பிறவராய் பகவானுடைய ஸ்தனங்களின்றும் பிறந்தவரான யம பகவான் அப்பொழுது தர்மபுத்திரரை அணைத்துக் கட்டினர். உடனே தர்மபுத்திரர் மனுஷ்ய ஸம்ஸ்காரமற்றவராய் சுத்தி அடைந்து யம பகவானுக்கு ஸமானராய் ஆனர்.

பாண்டவர்கள் மூல ரூபத்தை அடைந்தது.

பிறகு எல்லா பாண்டவர்களும் சந்தோஷமடைந்தவர்களாய் அவரவர்களின் மூல ரூபங்களுடன் சேர்ந்து அவரவர்களின் ஸ்தானங்களில் ப்ரவேசித்தனர். அந்தந்த மூல ரூபங்களுடன் ஸமானமான போகமுள்ளவர்களாய் அந்தந்த ஸ்தானங்களில் வஸித்தனர்.

ஸ்வர்க்கத்திலும் ஸ்ரீ கிருஷ்ணர் கூட இருந்தது.

அந்த ஸ்வர்க்கத்திலேயும் கூட கிருஷ்ண பக்தர்களான அந்த பாண்டவர்களுக்கு மனுஷ்ய ஜன்மத்தில் இருந்ததுபோல் ஸ்ரீ கிருஷ்ணரின் சேர்க்கை ஏற்பட்டது. ஸ்ரீகிருஷ்ணர் முன்போலவேத்தான் பாண்டவர்களுடன் சேர்ந்து விளையாடினர். முன் போலவேத்தான் அர்ஜுனனுக்கு ஸாரதியாய் இருந்து அர்ஜுனனுடன் ஸ்ரீ கிருஷ்ணர் விளையாடினர்.

இதர தேவாம்சர்கள் தேவர்களாய் ஆனது.

தேவர்களிடமிருந்து பிறந்தவர்களான மற்ற த்ரோணாசாரியார் முதலானவர்கள் எல்லோரும் ப்ராரப்த கர்மம் நாசமானபின் அவரவர்களின் மூல ரூபங்களுடன் ஐக்யமடைந்தனர்.

துரியோதனாதிகள்
மீண்டும் மனுஷ்யர்களாய் பிறந்தது.

துரியோதனன் முதலான தைத்யர்கள் ஸ்வர்க்க போகம் செய்து அவர்கள் சம்பாதித்த புண்யம் தொலைந்தபின் பூமியில் பிறந்தனர். துரியோதனாதி தைத்யர்கள் கலியுகம் பிறந்து 4300 (நாலாயிரத்து முன்னூறு) வருஷங்கள் வரையில் தேவலோகத்து போகங்களை அனுபவித்துவிட்டு பிறகு மனுஷ்ய ஜன்மமடைந்து "நான் ஈசுவரன், ப்ரபஞ்சம் மித்யை பொய்" என்ற அவர்களின் ஸ்வரூப பூதமான அறிவைக்கொண்டு அந்தம் தமஸ்ஸை அடைந்தனர். தமஸ்ஸிலும் தைத்யர்களுக்கு துக்கத்தின் தாரதம்யம் இருந்துவருகிறது. எல்லா தைத்யர்களின் ஸமூகத்தார்களைவிட கலிக்கு தமஸ்ஸில் துக்கம் ஸம்பூர்ணமாகும். சதுர்முகனுக்கு மோக்ஷத்தில் எல்லா தேவர்களைவிட ஸுகம் எப்படி பரிபூர்ணமோ அப்படியேத்தான் கலிக்கு அதிகமான விஷ்ணு த்வேஷத்தால்

விசேஷமான துக்கம் உண்டு. தைத்யர்களில் சிலர் பிசாசு ஜன்மங்களையும், அஸுர ஜன்மங்களையும், ராக்ஷஸ ஜன்மங்களையும் அடைந்து விஷ்ணுவிடமும் விஷ்ணு பக்தர்களிடமும் த்வேஷம் செய்வதால், சீக்கிரமே அந்தம் தமஸ்ஸை அடைகின்றனர். தேவர்கள் ப்ரம்ம ப்ரளய காலத்தில் அவர்களுக்கு அருகமான ஆனந்தத்தின் தோற்றமாகிய மோக்ஷத்தை அடைகின்றனர்.

பீமசேனர் மீண்டும் மனுஷ்யனாய் பிறந்தது.

கலியுகத்தில் நாலாயிரத்து முன்னூறு வருஷம் ஆன பின் பீமசேனர் ஆனந்ததீர்த்தர் என்ற பெயருடன் பிராம்மண சரீரமுள்ளவராய் மறுபடியும் பூமியில் அவதாரம் செய்து தைத்யர்களின் அம்சமானவர்களான பௌத்தாதி துர்வாதம் செய்பவர்களால் மறைக்கப்பட்டுப்போன, விஷ்ணுவின் ஸ்வரூபத்தை விஷ்ணு பக்தர்களுக்கு பகிரங்கப்படுத்தி வெளியில் எடுத்துச் சொன்னார். அச்சமயம் த்ரௌபதியும் பூமியில் அவதரித்து பகவத் ப்ரீதியின் பொருட்டு மகா தைத்யர்களை அந்தம் தமஸ்ஸில் வீழ்த்தினாள். விஷ்ணு பக்தர்களான அர்ஜுனாதிகள் *இந்த வைவஸ்வத மனுவின் இருபத்தி ஒன்பதாவது கிருதயுகத்தில் ஸ்ரீ ஹரியின் சந்தோஷத்திற்காக பூமியில் பிறந்து மறுபடியும் தங்கள் ஸ்தானங்களை அடைந்து இவர்கள் எல்லோருமே சதுர்முகனின் ப்ரளயத்தில் அவர்களுக்கு அருகமான மோக்ஷத்தை அடைகின்றனர். ஹனுமானின் அம்சம் பெற்ற பீமசேனர் வாயு பகவானின் ஸ்வரூபத்தை அடைந்து இனி வரப்போகும் பிரம்ம கல்பத்தில் சதுர்முகனின் பதவியை அடைந்து, ஸரஸ்வதி தேவியின் பதவியை அடைந்த த்ரௌபதியுடன் சேர்ந்தவராய் எல்லா ஜீவ ஸமூகங்களுடன் அதிகமான ஆனந்தமுள்ள மோக்ஷத்தை அடையப் போகிறார். பூமியில் ஹனுமார் முதலான அவதாரங்கள் எடுத்த

---

*ஜனார்த்தன பட்டீயம் வியாக்யானத்தின்படி இந்த ஸம்பூர்ண மகாபாரத தாத்பர்ய நிர்ணயமும் தமிழில் அர்த்தம் செய்யப்பட்டிருக்கிறது. அதனால் அந்த ஜனார்த்தன பட்டீயம் பாடத்தின்படிக்குள்ள ச்லோகங்களுக்குத்தான் அதன்படிக்குள்ள தமிழ் அர்த்தம் இங்கு பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. "ஜயதீர்த்தாதிகள் தேவாம்சமே" என்ற நிரூபத்தில் இந்த ச்லோகத்தின் பாட பேதங்கள் விமரிசை செய்யப்பட்டு இருக்கின்றன. மாத்வ மித்திரன் 5வது வாலியத்தை பார்க்க. [ப—ர்.

காலத்திலேயும் ஸ்வர்க்க லோகத்தில் வாயு பகவான் பாரதிதேவி இவ்விருவர்களாக இருந்தவரும் நிலைமையிலும், சதுர்முகனின் பதவியை அடைந்த நிலையிலும், மோக்ஷ பதவியை அடைந்திருக்கும் நிலையிலும், விச்சித்தி இல்லாததாயும் மேலானதாயுமுள்ள, பக்வத் பக்தி கொண்டவர்களான வாயு பாரதி இவர்களால், பூர்ண குணங்களுள்ள ஸ்ரீ நாராயணர் எல்லா ஜீவர்களைவிட அதிகமாய் எப்பொழுதும் சந்தோஷப்படுத்தப்படுகிறார்.

பீமசேனர்தான் ஆனந்ததீர்த்தர் என்பதற்கு ஆதாரம்.

ரிக்வேதம் இரண்டாவது அஷ்டகம் இரண்டாவது அத்யாயம் நடுவர்க்கத்திலுள்ள பூஷன்னயோதி பப்ருஷூ நம்ரதே என்னும் ரிக்கின் முன்பின் 13 ரிக்குகளும், இந்த இரண்டாவது அஷ்டகம் இரண்டாவது அத்யாயத்திலேயே இருக்கும் பலித்தா தத்வபுஷே தாயி தர்சதம் என்னும் பலித்தா ஸூக்தத்தின் 5 ரிக்குகளும் மூன்றாவது அஷ்டகம் முதல் அத்யாயத்திலுள்ள அஞ்ஜந்தி த்வாமத்வரே என்னும் ஸூக்தத்தின் 11 ரிக்குகளும், ஏழாவது அஷ்டகம் ஐந்தாவது அத்யாயத்திலுள்ள ஏக: ஸமுத்ர: என்ற ஸூக்தத்தின் 7 ரிக்குகளும், ஏழாவது அஷ்டகம் ஆறாவது அத்யாயத்திலுள்ள ப்ரதே சும்பந்தே என்ற ஸூக்தத்தின் 12 ரிக்குகளும், ஐந்தாவது அஷ்டகம் நான்காவது அத்யாயத்திலுள்ள மத்வோவா நாம என்னும் ஸூக்தத்தின் 7 ரிக்குகளும் ஆக இந்த 55 ரிக்குகளைக்கொண்ட நான்கு ஸூக்தங்களும் வாயு பகவானின் அவதார விஷயத்தில் பிரமாணங்கள். ரிக்வேதம் இரண்டாவது அஷ்டகம் இரண்டாவது அத்யாயம் 24வது வர்க்கத்திலுள்ள ததஸ்ய ப்ரியம் என்னும் மந்திரமும், எட்டாவது அஷ்டகம் 6வது அத்யாயம் 13வது வர்க்கத்திலுள்ள இதம் தே பாத்ரம் என்னும் மந்திரமும் ஆகிய இந்த வேத வாக்கியங்களும் பாஞ்சராத்ராகமத்திலுள்ள மத்வ ஸம்ஹிதா வசனமும், கூர்ம புராணம், ஸ்கந்த புராணம், ப்ராம்ஹ புராணம், மத்ஸ்ய புராணம் இவைகளிலுள்ள வசனங்களுடன் நாம் சொன்ன இந்த அர்த்தத்திற்கு பிரமாணங்களே யாகின்றன. [மத்வ மந்திரார்த்த மஞ்ஜரி என்னும் பிராசீன நூலில் கூறியபடிக்குள்ள இவ்வேத மந்திரங்களின் அர்த்தம் இந்த மித்திரன் சஞ்சிகைகளில் அலாதியாய் இனி பிரசுரிக்கப்

படும் நிரூபத்தில் காணலாம்.] இது சம்பந்தமாகவே தர்மபுத்திரரால் பிரசினம் செய்யப்பட்ட பீஷ்மாசாரியார் சாந்தி பர்வம் மோக்ஷ தர்மத்தில் விருத்ர கீதையில் "சுத்தாபிஜன ஸம்பன்னா: பாண்டவா: ஸம்ஸித வ்ரதா:| விஹ்ருத்ய தேவலோகேஷு புன: மானுஷ்ய மேஷ்யத" என்று பீமசேனாதிகளுக்கு மீண்டும் பூ-லோகத்தில் மனுஷ்யர்களாய் அவதாரம் இருப்பதை சம்க்ஷேபமாய்ச் சொல்லியுள்ளார். (தொடரும்)

உலக வர்த்தமானம்.

ரஷியாவிலிருந்து பதினாயிரம் நாஸ்திக ப்ரசாரங்கள் இந்தியாவுக்கு சீக்கிரமே அனுப்பப்படுவதாய் ரீகா நகரின் கடவுள் எதிர்ப்பு சங்கத்தின் பிரசுரமொன்று அறிவிக்கிறது.

ஃ ஃ ஃ ஃ

சினிமாவில் ஒழுங்குதவரான காக்ஷிகள் வெளியாவதைத் தடுக்க இம்மாகாண சர்க்காரும் ஒரு கமிட்டியை நியமித்திருக்கின்றனர்.

ஃ ஃ ஃ ஃ

தொழிற்சாலையில் மனுஷ்யர்களின் வேலை நேரம் வரையறுக்கப்பட்டிருப்பதுபோல் திருவனந்தபுரம் ஸம்ஸ்தானத்தில் வேலைகளைச் செய்யும் யானைகளின் வேலை நேரமும் சட்டபூர்வமாய் நிஷ்கரிஷை செய்யப்பட்டிருக்கிறது.

ஃ ஃ ஃ ஃ

வாஸிரிஸ்தான் ப்ரதேசத்தில் கீழ்படியா ஸ்திரீகளை மூக்கு அறுத்துவிட்டு புருஷர்கள் பின்பு பச்சாத்தாபப்படுகின்றனர். அவ்வாறு மூக்கு அறுபட்ட ஸ்திரீகள் வெளியே வர லஜ்ஜைப்படுகின்றனர். இங்கு மூக்குக்கண்ணாடிகள் விற்கப்படுவதுபோல் செயற்கை மூக்குகளும் அங்கு விற்கப்படுகின்றன.

ஃ ஃ ஃ ஃ

சுமார் 300 வருஷங்களுக்குமுன் சோழ மன்னர்களின் ஆண்மையில் வாசிக்கப்பட்டிருந்த கல் நாயனமும் ஒத்தும் இந்நகர் ஸ்ரீ கும்பேசுவரர் கோயிலிலிருந்து தற்போது தோண்டி எடுக்கப்பட்டிருக்கிறது.

தஞ்சைஜில்லா போர்ட் ஆபீஸில் கிளர்க்கு வேலையில் அமர்ந்திருந்த சிறு வயதுள்ள சின்னதம்பி கோனான் திடீரென்று பேச முடியாமலும் பார்க்கமுடியாமலும் போய், 2½-வருஷ காலம் பல வகை சிகிச்சைகளும் செய்து பயன்படாமல், இந்நகர் சமீபத்திலுள்ள மத்தியார்ஜுனம் ஸ்ரீ மகாலிங்கேசுவரரை சிறிதுகாலம் ப்ரதக்ஷிண நமஸ்காரம் செய்துவர, பூராபார்வையும் தற்போது அடைந்துவிட்டான்.

ஃ ஃ ஃ ஃ

இறந்துபோனவர்கள் சூக்ஷ்ம சரீரத்துடன் பேசுகின்றனர் என்று கொள்கை மேனாட்டில் இப்பவும் அதிகமாய் பரவி வருவதின் நிமித்தம் புடாபஸ்ட் நகரில் அவ்வாறு இறந்தவர்கள் அழைத்தார்கள் என அநேகர் தற்கொலை செய்துகொண்டுவிட்டனர்.

ஃ ஃ ஃ ஃ

கர்பத்தடையை ஆமோதித்ததென்றும், காமத்தை கிளப்பும் படங்களை பிரசுரித்ததென்றும், காரணம் கண்டு, லண்டன் வர்கர், சண்டே பிக்டோரியல், லேடீஸ் கம்பானியன் முதலான லண்டன் பத்திரிகைகளை அயர்லண்டு சர்க்கார் தன் தேசத்திற்குள் வரவொட்டாமல் தடுத்திருக்கின்றனர். இந்தியாவிலோ இப்பேர்ப்பட்டவைகள் அதிகமாய் மலிந்துவிட்டன.

ஃ ஃ ஃ ஃ

மகாயுத்தம்செய்து ஜப்பானியர் சீனாவில் ஷாங்காய் காண்டன் ஹாங்கோ என்னும் மூன்று நகர்களை பிடித்துவிட்டனர்.

ஃ ஃ ஃ ஃ

பகவன் மூர்த்திகளை நிந்திப்பதும் பொய் சாக்ஷ்யம் கூறுவதும் அஸத்திய ப்ரதிக்ஞை செய்வதும், அசிங்கமான வார்த்தைகளை ஆடுவதும் இவைபோன்றது யாதும் கூடாதென்றும் அதற்கு கடுமையான சிக்ஷை விதிக்கப்படுவதாகவும் ஸ்பெனியில் தேசியத் தலைவர் ஜனரல் பிரான்கோ என்பவர் சட்டமியற்றியிருக்கிறார். இந்திய தேசியத்தலைவர்கள் நாஸ்திகமான பொதுவுடமை கக்ஷியை ஆதரிக்கின்றனர்.

ஃ ஃ ஃ ஃ

ஆஸ்டிரியாவில் கிறிஸ்துவக்கோயில்களில் வியபிசாரம் நடக்கின்றனவென்று எல்லா கோயில்களையும் அந்த சர்க்கார் மூடச்செய்துவிட்டனர்.

நியூயார்க் நகரில் ரேடியோ மூலம் ஒருவர் உலக யுத்தம் என்ற நாடகத்தை நடத்திக்காட்ட, அமெரிக்காவிலுள்ள பிரதான நகர்களிலெல்லாம் உண்மையாகவே அவ்வாறே நடந்துவிட்டதென பிரமித்துப்போய் நாடெங்கும் பல ஊர்களில் வெகு பலமான அமளி நடந்துவிட்டது.

ஃ ஃ ஃ ஃ

சமீபத்தில் நடந்த சந்திரகிரஹண காலத்தில் அசாத்தியமான குளிரால் தொடவும் முடியாதிருந்த பனிக்கட்டி மிதக்கும் கங்கை ஜலத்தில் பரமபக்தியுடன் ஸ்நானமாட காசியில் மட்டில் சுமார் 3 லக்ஷம் ஜனங்கள் கூடிப்போய், முன் ஜாக்கிரதையாய் சர்க்காரால் பலமான ஏற்பாடுகள் நடந்திருந்தும், போலீஸாரால் சமாளிக்கமுடியாத நிலை ஏற்பட்டுவிட்டதாம். கங்காஸாகர ஸங்கமத்தில் அநேக ஸ்பெஷல் ரயில் வண்டிகளும் ஸ்டீமர்களும் ஓடிக்கொண்டிருந்ததாம்.

ஃ ஃ ஃ ஃ

பிரபாத் கம்பெனியின் பிரதான ஸினிமா நடிகையான சாந்தா ஆப்தே என்னும் பெண் தக்ஷிணதேச யாத்திரை செய்து, சென்னை முதலான நகர்களில், பிரபலர்களால் வெகு குதூஹலமாய் வரவேற்கப்பட்டு, குல ஸ்திரீகள் நாடகத்திலும் ஸினிமாவிலும் நடிக்க முன்வரவேண்டுமென்றும் அதனால் பலவகை சௌகரியங்கள் இருக்கின்றனவென்றும் உபதேசம் செய்து சென்றார்.

ஃ ஃ ஃ ஃ

இந்நகர் ஓர் கௌரவ மாஜிஸ்ட்ரேட்டின் வீட்டில் இருந்து வந்த அவருடைய கிராம காரியஸ்தரின் கலியாணமாகாத 15-வயதுள்ள ஸ்மார்த்த பிராம்மணப்பெண் திருட்டு கர்ப்பம் அடைந்து, ஓர் பெண் குழந்தையை பிரஸவித்து, அதை இவ்வூருக்கப்பால் 4, 5 மைல் தூரத்தில் ஓர் வாய்க்காலில் போட்டும், அந்த குழந்தை ஈசுவரகிருபையால் பிழைத்துப்போய், சத்தியநின் நிமித்தம் பகிரங்கமாகி, தாயும் குழந்தையும் போலீஸ் பந்தோபஸ்தில் கொண்டு வரப்பட்டு இந்நகர் கவர்ன்மெண்டு ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டிருக்கின்றனர். அந்தோ! சாரதாசட்டத்தின் சௌகரியமும் ஸினிமா போகும் ஸ்திரீ சுதந்திரத்தின் பயனும்.

ஃ ஃ ஃ ஃ

ஜப்பானில் புறாக்கள் தபால்களைக்கொண்டுபோய் திருப்பிக்கொடுக்கும் வேலைகளைச் செய்கின்றன.

இந்தியா முழுதும் சப்ளை செய்யக்கூடிய கிரோஸின் எண்ணை ஊற்றுகள் நமது தஞ்சைஜில்லாவில் ஏராளமாய் இருக்கிறதென்று சென்னை சர்க்கார் ஆராய்ச்சிக்காரர் டாக்டர் சி. மணவாளன் கண்டுபிடித்திருக்கிறார். அப்படியே தென்னிந்தியாவில் வேலை செய்தால் பல முக்ய ஸ்தலங்களில் வைரம் அபரிமிதமாய் கிடைக்குமென்றும் மற்றும் தங்கம் பித்தளை இரும்பு கிடைக்குமென்றும் உறுதி கூறுகிறார்.

ஃ ஃ ஃ ஃ

முக்யமாய் மண் பாண்டங்களையும் மாக்கல் சட்டிகளையும் சொற்பமாக பித்தளை வெங்கலம் முதலான பாத்திரங்களையும் சமையலுக்கு உபயோகிக்கவேண்டுமென்றும், ஈயப்பாத்திரங்களை ஒருக்காலும் உபயோகிக்கலாகாதென்றும் சென்னை சர்க்கார் உபதேசிக்கிறது.

ஃ ஃ ஃ ஃ

சென்னை ஹிந்துமதஸ்தாபன போர்டார், இம்மாகாணத்தில் உள்ள ஆலயங்களிலும் டிரஸ்டிகளை சண்டாளர்களின் ஆலயப்ரவேச விஷயமாய் தங்கள் அபிப்பிராயத்தை அறிவிக்கும்படிக்கும் இவர்களின் பலமிருந்தால் சுலபமாய் சண்டாளர்களின் பிரவேசத்தை சட்டபூர்வமாய் நிறைவேற்றிக்கொள்ளலாம் என்று கேட்டிருக்கின்றனர். சநாதனிகள் எங்கும் பலமாக எதிர்க்கின்றனர்.

ஃ ஃ ஃ ஃ

சமீபத்தில் ஜர்மனியில் ஹொர்வான்ராத் என்ற ஓர் ராஜதந்திரி ஓர் யூதவாலிபனால் கொல்லப்பட்டார் என்ற காரணமாக ஜர்மனி முழுதும் பதினாயிரக்கணக்கான யூதர் குடும்பங்கள் வேட்டையாடப்பட்டு, ஜர்மனியிலுள்ள யூதர்களில் குழந்தைகள் பெண்கள் ஒவ்வொருவரும் தலா 136 பவுன் அபராதம் கொடுக்க வேண்டுமென்று விதிக்கப்பட்டும் காட்டுமிராண்டித்தனமாய் ஹிம்சிக்கப்பட்டும் தேசப்ரஷ்டம் செய்யப்படுவதை முன்னிட்டு, அமெரிக்காவுக்கும் ஜர்மனிக்கும் பிணக்கு உண்டாய் அவரவர்களின் ராஜீய ஸ்தானீகர்களை திரும்பிவர உத்திரவிட்டிருக்கின்றனர். யுத்தவானம் கறுத்துவருகிறது. மின்னலும் தோன்றிவிட்டது.

ஃ ஃ ஃ ஃ

மாண்டலேயில் பௌத்தபிக்ஷுக்கள் ஸினிமா பார்க்கப் போனால் அவர்கள் 25 பானை ஜலம் கொண்டுவரும்படி அவர்களின் குருவால் சிக்ஷை விதிக்கப்படுமாம்.

வழக்கம்படி காளது டிசம்பர் மாதம் 26, 27, 28, 29உகளில் திருப்பதி சபைகள் நடத்தப்படுவதுடன் இவ்வருடம் ஸ்ரீ மத்வ ஸித்தாந்தோன்னஹினி சபைக்கு ஜூபிளி வைபவமும் கொண்டாடப்படுமென்றும் வழக்கப்படி ஸ்ரீ உத்திராதிஸ்வாமிகள் விஜயம் செய்வார்களென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஃ ஃ ஃ ஃ

சீக்கிரமாய் சமையலை செய்யாததால் பட்டினியாய் ஆபீசுக்குபோக நேர்ந்ததென்று தன் புருஷன் திட்டினனென்ற காரணத்தால் அவன் ஆபீசுக்கு போன சமயம் பம்பாயில் ஒரு ஸ்திரீ தற்கொலை செய்துகொண்டாள்.

ஃ ஃ ஃ ஃ

கேட்டாவில் ஓர் வர்த்தகன் தன் தந்தையின் சிராத்தத்திற்கு சமையல் செய்ய ஒருவருமில்லையே என்று வருத்தத்துடன் முதல் நாள் இரவு தூக்கமில்லாமல் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கையில், அச்சமயம் சுமார் 3மணிக்கு ஓர் ஸ்திரீ கதவைத்தட்டி உள்ளே வந்து இதாரை எழுப்பச்சொல்லாமல் வீட்டிலுள்ள ஒரு வேலைக்காரியிடம் சொல்லிவிட்டு எல்லா சமையல்களையும் செய்து எல்லோர் எழும் முன் வெளியில் சென்று மறைந்தாள்.

ஸ்ரீ மத்வ ஸித்தாந்தத்தின்படிக்குள்ள அர்த்தத்துடன்

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாமம்.

[முன் 101ம் பக்கம் தொடர்ச்சி.]

569 பகஹா (ஓம் பகக்னே நம:) தைத்யர்களின் ஐசுவரியத்தை நாசம் செய்பவர். காந்தி ரூபர்களான சூரிய சந்திரர்களை அடையும் ராகுவை ஸம்ஹரிப்பவர்.

570 ஆநந்தீ (ஓம் ஆனந்தினே நம: } ஆனந்த முள்ளவர்
நந்தீ (ஓம் நந்தினே நம:) }

571 வனமாலீ (ஓம் வனமாலினே நம:) கால்வரை தொங்கும் மாலையாகிய வனமாலையுடன் கூடியவர். மார்பில் வீற்றிருக்கும் மகா லட்சுமியை சகியாகக் கொண்டவர். ஜலத்தைதரிக்கும் சிலைமுடையவர். பக்தர்களை போஷிக்கும் ஸ்வபாவமுடையவர்.

572 ஹலாயுத: (ஓம் ஹலாயுதாய நம:) தன் சுக்லகேசாவிஷ்டரூபமான பலராம ரூபத்தில் கலப்பையை ஆயுதமாகக் கொண்டவர். த்ரிபுராஸுர யுத்தத்தில் ஹரனுக்கு ஆயுதமாக இருந்தவர்.

573 ஆதித்ய: (ஓம் ஆதித்யாய நம:) அநாதிகாலம் முதல் இருந்துவரும் ஆநந்தக்ஞான முள்ளவவர். பிரஜைகளை பக்ஷணம் செய்யும் ஸ்வபாவமுடையதைத்யர்களை விலக்குபவர். அதிதி தேவியின் குமாரராய் வாமனவதாரம் செய்தார்.

574 ஜ்யோதிராதித்ய: (ஓம் ஜ்யோதிராதித்யாய நம:) ஜ்யோதிஸ்ஸுக்களில் முதன்மையான சூர்யனிடம் இருப்பவர். சூரியனைப் பிரகாசிப்பவர். அப்ராக்ருத அத்யாச்சரிய தேஜோமய சூரியன்.

575 ஸஹிஷ்ணு: (ஓம் ஸஹிஷ்ணவே நம:) ஸகிப்பவர்.

576 கதிஸத்தம: (ஓம் கதிஸத்தமாய நம:) க்ஞானமுள்ளவர்களால் விரும்பப்படுகிறவர். எவ்லோராலும் அடையப்படுகிறவரும். மிக்க சிலாக்யமாய் இருப்பவருமாவார்.

577 ஸுதன்வா (ஓம் ஸுதன்வினே நம:) அழகிய தனுஸ்ஸை உடையவர்.

578 கண்டபரசு: (ஓம் கண்டபரசவே நம:) நரனின் ரூபத்தில் சிவனை அடித்து முறிந்துபோன கோடரியுடையவர். பரசுராமாவதாரத்தில் சத்ருக்களை கண்டிக்கும் கோடரியை உடையவர். ருத்ரருடைய யுத்தத்தைக் கண்டித்த கோடரியை உடையவர்.

அகண்டபரசு: (ஓம் அகண்ட பரசவே நம:) ஒருவராலும் கண்டிக்கமுடியாத பரசுவுடையவர்.

579 தாருண: (ஓம் தாருணாய நம:) மரப்பொம்மையைப் போல் பிரஜைகளை நடத்துபவர். சத்ருக்களைப் பிளப்பவரானதால் பயங்கரர்.

580 த்ரவிணப்ரத: (ஓம் த்ரவிணப்ரதாய நம:) வித்தை தனம் ஆகிய சொத்தைத்தருபவர். உள்ளம் உருகும் ஹரி [illegible]

தர்களுக்கு சொரூபசுகத்தை அளிப்பவர். பக்தர்கள் விரும்புவதை எல்லாம் தருபவர்.

581 திவஸ்புருக் (ஓம் திவஸ்ப்ருசே நம:) சுவேதத்வீபம் அநந்தாஸனம் வைகுண்டம் என்ற மூன்று ஸ்தானங்களை நாராயணர் வாஸுதேவன் வைகுண்டன் என்ற மூன்று ரூபங்களால் தொட்டிருப்பவர்.

382 ஸர்வத்ருக் (ஓம் ஸர்வத்ருசே நம.) எல்லாவற்றையும் பார்ப்பவர்.

583 வ்யாஸ: (ஓம் வ்யாஸாய நம:) எல்லோரையும்விட சிறந்தவரும் எங்கும் இருப்பவருமானவர்

584 வாசஸ்பதி: (ஓம் வாசஸ்பதயே நம:) எல்லா வாக்குக்கும் மனஸ்ஸுக்கும் தேவதையின் பதியானவர்.

(தொடரும்)

விசேஷ தினங்கள்.

16—12—38	சுக்கிரவாரம்	தனுர்மாஸம் முதற் பூஜை.
17—12—38	சனிவாரம்	ஏகாதசிஉப.
21—12—38	புதவாரம்	திலதர்ப்பணம் உப. விஷ்ணுப.உப. [ஹனுமஜ்ஜயந்தி
25—12—38	பானுவாரம்	சிரவணம் உப. விஷ்ணுப உப.
28—12—38	புதவாரம்	தனுர்வ்யதீபாதம்.
2—1—39	சோமவாரம்	ஏகாதசி உப.
3—1—39	மங்களவாரம்	முக்கோடித்வாதசி. ஸ்ரீரகூத்தம ஸ்வாமிகள் புண்யதினகம். சாதனி மணி 7–23க்குள் பாரணே.
8—1—39	குருவாரம்	பௌர்ணமி, விஷ்ணு ப. உப. மாக ஸ்நானம் ஆரம்பம்.

208173

மாத்வமித்திரன் பிரசுரங்கள்.

1. ஸ்ரீ ராகவேந்திர ஸ்தோத்திரம் (தமிழிலும், தேவநாகரத்திலும் மூலமும் தமிழில் உரையும்)	0	2	0
2. ஷ்டி ஸ்தோத்திரம் உளபட ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகள் அதி அற்புத ஜீவிய சரித்திரம் (தமிழ்)	0	8	0
3. ஸ்ரீவாயுஸ்துதி (தேவநாகரத்தில் மூலமும், தமிழில் உரையும் புனஸ்சரண முறையுடன்	0	5	0
4. மாத்வஸ்திரீகளின் ஸம்பிரதாய ஜபமந்த்ர ஸ்தோத்திரங்கள் (தமிழிலும், கன்னடத்திலுமுள்ள 38 அபூர்வமானவைகள் கொண்டது, இதுவரை யாவராலும் பிரசுரிக்கப்படாதது.	0	3	0
5. த்வைதமத விளக்கம் (ஸ்ரீமத்வாசாரியார் ஜீவிய சரித்திரம் ஆப்டோன் படத்துடனும் தமிழ்)	–	2	9
6. கும்பகோண மாகாத்மியம் (தமிழ்)	0	2	0
7. ஸ்ரீமத் பாகவதம் விஷ்ணு புராணத்தின்படி துருவ சரித்திரம் (நாடகம்-தமிழ்)	0	4	0
8. மாத்ருகாமாலாஸ்தவம், நவரத்னமாலா முதலிய அற்புத ஆறு நூல்கள் (ஸம்ஸ்கிருதம் தேவநாகரத்தில்)	0	2	0
9. ஸ்ரீ மகாபாரத தாத்பர்ய நிர்ணயத்திலுள்ள ஸுந்தரகாண்டம் (கன்னட அர்த்தத்துடன் தேவநாகரத்தில்)	0	4	0
10. ஜீவப்ரம்மபேதம் ஜகத்ஸத்யம் முதலான நான்கு மத்வமத ப்ரமேயங்களை நிரூபிக்கும் பகவத் கீதாதத்வம் (தமிழிலும் தேவநாகரத்திலும் மூலமும் தமிழில் அர்த்தமும்) சுமார் 250 பக்கங்கள்	0	8	6

11. மாத்வமித்திரன் ஒன்று முதல் ஏழு வால்யங்கள் சுமார் 2200-பக்கங்களைக்கொண்டது மணிமஞ்ஜரி மத்வ விஜயம் ஸ்ரீ மஹாபாரத தாத்பர்ய நிர்ணயம் முதலான மாத்வ கிரந்தங்கள், உபநிஷத்துக்கள் புருஷஸூக்தம் ஸத்தியாவத்தனம் முதலான மந்திரங்கள் த்வாதச ஸ்தோத்திரம் முதலான ஸ்தோத்திரங்கள் ஸ்ரீராகவேந்திரர் முதலான பல மாத்வ மகான்கள், தாஸர்கள் இவர்களின் சரித்திரங்கள் புராண விரத கதைகள் ஆசார அனுஷ்டானங்கள் தர்ம சாஸ்திர குறிப்புகள் முதலான பதினாயிரக்கணக்கான விஷயங்களைக் கொண்டது. V P-ல் கிடையாது. பூரா பணமும் அட்வான்ஸில் தேவை. ரயில் பார்சல் செலவு தனி. முன்விலை ரூ. 21. தற்போது ரூ. 5—0—0 தான்.

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸ விலாஸம், கும்பகோணம்.